॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯

𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯

𑌸𑌙𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌾

ஸ்ரீ சததூஷணீ.

[முதல் பாகம்—1-25 வாதங்கள்.]

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டிதபூஷணம்
ஸ்ரீ உப.வே. நரஸிம்ஹாசார்யர்ஸ்வாமியின்

தமிழ் மொழி பெயர்ப்பு.

நிகமபரிமளம் ஆபீஸ்,
மௌண்ட்ரோடு, சென்னை.

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

கவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய

ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய ஶ்ரீமத்வேங்கடநாததேஶிகஸ்ய

ச ண்ட மா ரு த ஸ ஹி தா

ஶ்ரீ ஶததூஷணீ

[ப்ரதம பாக: — 1 - 25 வாதா:]

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

தமிழ் மொழி பெயர்ப்பு.

[முதல் பாகம் — 1 - 25 வாதங்கள்.]

மொழிபெயர்ப்பாசிரியராலும்

ஒப்பிலியப்பன் ஸந்நிதி வித்வான் வங்கீபுரம் நவநீதம்

ஸ்ரீ உப. வே. க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமியாலும்

பரிசோதிக்கப்பட்டது.

நிகம பரிமளம் ஆபீஸ், ஸ்ரீ சடகோப நிலையம்,

மௌண்ட் ரோட், சென்னை.

நோபில் பிரஸ், திருவல்லிக்கேணி.

விலை ரூ. **5-0-0**] 1924 [தபாற் கூலி வேறு.

ஸ்ரீமுகாப்தே யமூஜாஸே வக்ஷ்ஸ்ரூபம் ஸாக்ஷ்வகுக்ஷ்கே।
ததாரே ஸீவிஷ்ராஜம் தஷஜயதேஸிகாகுணீ:॥

தொண்டர் நுகத்தும் துணையடி வாழி நின் தூமுறுவல்
கொண்ட முகம் வாழி—வாழி வியாக்கியா முத்திரைக்கை
வண்டிரு நாமம் வாழி மணி வடம் முப்புரி நூல்
கொண்ட சீர் தூப்புல் குலமணியே வாழி நின் வடிவே.

விஷய ஸூசிகை.

முகவுரை
உபோத்காதம்
பாரிபாஷிக பதங்களின் விவரணம்
பிழைத்திருத்தம்
1. ப்ருஹ்மஶப்த வ்ருத்யனுபபத்தி வாதம் 1
2. ஜிஜ்ஞாஸாநுபபத்தி வாதம் 21
3. ஐகஶாஸ்த்ர்ய ஸமர்த்தன வாதம் 43
4. அவிதேயஜ்ஞானவாத பங்க வாதம் 75
5. பாதிதானுவ்ருத்தி பங்க வாதம் 117
6. விவிதிஷாஸாதநத்வ பங்க வாதம் 124
7. ஶப்தஜந்ய ப்ரத்யக்ஷ பங்க வாதம் 141
8. ஸாதனசதுஷ்டயபூர்வவ்ருத்தத்வ பங்கவாதம் 197
9. கதாநதிகாரவாதம் 231
10. நிர்விஶேஷ ஸ்வப்ரகாஶபங்க வாதம் 247
11. நிர்விஶேஷ விஷய நிர்விகல்பக பங்க வாதம் 271
12. ஸந்மாத்ரக்ராஹி ப்ரத்யக்ஷ பங்க வாதம் 305
13. பேததூஷண நிஸ்தார வாதம் 323
14. வேதப்ராமாண்ய பரிக்ரஹானுபபத்திவாதம் 347
15. த்ருஶ்யத்வானுமான நிராஸவாதம் 367
16. வ்யாவர்த்தமானத்வானுமான பங்க வாதம் 395
17. த்ருக்த்ருஶ்ய ஸம்பந்தானுபபத்திபரிஹார வாதம் 409

18. பாஹ்யப்ரகாஶானுபபத்தி வாதம் 447

19. ப்ரும்மாஶ்ரயாஜ்ஞான நிராஸ வாதம் 459

20. அவேத்யத்வ பங்க வாதம் 475

21. ஸம்விதனுத்பத்தி தூஷண வாதம் 505

22. ஸம்வித் நிர்விகாரத்வானுமான பங்க வாதம் 523

23. ஸம்வித் நாநாத்வநிஷேதகானுமான பங்க வாதம் 535

24. நிர்விஶேஷத்வானுமான பங்க வாதம் 550

25. ஸம்விதாத்மத்வ பங்க வாதம் 563

முகவுரை.

ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் அருளிச்செய்யப்பட்ட ஸ்ரீமத தூஷணீ என்னும் இந்த க்ரந்தம் இதுவரையில் பூர்ணமாக அச்சிட்டு வெளியிடப்படவில்லை. இந்த க்ரந்தத்தின் திருநாமத்தினால் இது நூறு வாதங்கள் அடங்கியதாக இருந்திருக்கவேண்டும் என்பது ஏற்படுகிறது. ஆனாலும் இப்பொழுது 66 வாதங்களே காணப்படுகின்றன. அதுவும் சில பெரிய வித்வான்களுடைய திருமாளிகையில் சீதாள ஏட்டு ப்ரதியாகவே இருக்கிறது. பாக்கி 34 வாதங்கள் லுப்தங்களாய்விட்டன.

காஞ்சீபுரத்தில் ப்ரசுரமான ஶாஸ்திர முக்தாவளியில் இக்ரந்தம் ஸ்ரீ சண்டமாருதம் என்னும் வ்யாக்யானத்துடன் நாகராக்ஷரத்தில் 40 வாதங்கள் வரையில் அச்சிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. தக்ஷிண தேசத்தில் உள்ளவர்களுக்கு நாகரத்தில் அதிக பரிசயமில்லாமையாலும், பூர்ணமாக க்ரந்தம் வெளியிடவேண்டியது மிக்வும் அவஶ்யமாகையாலும் க்ரந்தாக்ஷரத்தில் ப்ரசுரம் செய்ய இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது

இக்ரந்தத்திற்குப் பங்க்தியின் பேரில் அர்த்தமாகும்படி ஸ்ரீந்ருஸிம்மராஜீயம் என்னும் ஒரு வ்யாக்யானமும், நவீனதர்க்க ரீதியை அனுஸரித்து பூர்வபக்ஷ ஸித்தாந்தங்கள் அடங்கிய அனேகம் கோடிகளுடன் ஸ்ரீசண்டமாருதம் என்னும் ஒரு வ்யாக்யானமும் இருக்கின்றன. இதில் முதலாவது வ்யாக்யானம் பூர்ணமாக அகப்படவில்லையாகையினாலும், இரண்டாவது வ்யாக்யானம் இந்த க்ரந்தத்தின் அர்த்தத்தை அறிவதற்கு மிகவும் உபயோகமுள்ளதல்லவாகையினாலும் அவை இரண்டையும் அச்சிட்டு ப்ரசுரம் செய்யவில்லை. ஆயினும் கேவலம் க்ரந்த மூலத்தை மாத்திரம் வெளியிட்டால் அனைவருக்கும் ப்ரயோஜனப்படாதாகையினால் கீழ்க்குறித்த வ்யாக்யானங்களை அனுஸரித்த ஒரு தமிழ்மொழிபெயர்ப்புடன் வெளியிடப்படுகிறது.

இது கேவலம் மதநிரஸனார்த்தமாக ப்ரவர்த்திக்கப்பட்ட வாத க்ரந்தமாகையினால் ஸாமான்யமானவர்களுக்கு ப்ரயோஜனமுள்ளதாகாது. ஆயினும் இந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரதிவாதிகள் கலக்கமுடியாமல் நிலைநிறுத்துகிற மஹோபகாரம் செய்கிறபடியினாலும், ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீ ஸூக்தி என்கிற கௌரவத்தினாலும் இதை எல்லோரும் ஆதரிக்க வேண்டியது மிகவும் அவஶ்யமாகும்.

இப்பொழுது காணப்படும் 66 வாதங்களையும் ஒரு தடவையிலேயே புஸ்தகரூபமாக வெளியிடுவது என்பது மிகவும் அதிகமான த்ரவ்ய ஸஹாயத்தால் நடக்க வேண்டியது. அப்படிப்பட்ட லௌகிக ஸஹாயம் நமக்குக் கிடைப்பது ஶ்ரமமாயிருக்குமாதலால் இதை மாதாமாதம் ஒரு வாதமாகவாவது ப்ரசுரப்படுத்த ஆரம்பிக்கப்பட்டது.

கீழ்க்கூறியபடி ஸாமாந்ய ஜனங்களினுடைய ஆதரவு இதற்கு ஏற்படுவது மிகவும் கஷ்டம் என்பதையும், இந்த க்ரந்தம் அவஶ்யம் வெளியிடப்படவேண்டும் என்பதையும், இந்த விஷயத்தில் தாம் முன் வந்து நடத்தினால்தான் மற்றவர்களும் பின்தொடருவதற்கு ஸௌகர்யம் ஏற்படும்என்பதையும் திருவுள்ளம்பற்றி திருவஹீந்திரபுரம்சேட்லூர் வித்வான் பகவத்விஷயம் பண்டிதபூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமி முதல் வாதத்தைத் தம் ஸொந்தச்செலவில் அச்சிட்டு ப்ரசுரப்படுத்தி, ஸம்ப்ரதாயத்தில் ஆஸ்தையை யுடையவர்களைக் கிட்டி ஒவ்வொருவரும் ஒரு வாதமாவது போட்டுவைக்க வேண்டுமென்று ப்ரயத்தினம் செய்ய அனேகர்கள் அப்படியே த்ரவ்ய ஸஹாயம் செய்தார்கள். அப்படி ஏற்பட்ட ஸஹாயத்தினால் இந்த ஸம்புடத்தில் வெளிவந்திருக்கும் 25 வாதங்களும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. இப்படி உபகாரம் செய்தருளின மஹான்களுடைய திருநாமங்கள் இங்கு குறிப்பிடப்படுகின்றன. இவர்களுக்கு நம்முடைய க்ருதஜ்ஞதையை இது மூலமாய்த் தெரிவிக்கிறோம்.

ஸ்ரீ. உப. வே. திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பண்டித பூஷணம் பகவத் விஷயம் நரஸிம்மாசார்யர் ஸ்வாமி. 30

ஸ்ரீ. உப. கோமடம் ரங்கஸ்வாமிஅய்யங்கார், போஸ்டல் ஆடிட் ஆபீஸ், சென்னை. 30

ஸ்ரீமான் முத்து ஸுப்பா ரெட்டியார், புதுப்பட்டு, தென் ஆர்காடு ஜில்லா	30
ஸ்ரீ. உப. பி. கோபாலாசார்யர், 185, தம்புசெட்டி தெரு, சென்னை.	25
,, ராகவாசார்யர், கொளத்தூர், செங்கல்பட்டு ஜில்லா	30
,, ஆர். ஸ்ரீநிவாஸ ராகவய்யங்கார், ஆதியப்பமுதலி தெரு, புரசைவாக்கம்	33
,, ஸீ. க்ருஷ்ணமாசார்யர், நூல் வ்யாபாரம், 82, தங்கசாலைத் தெரு, சென்னை	100
,, என். கோபாலஸ்வாமி அய்யங்கார், சைவமுத்தையா முதலி தெரு, சென்னை	30
,, சக்ரவர்த்தி ஸ்ரீநிவாஸாசார்யர், ஸ்ரீநிவாஸ வரதாசாரி அண்டு கம்பெனி, மௌண்ட் ரோடு, சென்னை	50
,, ஆர். கேஶவாசார்யர், ஹைகோர்ட்டு வக்கீல், திருவல்லிக்கேணி	30
,, கே. ராஜகோபாலாசார்யர், ராமய்யங்கார் தோட்டம், எழும்பூர்	25
,, கீழ்வீதி ராகவாசார்யர், எஸ். வெங்கடாசார்யர், திருவேங்கடாசார்யர், முத்தியாலுப்பேட்டை	30
,, டீ. எம். கோபாலர்சார்யர், ஹைகோர்ட்டு பென்ச் கிளர்க்கு, மாம்பலம்	35
,, கோமடம் திருநாராயண அய்யங்கார், பிராந்தியங்கரை, தஞ்சாவூர் ஜில்லா	30
,, கே. ராமஸ்வாமி அய்யங்கார், கும்மட்டித்திடல், தஞ்சாவூர் ஜில்லா	30
,, கே. எஸ். ராகவாசார்யர், ஏ. எஸ். க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், முத்தியாலுப்பேட்டை, சென்னை	30
,, எஸ். வரதாசார்யர், ஹைகோர்ட்டு வக்கீல், மைலாப்பூர்	100

பரமாசார்யனான ஸ்ரீ தேசிகன் விஷயத்தில் ததீயர்களான ஶிஷ்யர்கள் செய்யக்கூடிய கிஞ்சித்காரமான கைங்கர்யத்தில் இந்த க்ரந்த ப்ரசாரணமே ஸாரதமமான கைங்கர்யமாகும் என்பதைத்திருவுள்ளம்

பற்றி இக்ரந்தத்தைத் தம்முடைய தேஹச்ரமத்தை எள்ளளவும் பாராட்டாது தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தும், அக்ஷரப்பிச கற ஶோதித்துக்கொடுத்தும் உதவிபுரிந்தருளின திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான் பகவத் விஷயம் பண்டித பூஷணம் ஸ்ரீ. உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமிக்கு நம்முடைய க்ருதஜ்ஞதையைத்தெரி விப்பதும் தெரிவிக்காமல் இருப்பதும் அபசாரமேயாகிறது. ஏனெனில் இவ்வளவு மஹோபகாரம் செய்தருளின இந்த ஸ்வாமி விஷயத்தில் க்ருதஜ்ஞதையை வெளியிடாமல் இருப்பது பெரிய அபசாரமாகும் என்பது ஸுஸ்பஷ்டம். ப்ரத்யுபகாரமென்பதை ஈஷத்தும் எதிர்பாராமல் தாம் ஜன்மமெடுத்ததற்கு ப்ரயோஜனமே இப்படி ஸ்ரீதேஶிகனுடைய ஸ்ரீஸூக்திகளை ப்ரசுரம் செய்வதுதான் என்று இக்கைங்கர்யத்தையும் இது போன்ற இன்னும் அனேகம் க்ரந்தங்களையும் ப்ரசாரணம் செய்துகொண்டு எழுந்தருளியிருக்கும் இந்த ஸ்வாமி விஷயத்தில் மிகவும் க்ருதஜ்ஞர்களாக இருக்கிறோம்என்பதும் ஒரு அபசாரத்திலேயே முடிகிறது. அந்த ஸ்வாமி இக்கைங்கர்யத்தை ஸ்வயம்ப்ரயோஜனமானதாகப் பாவித்தருளினபடியால்தான் இதுவரையில் இக்ரந்தம் ப்ரசுரமானது. அப்படியே இந்த க்ரந்த ப்ரசாரணத்தை பரமபுருஷார்த்தம் என்று திருவுள்ளம்பற்றி இந்த க்ரந்தத்தின் அக்ஷரப்பிசகு முதலியவைகளை ஶோதித்துக்கொடுத்தருளின ஒப்பிலியப்பன் ஸந்நிதி வித்வான் ஸ்ரீ. உப. வே. வங்கீபுரம் நவநீதம் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமிக்கும் நம்முடைய க்ருதஜ்ஞதையை இது மூலமாக ஸவிநயம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இதுவரையில் அச்சாகி இருக்கும் 25 வாதங்களும் சுமார் 600 பக்கங்களாய் விட்டபடியினால் ஒரு ஸம்புடமாகப் பைண்டு செய்துகொள்ள ஸௌகர்யமாயிருக்கும் என்பதை உத்தேசித்து இத்துடன் விஷயஸூசிகை முதலியவை அச்சிடப்பட்டிருக்கின்றன.

மானேஜர்,

நிகமபரிமளம் ஆபீஸ்,

ஸ்ரீசடகோப நிலயம்,

மௌண்ட்ரோடு, சென்னை.

ரக்தாக்ஷி௵

கார்த்திகை ஶ்ரவணம்.

॥ ஸ்ரீ: ॥

॥ கருடநதீதீர ஹேமாப்ஜநாயிகாஸமேத
ஸ்ரீதேவநாதாய பரப்ரஹ்மணே நம: ॥

॥ ஸ்ரீமதே வகுளாபரண மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம: ॥

॥ ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேசிகாய நம: ॥

உபோத்காதம்.

ஸ்ரீ ஶததூஷணீ யென்னும் இந்த க்ரந்தத்தை அருளிச் செய்த

திருவவதாரம்.

ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் கலி 4370-வது விபவ (இங்கிலீஷ் 1268) வருஷத்தில் புரட்டாசி மீ ஶ்ரவண நக்ஷத்திரத்தில் காஞ்சீ புரத்தில் ஹிமவனம் என்றும் திருத்தண்கா என்றும் சொல்லப்படுகிற விளக்கொளி (தீபப்ரகாச) எம்பெருமான் எழுந்தருளி யிருக்கும் திவ்ய க்ஷேத்திரத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் நியமித்தருளின எழுபத்து நாலு ஸிம்ஹாஸனாதிபதிகளில் ஒருவராய் விஶ்வாமித்ர (தூப்புல்) குலதிலகரான அநந்த ஸோமயாஜியாருடைய திருப்பௌத்திரரான அநந்த ஸூரியாருக்கும் தோதாத்ரியம்மைக்கும் திருக்குமாரராக அவதரித்தருளினர். இவருடைய அவதார வைபவத்தை இவர் குமாரரான தூப்புல் நயினர் 'வேங்கடேஶாவதாரோயம் தத்கண்டாம்ஶோயவா பவேத்। யதீந்த்ராம்ஶோயவேத்யேவம் விதர்க்யாயாஸ்து ஸத்குரு: ॥' என்றும், 'அன்றிவ்வுலகினை யாக்கி அரும்பொருள் நூல்விரித்து**பின்னும் வென்றி புகழ் திருவேங்கட நாதனென்னும் குருவாய் நின்று நிகழ்ந்து' என்றும் நிரூபித்தருளினர். இவர் திருவேங்கடமுடையானுடைய

அவதாரம் என்பது 'ஸ்ரீமத்வேங்கடநாதார்ய:' என்கிற பூர்வர்களின் அனுஸந்தானத்தினால் ஏற்படுகிறது. இவருடைய மாதா பிதாக்கள் திருவேங்கடமுடையான் தம்முடைய ஸுவர்ண கண்டையைத் தங்களுக்குக் கொடுத்ததாகக் கனவு கண்ட வ்யாஜமடியாக அவதரித்ததைத் திருவுள்ளம் பற்றி 'த்வண்டாம்ஶ:' என்றருளிச் செய்தது. ஸ்ரீ யதிராஜஸப்ததியில் 'விரஹநவஸரஸ்வதீ விக்ஷரவாஹலெஸாம் ஶ்ரிகா:' என்னும் ஸ்லோகத்தில் அபிப்ரேதமான கொங்குப் பிராட்டியின் வ்ருத்தாந்தத்தை அனுஸரித்து 'யதீந்த்ராம்ஶஸம்பவா' என்றருளிச் செய்யப்பட்டது.

'ஸ்வஸ்வாதேஶஸ்வரூபம் ப்ரகடிதவான் ப்ரஹ்லாதவ:' என்கிற ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தைப் போலவே ஸ்ரீ தேசிகனும் தம்முடைய அதிமானுஷ ஶக்தியை வெளியிட்டருளினார் என்பது இவர் சரித்திரத்தில் பல வ்ருத்தாந்தங்களினால் தெரியவருகிறது.

அவதார வைபவம்.

உதாஹரணமாய் இவர் ஐந்து வயதிலேயே ஸ்ரீ நடாதூர் வரதாசார்யர் (அம்மாள்) காலக்ஷேப கோஷ்டிக்குத் தம்முடைய மாதுலரான அப்புள்ளாருடன் சென்று அவரைத் தண்டன் ஸமர்ப்பித்து நிற்கும் காலத்தில் இவருடைய திவ்யதேஜஸ்ஸில் ஈடுபட்டுக் காலக்ஷேபத்தில் விட்ட இடம்தெரியாமல் ஶிஷ்யர்கள் திகைத்து நிற்கும்பொழுது இவர் அந்த இடத்தை எடுத்துச்சொல்லி அர்த்த விஶேஷங்களை நிரூபித்தருள ஸ்ரீ அம்மாளும் 'ப்ரதிஷ்டாபிதவேதாந்த: ப்ரதிக்ஷிப்தபஹிர்மத: । பூயாஸ்த்ரைவித்யமாந்யஸ்த்வம் பூரிகல்யாணபாஜநம் ॥' (வேதாந்தங்களை ஸ்தாபித்துப் புறச்சமயங்களைத் தோற்கடித்து வேதங்களும் வைதிகர்களும்கொண்டாடும்படி அநந்த கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாக இருக்கக்கடவீர்)என்று ஆதரவுடன் அனுக்ரஹித்தருளினதை இவர் தாமே தம்முடைய க்ரந்தங்களில் பல இடங்களில் அருளிச் செய்திருக்கிறார். மேலும் ஒரு ராத்திரியில் ஒரு யாமத்தின் பாதியில் ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரமென்னும் க்ரந்தத்தை அருளிச் செய்ததும், ப்ரபோத சந்திரோதயத்தைப் பாரீர் என்று க்ருஷ்ணமிஶ்ரன் தன்னுடைய அத்வைதபரமான நாடக விஶேஷத்தைக்காட்ட அது பலபடியாலும் கண்டிதமாம்படி

ஸ்ரீ ஸங்கல்பஸூர்யோதயம் என்னும் நாடகத்தை அருளிச்செய்ததும் இவர் பகவானுடைய அவதார விசேஷம் என்பதைக் காட்டுகிறது.

இவர் வேதாந்தோதயனர் என்று ப்ரஸித்த நாமதேயரான கிடாம்பி ஆச்சானுடைய கொள்பேரனும், தமது மாதுலருமாகிய வாதிஹம்ஸாபுதாசார்யர் என்ற பெயர் பெற்ற ஆத்ரேயராமானுஜர் (அப்புள்ளார்) ஸ்ரீபாதத்திலே, ஸ்ரீ க்ருஷ்ணன் ஸாந்தீபினியிடத்தில் அறுபத்து நாலு கலைகளையும் அறுபத்து நாலு நாள்களில் அப்யஸித்தாப்போலே, இருபது வயதிற்குள்ளேயே ஸகல ஶாஸ்திரங்களையும் ஶிக்ஷித்தார் என்பது 'விம்ஶதிவர்ஷதநாநாவித விதூ:' என்றிவர் தம்மாலேயும், 'ராமாநுஜாய நமா ஆத்ரேயாநாந்தகலா: கலா: | சுவாவ விம்ஶதிவர்ஷே' என்றும், 'கிடாமபிக் குலபதி அப்புளார்தம் தேமலர் சேவடி சேர்ந்து பணிந்தவர் தம்மருளால் நாவலரும் தென்வடமொழி நற்பொருள் பெற்ற நம்பி' என்றும் தூப்புல் நயினாராலும் அருளிச் செய்யப்பட்டிருக்கிறது.

வித்தியாப்யாஸம்.

இப்படி இருபது ஸம்வத்ஸரத்திற்குள்ளே ஸகல வித்யைகளையும் அப்யஸித்து, தம்மாசார்யனால் உபதேசிக்கப் பெற்ற ஸ்ரீவைநதேய மந்திரத்தை ஆவ்ருத்தி செய்வதற்காக மஹாநதி, திவ்ய க்ஷேத்திரம், பர்வதம் இம்மூன்றும் ஓரிடத்தில் சேர்ந்திருக்கும் மஹாஸித்தி க்ஷேத்திரமாகிய திருவஹீந்திர புரத்தை நாடி, அதை ஆவ்ருத்திசெய்து, ஸித்திபெற்று, அத்தால் ப்ரத்யக்ஷமான ஸ்ரீ கருடன் உபதேசித்த ஸ்ரீஹயக்ரீவ மந்திரத்தையும் அந்த க்ஷேத்திரத்திலேயே ஆவ்ருத்திசெய்து, ஹயக்ரீவனுடைய ப்ரஸாதத்தைப் பெற்றார். இவ்ருத்தாந்தம் 'அருள் தருமடியவர் பால் மெய்யைவைத்து தெருள்தர நின்ற தெய்வநாயகா' என்றிவர் தம்மாலும், 'தாரகவடிந தெஜொ வ்யூஹிதாஶ்வமுகீ:' என்று பின் புள்ளாராலும் அனுஸந்திக்கப்பட்டது. விஶ்வாமித்ர மஹரிஷியின் அனுக்ரஹத்தினால் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுக்கு அஸ்திரதேவதைகள் எல்லாம் நேரில் நின்று 'இமே ஸ்ம நரஶார்தூல கிங்கராஸ்தவ வஶ்யதா:' என்று விண்ணப்பம் செய்தாப்போல வித்யாபிமானி தேவதைகள் எல்லாம் தாங்களே இவரை வந்து வரிக்கும்படியான

துணைதிஶயம்

க்டாக்ஷவிசேஷத்தைப் பெற்றார். இது ஸ்ரீஹயக்ரீவஸ்தோத்திரத்தில் 'ஸ்வாமிந் வஶ்யதி யஸ்ய ஸவாம் ஸஸ்மிதம் ஸாநஸ ராஜஹம்ஸம் ஸ்வயம் ஸாரோஹ்வவ விவாஹராஜ: கிம் க்ஷமப்ருத தஸ்ய தீரோ யஶாஹம்॥' என்றருளிச் செய்யப்பட்டது. இதைத் திருவுள்ளம் பற்றித் தான் ஸ்ரீரங்கநாச்சியாரும் இவருக்கு ஸர்வ தந்த்ர ஸ்வதந்திரர் என்னும் திருநாமத்தைச் சாற்றியருளினது. 'ஶ்ரீமந்வேங்கட நாதார்ய: கவிதார்க்கிககேஸரீ। வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி॥' (இவர் தார்க்கிகர்களுக்குள் ஶ்ரேஷ்டர் என்பதை ஸ்ரீ ஶததூஷணீ முதலிய க்ரந்தங்களிலும், ஸர்வஜ்ஞர் என்பதையும் கவிதையில் பிறர்க்கு நிலமல்லாத சாதுர்யத்தை உடையவரென்பதையும் ஸ்ரீதத்வமுக்தா கலாபத்திலும் காணலாம்)' என்று ஸ்ரீதொட்டயாசார்யரும் இவருடைய அஸாதாரணமான ஜ்ஞானத்தின் விசேஷாதிசயத்தை அருளிச்செய்தார். இவருடைய வைராக்யத்தின் அதிசயமோ விஜயநகர ஸமஸ்தானத்துக்கு எழுந்தருளும்படி எவ்வளவோ நிர்ப்பந்தித்தும் அதை லக்ஷ்யம் பண்ணாமல் வைராக்ய பஞ்சகத்தை அருளிச் செய்தனுப்பிய வ்ருத்தாந்தத்திலும், ஸச்சிஷ்யர்கள் அமுதுபடியுடன் சேர்த்து ஸமர்ப்பித்த தங்கக்காசுகளையும் ஏதோ புழுக்கள் என்று தூர எடுத்து எறிந்துவிட்டார் என்கிற இவருடைய சரித்திரத்திலும் ஸுவ்யக்தமாகத் தெரிவிக்கப் படுகிறது.

திவ்யதேச ப்ரதிஷ்டாதிகள்.

இப்படிப் பகவதவதார விசேஷமாய் ஜ்ஞான வைராக்யானுஷ்டான சேவதியாய் எழுந்தருளி இருந்த இவர் இந்த லோகோபகாரார்த்தமாகச் செய்த திவ்யதேச ஸ்தாபநம் முதலியவைகளும், ஸ்ரீ விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயம் ஶாஶ்வதமாய் நிலைபெற்றிருப்பதற்காகச் செய்தருளின க்ரந்தங்களும் தத்காலத்தில் எழுந்தருளி இருந்தவர்களுக்கு ப்ரவசனம் செய்தருளினதுமான உபகாரங்கள் பல. இவற்றில் ஸ்ரீரங்க க்ஷேத்திரத்தில் பகவானுடைய ஆராதனமும், ஆழ்வார் ஆசார்யர்களுடைய ஆராதனமும் நிரந்தரமாய் நடக்கும்படி வாதிகளை வென்று ஜயகோஷத்துடன் ஏற்பாடு செய்ததும், அப்படியே ஸ்ரீதேவப் பெருமாள் ஸந்நிதியில் சைவர்களை நிராகரித்துத் திருவாராதனம்

கண்டருளப் பண்ணினதும் முக்யமாய் அறியத்தக்கவை. இவற்றில் முதல் வ்ருத்தாந்தம் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியில் சிலா ரூபமாய் வெட்டப்பட்டிருக்கிறபடியினாலும், பிற்பட்ட வ்ருத்தாந்தம் ஸ்ரீதேவப் பெருமாள் இவருக்குத் தம்முடைய திருச்சின்னத்தில் ஒன்றை பிருதாக அநுக்ரஹித்துத் தாம் ஒரு திருச்சின்னத்தோடு நாளது வரையில் எழுந்தருளுவதினாலும் ஏற்படுகிறது.

க்ரந்தங்கள்.

இவர் இந்த ஸம்ப்ரதாய விஷயமாய் லோகருசியை அநுஸரித்து ஸங்க்ரஹ விஸ்தரப்ரக்ரியையாலும், ஸம்ஸ்க்ருதம் தமிழ் என்கிற பாஷைகளின் பேதத்தினாலும், அதிலும் வசனம் செய்யுள் என்கிற பேதத்தினாலும், காவ்யம், நாடகம் முதலிய படிகளினாலும் அநேகம் க்ரந்தங்களை அருளிச்செய்திருக்கிறார். இப்படி அநேகம் க்ரந்தங்கள் அருளிச்செய்திருந்தாலும் ஒவ்வொன்றிலும் இந்த ஸம்ப்ரதாயத்திற்கு அஸாதாரணமான கொள்கைகளைப் பரக்க நிரூபித்திருக்கிறார். இவர் இக்ரந்தங்களில் இந்த விசிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயார்த்தத்தை நிரூபித்திருக்கும் ப்ரகாரம்—பரதத்வமான எம்பெருமான் எல்லா அவஸ்தைகளிலும் லக்ஷ்மியுடன் பிரிவில்லாத சேர்த்தியை உடையவன் என்பதையும், லக்ஷ்மீ தத்வத்தைப்பற்றி உண்டாகும் சங்கைகளுக் கெல்லாம் ஸமாதானம் அருளிச்செய்து அத்தத்வத்தையும் பரக்க நிரூபித்துத் தத்வ ஸ்திதியை ஒருவராலும் கலக்கமுடியாதபடி பூர்ணமாக ஸ்தாபித்தருளினார். இவ்விஷயமான க்ரந்தங்கள் ஸ்ரீமந் ந்யாயபரிசுத்தி, ஸ்ரீமந்ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீசதுஸ்லோகீபாஷ்யம் முதலியவை. நாராயணனே பரதேவதை என்னும் அர்த்தத்தை ஸ்ரீ ஸ்தோத்ர ரத்னபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் ஸ்தாபித்தருளினார். தத்வங்களைப்பற்றி விஸ்தாரமாய் கீழ்க்கூறிய ஸ்ரீமந்ந்யாய பரிசுத்தி, ஸ்ரீமந் ந்யாய ஸித்தாஞ்ஜனம் என்னும் க்ரந்தங்களிலும், ஸ்ரீதத்வ முக்தாகலாபம், ஸ்ரீஸர்வார்த்தஸித்தி முதலிய க்ரந்தங்களிலும் நிரூபித்தருளினார். ஸர்வாதிகாரமாய் ஸர்வஸுலபமாயிருக்கும் ப்ரபத்தியே பரம ஹிதம் என்னும் அர்த்தத்தை ஸ்ரீநிக்ஷேபரக்ஷை, ஸ்ரீமத் கீதாபாஷ்ய தாத்பர்ய சந்திரிகை, ஸ்ரீ கத்யத்ரயபாஷ்யம் முதலியவைகளில் அருளிச்செய்தார். பரிபூர்ணமான ப்ரும்மாநுபவமும் அதின் பரீவாஹமான கைங்கர்யமும் பரம புருஷார்த்த

மென்னுமர்த்தத்தை ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்ஜனம், ஸ்ரீ ஸர்வார்த்த ஸித்தி, ஸ்ரீ கத்யத்ரயபாஷ்யம் முதலிய க்ரந்தங்களில் அருளிச்செய்தார். இந்த ஸித்தாந்தத்திற்கு விரோதமாகவும், வேதங்களுக்கு விருத்தமாகவும் சொல்லுகிற மற்றவர்களை ஸ்ரீ ஶததூஷணீ ஸ்ரீ பரமதபங்கம் முதலிய க்ரந்தங்களில் நிராகரித்தருளினர். ஸ்ரீமத் அதிகரண ஸாராவளீ, ஸ்ரீமத் தத்வடீகை, ஸ்ரீமத் தாத்பர்ய சந்திரிகை, ஸ்ரீமத் கத்யத்ரயபாஷ்யம், முதலிய க்ரந்தங்களில் ஸ்ரீ பாஷ்யகாருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு அவருடைய திருவுள்ளத்திற்கு அனுகுணமாக வ்யாக்யானம் செய்தருளினர். ஸ்ரீ கீதார்த்தஸங்க்ரஹரக்ஷை, ஸ்ரீசதுஶ்லோகீ ஸ்தோத்ரபாஷ்யம் இவைகளில் ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸ்ரீஸூக்திகளுக்கு வ்யாக்யானம் பண்ணி யருளினர். ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அஸாதாரணமான சங்கசக்ராங்கனம், திருமண்காப்பு, பகவதாராதனம், பகவத்ப்ரஸாதத்தின் மஹிமை, முதலியவைகளை ஸ்ரீஸச்சரித்ரரக்ஷை, ஸ்ரீ பாஞ்சராத்ரரக்ஷை முதலியவைகளில் ஸம்ஶயவிபர்யயங்களறப் பரக்க நிரூபித்தருளினர். பரமஹிதமாகிய ப்ரபத்தியின் உபாயத்வத்தைப் பற்றிச் சொல்லப்படும் ஸகல ஆக்ஷேபங்களையும் அனுவதித்து அவைகளை யெல்லாம் ஸ்ரீநிக்ஷேபரக்ஷை என்னும் க்ரந்தத்தில் நிராகரித்தருளி, ப்ரபத்தியின் அங்காங்கி விபாகாதிகளை ஸ்ரீமந் ந்யாஸவிம்ஶதி, ஸ்ரீமந் ந்யாஸ திலகம், ஸ்ரீமந் ந்யாஸதசகம் இவைகளில் அருளிச்செய்தார். இவ்வர்த்தங்களை யெல்லாம் ஶாஸ்திரபரிசய மில்லாதவர்களும் ஸுலபமாய் அறியுமாறு எளிதான மணிப்ரவாள நடையில் அவரவர்களின் புத்திக்கும் ஶக்திக்கும் தக்கபடி ஸங்க்ரஹமாயும் விஸ்தாரமாயும் முப்பத்தோரு ரஹஸ்யங்களில் நிரூபித்தருளினர். திவ்யதேசத் தெம்பெருமான் விஷயமாக ஸ்ரீ தேவநாயக பஞ்சாஶத் முதலிய முப்பத்திரண்டு ஸ்தோத்திரங்களை அருளிச்செய்தார், ரஹஸ்யார்த்தங்களை ஸுலபமாய் அனுஸந்திக்கும் பொருட்டு திருமந்திரச் சுருக்கு முதலிய தமிழ்ப்ரபந்தங்களை அருளிச் செய்தார். திருவாய்மொழியின் அர்த்தங்களை ஸங்க்ரஹித்து அவற்றிற்கு ஸங்கதி முதலியவைகளை நிரூபித்து, ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் தாத்பர்யரத்னவளீ, ஸ்ரீமத் த்ரமிடோபநிஷத் ஸாரம் என்னும் க்ரந்தங்களை அருளிச்செய்தார். ஸம்ப்ரதாயார்த்தங்களைப் பால்யத்திலேயே ஸுலபமாய் பரிசயம் செய்வதற்காகக் காவ்யரூபமாய்

ஸ்ரீ யாதவாப்யுதயம், ஸ்ரீ பாதுகாஸஹஸ்ரம், ஸ்ரீ ஹம்ஸஸந்தேஶம், ஸ்ரீஸுபாஷிதநீவி முதலிய க்ரந்தங்களை அருளிச்செய்தார். கீழ்க் கூறிய அர்த்தங்களை அறிவது என்பது சிரகால ஸாத்ய மாகையினுல் அவைகளை யெல்லாம் ஒன்று திரட்டி வேறு க்ரந்தம் வேண்டியதில்லை என்று சொல்லலாம்படியான ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் என்னும் க்ரந்தத்தில் பரிபூர்ணமாக நிரூபித்தருளினுர். இப்படிப்பட்ட அர்த்தங்கள் எல்லாம் ஏதோ கொஞ்சமேனும் படித்தவர்களுக்கு மாத்திரம் ஏற்படுமே யல்லாமல் கேவலம் பாமர ஜனங்களுக்குத் தெரியாதாகையினுல் அவர்களும் அவற்றை ஸுலபமா யறிந்து கொள்ளும்பொருட்டு நாடகரூபமாய் ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம் என்னும் க்ரந்தத்தில் அருளிச்செய்தார். இது நாடக லக்ஷணங்கள் அமைந்த ஒரு பெரிய அத்புதமான நாடகமாயினும் இதில் ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் கொள்கைகள் ஆங்காங்கு அஞ்சுருவாணி போல் நாட்டப்பட்டிருக்கின்றன.

ஸித்தாந்தத்தின் ப்ரதானக் கோள்கைகள்

இப்படி பஹுமுகமாக க்ரந்தத்திலுைம், அனுஷ்டானத்திலுைம் வேதாந்த ஸித்தாந்தத்தை நிலை நிறுத்தின இவருடைய ப்ரதானக் கொள்கைகளாவன:- எல்லா ஜாதியரும் அவரவர்கள் ஜாதிக்குரியதாய் ஶாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட தர்மங்களைப் பகவானுடைய கட்டளைகளிவை யென்றெண்ணி அவைகளை அனுஷ்டிக்கவேண்டுமென்றும், அப்படி அனுஷ்டிக்கும்போது பகவத் ப்ரீதி ஒன்றையே பலமாக உத்தேசித்துத் தன் ஶக்தி இருக்கும் பொழுது அவைகளை விடக்கூடாது என்றும், இப்படித் தங்கள் தங்கள் வர்ணாஶ்ரமங்களுக்கு அனுகுணமான கார்யங்களைச் செய்து வருபவர் எந்த ஜாதியரேனும் ஶரணுகதி யென்றும் ப்ரபத்தி என்றும் சொல்லப்படுகிற உபாயத்தை அனுஷ்டித்து மறு ஜன்மம் இல்லாமல் பரம புருஷார்த்தமாகிற மோக்ஷத்தை அடையலாம் என்றும், ப்ரபத்திக்குப் பிறகும் ஶாஸ்திரத்திற்கு வசப்பட்டு நடக்கவேண்டும் என்றும், அப்படி நடக்கத்தவறினுல் பகவந் நிக்கிரஹ முண்டாகும் என்றும், அப்படி அது உண்டானுல் ப்ராயஶ்சித்த முகத்தாலும் லகுஶிக்ஷையினுலும் நிவ்ருத்தமாய்ப் பரமபுருஷார்த்தம் கிடைப்பதற்குத் தடையாகாது என்றும், பகவானிடத்தில் பக்தியுடையவர்கள் எந்த ஜாதியராயினும்

அவர்கள் விஷயத்தில் ஶாஸ்திர ஸம்மதமான மானஸ கௌரவாதிகளில் குறைவு செய்வது பாகவதாபசாரமாகும் என்றும், பாகவத கைங்கர்யம் இவனுக்கு பகவத்கைங்கர்யத்தின் எல்லை நிலம் என்றும், ஆகையினால் அதுவே ப்ரதானமாய் இவனால் அனுஷ்டிக்கப்படவேண்டும் என்றும் நிரூபிக்கப்பட்டிருக்குமவை.

க்ரந்தவிஷய ஸங்க்ரஹம். இக்ரந்தம் ஸ்ரீபாஷ்யத்தில் மஹாஸித்தாந்தத்தில் அத்வைதிகளின் பக்ஷத்தை நிராகரித்திருக்கும் ப்ரகரணத்தில் ஸ்ரீபாஷ்யகாரரால் அருளிச்செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு வாக்யங்களுக்கும் விவரணரூபமாயிருக்கிறது என்பது ஒவ்வொரு வாதங்களிலும் விஷயங்களை விஸ்தாரமாக நிரூபித்துக் கடைசியில் இவை எல்லாவற்றையும் திருவுள்ளத்தில் வைத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யகாரர் இப்படி (என்று ஸ்ரீபாஷ்ய பங்க்தியைக் குறிப்பிட்டு) அருளிச்செய்திருக்கிறார் என்று அங்காங்கு நிரூபித்தருளியிருப்பதினால் ஏற்படுகிறது. சில வாதங்களில் ஸ்ரீபாஷ்ய வாக்யத்திற்கே அர்த்தம் விஸ்தாரமாக அருளிச் செய்திருக்கிறார். ஆதலால் ஸ்ரீபாஷ்யத்திற்கு அனேக இடங்களில் இது ஒரு வ்யாக்யானம் என்று சொல்லலாம். ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸித்தாந்தத்தை எதிரிகள் கலக்கமுடியாமல் காப்பதற்கு இந்த க்ரந்தம் இன்றியமையாததாகும். ப்ரதிவாதி பயங்கரம் அண்ணன் ஸப்தரத்னமாலிகையில் 'ஸர்வார்த்தஸித்தி: ஶததூஷணீ ச கேடஶ்ச கட்கஶ்ச மஹாஹவாநாம் । [illegible] தத்ர க்ரியதே ஸ்வரக்ஷா ப்ரத்யர்த்திபங்க: [illegible]॥' (வாதமாகிற சண்டையில் இறங்குகிற வாதிகளுக்கு ஸ்ரீ ஸர்வார்த்த ஸித்தி என்னும் க்ரந்தம் கேடயமாகவும், ஸ்ரீ ஶததூஷணீ என்னும் க்ரந்தம் கத்தியாகவும் உபயோகப்படுகிறது, (அதாவது) முதலாவது சொல்லப்பட்ட ஸ்ரீ ஸர்வார்த்த ஸித்தி என்னும் க்ரந்தம் கேடயத்தைப்போல் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளுவதற்குக் காரணமாயிருக்கிறது, (அதாவது ஸ்ரீபாஷ்யகாரர் ஸித்தாந்தத்திற்கு எதிரிகளினால் சொல்லப்படும் தூஷணங்களை நிராகரித்து ஸித்தாந்தத்தைக் காப்பாற்றுவதற்குக் காரணமாகிறது), மற்றொரு க்ரந்தமாகிய ஸ்ரீ ஶததூஷணீ கத்திபோல் உபயோகப்படுகிறது (அதாவது எதிரிகளை நிராகரிப்பதற்குக் காரணமாகிறது) என்று இதன் பெருமையை அருளிச்

செய்திருக்கிறார். இவ்வர்த்தம் இவர் தம்மாலும் '𑌵𑌾𑌦𑌾𑌹𑌵𑍇𑌷𑍁 𑌨𑌿𑌰𑍍𑌭𑍇𑌤𑍍𑌤𑍁𑌂 𑌵𑍇𑌦𑌮𑌾𑌰𑍍𑌗𑌵𑌿𑌦𑍂𑌷𑌕𑌾𑌨𑍍 । 𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑌾𑌂 𑌶𑌰𑌶𑍍𑌰𑍇𑌣𑍀 𑌨𑌿𑌶𑌿𑌤𑌾 𑌶𑌤𑌦𑍂𑌷𑌣𑍀 ॥' என்று வாதமாகிற யுத்தங்களில் வேதத்தில் சொல்லியிருக்கும் மார்க்கங்களைத் தூஷிக்கிறவர்களைப் பிளப்பதற்கு ஶததூஷணீ என்கிற கூர்மையுள்ள பாணங்களின் வரிசை ப்ரயோகிக்கத்தக்கது என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. முக்கியமாக அத்வைதிகளை ஸ்ரீபாஷ்யகாரர் காலத்தில் ப்ரபலமான பூர்வபக்ஷிகளாய் நின்றபடியினால் அவர்களை நிராகரிப்பதற்காகவே அந்தக் காலத்தில் எழுந்தருளியிருந்த ஸ்ரீ ஆளவந்தார், ஸ்ரீபாஷ்யகாரர் முதலிய பூர்வாசார்யர்கள் ஶ்ரமப்பட்டார்கள் என்பது '𑌪𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌜𑍍𑌞𑌂 𑌭𑍍𑌰𑌮𑌪𑌰𑌿𑌗𑌤𑌂 𑌸𑌂𑌸𑌰𑌤𑌿 𑌤𑌤𑍍 𑌪𑌰𑍋𑌪𑌾𑌧𑍍𑌯𑌾𑌲𑍀𑌢𑌂 𑌵𑌿𑌵𑌶𑌮𑌶𑍁𑌭𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌪𑌦𑌮𑌿𑌤𑌿 । 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌪𑍇𑌤𑌂 𑌜𑌗𑌤𑌿 𑌵𑌿𑌤𑌤𑌂 𑌮𑍋𑌹𑌨𑌮𑌿𑌦𑌂 𑌤𑌮𑍋 𑌯𑍇𑌨𑌾𑌪𑌾𑌸𑍍𑌤𑌂 𑌸𑌹𑌿 𑌵𑌿𑌜𑌯𑌤𑍇 𑌯𑌾𑌮𑍁𑌨𑌮𑍁𑌨𑌿𑌃 ॥' என்று ஸ்ரீ வேதார்த்த ஸங்க்ரஹத்தில் இந்த லோகம் முழுவதும் பரவியிருக்கிறது இந்த ஶங்கரமதம் என்று அருளிச்செய்திருப்பதினால் ஸ்பஷ்டமாக ஏற்படுகிறது. ஆதலால் அப்படி ப்ரபலமான மதத்தை விஸ்தாரமாக நிராகரிக்கவேண்டியது அவஶ்யமாயிருந்தது. அதை நிராகரித்ததினாலேயே அதற்கு ஸத்ருஶமான பௌத்த மதம், ஜைனமதம், முதலியவைகளும் நிராகரிக்கப்பட்டனவாகும். ஏனெனில் அந்தந்தமதங்களில்சொல்லப்பட்டிருப்பதில் ஏகதேஶத்தை எடுத்து ஒன்று சேர்த்தல்லவோ ஶங்கரமதம் ஏற்பட்டிருக்கிறது. '𑌸𑌾𑌙𑍍𑌖𑍍𑌯 𑌸𑍌𑌗𑌤 𑌚𑌾𑌰𑍍𑌵𑌾𑌕𑌸𑌙𑍍𑌕𑌰𑌾𑌚𑍍 𑌶𑌙𑍍𑌕𑌰𑍋𑌦𑌯𑌃' (ஸாங்க்ய மதம் பௌத்தமதம் சார்வாக மதம் இவைகளின் கலப்பினால் ஶங்கர மதம் உண்டாயிற்று) என்றிறே அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. இந்த க்ரந்தம் இவ்வாசார்யனுடைய யுக்தியின் சாதுர்யம் முழுமையும் காட்டக்கூடிய தொன்றாயிருக்கும் என்று ஸ்ரீ தொட்டையாசார்யர் '𑌦𑍂𑌷𑌣𑍍𑌯𑌾𑌦𑍌 𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌾𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌕𑌂' (ஸ்ரீஶததூஷணீ முதலியவைகளில் இவர் யுக்திவாதிகளுக்குள் ஶ்ரேஷ்டர் என்பது அறியத்தக்கது) என்று அருளிச்செய்திருக்கிறார்.

க்ரந்த நிர்மாணகாலம்

இக்ரந்தம் ஸேஶ்வரமீமாம்ஸைக்குப் பிறகும், தத்வடீகைக்கு முன்னும் அருளிச் செய்யப்பட்டது என்பது ‘ஏவம் ஸர்வத்ராவிரோத ஸ்வஸூத்ரீரோம் ஸாத்யாநுஸந்தவ்ய:(இப்படியே எல்லா இடங்களிலும் விரோத மில்லை என்பது ஸேஶ்வர மீமாம்ஸையில் அறியத்தக்கது)’ என்று இந்த ஸ்ரீஶததூஷணியிலேயும் (67-ம் பக்கத்திலும்), ‘ஶாதித ஶததூஷண்யாம் ஶங்கராதிஸ்ஸாக்ரஹ: । ஶாரீரகஶரீரஞ்ச வ்யக்தமத்ர ப்ரகாஶ்யதே ॥’ (ஸ்ரீ ஶததூஷணியில் ஶங்கரர் முதலியவர்களினுடைய ஆக்ரஹம்போக்கடிக்கப்பட்டது, இந்தத் தத்வடீகை என்னும் க்ரந்தத்தில் ஶாரீரகஶாஸ்திரத்தின் ஸ்வரூபம் ப்ரகாசம்செய்யப்படுகிறது) என்று ஸ்ரீமத்தத்வடீகையில் அருளிச்செய்திருப்பதினுலும் ஏற்படுகிறது. இந்த க்ரந்தம் வடதேசத்திலிருந்து வந்த ஒரு வித்வான் ஸ்ரீரங்கத்தில் ஸந்நிதியில் தடங்கல்செய்ய அப்பொழுது அங்கு இருந்த ஸ்ரீ ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஸ்ரீ பெரிய வாச்சான் பிள்ளை, முதலிய ஸ்ரீவைஷ்ணவ ப்ரமுகர்கள் அவனை ஜயித்து ஸித்தாந்தத்தை நிலை நிறுத்துவதற்காக எழுந்தருள வேண்டுமென்று ஸ்ரீரங்கநாதன் நியமனம் என்று ஸ்ரீகாஞ்சிபுரியில் எழுந்தருளி இருந்த ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுக்கு ஸ்ரீமுகம் அனுப்ப, இவரும் அந்த நியமனத்தை ஶிரஸா வஹித்து, ஸ்ரீரங்கத்திற்கு த்வரையாக எழுந்தருளி, அந்த வாதியை வாதத்தில் ஜயித்து அவனுல் ஏற்பட்ட உபரோதத்தை நிவ்ருத்தி செய்தருளினுர். அப்பொழுது நடந்த வாததோரணிகளை ஒரு க்ரந்தமாக ஏறியருளப் பண்ணினுரென்றேற்படுகிறது. இவ்வர்த்தம் ‘ஜித்வா தஞ்சவாதிநமேஷோऽஜநி ஶததூஷணீம் ய:’ (அப்பொழுது அந்த வாதியை ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் ஜயித்து ஸ்ரீஶததூஷணியைச் செய்தருளினுர்) என்று ஸ்ரீவைபவ ப்ரகாசிகையில் ஸூசிப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த ஸமயத்தில் வாதியினுல் சொல்லப்பட்ட கக்ஷிகளையும், தாம் அவைகளை நிரஸித்தபடியையும் திருவுள்ளத்தில் கொண்டு பிற்பாடு அவைகளையே ஒரு ஸ்வதந்திரவாத க்ரந்தமாக அருளிச்செய்தார் என்றும் சிலர் அநுஸந்தித்துப் போருகிருர்கள். கண்டன கண்டன காத்யம் என்கிற அத்வைத க்ரந்தத்தைப் பூர்வபக்ஷமாக வைத்துக்கொண்டு

அதற்கு தூஷணமாக இக்ரந்தம் அருளிச்செய்யப்பட்டதென்றும் சிலர் அனுஸந்திக்கிறார்கள். எப்படியானாலும் இக்ரந்தம் அத்வைதிகளின் மதத்தைக் கண்டிப்பதற்காக ஏற்பட்டதென்பது ஸித்திக்கிறது.

இக்ரந்தத்தின் திருநாமத்தை யோசிக்கும் பக்ஷத்தில் இது நூறு வாதங்கள் அடங்கி இருந்ததாகத் தெரியவருகிறது. இப்பொழுது காணப்படுமவை 66 வாதங்களே. மிகுதியான 34 வாதங்களும் மாத்வமத கண்டனமென்றும், அதை அவர்கள் ப்ரார்த்தித்ததன் பேரில் அவர்களும் வைஷ்ணவர்கள் என்கிற பரிவினால் ஸ்வாமியே அவற்றை ப்ரசுரிக்காமல் அந்தர்தானம் செய்து விட்டார் என்றும் சிலர்சொல்லுகிறார்கள். இது அவ்வளவு உசிதமானதல்ல. இக்ரந்த ஆரம்பத்திலேயே ‘ப்ரச்சந்நபௌத்தவிஜயே வ்யவஸிதோ ’யதத்வம்’ (ப்ரச்சன்ன பௌத்தர்களான அத்வைதிகளை ஜயிப்பதில் ப்ரயத்தினம் செய்யுங்கள்) என்று அருளிச் செய்திருப்பதினாலும், ‘ஶாதித꞉ ஶததூஷண்யாம் ஶங்கராதிமாயார்ணவ꞉’ என்று ஸ்ரீமத் தத்வடீகையில் ஸ்ரீஶததூஷணியில் ஶங்காருடைய மதம் கண்டிக்கப்பட்டது என்றருளிச் செய்திருப்பதினாலும் இது முழுமையும் அத்வைதமத கண்டனமாகத் தான் இருக்கவேண்டும் என்றேற்படுகிறது. மேல் 34 வாதங்களும், ஸ்ரீமத் தத்வடீகை, ஸ்ரீமந் ந்யாயஸித்தாஞ்ஜனம், முதலிய க்ரந்தங்களைப்போல பின்புள்ளாருடைய ரக்ஷணக் குறைவினால் லுப்தங்களாய் விட்டன என்பது அறியத்தக்கது.

நிகமனம் இது கேவலம் விசேஷ ஶாஸ்திர பரிசயமுள்ளவர்களுக்கே உபயோகப்படக்கூடியநிலைமையில் இருப்பதினால்இதன் ப்ரசாரம் குறைந்து இப்படிப்பட்ட தசைவந்தது என்பதை யோசித்து இதை கொஞ்சப்பேராயினும் உபயோகப்படுத்தட்டும் என்றும், மிகுதியான பாகமும் லுப்தமாய் போகாமலிருக்கட்டும் என்றும் எண்ணி இதை ப்ரசுரிக்க வேண்டுமென்று உபக்ரமித்துக் கூடினவரையில் எளிதான தமிழ் நடையில் மொழிபெயர்த்தேன். மனிதர்களுக்கு ஸம்பாவிதமான பிழைகள் இருப்பதை க்ஷமித்து இக்ரந்த ப்ரசாரணமே ப்ரதானமான நோக்கம் என்பதைத் திருவுள்ளம்பற்றி இதை அங்கீகரிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன்.

இக்ரந்தத்தின் மூலத்தை ஶோதிப்பதில் உபயோகப்பட்ட மாத்ருகைகள்:—

1. அடியேனிடத்தில் இருந்த சீதாள ஏட்டுப்ரதி ஒன்று;

2. ஒப்பிலியப்பன் ஸந்நிதி வித்வான் ஸ்ரீ உப. வே. வங்கீபுரம் நவநீதம் க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமியின் ப்ரதி ஒன்று;

3. ஶாஸ்திர முக்தாவளீ ப்ரசாரணத்தில் காஞ்சீபுரத்தில் நாகராக்ஷரத்தில் அச்சிடப்பட்டுள்ள ப்ரதி ஒன்று.

ரக்தாக்ஷி ௵
கார்த்திகை ஶ்ரவணம்.

சே. நரஸிம்மாசார்யர்.

பாரிபாஷிக பதங்களின் விவரணம்.

நிர்விகல்பகம்—ஒரு வஸ்துவை முதல் முதலில் பார்க்கும் பொழுது உண்டாகிற ப்ரத்யக்ஷம்.

ஸவிகல்பகம்—அந்த வஸ்துவையே இரண்டாவது முதலிய தடவைகளில் பார்ப்பதினால் உண்டாகிற ப்ரத்யக்ஷம். இங்கு ப்ரத்ய க்ஷம் என்றது கண், மூக்கு, நாக்கு, தோல், காது முதலிய இந்திரி யங்கள் விஷயங்களோடு சேருவதினால் உண்டாகிற ஜ்ஞானம் என்றபடி.

அனுமானம்—நெருப்பையும் புகையையும் மடப்பள்ளி முதலிய இடங்களில் அனேகம் தடவைகளில் சேர்ந்தே பார்த்திருப்பதினால் எங்கெங்கே புகையிருக்கிறதோ அவ்விடத்தில் எல்லாம் நெருப்பும் இருக்கவேண்டும் என்று நிஸ்சயித்துக்கொண்டவன் ஒரு மலையின் அருகில் செல்லும்பொழுது அங்கு புகையைப்பார்த்ததும், எங்கு புகை இருக்கிறதோ அங்கு நெருப்பு இருக்கவேண்டும் என்கிற முன் உண்டாயிருக்கும் நிஸ்சயத்தை ஜ்ஞாபகப்படுத்திக்கொண்டு, இந்த மலை நெருப்பையுடையது—புகையை உடையதாகையினால், என்று ஊஹித்து நிஸ்சயிப்பது. இதில் எந்த இடத்தில் ஒரு வஸ்து இருப்ப தாக ஊஹிக்கிறானோ அந்தஇடத்தை, அதாவது மலைமுதலியவைகளை, பக்ஷம் என்கிறது. எதை ஊஹிக்கிறானோ, அதை, அதாவது நெருப்பை, ஸாத்யம் என்கிறது. (புகையை உடையதாகையினால் என்கிற) எந்தக் காரணத்தினால் ஊஹிக்கிறானோ அதை ஹேது என்கிறது. புகை யிருக்கும் இடமெல்லாம் நெருப்பு இருக்கவேண்டும் என்கிற நிஸ்ச யத்தை வ்யாப்தி ஜ்ஞானம் என்கிறது.

ஸாத்யத்தை உடையதாக நிஸ்சயிக்கப்பட்ட இடங்கள் (மடப் பள்ளிமுதலியவை) எல்லாம்ஸபக்ஷங்கள் என்னப்படுகின்றன. ஸாத்யம் இல்லாததாக நிஸ்சயிக்கப்பட்ட இடங்கள் (மடு, முதலியவைகள்) எல்லாம் விபக்ஷங்கள் என்னப்படுகின்றன.

ஹேது கேவலாந்வயீ, அந்வயவ்யதிரேகீ என்று இருவகைப்படும். கேவலாந்வயி யாவது அந்வயவ்யாப்தியை மாத்திரம் உடையது, அந் வய வ்யதிரேகியாவது அந்வயவ்யாப்தி, வ்யதிரேகவ்யாப்தி இரண்டையு

முடையது, அந்வய வ்யாப்தியாவது எங்கெங்கு ஹேது இருக்கிறதோ அங்கெல்லாம் ஸாத்யம் இருக்கிறதென்பது. வ்யதிரேகவ்யாப்தியாவது எந்த இடத்தில் ஸாத்யம் இல்லையோ அந்த இடத்தில் ஹேதுவுமில்லை என்பது. கேவல வ்யதிரேகீ இல்லை என்று வேதாந்திகளின் மதம்.

இதில் ஹேதுவிற்கு உண்டாகக்கூடிய தோஷம் ஐந்து. தோஷங்கள் இல்லாதஹேது ஸத்ஹேது என்றும், தோஷங்களை உடைய ஹேது அஸத்ஹேது அல்லது ஹேத்வாபாஸம் என்றும் வ்யவஹரிக்கப்படும். தோஷங்களாவன.—வ்யபிசாரம், விரோதம், அஸித்தி, ஸத்ப்ரதிபக்ஷம், பாதம் அல்லது காலாத்யயாபதேஶம் என்பவை.

ஸாத்யமில்லாத இடத்தில் ஹேது இருப்பது வ்யபிசாரம், அதாவது இந்த மலை நெருப்பை உடையது—மரங்களை உடையதாகையினால், என்று அனுமானம் சொன்னால் மரங்கள் நெருப்பு இல்லாத இடத்திலும் முளைக்கலாமாகையினாலே அந்த ஹேது வ்யபிசார தோஷத்தையுடையது என்றபடி. ஸபக்ஷங்களிலும் விபக்ஷங்களிலும் இல்லாமல் இருக்கும் ஹேதுவிற்கு அஸாதாரணம் என்று பெயர். இது வ்யபிசாரத்தின் ஓர் உட்பிரிவு. இந்த மலை நெருப்பை உடையது—இந்த மலையாதலால், என்கிற அனுமானத்தில் ஸபக்ஷங்களிலும் விபக்ஷங்களிலும் ஹேது இல்லாமையினால் அஸாதாரண தோஷத்தை உடையது என்று சொல்லுகிறது.

விரோதம்—ஸாத்யம் இல்லையென்று ஸாதிப்பதற்குக்காரணமான ஹேது, அதாவது இந்த மலை நெருப்பை உடையது—ஜலம் இருக்கிறபடியினால், என்கிற இடத்தில் ஜலம் நெருப்பு இல்லாமையை ஸாதிப்பதற்குக் காரணமாகும் என்றபடி.

அஸித்தி—இது ஆஶ்ரயாஸித்தி, ஸ்வரூபாஸித்தி, ஸாத்யாஸித்தி என்று மூவகைப்படும். ஆஶ்ரயாஸித்தி என்பது பக்ஷம் ஸித்திக்காமல் இருப்பது, அதாவது ஸ்வர்ணமயமான இந்த மலை நெருப்பை உடையது என்கிற அனுமானத்தில் ஸ்வர்ணமயமான மலை என்கிற பக்ஷமே ஸித்திக்கவில்லை என்றபடி. ஸ்வரூபாஸித்தியாவது பக்ஷத்தில் ஹேதுவில்லாமை. அதாவது இந்த மலை நெருப்பை உடையது -

பாசிக்கொத்துக்கள் இருக்கிறபடியினல், என்கிற அனுமானத்தில் பாசிக்கொத்து மலேயில் இருப்பது ஸம்பவிக்காதாதலால் இந்த ஹேது ஸ்வரூபாஸித்தி யென்னும் தோஷத்தையுடையது. ஸாத்யாஸித்தி யாவது மலே தங்கமயமான நெருப்பையுடையது என்கிற அனுமானத்தில் தங்கமயமான நெருப்பே அஸித்தமாகையினலே ஸாத்யமே ஸித்திக்காமலிருக்கை.

ஸத்ப்ரதிபக்ஷம்—ஸாத்யம் இல்லேயென்று ஸாதிக்கக்கூடிய மற்ருெரு ஹேதுவும் கூட இருக்கை.

பாதம்—பக்ஷத்தில் ஸாத்யம் இல்லாமை, அதாவது குளம் நெருப்பையுடையது என்கிற அனுமானத்தில் குளத்தில் நெருப்பு இல்லேயாதலால் பாதம் வருகிறது என்றபடி.

ஸித்த ஸாதனம்—எந்த அனுமானத்தில் ஸாத்பம் வாதி ப்ரதி வாதிகள் இருவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதோ அப்பொழுது ஸித்தஸாதனம் என்னும் தோஷம் வருகிறது என்று சொல்லப் படுகிறது.

நிக்ரஹஸ்தானம்—வாதி ப்ரதிவாதிகள் வாதம் செய்யும் பொழுது எதிரி சொல்லும் வார்த்தையில் தோஷத்தை ஏற்படுத்தி அவன் தோல்வியடைந்தான் என்று நிஸ்சயிப்பதற்குக் காரணமான தோஷங்கள்.

லக்ஷணே—4-ம் பக்கம் * புட்நோட்டில் விவரிக்கப்பட்டிருக்கிறது.

அந்யோந்யாஸ்ரயம்—தன்னே எதிர்பார்க்கிற வஸ்துவைத் தானும் எதிர் பார்க்கிறது, அதாவது இந்திரியஜயம் உண்டானவனுக்கு ஆத்ம ஸாக்ஷாத்காரம் உண்டாகும், ஆத்ம ஸாக்ஷாத்காரம் பிறந்தபிறகே இந்திரியஜயம் உண்டாகும் என்பதைப்போல.

அக்யாதி—முத்துச் சிப்பியைப் பார்த்து வெள்ளி என்று ப்ரமிக்கும் இடத்தில் அது வெள்ளியல்ல என்பதை அறியாமை.

அந்யதாக்யாதி—ஒன்றை மற்ருென்ருக ப்ரமிப்பது, அதாவது கயிற்றைப் பாம்பு என்று ப்ரமிப்பது.

பிழைத் திருத்தம்.

82-ம் பக்கம், தமிழ், 8-ம் வரி—'நெல்லிக்காய்' என்பதை 'கடுக்காய்' என்று மாற்றிக்கொள்ளவும்.

149-ம் பக்கம், தமிழ், முதல் வரியில் 'போக்கனுல் அவமானம்' என்பதற்குப் பதிலாக 'போக்கன் தன்னுல் த்யானம்' என்று திருத்திக்கொள்ளவும்.

535-ம் பக்கம், 23-ம் வாதத்தின் பெயரில் ஸம்ஸ்க்ருதம் தமிழ் இரண்டிலும், 537-ம் பக்கம் தலைப்பிலும் 'ஸம்விந்நாநாத்வானுமான' என்பதற்குப் பதிலாக 'ஸம்விந்நாநாத்வநிஷேதகானுமான' என்று மாற்றிக்கொள்ளவும்.



॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑍇𑌨𑌾𑌨𑍁𑌗𑍃𑌹𑍀𑌤𑌾

॥ 𑌶𑍍𑌰𑍀 𑌶𑌤𑌦𑍂𑌷𑌣𑍀 ॥

𑌶𑍍𑌰𑍀𑌮𑌾𑌨𑍍 𑌵𑍇𑌂𑌕𑌟 𑌨𑌾𑌥𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕 𑌕𑍇𑌸𑌰𑍀 ।
𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯 𑌵𑌰𑍍𑌯𑍋 𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌤𑍍𑌤𑌾𑌂 𑌸𑌦𑌾 𑌹𑍃𑌦𑌿 ॥

॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿 𑌵𑌾𑌦𑌃 𑌪𑍍𑌰𑌥𑌮𑌃 ॥

𑌸𑌮𑌾𑌹𑌾𑌰𑌸𑍍𑌸𑌾𑌮𑍍𑌨𑌾𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌦𑌮𑍃𑌚𑌾𑌂 𑌧𑌾𑌮 𑌯𑌜𑍁𑌷𑌾𑌂
𑌲𑌯𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌹𑌾𑌨𑌾𑌂 𑌲𑌹𑌰𑌿𑌵𑌿𑌤𑌤𑌿𑌃 𑌬𑍋𑌧𑌜𑌲𑌧𑍇𑌃 ।
𑌕𑌥𑌾 𑌦𑌰𑍍𑌪𑌕𑍍𑌷𑍁𑌭𑍍𑌯𑌤𑍍 𑌕𑌥𑌕𑌕𑍁𑌲 𑌕𑍋𑌲𑌾𑌹𑌲𑌭𑌵𑌂
𑌹𑌰𑌤𑍍𑌵𑌨𑍍𑌤𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑌯𑌵𑌦𑌨 𑌹𑍇𑌷𑌾𑌹𑌲𑌹𑌲𑌃 ॥ 1

𑌇𑌦𑌂 𑌪𑍍𑌰𑌥𑌮𑌸𑌂𑌭𑌵𑌤𑍍𑌕𑍁𑌮𑌤𑌿𑌜𑌾𑌲𑌕𑍂𑌲𑌙𑍍𑌕𑌷𑌾𑌃
𑌮𑍃𑌷𑌾𑌮𑌤 𑌵𑌿𑌷𑌾𑌨𑌲 𑌜𑍍𑌵𑌲𑌿𑌤 𑌜𑍀𑌵𑌜𑍀𑌵𑌾𑌤𑌵𑌃 ।
𑌕𑍍𑌷𑌰𑌨𑍍𑌤𑍍𑌯𑌮𑍃𑌤𑌮𑌕𑍍𑌷𑌰𑌂 𑌯𑌤𑌿𑌪𑍁𑌰𑌨𑍍𑌦𑌰𑌸𑍍𑌯𑍋𑌕𑍍𑌤𑌯𑌃
𑌚𑌿𑌰𑌨𑍍𑌤𑌨 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀 𑌚𑌿𑌕𑍁𑌰𑌬𑌨𑍍𑌧 𑌸𑍈𑌰𑌨𑍍𑌧𑍍𑌰𑌿𑌕𑌾𑌃 ॥ 2

𑌪𑍍𑌰𑌾𑌚𑍀𑌮𑍁𑌪𑍇𑌤𑍍𑌯 𑌪𑌦𑌵𑍀𑌂 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌂
𑌤𑌤𑍍 𑌸𑌨𑍍𑌨𑌿𑌕𑍃𑌷𑍍𑌟𑌮𑌪𑌿 𑌵𑌾 𑌮𑌤𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌜𑍍𑌞𑌃 ।

॥ ஶ்ரீ: ॥

॥ தாஜூவநதீநீ ஹேமாம்புஜநாயிகா ஸமேத

ஶ்ரீதேவநாத பரப்ரஹ்மணே நம: ॥

॥ ஶ்ரீமதே வகுலாபூஷண மஹாகுரவே நம: ॥

॥ ஶ்ரீமதே பகவதே பாஷ்யகாராய நம: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸ ராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேஸிகன் அருளிச்செய்த

ஸ்ரீ சத தூஷணீ.

திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத் விஷயம் பண்டித பூஷணம்
ஸ்ரீ உ.ப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

தமிழ் மொழி பெயர்ப்பு.

ஶ்ரீவாஸராமாநுஜ ஸம்யமீந்த்ரம்
ஶ்ருத்யந்த பத்ராயுத விசாரஶீலம் ।
நமாமி யஶ்வாதிவராமயோகாத்
ப்ரஸூம ஸமஸ்தம் மநஸா ரஜொத: ॥

வந்தேஹம் கவிவாதிவாரண கடா கண்டீரவேந்த்ரம் குரும்
வேதாந்தத்வய ஸாம்ப்ரதாயகமலா வாரீண வாணீ ஹரம் ।
யோ வாதாஹவஸித்தம் ரசயதாம் கண்டஸ்ஸ்தமேதாந்ஸமேத:
ப்ராதாச் ஶ்ரீஶததூஷணீதி விதிதம் ஶஸ்த்ரம் ஶிவாத்யம் ஶிதம் ॥

ஶ்ராஜ்ஞாயமோதிதமிதம் ஶுகவத் பட²ந்த:
ஶ்ருத்வா ஸஹஸா விஜயே ஸமிதௌ யதத்⁴வம் ॥ 3

வாதா³ஹவேஷு நிர்பே⁴த்தும் வேத³மார்க³விதூ³ஷகான் ।
ப்ரயுஜ்யதாம் ஶரஶ்ரேணீ நிஶிதா ஶததூ³ஷணீ ॥ 4

தத்ர தாவச் சா²ஸ்த்ராரம்பே⁴—

---

1 – வது, ப்ரும்மஶப்த வ்ருத்யனுபபத்தி வாதம்.

ஸாம வேதங்களின் சேர்க்கையாகவும், ருக் வேதங்களுக்கு ப்ரதிபதங்களாகவும், யஜுர் வேதங்களுக்கு இருப்பிடமாகவும், விக்னங்களுக்கு நாசத்தை உண்டுபண்ணக்கூடியதாகவும், ஜ்ஞானமாகிற ஸமுத்திரத்தின் அலைகளின் வரிசையாகவும் இருக்கிற ஸ்ரீஹயக்ரீவருடைய கனைப்பின் கலகலவென்கிற ஶப்தம் வாதம் செய்வதில் கொழுப்பினால் கலக்கத்தை அடைந்த கலியுக வாதிகளின் கோலாஹலத்தினால் உண்டான மனதிற்குள் உண்டாகிய அஜ்ஞானமாகிற இருட்டைப்போக்கடிக்கட்டும். 1

இப்பொழுது தான் முதல் முதலாக உண்டான குமதிகளின் கும்பல்களை வேருடன் பிடுங்கக்கூடியவைகளாயும், பொய்யான மதங்களாகிற விஷாக்னியினால் கொளுத்தப்பட்ட ஜீவாத்மாக்களுக்கு உயிரைக் கொடுக்கக்கூடியவைகளாயும்,வேதத்தின் தலைகளை அலங்கரிப்பதற்கு ஏற்பட்ட ஸைரந்திரிகைகளாயும் (ராஜ மஹிஷிக்கு அலங்காரம் செய்யும் வேலைக்காரிகளாயும்) இருக்கிற ஸ்ரீபாஷ்யகாரருடைய ஸ்ரீஸூக்திகள் அழிவில்லாத மோக்ஷத்தைப் பெருக்குகின்றன. 2

ஓ ! புத்திமான்களே ! ஸ்ரீபாஷ்யகாரரால் கண்டுபிடிக்கப்பட்ட அநாதியான வழியை அடைந்து, அதற்கு ஸமீபத்திலிருக்கும் மதத்தை அடைந்தாவது இந்த க்ரந்தத்தை இவ்விடத்தில் சொல்லியபடி கிளியைப்போல் சொல்லிக்கொண்டு அத்வைதிகளை ஜயிக்கவேண்டிய விஷயத்தில் எல்லா இடங்களிலும் ப்ரயத்தனம் செய்யுங்கள். 3

வாதமாகிற யுத்தங்களில், வேதத்தில் சொல்லியிருக்கும் வழியைத் தூஷிப்பவர்களைப் பிளப்பதற்காக ஶத தூஷணீ என்கிற கூர்மையுள்ள பாணங்களின் வரிசை ப்ரயோகிக்கத்தக்கது. 4

𑌵𑌿𑌚𑌾𑌰𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑍂𑌤𑍍𑌰𑌕𑍃𑌦𑍁𑌲𑍍𑌲𑌿𑌖𑌿𑌤𑌸𑍍𑌯 𑌯𑌃 ।
𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌤𑍍𑌰 𑌨𑌿𑌰𑌸𑍍𑌯𑌤𑍇 ॥

𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌾𑌦𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌪𑌿 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿? 𑌨 𑌵𑌾? 𑌨 𑌚𑍇𑌤𑍍 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌭𑌙𑍍𑌗𑌾𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌸𑌮𑍍𑌪𑍍𑌰𑌦𑌾𑌯𑌸𑍍𑌯

அவ்விடத்தில் ஶாரீரக சாஸ்திரத்தின் ஆரம்பத்தில்—

ஸூத்திரக்காரர் ப்ரும்ம விசாரத்தைப் பற்றியதாக எந்தச்சில பதங்களை ஸூத்திரமாகச் செய்தாரோ அவைகளுக்குள் ‘ப்ரும்ம’ என்கிற பதத்திற்கு அத்வைதிகளால் சொல்லப்படுகிற வ்ருத்தி * இந்த வாதத்தில் நிராகரிக்கப்படுகிறது.

ப்ரும்மம் ஒரு விசேஷமுமில்லாதது என்று சொல்லும் வாதத்தில் ப்ரும்ம சப்தத்திற்கு ஏதாவது ஒரு முக்ய வ்ருத்தி உண்டா? இல்லையா? இல்லையென்று சொல்லும் பக்ஷத்தில் அது

---

* வ்ருத்தியாவது அர்த்தத்தைத் தெரிவிக்கக் கூடியதாய்ப் பதத்துக்கும் அர்த்தத்துக்கும் உள்ள ஸம்பந்தம். இது சக்தி என்றும் லக்ஷணை என்றும் இருவகைப்படும். ஒரு பதத்தைச்சொன்னவுடன் எந்த அர்த்தம் பெரும்பாலும் தோன்றுகிறதோ அப்படிப்பட்ட ஸம்பந்தம் சக்தி என்னப்படுகிறது. குடம் மனிதன் துணி முதலிய பதங்கள் சொல்லப்பட்டவுடன் அந்தந்த வஸ்துக்கள் ஜ்ஞாபகப்படுத்தப்படுகிறபடியினால் அந்தப் பதங்களின் அர்த்தம் சக்தியினால் ஏற்பட்டது என்னப்படுகிறது. இதுவே முக்ய வ்ருத்தி என்றும் சொல்லப்படுகிறது. அப்படிப் பெரும்பாலும் வழங்கி வரும் அர்த்தத்தைச் சொல்லுவதற்கு விரோதம் ஏற்பட்டு, அதைச்சேர்ந்த மற்றொரு வஸ்துவைச் சொல்லுவதற்குக் காரணமான ஸம்பந்தம் லக்ஷணை என்னப்படுகிறது. இத்தையே கௌணமென்றும், ஔபசாரிகமென்றும் அமுக்கிய வ்ருத்தி என்றும் சொல்லுகிறது. ‘கங்கை ஆற்றில் அக்கிரஹாரம் கட்டப்பட்டிருக்கிறது’ என்னும்பொழுது நடு ஆற்றில் அக்கிரஹாரம் கட்டப்பட்டிருப்பது அஸம்பாவித மாகையினால் ‘ஆறு’ என்னும் பதத்திற்கு முக்கியமான அர்த்தத்தைச் சொல்லுவதற்கு விரோதம் ஏற்பட்டபடியினால் அந்தப் பதம் ஆற்றங்கரையை ஜ்ஞாபகப்படுத்துகிறது. அதற்குக் காரணமான ஸம்பந்தம் லக்ஷணை என்னப்படுகிறது.

मिथ्यात्वाभ्युपगन्तॄणाम् असाधुत्वमिष्टमिति चेत् हन्त तर्हि सर्वशब्दासाधुत्वम् । साध्वसाधुविवेकाभावे च कृतं साङ्गोपाङ्गैर्वेदैः । मुख्यार्थशून्यस्य तन्मूल वृत्त्यन्तरे [illegible] चासम्भवति कथं क्वचित् बोधकत्वमपि ? न च साङ्केतिकोऽयमपभ्रंशो वा, येन वाचकत्वाभिमानात् बोधक

நல்ல * சப்தமாகாது. நல்ல சப்தமாயிருக்கையும் பொய்யென்று ஒப்புக்கொள்ளுகிறவர்களுக்கு அது அஸாது என்பது இஷ்டம் தானே என்னில், அஹோ! அப்படியாகில் எல்லா சப்தங்களும் அஸாதுக்களாகவேண்டிவரும். 0 நல்ல சப்தம் கெட்ட சப்தம் என்கிற பிரிவு இல்லாவிடில் அங்கம் உபாங்கம் இவைகளுடன் கூடிய வேதங்களால் ஒரு ப்ரயோஜனமுமில்லை. முக்ய வ்ருத்தியால் சொல்லப்படுகிற அர்த்தம் இல்லாத பதத்துக்கு முக்ய வ்ருத்தியைக்காரணமாகக்கொண்டு வரும் அமுக்ய வ்ருத்தியும் ஒரு வஸ்துவைத் தெரியப்படுத்தக்கூடிய யோக்யதையும் இல்லாமல் போய் விடுமாதலால் ஒரு விஷயத்தைப்பற்றி ஜ்ஞாபகப்படுத்துகிற யோக்யதையே பதங்களுக்கு இல்லாமல் போகவேண்டிவரும். மேலும் இந்த ப்ருஹ்ம என்னும் பதம் ஸங்கேதத்தினுல் ஏற்பட்ட அபப்ரம்சமுமல்ல, ** அப்படியாகிலன்றோ இதற்கு ஒரு அர்த்தத்தையும் தெரிவிக்கக்கூடிய சக்தி இல்லாமல் போனபோதிலும் இது சில பொருள்களைச் சொல்லுகிறது என்கிற ப்ரமத்தினுல் இதற்கு அந்தப் பொருளை ஜ்ஞாபகப்படுத்தக்கூடிய தன்மை ஏற்படும். இந்தப் பதம் எந்தப் பதத்தின் அபப்ரம்சமாக எண்ணப்படக் கூடு

---

* நல்ல சப்தமாவது வ்யாகரணத்தின்படி ஸிக்ஷிதமான சப்தம்.

0 ப்ருஹ்மம் தவிர மற்றதெல்லாம் பொய்யாகையாலே சப்தங்களுக்கெல்லாம் ஸாதுத்வமும் பொய்யாகையால் அஸாதுவாகும் என்றபடி.

** நிருக்தம் புராணம் முதலியவைகளில் இந்தப் பதம் நிர்வசனம் செய்யப்பட்டிருப்பதினுல் இதை அபப்ராம்சம் என்ன வொண்ணுது என்று அறியத்தக்கது.

க்ஷணம் ஸ்யாத்। யதஸ்யாபி ஸாதுத்வம் க்வசிதபி ததா வ்ருத்திவிகல்பேந நிருத்யேத।

நநு ப்ரஹ்மஶப்தஸ்யாயம் மஹிமா, யந்முக்யார்த்தவிரஹேঽபி நித்யம் லக்ஷணயா ப்ரஹ்ம போதயதீதி। தடிதம் வந்த்யாயா: பௌத்ரஜநநம்। முக்யார்த்தஸம்பந்திநோঽர்த்தஸ்ய வ்ருத்திர்ஹி லக்ஷணா। ததபாவேঽபி தத்வ்ருத்திம் பவாநேவ பாஷேத।

கிஞ்சைவம் முக்யார்த்தஶூந்யா: ஸர்வே ஶப்தாஸ்தத்ததர்த்தம் லக்ஷயந்தீதி ஸ்வீக்ரியேத மஹாமீமாம்ஸகேந। கோ ஹி பவதுக்தந்யாயவித் க்வசிதபி ஶக்திக்லுப்திகௌரவம் ம்ருஷ்யேத்? முக்யார்த்தஶூந்யேந ப்ரஹ்ம லக்ஷ்யத இதி வத

மோ அந்தப் பதத்திற்கும் முக்ய வ்ருத்தி உண்டா? இல்லையா? என்கிற விகல்பங்களினுல் அதற்கும் ஓரிடத்திலும் ஒரு விதமான ஸாதுத்வமும் இல்லாமல் போகவேண்டி வரும்.

ஆகிலும் ப்ரும்ம சப்தத்துக்கு இப்படிப்பட்ட ஒரு வித மஹிமை உண்டு, எது என்னில் :— முக்யமான அர்த்தம் இல்லாமற் போனபோதிலும் எப்பொழுதும் லக்ஷணையினுலேயே பரப்ரும்மத்தைத் தெரிவிக்கிறது என்பது என்னில், இது மலடிக்குப் பேரன் பிறந்தது போலாகும். ஏனெனில் முக்யமான அர்த்தத்தோடு சேர்ந்ததாகிய அமுக்யமான அர்த்தத்தைச் சொல்லுவதல்லவோ லக்ஷணை. முக்யமான அர்த்தம் இல்லாமற் போனபோதிலும் லக்ஷணை உண்டென்று நீ ஒருவன் தான் சொல்லமுடியும்.

மேலும் எல்லாப் பதங்களும் முக்யமான அர்த்தங்களைச் சொல்லாமலே அவ்வோ அர்த்தங்களை லக்ஷணையாகத் தெரிவிக்கின்றன என்று மஹாமீமாம்ஸகனுன உன்னுல் ஒப்புக்கொள்ளப்படலாம். நீ சொன்ன ந்யாயத்தை அறிந்த எவனெருவன் எந்தப் பதத்திலும் சக்தி உண்டென்று கல்பிப்பதினுல் உண்டாகும் கௌரவத்தைப் பொறுத்துக்கொள்ளுவான்? மேலும் முக்யமான அர்த்தத்தைச் சொல்லாத 'ப்ரும்ம' என்னும் பதத்தினுல் ப்ரும்மமா

- 1.] ப்ரும்ம ஶப்த வ்ருத்யனுபபத்தி வாதம்.

தா தஂவி ஶாஙெண ஸஂவ்ருதிஶெ நிக்ஷிப்தம் ।
அவாச்யவாதாச்ச வாச்யவாதேந நிரஸிஷ்யதே ।

அஸ்தி வெத கிஂநூஸ்தி? விசார விஷயெ வா?
நாத்ய: நிரூபித்தசெவ வாநரஸாய அவாவாதாத் । யத்ர

கிற வஸ்து லக்ஷணையினுல் சொல்லப்படுகிறது என்று சொல்லு கிற உன்னுல் வேருெரு விதமாக அந்த ப்ரும்மம் ஸம்வ்ருதியின் வாயிலே போடப்பட்டது.* ப்ரும்மம் அவாச்யம் (ஒரு பதத்தினுலும் சொல்லத்தகாதது) என்கிற வாதமும் அது வாச்யம் என்று மேலே நிர்த்தாரணம் செய்யப்படப்போகிற வாதத்தினுல் ० நிராகரிக்கப்படப்போகிறது.

இந்த 'ப்ரும்ம' என்னும் பதத்துக்கு முக்யமான அர்த்தம் உண்டு என்று சொல்லும் பக்ஷத்தில் அதற்கு முக்யவ்ருத்தி (இந்த சாஸ்திரத்தில் விசாரிக்கப்படுகிறதாக நீங்கள் சொல்லும் ப்ரும்மம் தவிர) வேறு வஸ்துவினிடத்திலா? இங்கு விசாரிக்கப்படுகிற ப்ரும்மத்தினிடத்திலா? முதல் பக்ஷமில்லை (அதாவது வேறு வஸ்துவினிடத்தில் முக்ய வ்ருத்தி என்று சொல்ல முடியாது என்றபடி). ஏனெனில் அது ஒரு காரணத்தைப் பொறுத்துச் சொல்லுகிறதா? அல்லவா? ஒரு காரணத்தைப் பொறுத்து அல்ல என்னில் அந்த சப்தம் அஸாதுவாக வேண்டிவரும். யாத்ருச்சிகமாக உண்டாகும் ஓசை (நகார் முதலிய வாத்யங்களைத்

---

* ஸர்வமும் சூந்யம் என்று சொல்லும் மாத்யமிகன் இந்த லோகங்களெல்லாம் ஸம்வ்ருதியினுல் தோற்றுகின்றன வாகையால் இவைகளுக்கு ஸம்வ்ருதி ஸத்யம் என்று பெயர் என்று சொல்லுகிறுன். அதைப்போல ப்ரும்மத்தை முக்யமாகத்தெரிவிக்கக்கூடிய பதம் இல்லை என்று சொல்லில், முக்யார்த்தத்தோடு சேர்ந்த லக்ஷணையும் ஏற்படாதாகையினுல் ப்ரும்மம் ப்ரமாணமற்றதாய்த் துச்சமாய்விடும். அப்பொழுது ப்ரும்மமும் இந்த லோகங்களைப் போலே ஸம்வ்ருதி ஸத்யமாகும். ஆதலால் உனக்கு இஷ்டமான ப்ரும்மம் ஒன்றே ஸத்யம் என்பதும் போய்விடும் என்றபடி.

० 45-ம் வாதம்.

த்4வநயோऽபி ஹி ஸ்வரூபேணைவ நிமித்தக ஶாஸ்த்ரஜ்ஞைர்நிர்தா4ரிதா:। ந சாயம் ஸ:, ப்ரமாணாபா4வாத் நிருக்தி விரோதா4ச்ச। ஸநிமித்தகே ச ய: ப்ரக்ருத்யாதி3ஷ்வஸ்ய ப்ரயோக3:, ஸ ப்3ரஹ்ம கு3ண லேஶயோகா3த் ஔபசாரிக: இதி பா4ஷ்யே, அநந்தவ்யாப்தஸ்யாக்ருதிரூபஸ்ய நிமித்தஸ்யாவிஶேஷை:, வ்யாஹதஶ்ச ப்3ரஹ்ம

தட்டுவதினுல் உண்டாகும் ஓசை) அந்த (நகார் முதலிய) வஸ்துக்களைத் தெரிவிக்கிறது என்பது ஒரு காரணத்தைக் கொண்டல்லவே? அது போலவே இதுவும் என்னில் :—அந்த ஓசையும் தன்னுடைய ஸ்வரூபத்தையே காரணமாகக் கொண்டு அவ்வோ வஸ்துக்களை ஜ்ஞாபகப்படுத்துகிறது (அதாவது இப்படிப்பட்ட ஓசையை உண்டாக்கக்கூடிய வஸ்து அதுவாகவே இருக்கவேண்டும்) என்று சாஸ்திரம் அறிந்தவர்களால் நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது. மேலும் இந்த 'ப்ரும்ம' என்னும் பதம் அப்படிப்பட்டதல்ல, (அப்படிப் பட்டதென்பதற்கு) ஒரு வித ப்ரமாணமில்லாமையால். * மேலும் (நிருக்தம் புராணம் முதலியவைகளில் இதற்கு) நிர்வசனம் 0 செய்திருப்பதற்கு விரோதம் வருகிறபடியினுலும். ஒரு காரணத்தோடு கூடியது என்று சொல்லும் பக்ஷத்தில் ப்ரக்ருதி முதலிய வஸ்துக்களில் இந்த 'ப்ரும்ம' என்னும் பதத்தை ப்ரயோகித்திருப்பது பரப்ரும்மத்தின் குணங்களில் ஏகதேசமிருப்பதினுல் ஔபசாரிகமாகச் சொல்லப்படுகிறதென்று ஸ்ரீ பாஷ்யத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் எங்கெந்த மூலப்ரக்ருதி முதலிய வஸ்துக்களில் ப்ருமம என்னும் பதம் ப்ரயோகிக்கப்படுகிறதோ அப்படிப்பட்ட எல்லா வஸ்துக்களிலும்

---

* அதாவது நகார் ஓசையை நகார் அடிக்கும்பொழுது ப்ரத்யக்ஷத்தில் அப்படிப்பட்ட ஓசை உண்டாவதைப் பார்த்திருப்பதினுல் பிறகு அந்த ஓசையைக்கேட்ட மாத்திரத்தினுல் அந்த வஸ்துவின் ஜ்ஞாபகம் வருகிறது. அப்படி ப்ரும்ம சப்தத்துக்கும் ப்ரும்மமாகிய வஸ்துவுக்கும் ஸம்பந்தத்தைத் தெரிவிக்கக் கூடிய ப்ரமாணம் இல்லாமையினுல் என்றபடி.

0 நிர்வசனமாவது ப்ரக்ருதி ப்ரத்யயங்களை (பகுதி விகுதிகளை) பிரித்து அர்த்தம் சொல்லுவது.

𑌣𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿 𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌸𑌂𑌜𑍍𑌞𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍,
𑌅𑌨𑍇𑌕𑌶𑌕𑍍𑌤𑌿𑌕𑌲𑍍𑌪𑌨𑍇 𑌗𑍌𑌰𑌵𑌾𑌤𑍍, 𑌲𑍋𑌕𑍋𑌤𑍍𑌤𑌰𑌬𑍃𑌹𑌤𑍍𑌤𑍍𑌵𑌾
𑌦𑌿𑌮𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯𑍈𑌵 𑌭𑌗𑌵𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌨𑌯𑌾 𑌉𑌪𑌚𑌾𑌰𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌗𑍌𑌣𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌲𑍋𑌪𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 1 ‘𑌯𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌪
𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮’ 𑌇𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂 𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌮𑍁𑌖𑍍𑌯𑌤𑌾𑌂
𑌵𑍍𑌯𑌨𑌕𑍍𑌤𑌿 । 2 ‘𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑍋 𑌮𑍁𑌖𑍍𑌯𑌵𑍃𑌤𑍍𑌤𑍋 𑌮𑌹𑌾
𑌮𑍁𑌨𑍇’ 𑌇𑌤𑌿 𑌚 𑌸𑍍𑌮𑌰𑍍𑌯𑌤𑍇 । 3 ‘𑌦𑍍𑌵𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍀 𑌵𑍇𑌦𑌿𑌤𑌵𑍍𑌯𑍇’
𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌮𑌪𑌿 4 ‘𑌤𑍍𑌰𑍀𑌣𑌿 𑌤𑍇𑌜𑌾𑌂𑌸𑌿 𑌨 𑌸𑍍𑌪𑍃𑌶𑍇𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌾
𑌦𑌿𑌵𑌤𑍍 𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌮𑍁𑌖𑍍𑌯𑌸𑌂𑌶𑌯𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑌂 ।

ஒரே மாதிரியான ஸ்வபாவமாகிற காரணம் ஏற்படாமையாலும், பெரிதாயிருக்கிறது மற்றொன்றைப் பெரியதாக்குகிறது என்கிற காரணங்களும் 'ப்ரும்ம' என்னும் பதத்தினுல் சொல்லப் படாதவைகளாயும், ப்ருஹத் என்னும் பதத்தினுல் சொல்லப்பட்டவைகளாயு மிருக்கிற மலை, ஸமுத்திரம், முதலிய வஸ்துக்களில் இருப்பதினுலும் ப்ரும்ம என்னும் வ்யவஹாரத்துக்கு இன்றியமையாத காரணமாகாது. எல்லா வஸ்துக்களிலும் ஒரு பதத்துக்கே தனித்தனியே அனேகம் விதங்களான சக்தியைக் கல்பிப்பது கௌரவமாகும். லோகங்களுக்குள் மேன்மையை உடையதாயிருக்கிற பெரிதாயிருக்கும் தன்மை என்பதும் பகவான் என்கிற சப்தத்திலே போலஔபசாரிகமானப்ரயோகத்துக்குக்காரணமாகும். அப்படிக்கில்லாமல் ஔபசாரிகமாகச் சொல்லுவதற்குக் காரணத்தையே சக்திக்கும் காரணமாகக் கொள்ளில் லோகத்தில் கௌண வ்ருத்தியே லோபித்து விடும். மேலும் 'எது ஸாக்ஷாத்தான ப்ரும்மமோ' என்று ஸாக்ஷாத் என்னும் விசேஷணம் சொல்லியிருப்பதும் பரப்ரும்மம் தவிர மற்ற இடத்தில் அமுக்யம் என்பதைத் தெரிவிக்கிறது. 'ஓ! மஹரிஷியே! அந்தப் பரமாத்மாவினிடத்திலேயே ப்ரும்ம என்னும் பதம் முக்ய வ்ருத்தியை உடையது' என்று ஸ்ம்ருதியிலும் சொல்லப்படுகிறது. '(ஜீவாத்மா பரமாத்மாவாகிற) இரண்டு ப்ரும்மங்களும் அறியத்தக்கவைகள்' என்று சொல்லியிருப்பதும், 'மூன்று (ப்ராம்மணன், பசு, நெருப்பு, என்கிற இந்த மூன்று) தேஜஸ்ஸுக்களையும் தொடக்கூடாது' என்று சொல்லியிருப்பது முதலிய இடங்களிலே போல முக்யமான அர்

ந த்விதீய:, ஶுத்தோபஹிதவிகல்பாஸஹத்வாத் । ந ஹி நிர்விஶேஷதயாபிமதே ஶுத்தே 1 ‘ ப்ருஹதி ப்ரும்ஹயதி ’ இதி ஶ்ருத்யுக்தம் நிமித்தமஸ்தி । அதிஷ்டாநத்வேந ஸர்வப்ரமவிவர்தாஶ்ரயதயா ச தத் ஸம்பவதீதி சேந், தத்ர தத்ஸம்பவே ஸ்வாபாவிகத்வாத் । அநபாயாத் முக்தாவபி தத்ஸம்பந்தாத் முக்தேரேவ முக்தே: ।

உபலக்ஷணார்த்தம் நிர்வசநமிதி சேந், விஶேஷணார்தஸ்யைவ ந்யாய்யத்வாத், 2 ‘ தஸ்மாத்ஸர்வகதே பரம் ப்ர

த்தத்தையும் அமுக்யமான அர்த்தத்தையும் சேர்த்துச் சொல்லுகிற அபிப்ராயத்தை உடையது.

(இந்த சாரீரக சாஸ்திரத்தில் விசாரிக்கப்படும் ப்ரும்மத்திணிடத்தில் முக்ய வ்ருத்தியை உடையது என்னும்) இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, அந்த ப்ரும்மம் சுத்தமா ? உபஹிதமா?* என்கிற கேள்விகளுக்குப் பதில் சொல்ல வழியில்லாமையினுல். நிர்விசேஷம் (ஒரு விசேஷமுமில்லாதது) என்று ஒப்புக்கொள்ளப் பட்ட சுத்த ப்ரும்மத்தில் ‘ தான் மிகவும் பெரியதானது, தன்னைச் சேர்ந்த வஸ்துக்களையும் பெரியதாக்குகிறது ’ என்றர்த்தமுள்ள ச்ருதியில் சொல்லப்பட்ட காரணமில்லையல்லவா ? எல்லா ப்ரமங்களுக்கும் இடமாயிருப்பதினுலும் எல்லா ப்ரமங்களுக்கும் இருப்பிடமாகையினுலும் முன்பு கூறிய நிமித்தம் இருக்கிறதென்னில் அதுவும் உசிதமல்ல, சுத்த ப்ரும்மத்தில் அவை இரண்டும் ஸம்பவிக்காதாகையால். சுத்த ப்ரும்மத்தினிடத்திலும் எல்லா ப்ரமங்களுக்கும் ஆதாரமாயிருக்கை முதலிய ஸ்வபாவமிருந்ததேயானுல் மோக்ஷ தசையிலும் அது நீங்காதாகையினுல் மோக்ஷத்திற்கே மோக்ஷம் வரவேண்டி வரும் (அதாவது மோக்ஷமென்பதே இல்லாமல் போகவேண்டி வரும் என்றபடி).

இந்த நிர்வசனங்கள் உபலக்ஷணங்களாக இருப்பதாகச் சொல்லப்படுகிறதென்னில் அதுவும் உசிதமல்ல, விசேஷணம் இருப்பதில் ஒரு வித விரோதமுமில்லாமையாலும், மாடாக

* உபஹிதம் - அவித்யையோடு சேர்ந்தது.

ஹ’ இதி ஶ்ருதிநிஶ்சிததயைவ ப்ருஹத்த்வாதிரூபதே: | ‘ப்ருஹத்த்வாத் ப்ரும்ஹணத்வாச்ச தத் ப்ரஹ்மேத்யபிதீயதே’ இதி ஸ்ம்ருதேஶ்ச, ‘கோத்வாதிஸம்பந்தாத் கௌ:’ இதிவச்ச |

தஸ்ய வ்யாவஹாரிகம் தத்வைஶிஷ்ட்யம் | கதம் தர்ஹி ஶுத்தே வ்ருத்தி: ? ததபி தத்த்வாரா ப்ரதீயத இதி சேத், தர்ஹி தந்ந முக்யம் | உபஹிதம் முக்யமிதி பக்ஷஸ்து ஶ்ருதிஸித்தஸ்வாபாவிகஸார்வஜ்ஞ்யாத்யுபஹிதத்வ விவக்ஷாயாம் ஸ்வமதவிரோதாதபாஸ்த: | ஸ்வாபிமதாஜ்ஞாநாதிதோஷோபஹிதத்வம் து நாக்ஷஸமீக்ஷ்யம் ந ஶ்ரௌதம் ந ஸ்மார்த்தம்

இருக்கும் ஆகாரங்கள் இருப்பதினுல் அது மாடு என்னப்படுகிறதென்பதைப் போல; ‘ஆதலால் ப்ரும்மமென்னப்படுகிறது’ என்று இப்பெரிதாயிருக்கை முதலிய ஸ்வபாவங்களை ‘ப்ரும்ம’ என்னும் பதம் அந்தப் பரப்ரும்மத்தைச் சொல்லுவதற்குக் காரணமாக ச்ருதியில் சொல்லப்பட்டிருப்பதினுலும்; ‘பெரிதாயிருப்பதினுலும், மற்ற வஸ்துக்களேயும் பெரியதாக்குகிறபடியினுலும் அது ப்ரும்மமென்று சொல்லப்படுகிறது’ என்று ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டிருப்பதினுலும்.

ஆனுல் அந்த ஸ்வபாவங்களோடு சேர்ந்திருக்கையும் வ்யாவஹாரிகம் (வ்யவஹாரத்தினுல் ஏற்பட்டது வாஸ்தவமானதல்ல) என்னில் அது சுத்த ப்ரும்மத்தினிடத்தில் எப்படி இருக்கும்? சுத்த ப்ரும்மமும் விசிஷ்ட ப்ரும்மத்தின் வழியாக அறியப்படுகிறதென்னில் அப்பொழுது அது முக்யார்த்தமாகாது. விசிஷ்டமான ப்ரும்மம் முக்யமான அர்த்தம் என்கிற பக்ஷமோவெனில் வேதங்களிலே சொல்லப்பட்டதாய் ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டதான ஸர்வஜ்ஞத்வம் முதலிய குணங்களோடு சேர்ந்த ப்ரும்மத்தைச் சொல்லுகிறது என்று தாத்பர்யம் கொள்ளில் தங்கள் மதத்துக்கே விரோதமாதலால் தள்ளப்பட்டது. தங்கள் இஷ்டப்படி அவித்யை முதலிய தோஷங்களோடு கூடின ப்ரும்மம் என்பதோவெனில் அது கண்ணுலும் பார்க்கப்படாதது, காரணத்தினுலும் ஊஹிக்க முடியாதது, ஶ்ருதியிலும் சொல்லப்படவில்லை,

बृंहतीति श्रावयिष्यते । तत्रैव सूत्रे परब्रह्मणि निर्दोषत्वमङ्गलगुणविशिष्टविषयभगवच्छब्दव्युत्पत्तिनिरुक्तिविरोधः, 1 'परं ब्रह्म परं धाम पवित्रं परमं भवान्' इति स्तुत्यनुपपत्तिः । पवित्रं परमित्यादि सहव्याहारवैयर्थ्यं च । निर्विशेषलक्षणायां तु स्तुतिर्न कथंचिदपि संभवति । गुणिवस्तुनि गुणाभिधानरूपत्वात् स्तुतेः इति । पूर्वापरादिविसंवादाच्च न कथमपि निर्गुणत्वसिद्धिः ।

ஸ்ம்ருதியிலும் ஏற்படவில்லை, ஸூத்திரங்களிலும் சொல்லப்படவில்லை என்று மேலே ஸ்தாபிக்கப்படப்போகிறது. (அவித்யையோடு கூடின ப்ரும்மமே முக்யமான அர்த்தம் என்னும்) அந்தப் பக்ஷத்திலும் ஸூத்தமான பரப்ரும்மத்தினிடத்தில் தோஷங்களில்லாமலும் மங்கள குணங்களோடு சேர்ந்திருப்பதைப் பற்றிப் பகவான் என்கிற ஶப்தத்துக்கு முக்ய வ்ருத்தியை நிர்வசனம்செய்திருப்பதற்கு விரோதம் வரும். * மேலும் ' உயர்ந்த ப்ரும்மமும் உயர்ந்த தேஜஸ்ஸும் மேலான பரிசுத்தியை உண்டாக்குகிற வஸ்துவும் நீர் ' என்று ஸ்தோத்திரம் செய்திருப்பதும் பொருந்தாது. மேல் பதங்களில் ' பரிசுத்தமானவன் ' என்று குணங்களைச் சொல்லி ஸ்தோத்திரம் பண்ணியிருக்கும் பதங்களோடும் பொருந்தாது. ஒரு விசேஷமுமில்லாத ப்ரும்மத்தை லக்ஷணையாகச் சொல்லுகிறது என்னும் பக்ஷத்தில் எவ்விதத்திலும் இது ஸ்தோத்திர மாகாது. ஏனெனில் வஸ்துவினிடத்தில் இருக்கிற குணத்தைச் சொல்லுவதே ஸ்தோத்திரமாகையினால். மேலும் அந்தப் பகவத்கீதையில் முன் பின் ஸந்தர்ப்பங்களோடு விரோதிப்பதினாலும் நிர்குண வஸ்துவைச் சொல்லுகிறதென்பது ஸித்திக்காது.

---

* தோஷமில்லாத சுத்த ப்ரும்மமே குணங்களோடு சேர்ந்திருப்பதென்று நிர்வசனத்தில் சொல்லி இருப்பதினாலும் அப்படிப் பட்ட பகவச் சப்தம் போலே ப்ரும்ம சப்தமும் என்று சொல்லியிருப்பதினாலும் விரோதம் வரும் என்றபடி.

கிஞ்ச அவித்யா நிவ்ருத்த்யர்த்தமிஹ ஜ்ஞாதவ்யம் ஸவிஶேஷிதம்? நிர்விஶேஷம் வா? பூர்வஸ்மின் தத்த்வாவேதக பதஸ்ய ஸ்வரூபலக்ஷணாதிபிரபி தஸ்ய ப்ரஹ்மாதிவிஶிஷ்டப்ரஹ்மணி வ்ருத்த்யஸித்த்யாஸ்மதிஷ்டஸித்திஸ்ஸ்யாத் | அஸத்யார்த்தஜ்ஞாநாதேவ மோக்ஷஸித்தி:, தஸ்ய மித்யாத்வேநைவ யுஷ்மாபிரங்கீகாராத் |

த்விதீயே த்வதச்சக்தேந ததுக்த்யயோக ஏவ | தஸ்ய லக்ஷிதம் தஸ்ய ஜிஜ்ஞாஸ்யத்வே லக்ஷ்யத்வே ஶோத்யத்வே சேதி சேத் ததேவ நிர்விஶேஷலக்ஷக ப்ரஹ்மஶப்தாத் ஜ்ஞாதத்வ லக்ஷிதத்வ ஶோதிதத்வ ஸித்த்யா ஜிஜ்ஞாஸாத்யந

மேலும் அவித்யை நிவ்ருத்தி அடைவதற்காக இந்தச் சாரீரக சாஸ்திரத்தினுல் விசாரிக்கப்படும் ப்ரும்மம் விசேஷணங்களோடு சேர்ந்த ப்ரும்மமா? நிர்விசேஷ ப்ரும்மமா? விசேஷணங்களோடு சேர்ந்த ப்ரும்மமென்னில் உண்மையை அறிவிக்கிற ப்ரும்ம ஸ்வரூபத்தின் லக்ஷணம் முதலியவைகளாலும் அந்த விசிஷ்ட ப்ரும்மமே அறியப்படுகிறபடியினுல் சுத்த ப்ரும்மத்தினிடத்தில் ஒரு பதங்களுக்கும்வ்ருத்திஏற்படாமையால்எங்களுடையஇஷ்டமே ஸித்தித்துவிடும். மேலும் உண்மையில்லாத வஸ்துவை அறிவதினுல் மோக்ஷம் உண்டாகவேண்டிவரும். ஏனெனில் விசிஷ்ட ப்ரும்மம் பொய்யென்று உங்களாலேயே அங்கீகரிக்கப்பட்டிருப்பதினுல்.

(சுத்த ப்ரும்மமென்னும்) இரண்டாவது பக்ஷத்திலும் அந்த வஸ்துவைத் தெரிவிக்கக்கூடிய சக்தி இல்லாத பதத்தினுல் அதைச் சொல்லுவது அஸம்பாவிதம். அந்த ப்ரும்ம என்னும் பதத்தினுல் லக்ஷணையாகச் சொல்லப்படுகிற நிர்விசேஷ வஸ்து அறிய வேண்டுமென்று இச்சிக்கப்படுகிறது; அதுவே லக்ஷணத்தைக்கொண்டு நிரூபிக்கப்படுகிறது; அதுவே மேலே விசாரிக்கப்படுகிறது; என்னில், அந்த நிர்விசேஷ வஸ்துவை லக்ஷணையாகச்சொல்லுகிற 'ப்ரும்ம' என்னும் பதத்தினுலேயே அந்த வஸ்து அறியப்பட்டதாகவும், லக்ஷணத்தைக்கொண்டு நிரூபிக்கப்பட்டதாகவும் விசாரிக்கப்பட்டதாகவும் ஏற்பட்டபடியினுல் அதில் மறுபடியும் அறிய

பேக்ஷா ஸ்யாத் । ந ச ஜிஜ்ஞாஸாதௌ விதி:, அத்³ருஷ்டா-
ர்த²த்வாபா⁴வாத் யேந விஶிஷ்டவேஷணம் ஸஹேத । நிரு-
பாதி⁴கே ப்³ரஹ்மஶப்³த³வ்ருத்திவிஶேஷ: ப்ரதிபோ³த⁴நேந
ஸப²லம் ஸாமஞ்ஜிதிசேத் கிம் முக்²யாமமுக்²யாம் வா ? பூ-
ர்வத்ர ஆரம்ப⁴வ்யாகா⁴த:, ஸர்வஸ்யோபரிதந முக்²ய-
வ்ருத்தி விஷயபோ³த⁴நாவக்ஷீணத்வாத் । அநுபஹிதே
ஹி லக்ஷணாமேவ வத³ஸி । அபி⁴தா⁴நாங்கீ³காரே வா கிம்

ணைக்குட்பட்டதல்லவாகையினாலா ? வேறு ஏதாவது ஒரு காரணத்தினாலா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல. ஏனெனில் உன் பக்ஷத்தில் வ்ருத்தி ரூபமாயும் மற்றவர்கள் பக்ஷத்தில் ஆத்மாவின் இடத்தில் இருக்கிற ஒரு விசேஷகுணமாயும் நம்முடைய பக்ஷத்தில் அந்த ஆத்மாவின் குணமாகிய ஜ்ஞானத்தின் அவஸ்தா விசேஷமுமாகிய அந்த ஜ்ஞானம் இந்திரியங்களுக்கு வசப்பட்டு உண்டாகிறபடியினால் அது நம்மால் உண்டாக்கக் கூடியது என்பது ஏற்பட்டு விடுகிறபடியினால். அப்படியே ‘சில காலத்தில் உண்டாவதை ஸ்வபாவமாக உடைய வஸ்துவிற்கு ஒன்றினால் உண்டாக்கப்படக் கூடியதாயிருக்கை யாரால் தடுக்கப்படுகிறது? அது ஒரு காரணத்தினாலும் உண்டாகவில்லை என்னில் சார்வாக மதத்தை அங்கீகரித்ததாகும்’ என்று சொல்லுகிறார்கள். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, ‘ஜ்ஞா’ என்கிற தாது அறிவதைச் சொல்லுகிறது’ என்று க்ரியா ரூபமாகவே பாணினீய வ்யாகாரணத்தில் சொல்லி இருக்கிறபடியினாலும் ஆத்மாவின் ஸ்வரூபமாகிய ஜ்ஞானத்திற்கு விதி என்கிற ப்ரஸ்தாவமே இல்லாமையினாலும். மூன்றாவது பக்ஷமும் உசிதமல்ல, ப்ரயத்தினத்திற்கு விதிக்கத்தக்கதா யிருக்கை இல்லாமல் போக வேண்டிவருமாதலாலும்,* உலகத்தில் தனக்கு இஷ்டமான கார்யத்

---

* ப்ரயத்தினம் ப்ரயத்தினத்திற்கு விஷயமாகாதாகையினால் என்றபடி.

विषयविधानसम्भवात् । न चतुर्थः, भावार्थानामपि विधेयत्वभङ्गप्रसङ्गात् । न पञ्चमः, 'यष्टव्यः' इत्यादौ यागादेरिव 'द्रष्टव्यः' इत्यादौ दर्शनादेरपि तदनुप्रवेशे विरोधाभावात् । न षष्ठः, ज्ञानविधिविरोधिनः कस्यचिदन्यस्यापि कुतश्चित्सिद्ध्यभावात् ।

किञ्च — यदि ज्ञानं न विधेयं कथं तर्हि यागादिविधिरपि न भज्येत? यागोऽपि हि देवतोद्देशेन द्रव्यत्यागात्मा बुद्धिविशेष एव । एवञ्च द्वादशाहे अविवाक्ये दशमेऽहनि बुद्धिविशेषरूपस्य मानसग्रहादेः कथं विधेयतेष्यते?

தைக் குறித்து ப்ரயத்தினம் செய்யவேண்டும் என்று ப்ரயத்தினத்தைக் குறித்து விதிப்பதைக் கண்டிருப்பதினாலும். நான்காவது பக்ஷமும் உசிதமல்ல, மற்ற யாகம் முதலிய க்ரியைகளுக்குப் விதிக்கத் தக்கதா யிருக்கை இல்லாமல் போக வேண்டி வருமாதலால். ஐந்தாவது பக்ஷமும் உசிதமல்ல, 'யாகம் செய்யத்தக்கது' என்றிவை முதலிய இடங்களில் யாகம் முதலியவைகளுக்குப் போல 'பார்க்கத்தக்கவன்' என்றிவை முதலிய இடங்களில் பார்ப்பது முதலியவைகளுக்கும் மூன்று அம்ஸங்களோடுகூடிய பாவனைக்கு உட்பட்டிருப்பதில் ஒரு விரோதமும் இல்லாமையினால். ஆறுவது பக்ஷமும் உசிதமல்ல, ஜ்ஞானத்தை விதிப்பதற்கு விரோதியான வேறு ஒரு காரணமும் ஒன்றினாலும் ஸித்திக்கவில்லையாகையினால்.

மேலும், ஜ்ஞானம் விதிக்கத் தக்கதல்ல என்னில், அப்படியாகில் யாகம் முதலியவைகளை விதித்திருப்பதும் ஏன் தவறுதலாகாது? யாகம் என்பதும் ஒரு தேவதையை உத்தேசித்து ஹவிஸ்ஸு முதலிய வஸ்துவைக்கொடுப்பதென்கிற ஒருவிதபுத்திதானே. இப்படியே பனிரண்டு நாள் செய்யக்கூடிய ஸத்ரத்தில் (ஒருவித யாகத்தில்) அவிவாக்யம் என்று பெயருடைய பத்தாவது நாளில் புத்திவிஸேஷமாகிய மானஸக்ரஹம் (அதாவது மனதினாலேயே சில பாத்திரங்களில் ஸோமரஸம் வைத்திருப்பதாகவும், அவைகளை ஹோமம் செய்

கத²ம் வா மநஸ்விதாத்³ருஷ்டிரூபாணாம் தத்த்வவிஷயாணாஞ்சோபாஸநாநாம் விதே⁴யத்வமிஷ்யதே? கத²ஞ்ச த³ர்ஶநாயாபி ஶ்ரவணமநநநிதி³த்⁴யாஸநாநி விதே⁴யாநீச்ச²ஸி? தாந்யபி ஜ்ஞாநவிஶேஷரூபாண்யேவ। நநு ந தாநி ஜ்ஞாநரூபாணி, அபி து தது³த்பத்த்யுபாயரூபாணீதி சேத் தந்ந, தது³த்பத்த்யேவ ஸத்யபி தேஷாமபி ஸ்வரூபஸ்ய ஜ்ஞாநரூபத்வாத்। ஶ்ரவணம் ஹி நாம தத்த்வத³ர்ஶிந ஆசார்யாந்ந்யாயயுக்தார்த²க்³ரஹணம்। மநநமபி ததோ²பதி³ஷ்டஸ்யைவேத³மேவ ந்யாயயுக்தம் இதி யுக்தித: ப்ரதிஷ்டா²பநரூபோ வ்யவஸாய:। நிதி³த்⁴யாஸநமபி அநவரதபா⁴வநாத்மகஸ்ம்ருதிஸந்தாந:। ததே³வம் தேஷாம் ஜ்ஞாநரூபதாநாமேவ யதி³ விதே⁴யத்வமிஷ்யதே, கத²ம்

வதாகவும் நினைப்பது) முதலியவைகள் விதிக்கப்படுகின்றன என்பது எப்படி ஒப்புக்கொள்ளப்படுகிறது? த்ருஷ்டி ரூபங்களான (அதாவது இல்லாததை ஆரோபித்து த்யானம் செய்வதான) மனஸ்சிதம் முதலிய அக்னிகளும் தத்வங்களைப் பற்றிய உபாஸனங்களும் விதிக்கப்படுகின்றன என்பது தான் எப்படி ஒப்புக்கொள்ளப்படுகிறது? எப்படித் தான் ஸாக்ஷாத்காரம் உண்டாவதற்காகவாவது ஶ்ரவண மனன நிதித்யாஸனங்கள் விதிக்கப்படுகின்றனவென்று நீ ஒப்புக்கொள்ளுகிறாய்? அவைகளும் ஒருவித ஜ்ஞானங்கள் தானே. அவைகள் ஜ்ஞான ரூபங்கள் அல்ல, பின்னை எதுவென்னில், ஜ்ஞானம் உண்டாவதற்காக ஏற்பட்ட வ்யாபாரங்கள் என்பதும் உசிதமல்ல, ஜ்ஞானம் உண்டாவதற்காக ஏற்பட்டவைகளாயிருந்தபோதிலும் அவைகளின் ஸ்வரூபமும் ஜ்ஞான ரூபமாகையினால். ஶ்ரவணமாவது உண்மையை அறிந்த ஆசார்யனிடத்திலிருந்து ந்யாயத்தோடு சேர்ந்த அர்த்தத்தை அறிவது. மனனமாவது அப்படியே ஆசார்யன் சொல்லியபடி இதுவே ந்யாயம் என்று யுக்திகளால் ஸ்தாபிப்பதாகிய நிஶ்சயம். நிதித்யாஸனமாவது எப்பொழுதும் அதையே நினைத்துக்கொண்டிருப்பதாகிய இடைவிடாத நினைவுகளின் வரிசை. ஆதலால் இப்படி ஜ்ஞான ரூபங்களாகிய இவ்வைகள் விதிக்கப்படுகின்றன

'த்ரஷ்டவ்ய:' இத்யத்ராபி தர்ஶநஸ்ய விதேயத்வம் நேஷ்யதே? ததா ச—

விஷ்ணுர்யஷ்டவ்ய இத்யாதௌ விதிப்ராப்தநிஷேதநாத் |
ஸர்வத்ராஸ்தாப்ய தத்பாதோ தர்ஶனே வா ந பாத்யதாம் ||

அத ச த்யானஸாத்யதயா தர்ஶநஸ்யாநூத்யத இதி சேத், ததா மநநத்யாநயோரபி பூர்வபூர்வஸாத்யதயாऽநுவாத இதி கிம் ந ஸ்யாத்? ஸ்யாதேவேதி சேந்ந, 'ஸாக்ஷாத்காரோபகாரகாங்கதயா ஶ்ரவணாதித்ரயவிதி:' இதி யுஷ்மாபி: ப்ரதிபாதநாத் | ததாசைகஸ்யைவ விதேயத்வாநுவாத்யத்வே இதி விரோத:| ந ஹி விரு

என்று ஒப்புக்கொள்ளப்படுமேயானல் 'பார்க்கத் தக்கவன்' என்கிற இடத்திலும் தர்ஶநம் விதிக்கப்படுகிறது என்று என் ஒப்புக்கொள்ளப்படவில்லை? இப்படியாகில்—

விஷ்ணுவைக் குறித்து யஜனம் செய்யவேண்டும் என்கிற இடத்தில் விதிக்கிற ப்ரத்யயம் (விகுதி) இருந்தபோதிலும் அதைத் தடுத்து விதி இல்லை என்று ஸ்தாபித்திருப்பதைக் கண்டிருப்பதினல் எல்லா இடங்களிலும் விதி இல்லை என்று விதியை மறுப்பதாவது, 'பார்க்கத் தக்கவன்' என்கிற இடத்தில் விதியை மறுக்காமல் ஒப்புக்கொள்ளவாவது வேண்டும்.

மேலும், த்யானத்தினல் உண்டாகவேண்டிய ப்ரயோஜனமாக தர்ஶநம் அநுவதிக்கப்படுகிறதென்று எண்ணுகிறீரேயானல் அப்பொழுது மனனம், த்யானம் இவைகளும் முன்பு சொல்லப்பட்டவைகளுக்கு ப்ரயோஜனமாக அநுவதிக்கப்படுகின்றனவென்று என் ஒப்புக்கொள்ளவில்லை? அப்படியே இருக்கட்டுமே என்னில் அது உசிதமல்ல, 'ப்ரயோஜனத்துக்கு உபகாரம் செய்வதாகவும் அங்கமாகவும் ஶ்ரவணம் முதலிய மூன்றும் விதிக்கப்படுகின்றன' என்று உங்களாலேயே நிரூபிக்கப்படுகிறபடியினல். இப்படியாகில் ஒன்றுக்கே விதிக்கப்பட்டதாயிருக்கையும் அநுவாதம் செய்யப்படுவதாயிருக்கையும் ஒப்புக்கொள்ளப்படுகிறதாகையினல் விரோதம் வருகிறது. ஒன்ருெடொன்று விருத்தங்களான மூன்று சேர்ந்த

𑌇𑌤𑌿 𑌦𑍍𑌵𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑍇𑌤𑌾 𑌤𑌾𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑍈𑌃 । 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌹𑌿 1 '𑌉𑌦𑍍𑌦𑍇𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌾𑌧𑌾𑌨𑍍𑌯𑍇𑌨 𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 । 𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌂 𑌵𑌿𑌧𑌾𑌨𑌂 𑌵𑌾 𑌗𑍁𑌣𑌤𑍍𑌵𑌂 𑌨𑍈𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍇 ॥' 𑌇𑌤𑌿 । 2 '𑌉𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑍇𑌽𑌤𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑌚𑌨𑌾𑌤𑍍' 𑌇𑌤𑌿 𑌸𑍂𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨𑍋𑌪𑌾𑌸𑌨𑌸𑍍𑌯 𑌸𑌾𑌂𑌸𑌾𑌰𑌿𑌕𑌫𑌲𑍋𑌤𑍍𑌤𑍀𑌰𑍍𑌣𑍇 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌕 𑌨𑌿𑌰𑌤𑌿𑌶𑌯𑌾𑌨𑌨𑍍𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌤𑍍𑌮𑍇 𑌫𑌲𑍇 𑌸𑌤𑌿 '𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌨𑌿𑌷𑍍𑌕𑌾𑌰𑌣𑌵𑌿𑌧𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌾𑌸𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌯𑍇𑌨 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌫𑌲𑌤𑍍𑌵𑌂 𑌕𑌿𑌮𑌿𑌤𑌿 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯

இரண்டு வகுப்புகள் ஒன்று சேர்ந்து இருக்குமென்று மீமாம்ஸகர்களினால் ஒப்புக்கொள்ளப்படவில்லையல்லவா? (அவையாவன:—) 'உத்தேஶ்யமாயிருக்கை, அனுவாதம் செய்யப்படுவதாயிருக்கை, ப்ரதானமாயிருக்கை, இவைகளுடன், நம்மால் அனுஷ்டிக்கக் கூடியதாயிருக்கை, விதிக்கக்கூடியதாயிருக்கை, அங்கமாக இருக்கை, இவைகள் ஒன்று சேர்ந்திருப்பது காணப்படவில்லை' என்று (மீமாம்ஸகர்களினால்) சொல்லப்பட்டிருக்கிறதல்லவா. 'பரமாத்மாவை அடைந்தவனுக்கு அப்படிப் பரமாத்மாவை அடைந்தபடியினால் காமசாரம் முதலிய பலங்கள் ஶ்ருதியில் சொல்லப்பட்டிருப்பதினால் அந்த ஶ்ருதியில் சொல்லப்பட்டிருக்கிற பித்ருலோகத்தை அடைவது முதலிய பலங்கள் ஸம்ஸாரத்தைக் காட்டிலும் மேற்பட்ட பலத்தைச் சொல்லுகின்றன' என்கிற ஸூத்திரத்தில் சொல்லியிருக்கும் ந்யாயத்தினால் பரமாத்மோபாஸனத்திற்கு ஸம்ஸாரத்தில் உண்டாகிய பலத்தைக் காட்டிலும் மேற்பட்டதாய் அந்த ஸந்தர்ப்பத்தில் சொல்லப்படுகிற தன்னுடைய ஸ்வரூபத்தின் ப்ரகாசம் முதலாக உண்டாகிற எல்லையில்லாத ஆநந்தரூபமான ப்ரும்மானுபவமாகிய பலமிருக்க 'பார்க்கத் தக்கவன்' என்கிற இடத்தில் ஒரு காரணமுமில்லாமல் விதிப்ரத்யயத்தை அஸ்வாரஸ்யமுள்ளதாக்கி தர்ஶநத்திற்குப் பலமாக இருக்கை ஏன் கல்பிக்கப்படுகிறது? மோக்ஷம் நியோகத்தினால் (மீமாம்ஸகர்கள்

1.

2. ஶாரீரக ஸூத்திரம்-3-3-40.

𑌤𑍇? 𑌨𑌿𑌯𑍋𑌗𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, 𑌮𑍋𑌕𑍍𑌷𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌦𑍁𑌃𑌖𑌧𑍍𑌵𑌂𑌸𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌸𑌾𑌧𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌯𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃, 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌾𑌧𑍍𑌯𑌪𑌾𑌪𑌧𑍍𑌵𑌂𑌸𑌵𑌤𑍍 । 𑌨 𑌚 𑌦𑍁𑌃𑌖𑌪𑍍𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑍋 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃, 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌦𑍁𑌃𑌖𑌹𑍇𑌤𑍁𑌭𑍂𑌤𑌕𑌰𑍍𑌮𑌧𑍍𑌵𑌂𑌸𑌃, 𑌦𑍁𑌃𑌖𑌸𑍍𑌯 𑌕𑍍𑌷𑌣𑌿𑌕𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌵𑌿𑌨𑌾𑌶𑌾𑌤𑍍 । 𑌪𑍁𑌨𑌰𑍍𑌦𑍁𑌃𑌖𑌾𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌂 𑌤𑌸𑍍𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌕𑌾𑌰𑌣𑌾𑌭𑌾𑌵𑌃 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌤𑍇𑌨𑍈𑌵 𑌉𑌕𑍍𑌤𑍋𑌤𑍍𑌤𑌰𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌨 𑌹𑍍𑌯𑌨𑌾𑌦𑌿𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌉𑌪𑌾𑌯𑌸𑌾𑌧𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑍁𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑍋 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿 । 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌾𑌯𑌾𑌮𑌪𑌿 𑌨𑌿𑌯𑍋𑌗𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑍇

சொல்லுகிறபடி விதிப்ரத்யயத்தின் ஶக்தியினால், அன்றிக்கே விதியினால்) உண்டாக்கப்படுகிறதானால் அநித்யமாக வேண்டிவருமாதலால் என்பதும் உசிதமல்ல, மோக்ஷம் என்னும் பதத்தினால் துக்கங்களின் நாசம் சொல்லப்படுமேயானால் அது ஒன்றால் உண்டாக்கப்பட்டதாயிருந்தாலும் ப்ராயஶ்சித்தமாகிற தர்மத்தினால் உண்டாக்கப்படுகிற பாபத்தின் நாசத்தைப் போலவே நித்யமாயிருப்பது பொருத்தமுடையதாகுமாகையினால். துக்கங்களின் நாசமே மோக்ஷமாகாது. பின்னை எதுவென்னில் துக்கங்களுக்குக் காரணங்களாகிய எல்லாக் கர்மங்களுடைய விநாசமே மோக்ஷம், துக்கம் க்ஷணம் நிற்கக்கூடியதாகையினாலே தானே நசித்துவிடுமாதலால். மறுபடியும் துக்கம் உண்டாகாதிருப்பது மோக்ஷமென்று சொன்னபோதிலும் அது ஒரு காரணத்தினால் உண்டாக்கக் கூடியதில்லை யாகையினாலே மோக்ஷம் அநித்யமாகவேண்டிவரும் என்கிற ப்ரஸ்தாவத்திற்குக் காரணமேயில்லை. பரப்ருஹ்மத்தின் ஸ்வரூபமே மோக்ஷம் என்று சொன்னபோதிலும் கீழ்ச்சொன்ன காரணத்தினாலேயே பதில் சொல்லப்பட்டதாகிறது. அநாதியாக இருக்கிற ப்ருஹ்மம் உபாயத்தினால் உண்டாக்கப்படுகிறதென்று பைத்தியம் பிடிக்காதவன் சொல்லமாட்டான். தன்னுடைய ஸ்வரூபத்தின் ப்ரகாசமே மோக்ஷமென்று சொன்னபோதிலும் விதிவாக்யங்களின்

𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌧𑍀𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌵𑌿𑌰𑍍𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌵𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌪𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।

𑌨𑌨𑍁 𑌯𑌦𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌨𑌵𑌿𑌧𑍇𑌃 𑌫𑌲𑌤𑌯𑌾 𑌮𑍋𑌕𑍍𑌷𑌃 𑌸𑍍𑌵𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇, 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑌨𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌵𑌿𑌧𑍀𑌨𑌾𑌂 𑌕𑌿𑌂 𑌫𑌲𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, '𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌨𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । '𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃' 𑌇𑌤𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌪𑍃𑌥𑌗𑍍𑌵𑌿𑌧𑌿𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌨𑌾𑌪𑌰𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑍋𑌪𑌾𑌸𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌦𑌰𑍍𑌶𑌨𑌰𑍂𑌪𑌂 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌤𑌥𑌾 𑌹𑌿— 𑌶𑍍𑌰𑌵𑌣𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌸𑌾𑌙𑍍𑌗𑌸𑌶𑌿𑌰𑌸𑍍𑌕𑌸𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌧𑍍𑌯𑌯𑌨𑌜𑌨𑌿𑌤𑌾𑌪𑌾𑌤𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌵𑌿𑌷𑌿𑌤 𑌪𑍁𑌰𑍁𑌷𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌾𑌰𑍍𑌥𑌿𑌨𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌯 𑌰𑌾𑌗𑌤𑌏𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌧𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑌾 । 𑌶𑍍𑌰𑌵𑌣𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌮𑌨𑌨𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌿-

---

ஶக்தியினால் தடங்கல்கள் முழுவதும் கழிந்த பிறகு தன்னுடைய ஸ்வரூபம் மாத்திரத்திற்கு வசப்பட்டிருக்கிற ஸ்வரூப ப்ரகாசம் ஸ்வரூபம் போலவே நித்யமாகையினாலும் மறுபடியும் அந்தப்ரகாசத்திற்குத் தடங்கலைச் செய்யக்கூடியவைகள் ஒன்றுமில்லாததினாலும் அது ஒன்றினாலும் நிவ்ருத்தி செய்யக்கூடியதல்ல என்பது பொருத்தமுடையதாயிருக்கும்.

உபாஸனத்தை விதித்திருப்பதற்கு ப்ரயோஜனமாக மோக்ஷம் அங்கீகரிக்கப்படுகிறதேயானால் அப்பொழுது ஶ்ரவணம், மனனம், தர்ஶனம், இவைகளை விதித்திருப்பதற்கு ப்ரயோஜனமென்ன என்பதும் உசிதமல்ல, 'கேட்கத் தக்கவன், மனனம் செய்யத்தக்கவன்' என்கிற வாக்யங்கள் விதிவாக்யங்களல்லவாகையினால். 'பார்க்கத் தக்கவன்' என்பதும் தனித்த விதிவாக்யமன்று. ஆகையால் நிதித்யாஸனமென்று மற்றொரு பெயருடைய உபாஸனமே ப்ரத்யக்ஷரூபமாக இருக்கவேண்டுமென்று அந்த வாக்யத்தில் விதிக்கப்படுகிறது. அது எப்படி என்னில்:—ஶ்ரவணமோவெனில் அங்கங்களுடனும் உபநிஷத் பாகத்துடனும் வேதங்களை அத்யயனம் செய்ததினால் உண்டாக்கப்பட்ட ஆபாத(மேலெழுந்தவாரியாக உண்டாகிற) ஜ்ஞானத்தினால்

𑌤𑌤 𑌏𑌵 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌰𑌿𑌤𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 | 𑌅𑌤𑍋 𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿- 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌜𑍍𑌜𑌨𑌕𑌯𑍋𑌃 𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑌨𑌨𑌯𑍋𑌰𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌾𑌨𑍁𑌵𑌾𑌦 𑌏𑌵| 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌿𑌧𑍇𑌯𑌮𑍇𑌵 | 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌚𑌾𑌤𑍍𑌰 𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑌨𑍍𑌦𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌰𑌾𑌗𑌸𑍍𑌸𑌂𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑌦𑍍𑌗𑍁𑌣𑌵𑌿𑌶𑍇𑌷 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯𑌾𑌹𑌰𑌹𑌰𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑍀𑌯𑌸𑍍𑌯 𑌸𑌾𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌫𑌲𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌧𑍀𑌯𑌮𑌨𑍍𑌤𑌰𑍇𑌣 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑍍𑌯 𑌰𑌾𑌗𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌨 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿, 𑌸𑌾 𑌚 𑌧𑍀𑌶𑍍𑌚𑍋𑌦𑌨𑌯𑍈𑌵, 𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵 𑌰𑌾𑌗𑍋 𑌯𑌾𑌗𑌾𑌦𑌿

அறியப்பட்ட ப்ரயோஜனங்கள் அவைகளின் உபாயங்கள் இவைகளைப் பற்றிய நிஸ்சயமான ஜ்ஞானத்தை விரும்பிக் கொண்டிருக்கிற புருஷனுக்குத் தன் இச்சையினுல் ஏற்பட்டதாகையினுல் அவ்விஷயத்தில் விதியை அபேக்ஷிக்க வேண்டியதில்லை. மனனமும் அப்படிக் கேட்கப்பட்ட அர்த்தங்கள் மறக்காமலும் வேறு யுக்திகளால் கலக்க முடியாமலும் இருப்பதற்காக ஏற்பட்டதாகையினுல் அதுவும் அந்தப் புருஷனுடைய ஆசையினுல் ஏற்பட்டதாகையினுலே அந்த விஷயத்திலும் விதியின் அபேக்ஷை இல்லை. ஆதலால் உண்மையான ஸ்ருதி வாக்யங்களின் அர்த்தங்களினுடைய நிஸ்சய ரூபமான ஜ்ஞானம் த்யானத்திற்கு உபகாரம் செய்கிறதாகையினுல் அப்படிப்பட்ட நிஸ்சயமான ஜ்ஞானத்திற்குக் காரணங்களாகிய ஸ்ரவணம், மனனம், இவைகளைப்பற்றி இந்த வாக்யத்தில் அனுவாதமே செய்யப்படுகிறது. த்யானமோவெனில் வேறென்றினுலும் ஏற்படாமையினுல் விதிக்கவே படுகிறது. இவ்விடத்தில் த்யானத்திற்கு விஷயமாகிய ப்ரும்மம் ஆநந்த ரூபமாக இருப்பதினுல் அதில் த்யானம் செய்வதிலும் ஆசை ஸம்பவிக்கலாம். அப்படி இருந்த போதிலும் அந்தந்த உபாஸனங்களுக்கு ஏற்பட்ட குண விஸேஷங்களோடு கூடியதாயும் தினந்தோறும் தொடர்ச்சியாகச் செய்ய வேண்டியதாயும் (ஆஸனம் முதலிய) அங்கங்களோடு கூடியதாயும் இருக்கிற அந்த த்யானத்திற்கு இது ஒரு ப்ரயோஜனத்திற்கு உபாயமாகிறது என்கிற புத்தி இல்லாமல் இப்படிப்பட்ட ஒருவித விசேஷங்களோடு கூடிய அனுஷ்டா

ष्वपि समाने विधेयापेक्षितत्वमिति न दोषः॥ ननु यदि ध्यानोपकारकतया श्रवणमननयोरनुवादः, तर्हि 'द्रष्टव्यः' इत्येव विधिरस्तु, ध्यानं तु तदुपकारकत्वेन सिद्धत्वाच्छ्रवणादिवदनूद्यत इति चेन्न, ध्यानस्य दर्शनोपकारकत्वं किमदृष्टद्वारा? उत दृष्टद्वारा? न प्रथमः, तस्य विधिमन्तरेणासिद्धेः। उत्तरत्रापि दर्शनशब्देन किं चाक्षुषं ज्ञानं विवक्षितम्? उत प्रत्यक्षमात्रम्? यद्वा प्रत्यक्षसमानाकारम्? इति। श्रुतेः 1 'न चक्षुषा गृह्यते नापि वाचा

னம் ஆசையினல் உண்டாகிறது என்பது ஸம்பவிக்காது. அப்படிப் பட்டபுத்தி விதி வாக்யத்திலுலேயே உண்டாக வேண்டும். அந்த விதிவாக்யத்தினல் உண்டாகிற ஆசை மற்ற விதி வாக்யங்களினல் விதிக்கப்படுகிற யாகம் முதலியவைகளிலும் துல்யம். அந்த ஆசை விதிக்கு அவஶ்யம் வேண்டியதாதலால் தோஷமில்லை. த்யானத்திற்கு உபகாரம் செய்கிறபடியினுல் ஶ்ரவணம் மனனம் இவைகளைப் பற்றி அனுவாதம் செய்யப்படுகிறது என்னில், 'பார்க்கத்தக்கவன்' என்பதே விதிவாக்யமாக இருக்கட்டும். த்யானமோவெனில் அந்தத் தர்சநத்துக்கு உபகாரம் செய்கிறபடியினுலே எற்கனவே எற்பட்டிருப்பதினல் ஶ்ரவணம் முதலியவைகளைப் போலவே அனுவாதம் செய்யப்படுகிறது என்று அங்கீகரிக்கலாமே என்பதும் உசிதமல்ல, த்யானம் தர்சனத்திற்கு உபகாரம் செய்கிறதென்பது அத்ருஷ்டத்தின் வழியாகவா? அல்லது த்ருஷ்டத்தின் வழியாகவா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, அது விதிவாக்யமில்லாமல் ஸித்திக்காதாகையினல். இரண்டாவது பக்ஷத்திலும் (தர்ஶந என்கிற பதத்தினுல்) கண்களால் பார்க்கிறது சொல்லப்படுகிறதா? ஏதாவது ஒரு இந்திரியத்தினல் உண்டாகும் ப்ரத்யக்ஷம் சொல்லப்படுகிறதா? கண்களால் பார்ப்பதைப் போல விஶதமாயிருப்பது சொல்லப்படுகிறதா? முதலாவது பக்ஷத்தில் 'அந்த ப்ரும்மம் கண்களால் அறியப்படுகிறதில்லை, வாயினுலும் சொல்லப்படுகிறதில்லை, பரிசுத்த

1.

𑌮𑌨𑌸𑌾 𑌤𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 | 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇𑌽𑌪𑌿 𑌕𑌿𑌂 𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 ? 𑌉𑌤 𑌯𑍋𑌗𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 ? 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌯 𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌜𑌨𑌕𑌤𑌾𑌯𑌾𑌮𑌨𑍍𑌵𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌦𑍍𑌯𑌭𑌾𑌵𑍇𑌨 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌦𑍍𑌵𑌾𑌰𑌾 𑌤𑌤𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍌 𑌤𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌯𑌾𑌃 𑌪𑌶𑍁𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌦𑌾𑌵𑌿𑌵 𑌵𑌿𑌧𑍍𑌯𑌪𑍇𑌕𑍍𑌷𑍇𑌵 | 𑌭𑌾𑌵𑌨𑌾𑌪𑍍𑌰𑌕𑌰𑍍𑌷𑌜𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂 𑌨𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌤𑌃, 𑌤𑌸𑍍𑌯 𑌚 1 '𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌵𑍃𑌕𑍍𑌷𑍇 𑌚 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿' 𑌇𑌤𑌿𑌵𑌦𑍍𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍌 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑍈𑌪𑌰𑍀𑌤𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑌾𑌨𑌾𑌤𑍍 | 𑌨 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌃, 𑌅𑌨𑌙𑍍𑌗𑍀𑌕𑌾𑌰𑌾𑌤𑍍 | 𑌨𑌾𑌪𑌿

மான மனதினாலே அறியப்படுகிறது' என்பது முதலிய ஶ்ருதிகளோடு விரோதம் வருகிறது. இரண்டாவது பக்ஷத்திலும் லௌகிக ப்ரத்யக்ஷமா? யோகி ப்ரத்யக்ஷமா (சொல்லப்படுகிறது)? முதலாவது பக்ஷத்தில் த்யானம் லௌகிக ப்ரத்யக்ஷத்தை உண்டுபண்ணுகிறதென்கிற விஷயத்தில் லோகத்தில் த்யானத்திற்கும் ப்ரத்யக்ஷத்திற்கும் அது உண்டானால் மற்றொன்று உண்டாகும், அது உண்டாகாவிட்டால் மற்றொன்றும் உண்டாகாது என்று நம்மால் கண்டறியப்பட்ட ஸம்பந்தம் இல்லாமையினால் அத்ருஷ்டத்தின் வழியாக ப்ரத்யக்ஷம் ஸித்திக்கிறதென்றே சொல்ல வேண்டும், அப்பொழுது சித்திரா என்கிற இஷ்டிக்கும் * பசுவுக்கும் உள்ள ஸம்பந்தத்தில் போல விதி வாக்யமே வேண்டியதா யிருக்கிறது. எப்பொழுதும் நினைத்துக் கொண்டிருப்பதின் பலத்தினால் உண்டாகிய யோகி ப்ரத்யக்ஷத்தை நாம் அங்கீகரிக்கவில்லை. அது 'மரங்கள் தோறும் ராமனை நான் பார்க்கிறேன்' என்கிற இடத்திலே போல ப்ராந்தியிலாவது விபரீதமான நினைவிலாவது முடிவு பெறுமாகையினால். இங்கு ப்ராந்தியென்பது உசிதமல்ல, ஒருவராலும் ஒப்புக்கொள்ளப் படாமையினால். விபரீதமான நினைவு என்பதும் உசிதமல்ல, என்

---

* சித்திரா என்கிற இஷ்டி செய்தால் பசு உண்டாகும் என்று நம்மால் அறியக்கூடியதில்லை. ஆனாலும் ஶ்ருதியில் பசுவில் ஆசையுள்ளவன் அந்த இஷ்டியை யனுஷ்டிக்கும்படி விதித்திருப்பதினால் அந்த இஷ்டி உபாயமாயும், பசு பலமாயும் இருக்கிற ஸம்பந்தம் உண்டென்று நாமறிகிறோம் என்று தாத்பர்யம்.

---

1. ராமாயணம், ஆரண்யகாண்டம்.

स्मृतिवैशद्यं, स्मृत्युत्कर्षांशीकारप्रसंगात्। अत एव च योगिप्रत्यक्षस्य प्रकृष्टादृष्टजन्यत्वात्तदुत्पादकविध्यपेक्षायां 'निदिध्यासितव्यः' इत्यस्यैव तद्विधित्वमंगीकार्यम्। तृतीये तु 'द्रष्टव्यः' इत्यनेन ध्यानस्यैव वैशद्यरूपलक्षणविशेषविधानादिति तदैव सामान्यतो 'निदिध्यासितव्यः' इत्यनूद्यत इति वैशद्यविशिष्टध्यानसिद्धौ ध्यानदर्शनयोः साध्यसाधनभावाभावात् कथं दर्शनाय ध्यानानुवादः?

नन्वेवमस्तु ध्यानस्य विधेयता, दर्शनं तु योगिप्रत्यक्षात्मकं पृथग्विधेयमिति किं नाङ्गीक्रिय

பக்ஷத்தை அங்கீகரித்ததாகுமாகையினல். அப்படி இடைவிடாமல் நினைத்துக்கொள்வதின் பலத்தினுல் உண்டாகாத யோகிப்ரத்யக்ஷம் விசேஷமான அத்ருஷ்டத்தினுல் உண்டாகக் கூடியதாகையினுல் அப்படி உண்டாக்கு மென்பதைத் தெரிவிப்பதற்குக் காரணமான விதிவாக்யத்தை விரும்பும்பொழுது 'த்யானம் செய்யத்தக்கவன்' என்பதே அதற்கு விதியாக அங்கீகரிக்கத் தக்கதாகும். மூன்ருவது பக்ஷத்திலோவெனில் 'பார்க்கத்தக்கவன்' என்கிற பதத்தினுல் த்யானத்திற்கே விசதமாகயிருக்கையாகிற ஒருவித விசேஷம் விதிக்கப்படுகிறதாதலால் பொதுவாக அந்த விசேஷத்தோடுகூடிய த்யானமே 'த்யானம் செய்யத்தக்கவன்' என்பதினுல் விதிக்கப்படுகிறது என்று இரண்டு வாக்யங்களும் சேர்ந்து விசதமாக இருக்கையாகிற விசேஷத்தோடு கூடிய த்யானத்தை விதிக்கின்றன என்று ஏற்படுமாதலால் த்யானம், தர்சனம் இவைகள் ஒன்றுக்கொன்று கார்யமாயும் காரணமாயும் இருக்கின்றன என்பதே இல்லையாதலால் தர்சனத்திற்குக் காரணமாக த்யானத்தை அனுவாதம் செய்கிறது என்பது எப்படிப் பொருந்தும்?

ஆனுல் இப்படி த்யானமே விதிக்கப்படுகிறதாக இருக்கட்டும், யோகி ப்ரத்யக்ஷமாகிய தர்சனம் தனியாக விதிக்கப்படுகிறது என்று ஏன் ஒப்புக்கொள்ளவில்லை? அதற்குத் தனித்த பலம்

𑌤𑍇? 𑌪𑍃𑌥𑌕𑍍𑌫𑌲𑌨𑌿𑌰𑍍𑌦𑍇𑌶𑌾𑌭𑌾𑌵𑌾𑌦𑌿𑌤𑌿 𑌨 𑌵𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌂, 𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌵𑌿𑌧𑍇𑌯𑌸𑍍𑌯 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌪𑌾𑌦𑌕𑌤𑌯𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌵𑌿𑌧𑌾𑌨𑍇 𑌪𑍃𑌥𑌕𑍍𑌫𑌲𑌾𑌨𑌪𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌤𑍍, 𑌧𑍍𑌯𑌾𑌨𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯𑍈𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚 | 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌦𑌰𑍍𑌶𑌨𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌮𑍁𑌖𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌭𑌙𑍍𑌗𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨𑍈𑌵𑌂, [1] '𑌧𑍍𑌰𑍁𑌵𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌃, 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃' 𑌇𑌤𑌿 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑍇𑌃 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 '𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇' 𑌇𑌤𑌿 𑌸𑌪𑍍𑌤𑌮𑍍𑌯𑌾 | 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍𑌤𑍁 [2] '𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 𑌹𑍃𑌦𑌯𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌿𑌶𑍍𑌛𑌿𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌶𑌯𑌾𑌃 | 𑌕𑍍𑌷𑍀𑌯𑌨𑍍𑌤𑍇 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌕𑌰𑍍𑌮𑌾𑌣𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇 ||' 𑌇𑌤𑌿 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵

சொல்லாமையினால் என்று பதில் சொல்வது உசிதமல்ல, மோக்ஷமாகிற ப்ரயோஜனத்திற்காக விதிக்கப்படுகிற தர்ஶநம் ப்ரதானமாக இருந்தபோதிலும் அந்தத் தர்ஶநத்தை உண்டாக்கக் கூடியதாக இருக்கிறபடியினால் த்யானத்தையும் விதிக்கிறதென்பதில் தனித்து ஒரு பலம் சொல்லவேண்டியதில்லை. முக்யமான வாக்யத்தின் அர்த்தமும் ஒன்றாய் விடுகிறது. இப்படிச் சொல்லாவிடில் 'தர்ஶந' என்னும் பதத்திற்கு முக்யமான அர்த்தத்தை விட்டுவிட வேண்டி வருகிறதே என்கிற ஆக்ஷேபமும் உசிதமல்ல. ஏனெனில் 'இடைவிடாத ஸ்மரணம், அப்படிப்பட்ட ஸ்மரணம் கிடைத்ததேயானால் கர்மபந்தங்கள் எல்லாவற்றிற்கும் விடுதல் உண்டாகிறது' என்று சில இடங்களில் இடைவிடாத ஸ்மரணத்திற்கு நேராகவே எல்லாக் கர்மபந்தங்களும் விட்டுப் போவதற்குக் காரணமாக இருக்கும் தன்மை அந்த ஶ்ருதிவாக்யத்தில் 'ஸ்ம்ருதிலம்பே' என்கிற இடத்தில் இருக்கும் ஏழாம் வேற்றுமையினால் சொல்லப்படுகிறது. சில இடங்களில் 'அந்த எல்லா வஸ்துக்களுக்கும் அந்தர்யாமியான பரமாத்மா பார்க்கப்பட்டானேயானால் மனதில் இருக்கிற கர்மபந்தங்கள் அறுந்துவிடுகின்றன, எல்லா ஸந்தேஹங்களும் ஒழிகின்றன, இவனுடைய கர்மங்களெல்லாம் நாசமடைகின்றன' என்று தர்ஶநத்

1. சாந்தோக்யம்-7-26-2. 2. முண்டகம்-2-2-8.

𑌸𑌾𑌧𑌨𑌤𑍍𑌵𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇। 𑌅𑌨𑌯𑍋𑌰𑍍𑌨 𑌤𑌾𑌵𑌦𑍇𑌕𑌫𑌲𑌸𑌾𑌧𑌨𑌤𑌯𑌾 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌃, 𑌗𑍁𑌰𑍁𑌲𑌘𑍁𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍। 𑌅𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌯𑌾𑌮𑌤𑌿𑌗𑍌𑌰𑌵𑌂, 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌕𑌲𑍍𑌪𑌨𑌾 𑌚𑍇𑌤𑌿। 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌤𑍍𑌰𑌯𑍇𑌣 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯

திற்கு அந்த எழாம் வேற்றுமையினாலேயே மோக்ஷத்திற்குக் காரணமாயிருக்கும் தன்மை ஸ்ருதியில் சொல்லப்படுகிறது. ஒரே பலத்திற்கு உபாயங்களாக த்யானம் தர்ஸனம், என்கிற இவ்விரண்டுக்கும் விகல்பம் என்பது பொருந்தாது, ஒரே பலத்தைக் குறித்துப் பெரிய கார்யத்தையும், அல்ப கார்யத்தையும் விகல்பமாகச் சொல்வது பொருந்தாதாகையினால். அதிகாரிகள் வெவ்வேருக இருப்பதினால் இது வ்யவஸ்தித விகல்பம் (அதாவது இன்ன அதிகாரிக்கு இந்த அல்ப கார்யத்தினால் இந்தப் பலம் கிடைக்கும், மற்றொரு அதிகாரிக்கு அந்தப் பெரிய கார்யத்தினால் அதே பலம் கிடைக்கும்) என்று கல்பிப்பதில் அதிக கௌரவம் ஏற்படுகிறது. ஏனெனில் விகல்பமென்று வைத்துக்கொண்டு அதற்கு அதிகாரிகளின் பேதம் கல்பிக்கவேண்டி வருகிறபடியினால். மேலும் விகல்பத்திற்கு மூன்றுவித ப்ரயோகத்தினால் * ப்ரமாணமாயிருப்பதை விடுதல், அப்ராமாணம் என்று அங்கீகரித்தல், ப்ரமாணமல்ல என்று

---

* அதாவது ஸ்ருதியில் வ்ரீஹியினாலாவது, யவத்தினாலாவது ஹோமம் செய்யக்கடவன் என்று விகல்பித்து விதித்திருப்பதைக் கொண்டு முதலில் வ்ரீஹியினாலும், பிறகு யவத்தினாலும் மறுபடியும் வ்ரீஹியினாலும் ஹோமம் செய்யும்பொழுது இந்த எட்டுவித தோஷங்களும் ஏற்படுகின்றன. அதாவது:—(1)ஸ்ருதியில் விதிக்கப்பட்ட இரண்டு வாக்யங்களில் ஒன்றுக்கு ப்ராமாணமாயிருப்பதை அங்கீகரியாதிருத்தல்; (2)ஒன்றுக்கு அப்ராமாணமாயிருத்தலை அங்கீகரித்தல்; (3) கீழ்அப்ராமாணமென்று விட்டதை மறுபடியும் அங்கீகரித்தல்; (4) கீழ் ப்ராமாணம் என்று அங்கீகரித்ததை விட்டுவிடுதல்; என்கிற நான்குவிதத்தோஷங்களும், இதை மாற்றும்பொழுது இப்படியே மறுபடியும் நான்குவிதத் தோஷங்களும் ஆக எட்டுவிதமான தோஷங்கள் உண்டாகும் என்றபடி.

𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰 𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌵𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌕𑍍𑌤𑌾𑌷𑍍𑌟𑌦𑍋𑌷𑌦𑍁𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌦𑌨𑍍𑌯𑌾𑌯𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚𑍈𑌵 । 𑌨𑌾𑌪𑌿 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌃, 𑌯𑍌𑌗𑌪𑌦𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌕𑍍𑌰𑌮𑌪𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑍍𑌯𑍁𑌪𑌕𑌾𑌰𑍍𑌯𑍋𑌪𑌕𑌾𑌰𑌕𑌯𑍋𑌰𑌙𑍍𑌗𑌯𑍁𑌕𑍍𑌤𑌸𑍍𑌯𑌭𑍂𑌤𑌹𑍇𑌤𑍋𑌰𑌙𑍍𑌗𑌿𑌨𑌃 𑌸𑍍𑌵𑌾𑌙𑍍𑌗𑍇𑌨 𑌸𑌹 𑌸𑌮𑍁𑌚𑍍𑌚𑌯𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 । 𑌨 𑌚 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌯𑍋𑌰𑌪𑌿 𑌦𑌰𑍍𑌶𑌪𑍂𑌰𑍍𑌣𑌮𑌾𑌸𑌯𑍋𑌰𑌿𑌵 𑌧𑍍𑌯𑌾𑌨𑌦𑌰𑍍𑌶𑌨𑌯𑍋𑌰𑍇𑌕𑌫𑌲𑌕𑌾𑌰𑌣𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌥𑌾𑌤𑍍𑌵𑌾𑌵𑌗𑌮𑌕𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 ।

𑌨 𑌚𑌾𑌙𑍍𑌗𑌭𑍂𑌤𑌾𑌯𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑍇𑌽𑌙𑍍𑌗𑌿𑌨𑍋 𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌫𑌲𑌂 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂, 𑌅𑌙𑍍𑌗𑌾𑌙𑍍𑌗𑌿𑌭𑌾𑌵𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌦𑍃𑌷𑍍𑌟

விட்டதை ஸ்வீகரித்தல், ப்ரமாணம் என்று அங்கீகரித்ததை விட்டுவிடுதல், என்பதின் ஆவ்ருத்தி மாறிமாறி வரும்பொழுது எட்டு வித தோஷங்கள் ஏற்படுகின்றன. இரண்டையும் சேர்த்து அனுஷ்டிக்கவேண்டும் என்பதும் பொருந்தாது. ஒரே காலத்தில் செய்ய முடியாதாகையினால். க்ரமமாகச் செய்யவேண்டும் என்று சொல்லும் பக்ஷத்திலும் உபகாரம் செய்கிறவைகளாயும், அவைகளால் செய்யப்படுகிற உபகாரத்தை அடைகிறவைகளாயும், இருக்கிற அங்கங்களோடு சேர்த்து அனுஷ்டிப்பது முடியாதாகையினால். க்ரமமாகச் செய்யப்படுகிற தர்ஶம் பௌர்ணமாஸம் என்கிற இஷ்டிகளுக்கு ஒரே பலத்திற்குக் காரணமாயிருக்கை ஸம்பவிப்பது போல த்யானத்திற்கும் தர்ஶனத்திற்கும் ஒரே பலத்திற்குக் காரண மாயிருக்கும் தன்மை பொருந்துமே என்னில், அதுவும் உசிதமல்ல, அப்படி உண்டென்று தெரிவிக்கக் கூடிய ஶ்ருதி முதலிய ப்ரமாணங்கள் இல்லையாகையினால்.

மேலும் அங்கமாகிய த்யானத்தில் அங்கியாகிய தர்ஶனத்தின் பலம் சொல்லப்படுகிறது என்றேற்புக் கொண்டால் ஒரு விரோதமுமில்லையே என்று சொல்வதும் உசிதமல்ல, அங்கமாயும் அங்கியாயும் இருக்கின்றன என்பதே இதுவரையிலும் நிஶ்சயிக்கப்படவில்லை யாதலால். ஏனெனில் த்ருஷ்டத்தின் வழியாக

𑌦𑍍𑌵𑌾𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃, 𑌅𑌦𑍃𑌷𑍍𑌟𑌦𑍍𑌵𑌾𑌰𑌕𑌲𑍍𑌪𑌨𑍇 𑌗𑍌𑌰𑌵𑌾𑌚𑍍𑌚 । 𑌸𑍍𑌵𑌤𑌃𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌰𑍍𑌥𑌸𑌂𑌤𑍍𑌯𑌾𑌗𑍇 𑌚 𑌶𑍍𑌰𑍁𑌤𑌹𑌾𑌨𑌿𑌦𑍋𑌷𑌾𑌚𑍍𑌚 ।

𑌨 𑌚𑌾𑌤𑍍𑌰 𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌨𑌯𑌃, 𑌭𑍂𑌯𑌸𑌾𑌂 𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌚𑍍𑌚 । 1 '𑌜𑍍𑌯𑌾𑌯𑍋 𑌬𑌹𑍂𑌨𑌾𑌂 𑌵𑌚𑌨𑌮𑍍' 𑌇𑌤𑌿 𑌤𑌾𑌨𑍍𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃। 𑌭𑍂𑌯𑌾𑌂𑌸𑌿 𑌹𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌾𑌸𑌨𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑍈𑌰𑍍𑌧𑍍𑌰𑍁𑌵𑌾𑌨𑍁𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌮𑍇𑌵 𑌮𑍋𑌕𑍍𑌷𑌸𑌾𑌧𑌨𑌮𑌭𑌿𑌦𑌧𑌤𑌿। 𑌨 𑌕𑍇𑌵𑌲𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌰𑍇𑌵। 𑌸𑍍𑌮𑍃𑌤𑍀𑌤𑌿𑌹𑌾𑌸𑌪𑍁𑌰𑌾𑌣

அது ஏற்படாமையினாலும் அத்ருஷ்டத்தின் வழியாக என்று கல்பனை செய்வதில் கௌரவம் வருகிறபடியினாலும். (மேலும்) வாக்யத்தில் ஸ்வபாவத்திலேயே ஏற்படுகிற அர்த்தத்தை மறுதளித்தால் ஶ்ருதஹாநி (ஶ்ருதியில் சொல்லியிருப்பதை விட்டு விடுவது) என்கிற தோஷம் வருகிறபடியினாலும்.

மேலும் இவ்விடத்தில் ப்ராஜாபதி வாக்யத்தில் * சொல்லியிருக்கிற ந்யாயமும் பொருந்தாது, அனேக வாக்யங்களில் சொல்லியிருப்பது பலமுடையது என்கிற ந்யாயத்திற்கு விரோதம் வருகிறபடியினால். 'வாக்யங்கள் ஒன்றோடொன்று விரோதித்ததேயானால் அதிகமானவர்களுடைய வார்த்தையை அனுஸரிக்க வேண்டும்' என்றல்லவோ மீமாம்ஸகர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அதிகமான வாக்யங்கள் த்யானம் உபாஸனம் முதலிய பதங்களினால் இடைவிடாத ஸ்மரணத்தையே மோக்ஷத்திற்கு உபாயமாகச் சொல்லுகின்றன. கேவலம் ஶ்ருதி மாத்திரமல்ல. ஸ்ம்ருதி

---

* சாந்தோக்யம், 8-வது அத்யாயத்தில் தஹரவித்யை என்னும் ப்ரும்மவித்யையை நிரூபித்துப் பிறகு ப்ராஜாபதி வாக்யத்தில் ஜீவாத்மாவின் பரிசுத்தமான ஸ்வரூபம் நிரூபிக்கப்பட்டுக் கடைசியில் மோக்ஷமாகிற பலம் சொல்லப்படுகிறது. இங்கு பரிசுத்தாத்ம ஸ்வரூபத்தைச் சொல்லி இருப்பது மோக்ஷத்திற்கு உபாயமாக அல்ல, மோக்ஷத்திற்கு உபாயமான தஹரவித்யைக்கு அங்கமாக என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதைப் போலவே தர்ஶனம் மோக்ஷத்திற்கு உபாயமாகவும், த்யானம் அதற்கு அங்கமாகவும் இருக்கிறது என்று சொல்லலாமே என்று தாத்பர்யம். 1.

ஸாத்வததந்த்ரயோகஸாங்க்யஶாஸ்த்ராண்யபி | த³ர்ஶ-
நஸ்ய வாக்யாவஸிதம் | ஏவமீஶ்வரோபாஸநஸ்யைவ
ப³ஹுபி⁴ர்வாக்யைர்மோக்ஷஸாத⁴நத்வாவஸாயாத் தத³-
ந்யநிஷேத⁴ஶ்ருதிப³லாச்ச க்வசித் ஜீவோபாஸநா-
நாம் மோக்ஷஸாத⁴நதயா ஶ்ருதாநாம் யதா²லிங்க³ம் ஜீவ-
விஶிஷ்டபரமாத்மவிஷயதயா அங்க³தயா வா நிர்வாஹ꞉,
அத்ர து ந ததே²தி விஶேஷ꞉ | அத꞉ பரிஶேஷாச்ச
த்⁴யாநத³ர்ஶநயோரைக்ய ஏவ பர்யவஸாநம் |
விஸ்தரதஸ்து பா⁴ஷ்ய ஏவ, சா²க³பஶுந்யாயேந வே-

கள், இதிஹாஸங்கள், புராணங்கள், பாஞ்சராத்திர ஶாஸ்திரங்கள், யோகஸாங்க்ய ஶாஸ்திரங்கள், முதலியவைகளும் சொல்லுகின்றன. தர்சனம் மோக்ஷஸாதனமென்பதோ சில வாக்யங்களினால் அறியப்படுகிறது. இப்படியே பகவானைப்பற்றிய உபாஸனமே அதிக மான வாக்யங்களினால் மோக்ஷத்திற்கு ஸாதனமாக அறியப்படுகிறபடியினாலும் அதைத் தவிர வேறு வழியில்லை என்று மறுத்திருக்கும் ஶ்ருதியின் பலத்தினாலும், சிற்சில இடங்களில் மோக்ஷத்திற்கு உபாயமாக ஶ்ருதியில் சொல்லப்படுகிற ஜீவாத்மாவைப்பற்றிய உபாஸனங்களுக்கு ஆங்காங்கு இருக்கும் வாக்யங்களுக்கு அனுகுணமாக ஜீவனை ஶரீரமாக உடைய பரமாத்மாவைப் பற்றியது என்றாவது, பரமாத்மாவின் உபாஸனத்திற்கு அங்கம் என்றாவது வழி சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலோவெனில் அப்படி இல்லை என்பது விஶேஷம். ஆகையால் மற்ற வழிகள் ஒன்றுமில்லாமல் இது ஒன்றே மிகுதியாக இருக்கிறபடியினால் த்யானம், தர்ஶனம், இவை இரண்டும் ஒன்று என்பதிலேயே முடிவு ஏற்படுகிறது. இது பாஷ்யத்திலேயே விஸ்தாரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (எப்படி என்னில்:—) சாக பசு ந்யாயத்தினால் * வேதனம் த்யானம் முதலிய பதங்க

---

* சாகபசுந்யாயம் என்றது—பசுவைக் கொண்டு யாகம் செய்யவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடத்தில் நாலு காலுள்ள ஜந்துக்களெல்லாம் பசுவாகையினால் இன்ன ஜந்து என்று

ஷ்டஸ்யாநாதிஶப்தாநாமுத்தரோத்தரம் விஶ்ராந்தி ப்ரதிபா-
தநாத் | ஏவம் ஸ்திதே ஸ்ம்ருதி தர்ஶந ஶப்தயோ: த்வயோ-
ரேவ முக்யைகார்த்யாஸம்பவே கஸ்யசிதௌபசாரிகத்வே-
வஶ்யாஶ்ரயணீயத்வாவதாரிதே ஸ்ம்ருதி ஶப்தேந ப்ரத்ய-
க்ஷஜ்ஞாநோபசாரே ऽதிஶயாஸித்தே: தர்ஶநஶப்தே-
ந ஸ்ம்ருதே ருபசாரே ப்ரத்யக்ஷஸமாநாகாரதா-
ரூபவைஶத்யாதிஶய லக்ஷண விஶேஷ ஸித்தேஶ்ச

ளுக்கு மேன்மேலே சொல்லப்படுகிற விசேஷமான அர்த்தத்தில் முடிவு என்று நிரூபித்திருப்பதினல். இப்படியிருக்க ஸ்ம்ருதி தர்சன என்கிற இரண்டு சப்தங்களுக்கும் முக்யமாகவே ஒரே அர்த்தத்தைச் சொல்லும் தன்மை ஸம்பவிக்காமல் இருப்பதினாலே ஒன்றுக்கு ஔபசாரிகமாக அர்த்தம் சொல்லவேண்டிய தன்மை அவஶ்யம் ஒப்புக்கொள்ளவேண்டியதாயிருக்கிறது என்று நிஶ்சயித்தபிறகு ஸ்ம்ருதி என்னும் பதத்தினல் ப்ரத்யக்ஷத்தை ஔபசாரிகமாகச் சொல்லும் பக்ஷத்தில் அந்த ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்கு ஒருவித மேன்மையும் ஸித்திக்கவில்லையாதலாலும், தர்சன என்னும் பதத்தினல் ஸ்ம்ருதியை ஔபசாரிகமாகச் சொல்லும் பக்ஷத்

விசேஷித்து ஏற்படவில்லை. அதே யாகத்தில் ஹோமம் செய்யவேண்டியதற்காக ஏற்பட்ட மந்திரத்தில் சாகம் ஆடு என்னும் பதம் ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. ஆதலால் பொதுவாகச் சொல்லப்பட்ட பசு என்னும் பதம் (ஆடு) என்கிற விசேஷத்தில் முடிவை அடைந்தது என்று மீமாம்ஸகர்களின் நிஶ்சயம். அதைப் போல இங்கும் வேதனம் என்ருல் ஜ்ஞானம், அல்லது அறிவது என்றர்த்தம். அது கேட்பது, பார்ப்பது, நினைப்பது முதலிய எல்லாவற்றிற்கும் பொது. த்யானம் என்பது விசேஷ பதம். அது நினைப்பதொன்றையே குறிக்கிறது. ஆதலால் அந்தப் பொதுவான வேதன சப்தம் விசேஷமான த்யான பதத்தில் முடிவு பெறுகிறது என்று ஸ்ரீ பாஷ்யத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதைப்போலவே இதற்கு மேலே சொல்லப்படுகிற விசேஷங்களில் பொதுவான பதத்திற்கு முடிவு நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்று தாத்பர்யம்.

13

𑌦𑌰𑍍𑌶𑌨𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌵𑌿𑌶𑌦𑌤𑌮𑌾 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍇𑌵 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑍇𑌤𑍍𑌯𑌙𑍍𑌗𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 । 𑌅𑌤𑍋𑌽𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 ‘𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃’ 𑌇𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌨𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍, ‘𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌪𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌮𑌰𑍍𑌪𑌕𑌮𑌿𑌤𑌿 । 𑌤𑍇𑌨 1 ‘𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌲𑌮𑍍𑌭𑍇 𑌸𑌰𑍍𑌵𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑍀𑌨𑌾𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌮𑍋𑌕𑍍𑌷𑌃’, 2 ‘𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌦𑍃𑌷𑍍𑌟𑍇 𑌪𑌰𑌾𑌵𑌰𑍇’ 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌶𑌾𑌕𑌪𑌶𑍁𑌨𑍍𑌯𑌾𑌯𑌨𑌿𑌰𑍍𑌣𑍀𑌤𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌃 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌪𑌿 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇 ‘𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑍋 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃’ 𑌇𑌤𑍍𑌯𑌨𑌯𑍋𑌰𑌪𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑍀𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 । 𑌨 𑌚 𑌤𑌵𑍍𑌯𑌦𑍍𑌵𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌃, 3 ‘𑌅𑌗𑍍𑌨𑌯𑍇 𑌪𑌥𑌿𑌕𑍃𑌤𑍇’ 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌸𑌕

தில் ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பதைப்போல இருப்பதாகிய மிகுந்த விஶதமாயிருக்கும் தன்மையாகிற விஶேஷம் ஏற்படுகிறபடியினாலும், தர்ஶந என்னும் பதத்தினால் மிகவும் விஶதமான இடைவிடாத ஸ்மரணமே சொல்லப்படுகிறதென்று அங்கீகரிக்கப்படுகிறது. ஆகையினால் இவ்விடத்திலும் ‘த்யானம் செய்யத்தக்கவன்’ என்று அந்த இடைவிடாத ஸ்ம்ருதியை விதித்திருப்பதினால் ‘பார்க்கத்தக்கவன்’ என்பதும் அதற்கொரு விஶேஷத்தைத் தெரிவிக்கிறது என்றேற்படுகிறது. இத்தால் ‘அப்படிப்பட்ட ஸ்ம்ருதி கிடைத்ததேயானால்’ என்றும், ‘அந்தப் பரமாத்மா பார்க்கப்பட்டானேயானால்’ என்றும் அர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யங்களில் சாக பசு ந்யாயத்தைக் கொண்டு நிஶ்சயம் செய்யப்பட்ட அர்த்தமே ஓரே வாக்யத்தில் சொல்லப்படுகிற ‘த்யானம் செய்யத்தக்கவன் பார்க்கத்தக்கவன்’ என்கிற பதங்களுக்கும் அங்கீகரிக்கப் படுகிறதாகையினால் விரோதமில்லை. இரண்டிடத்திலும் விதியைக் குறிக்கிற ‘𑌤𑌵𑍍𑌯’ என்கிற விகுதிகள் இரண்டு இருப்பதற்கு விரோதம் வருகிறதே என்பதும் ந்யாயமல்ல, ‘பதிக்ருத் என்கிற குணத்தையுடைய அக்னியின் பொருட்டு புரோடாசத்தை ஹோமம் செய்யவேண்டும்’ என்கிற இடத்தில் குணத்தோடு கூடிய தேவதை ஒன்றாயிருந்தபோதிலும் உத்தேஶ்யமா

1, 2. 94-ம்பக்கம் பார்க்க, 3.

விதேயத்வேபி சதுர்த்யவயவத்வயவிரோதாபாவாத் | ஏவம் ஸ்திதே யதி வாக்யார்த்தஜ்ஞானஸ்ய மோக்ஷோபாயதா ததோபாஸநாதி விதிவையர்த்யம் துஷ்பரிஹரம் | சப்தஜந்யப்ரத்யக்ஷவாதஸ்து பரிஹரிஷ்யதே |

யத்து வாக்யார்த்தஜ்ஞானோத்பத்தௌ ப்ரதிபந்தக பேதவாஸநாநிராஸத்வாரேண ச்ரவணமநநநிதித்யாஸநாநாமுபகாரகத்வம், ததபி ஹாஸ்யம், வாக்யஸ்யாகாங்க்ஷா யோக்யதா ஸந்நிதி வ்யதிரேகேணாபேக்ஷணீயாந்தராபாவாத் | ஸத்யாம் து ஸாமக்ர்யாம் வாக்யார்த்தஜ்ஞாநாநுத்பத்த்யநுபப

யிருக்கையைச் சொல்லுகிற நான்காம் வேற்றுமை உருபு இரண்டிருப்பதைப் போல இவ்விடத்திலும் விரோதமில்லை யாகையினுல். இப்படி இருக்க வாக்யத்தின் அர்த்தஜ்ஞானமே மோக்ஷத்திற்கு உபாயமாயிருந்ததே யானுல் அப்பொழுது உபாஸனம் முதலியவைகளை விதித்திருப்பது ப்ரயோஜனமற்றது என்பது பரிஹரிக்க முடியாது. ஶப்தத்தினுல் ப்ரத்யக்ஷ முண்டாகிறது என்கிற வாதம் மேலே நிராகரிக்கப்படப்போகிறது.*

வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாகும்பொழுது தடை செய்கிற பேதவாஸனையை நிராகரித்துக் கொண்டு அதன் வழியாக ஶ்ரவண மநந நிதித்யாஸநங்கள் உபகாரஞ் செய்கின்றன என்று சொல்லப்பட்டதே, அதுவும் பரிஹாஸம் செய்யத் தக்கது. வாக்யத்திற்கு † ஆகாங்க்ஷை, யோக்யதை, ஸந்நிதி, இவைகளின் ஆலோசனையைத் தவிர்த்து அபேக்ஷிக்க வேண்டிய மற்றென்று இல்லாமையினுல். மேற்கூறிய ஸாமக்ரிகள் இருக்கும்பொழுது வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாகாமல் இருப்பது பொருந்தாது. தடை

* 7-ம் வாதம்.

† ஆகாங்க்ஷை—அவஶ்யம் இருக்கவேண்டிய பதத்தின் சேர்க்கை, யோக்யதை—அஸம்பாவிதமல்லாத அர்த்தத்தைச் சொல்லுதல், ஸந்நிதி—அப்படிச் சேரவேண்டிய பதங்கள் ரொம்பதூரம் விலகியிருக்காமல் ஸமீபத்தில் இருத்தல்.

चेत् । न च प्रतिबन्धकस्य सामग्रीवैकल्यव्यपदिष्टम्, यथाहुः— 1 'प्रतिबन्धो विसामग्री तद्धेतुः प्रतिबन्धकः' इति, अतस्तन्निवृत्त्यैव सामग्रीपूर्तिरिति वाच्यम्, विपरीतवासनायाः प्रतिबन्धकत्वस्यैवासिद्धेः, सत्यामपि विपरीतसर्पादिवासनायामाप्तवाक्यलिङ्गादिभिः सर्पादिबाधकं तत्त्वज्ञानमुत्पद्यते । अत एवासंभावनाविपरीतसंभावनावच्चित्तविक्षेपद्वारा भेदवासनायाः प्रतिबन्धकत्वमपि निरस्तम् । यदि च भेदवासनानिरसनद्वारेणाद्वैतवाक्यार्थज्ञानोत्पत्तिरिष्यते, तदा न कदाचिदपि तदुत्पत्तिः सेत्स्यति । उक्तं हि—

யான வஸ்து இருப்பதும் ஸாமக்ரியின் குறைவிலேயே சேர்ந்தது, அப்படியே 'தடை இருந்ததாகில் அது ஸாமக்ரியின் குறைவிலேயே சேர்ந்ததாகும், அல்லது ஸாமக்ரியின் குறைவுக்குக் காரணமாகவாவது ஆகும்' என்று சொல்லுகிறுர்கள், ஆதலால் அந்தத் தடை நிவ்ருத்தியடைவதினுலேயே ஸாமக்ரி பூர்த்தியாகும் என்பதும் உசிதமல்ல, விபரீதவாஸனை தடையாகும் என்பதே ஸித்திக்கவில்லையாகையினுல். [எப்படி என்னில்:—கயிற்றைக் கண்டு பாம்பாக ப்ரமித்திருப்பவனுக்கு அதில்] பாம்பு என்கிற விபரீதவாஸனை இருக்கும்பொழுதே ஆப்தனுன ஒருவனுடைய வார்த்தை, அசங்காமல் இருப்பது முதலிய அடையாளம் முதலியவைகளினுல் ஸர்ப்பம் என்பதை மறுக்கக்கூடிய தத்வஜ்ஞானம் உண்டாகிறபடியினுல். அதினுலேயே அஸம்பாவிதமென்பது விபரீதமாக நினைப்பது முதலிய மனதின் கலக்கத்தை உண்டுபண்ணி பேதவாஸனை தடையாகிறது என்பதும் நிராகரிக்கப்பட்டது. [கீழ் விவரித்த த்ருஷ்டாந்தத்தில் இல்லாமையினுல் என்றபடி.] மேலும் பேதவாஸனையை நிராகரித்து அதன் வழியாக அத்வைத வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாகவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்படுகிறதேயானுல் அப்பொழுது ஒரு காலத்திலும் அந்த அத்வைத வாக்யார்த்தஜ்ஞானம் ஸித்திக்கப்போகிறதில்லை. அப்படியே 'ஶரீரம் விடுமள

1. குஸுமாஞ்சலி.

1 'யாவச்சரீரபாதம் ஹி கிஞ்சிதநுவ்ருத்தா வாஸநா | தந்நிவ்ருத்தௌ கதம் பும்ஸாம் சக்ஷுருந்மீலநாதிகே ||' இதி |

கிஞ்ச அநாதிகாலோபசிதாநாம் படுதரப்ரத்யயாப்யாஸாதரைர்த்ருடதர நிரூடாநாமபரிமிதாநாம் பேதவாஸநாநாம் அதிவயகாலஸாத்யாவிஶதப்ரத்யக்ஷாதிரேகாத்யல்பீயஸ்த்வாத்வைதவாஸநயா நிரஸிதுமஶக்யத்வாத் | கிஞ்ச தத்த்வஜ்ஞாநே ஸதி தத்விஷயத்யாநேந தத்விபரீதவாஸநா நிராஸ:, தந்நிராஸே ச தத்த்வஜ்ஞாநமிதி அந்யோந்யாஶ்ரயத்வாச்ச | ததுக்தம், 2 'உத்பந்நே ஸதி விஜ்ஞாநே வாஸநா தந்நிரஸ்யதே | நிரஸ்தவாஸநஸ்யைவ விஜ்ஞாநமிதி துர்க்ரஹம் ||' இதி | அந

வும் பேதவாஸனை ஏன் இல்லாமல் போகும்? அப்படி அது நிவ்ருத்தி அடைந்ததேயானால் புருஷர்களுக்குக் கண்ணைக் கொட்டுவது விழிப்பது முதலிய வ்யாபாரங்கள் எப்படி உண்டாகும்?' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

மேலும் அநாதி காலமாக வ்ருத்தி யடைந்து வந்தவைகளாயும், விஶதமான ஜ்ஞானம், அதன் தொடர்ச்சி, அதன் ப்ரீதி முதலியவைகளால் உறுதியாக வேரூன்றிப் போனவைகளாயும், கணக்கில்லாதவைகளுமான பேதவாஸனைகளை அல்பகாலத்தினால் உண்டாக்கக் கூடியதாய், விஶதமில்லாத ஜ்ஞானத்தைக் காரணமாக உடையதாய் மிகவும் கொஞ்சமுமான அத்வைத வாஸனையினால் நிராகரணம் செய்ய முடியாதாகையினால். மேலும் தத்வ ஜ்ஞானம் உண்டானால் அதைப்பற்றிய த்யானத்தினால் அதற்கு விருத்தமான பேதவாஸனைக்கு நிராகரணம் உண்டாகிறது, அந்தப் பேதவாஸனையை நிராகரித்தால் தத்வ ஜ்ஞானம் உண்டாகிறது என்று அந்யோந்யாஶ்ரய (ஒன்றுக்கொன்று எதிர் பார்த்திருப்பதாகிய) தோஷம் வருகிறது. இதையும்பற்றி, 'தத்வ ஜ்ஞானமுண்டானால் வாஸனை நிராகரிக்கப்படுகிறது, நிராகரிக்கப்பட்ட வாஸனை யுடையவனுக்கே தத்வ ஜ்ஞானம் உண்டாகிறது என்று சொல்லுவது அஸங்கதமாகும்' என்று சொல்லுகிறார்கள். தத்வ ஜ்ஞானம் உண்டாகாமல்

---

1. 2.

त्वसत्त्व एव तत्त्वज्ञाने श्रवणमनननिदिध्यासनैः क्रमात्तन्निरास इति वदतः, किं तानि तत्त्वविषयाणि? उतातत्त्वविषयाणि? पूर्वत्र विपरीतवासनायां सत्यां तेषामनुत्पत्तिरेव। उत्तरत्र अतत्त्ववासनया कथं तत्त्वज्ञानोत्पत्तिप्रतिबन्धकवासनानिरासः? तथा च [1]'समुद्रं गन्तुकामस्य हिमवद्गमनम्' इति न्यायः। किञ्च अभेदज्ञाने सिद्धे भेदवासनानिरासस्य किमर्था अपेक्षा? तदसिद्धौ तु तत्प्रतिपक्षवासनानिरासाभिलाषानुदयात्। न ह्यभेदज्ञानप्रतीतिरभेदप्रतीतिमन्तरेण स्यात्। न च प्रतीतौ तु वैशद्यावैशद्यादिविशेषं त्वया

இருக்கும் பொழுதே ஶ்ரவண மனன நிதித்யாஸனங்களினல் முறையே அது நிரஸிக்கப்படுகிறது என்று சொல்லுகிற பொழுது அந்த ஶ்ரவணம் முதலியவைகள் தத்வத்தைப் பற்றியதா? தத்வ மல்லாத (மற்ற)வைகளைப் பற்றியதா? முதல் பக்ஷத்தில் விபரீத வாஸனை இருக்கும்பொழுது தத்வத்தைப் பற்றியதாகிய அந்த ஶ்ரவணுதிகள் உண்டாகா. இரண்டாவது பக்ஷத்தில் தத்வ மில்லாத வஸ்துவைப்பற்றிய வாஸனையினல் தத்வ ஜ்ஞானம் உண்டாவதற்குத் தடையாகிய வாஸனையின் நிராகரணம் எப்படிச் செய்ய முடியும்? அப்படியாகில் 'ஸமுத்திரத்திற்குப் போகவேண்டுமென்று ஆரம்பித்து ஹிமவத்பர்வதத்திற்குப் போவதைப் போலாகும்' என்கிற ந்யாயம்வரும். மேலும் அபேத ஜ்ஞானம் ஸித்தித்துவிட்டால் பேதவாஸனையை நீக்கவேண்டுமென்கிற அபேக்ஷை எதற்காக? அபேத ஜ்ஞானம் உண்டாகாத பக்ஷத்தில் அதற்கு விரோதியான வாஸனைகளை நீக்கவேண்டுமென்கிற ஆசை உண்டாவதற்கே இடமில்லை. ஏனெனில் அபேத ஜ்ஞானத்தில் நம்பிக்கை அபேத ஜ்ஞானம் உண்டாகாமல் உண்டாகாதல்லவா. அந்த ஜ்ஞானங்களில் விஶதமாயிருக்கை அவிஶதமாயிருக்கை முதலிய வ்யத்யாஸம் உன்னால் சொல்ல முடியாது. ஏனெனில் பரப்ரும

1.

வக்தும் ஶக்யம், அபேதஸ்ய ப்ரஹ்மஸ்வரூபாயமாணஸ்ய ஸர்வதைகரூபத்வாத், விஶேஷக்ரஹே ச பேதப்ரதீதித்வப்ரஸங்காத் | ந ச வ்யாவஹாரிகபேதோऽத்ராஸ்தீதி வாச்யம், பேதவாஸநாநிராஸத்வாரேணாபேதஜ்ஞாநஸ்ய பாரமார்த்யவிஷயத்வாத் | அதோ ந பேதவாஸநாநிராஸத்வாரேண ஶ்ரவணாதித்ரயஸ்ய தர்ஶநோபகாரகத்வமிதி ||

யத்த்வந்யத்ரோக்தம் [1] 'ப்ரஹ்ம வேத ப்ரஹ்மைவ பவதி' இத்யாதௌ ஜ்ஞாநமாத்ரஸ்யைவ மோக்ஷஹேதுத்வம் ஶ்ரூயதே | ந ஹி ஶ்ருத்யவகதேऽர்தே நாஸ்தித்வம் ந்யாய்யம் | அத ஏவோக்தே [2] 'நைஷா தர்கேண மதிராபநேயா' இதி, ததப்யஸத், ஸாமாந்யஶப்தாநாம்

மத்தின் ஸ்வரூபமாகிய அபேதம் எப்பொழுதும் ஒருவித ஸ்வரூபத்தை யுடையதாகையினாலும், அப்படி வ்யத்யாஸம் அறியப்பட்டதேயானால் அது பேத ஜ்ஞானமாக ஆய்விடு மாதலாலும். வ்யாவஹாரிகமான வ்யத்யாஸங்கள் இந்த அபேதத்திலும் உண்டு என்று சொல்லுவதும் உசிதமல்ல, பேதவாஸனையை நிராகரித்து அதன் வழியாக உண்டாகிற அபேத ஜ்ஞானம் பாரமார்த்திக வஸ்துவைப் பற்றிய தாகையினால். ஆதலால் பேதவாஸனையை நிராகரணம் செய்து அதன் வழியாக ஶ்ரவணம் மனனம் நிதித்யாஸனம் இவைகள் தர்ஶநத்திற்கு உபகாரம் செய்கின்றன என்பது ஸம்பவிக்காது.

'ப்ரும்மத்தை அறிந்தவன் ப்ரும்மமாகவே ஆகிறான்' என்றிவை முதலிய வாக்யங்களில் ஜ்ஞானம் மாத்திரத்திற்கு மோக்ஷத்திற்குக் காரணமாயிருக்கும் தன்மை சொல்லப்படுகிறது. ஶ்ருதியில் அறியப்பட்ட அர்த்தத்தில் இல்லை என்று சொல்லுவது ந்யாயத்தை அனுஸரித்ததல்ல. ஆகையினால் 'இந்த மோக்ஷத்திற்குக் காரணமான ஜ்ஞானம் யுக்திகளினால் மறைக்க முடியாது' என்று பெரியோர்களினால் சொல்லப்பட்டதே, அதுவும் உசிதமல்ல, பொதுவான ஶப்தங்களுக்கு விஶேஷத்தில் முடிவு உண்டென்பது பஶ்வதி

---

1. முண்டகம்-3-2-9. 2.

விஶேஷே பர்யவஸாநஸ்ய பஶ்வதிகரணாதிந்யாய
ஸித்தத்வாத் | ந்யாயாநபேக்ஷத்வே ச கிம் ஶாரீரகஶாஸ்த்ரே-
ணாபி? த்யாநோபாஸநஶப்தயோஶ்ச ஜ்ஞாநவிஶேஷ
விஷயதயா ஜ்ஞாநஸாமாந்யவிஷயவேதநாதிஶப்தாநாம்
தத்விஶேஷஶப்தார்த்தே ஏவ பர்யவஸாநம் யுக்தம்,
விகல்பஸமுச்சயபலாந்தரார்த்தத்வஸம்பவஸ்யோக்தத்வாத்|
தது்க்தம்—'அஷ்டதோஷா விகல்பே ஸ்யு: கௌரவஞ்ச
வ்யவஸ்திதௌ | ஸமுச்சயேऽநபேக்ஷா ஸ்யாதங்காங்கித்வம் ந
ஶ்ரூயதே||' இதி; ததா வித்யுபாஸ்த்யோர் வ்யதிகரேணா

கரணம் * முதலியவைகளில் சொல்லப்பட்ட ந்யாயத்தினால் ஏற்பட்டதாகையினால். ஸ்ருதியில் சொல்லப்பட்ட அர்த்தத்திற்கு ந்யாயத்தின் அபேக்ஷயில்லை என்னில், ஸாரீரகஸாஸ்திரத்தினால் என்ன ப்ரயோஜனம்? த்யானம் உபாஸனம் முதலிய ஸப்தங்கள் ஒருவித ஜ்ஞான விஸேஷத்தைச் சொல்லுகிறபடியினால் பொதுவாக ஜ்ஞானத்தைச் சொல்லுகிற வேதனம் முதலிய பதங்கள் அந்த விஸேஷ ஸப்தங்களுக்கு அர்த்தமான த்யானத்திலேயே முடிவை அடைகின்றன என்பது யுக்தமாகும். விகல்பம் (இதுவாவது அதுவாவது அனுஷ்டிக்க வேண்டுமென்பது), ஸமுச்சயம் (இரண்டையும் சேர்த்து அனுஷ்டிக்க வேண்டும் என்பது), பலாந்தரார்த்தம் (தனித் தனிப் பலங்களுக்கு ஸாதனம் என்பது) ஸம்பவிக்காது என்பது ஏற்கனவே சொல்லப்பட்டபடியினால். அப்படியே 'விகல்பமென்று சொல்லில் எட்டுத் தோஷங்கள் வரும், அதிகாரி பேதத்தினால் வ்யவஸ்தித விகல்பமென்னில் கௌரவம் வரும். இரண்டையும் சேர்த்தனுஷ்டிக்க வேண்டுமென்றால் ஒன்றினாலேயே பலம் உண்டாகும் என்று சில வாக்யங்களில் சொல்லி இருப்பதினால் மற்றொன்றை அபேக்ஷிக்க வேண்டாம். இவைகளுள் ஒன்று அங்கமாயும் மற்றொன்று அங்கியாயும் இருக்குமென்று ஸ்ருதியில் சொல்லப்படவில்லை' என்று பெரியோர்களினால் சொல்லப்பட்டது. அப்படியே விதி என்கிற தாதுவையும், உபாஸி என்கிற தாதுவையும் முன்னும் பின்னுமாகக் கலந்து ஆரம்பம் முடிவுகள் செய்திருப்பதை ஸ்ருதியில் கண்டிருப்பதினால் இவை இரண்டும் ஒரே அர்த்தத்தைச் சொல்லு

* பூர்வ மீமாம்ஸையில் ஏற்பட்ட ந்யாயம். இதைத்தான் கீழ் சாகபசு ந்யாயம் என்றது. 98-ம் பக்கத்தில் புட்கோட்டைப் பார்க்க.

𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍇𑌷𑍋𑌪𑌸𑌂𑌹𑌾𑌰𑌾𑌦𑌿𑌭𑍍𑌯𑌸𑍍 𑌤𑌯𑍋𑌰𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌤𑍍𑌵𑌂
𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 | 1'𑌮𑌨𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑍀𑌤' 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑍍𑌯𑍈𑌵
𑌉𑌪𑌾𑌸𑌨𑌸𑍍𑌯 1 '𑌭𑌾𑌤𑌿 𑌚 𑌤𑌪𑌤𑌿 𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑍍𑌯𑌾 𑌯𑌶𑌸𑌾
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌰𑍍𑌚𑌸𑍇𑌨 𑌯 𑌏𑌵𑌂 𑌵𑍇𑌦' 𑌇𑌤𑌿 𑌫𑌲𑌵𑌿𑌧𑌾𑌨𑌾𑌯𑌾𑌨𑍁
𑌵𑌦𑍍𑌯𑌤𑍇 | 𑌨 𑌹𑍍𑌯𑌫𑌲𑌂 𑌵𑌿𑌧𑌾𑌯𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 𑌫𑌲𑌾𑌨𑍁𑌵𑌦𑌿
𑌤𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 | 𑌏𑌵𑌂 2'𑌯𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍇𑌦 𑌯𑌤𑍍𑌸 𑌵𑍇𑌦' 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌨
𑌶𑌬𑍍𑌦𑌮𑌾𑌤𑍍𑌰𑌶𑍍𑌰𑌵𑌣𑍇 𑌜𑌾𑌨𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌃 𑌤𑌦𑌰𑍍𑌥𑌂 3'𑌯𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑌾
𑌮𑍁𑌪𑌾𑌸𑍍𑌸𑍇' 𑌇𑌤𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌿𑌨𑌾𑌽𑌨𑍁𑌵𑌦𑌤𑌿 | 𑌏𑌵𑌮𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾
𑌪𑌿 | 𑌤𑌥𑌾 4'𑌤𑌮𑍇𑌵𑌂 𑌵𑌿𑌦𑍍𑌵𑌾𑌨𑌮𑍃𑌤 𑌇𑌹 𑌭𑌵𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑌃
𑌪𑌨𑍍𑌥𑌾 𑌅𑌯𑌨𑌾𑌯 𑌵𑌿𑌦𑍍𑌯𑌤𑍇', 5'𑌨𑌾𑌹𑌂 𑌵𑍇𑌦𑍈𑌰𑍍𑌨 𑌤𑌪

கின்றன என்று ஏற்பட்டது. எப்படி என்னில்:—'மனதை ப்ருஹ்மமாக உபாஸிக்க வேண்டும்' என்று விதிக்கப்பட்ட உபாஸனம் 'எவன் இப்படி வேதனம் செய்கிறானோ, அவன் கீர்த்தியினாலும் யஶஸ்ஸி னாலும் ப்ருஹ்ம தேஜஸ்ஸினாலும் ப்ரகாசிக்கிறான், மற்றவர்களைத் தன் வசப்படுத்திக் கொள்ளுகிறான்' என்று பலத்தைச் சொல்லுவதற் காக அனுவதிக்கப் படுகிறது. பலம் சொல்லாமல் ஒன்றை விதித்து மற்றொன்றுக்குப் பலம் உண்டென்று அனுவாதம் செய்வது யுக்த மில்லையல்லவா. (ஆதலால் எந்த உபாஸனம் விதிக்கப் பட்டதோ அதுவே 'வேத' என்று அனுவதிக்கப் பட்டது என்றதாயிற்று), இப்படியே 'எந்த ரைக்வர் அந்த ப்ருஹ்மத்தை அறிந்தவரோ அந்த ரைக்வர் எப்படிப்பட்ட ப்ருஹ்மத்தை அறிந்தவரோ' என்று வேதன என்கிற பதம் மாத்திரத்தைக் கேட்டவரான ஜானஶ்ருதி அந்த வேதனம் என்கிற பதத்தின் அர்த்தத்தை 'எந்தத் தேவ தையை உபாஸனம் செய்கிறீரோ' என்று உபாஸி என்கிற தாதுவி னால் அனுவாதம் செய்கிறார். இப்படியே மற்ற இடங்களிலும். அப் படியே 'அந்த மஹா புருஷனை இவ்விதமாக அறிந்தவன் இந்த ஜன் மத்திலேயே மோக்ஷத்தை அடைந்தவனாகிறான், மோக்ஷத்திற்கு வேறொரு வழியில்லை', 'நான் வேதாத்யயனம் செய்வதினாலும்

1. சாந்தோக்யம்-3-18-1. 2. சாந்தோக்யம்-4-1-4. 3. சாந்தோக்யம்-4-2-2. 4. புருஷஸூக்தம்-20. 5. கீதை-11-53.

𑌸𑌾' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍍𑌮𑍃𑌤𑍍𑌯𑍋𑌰𑍍𑌵𑍇𑌦𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌮𑍋𑌕𑍍𑌷𑍋𑌪𑌾𑌯𑌤𑌯𑌾 𑌵𑌿𑌹𑌿𑌤𑌯𑍋𑌃 𑌤𑌦𑌨𑍍𑌯𑍋𑌪𑌾𑌯𑌨𑌿𑌷𑍇𑌧𑌪𑌰𑌯𑍋𑌃 𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 𑌵𑍇𑌦𑌨𑌶𑌬𑍍𑌦𑍇𑌨𑌾𑌪𑌿 𑌤𑍈𑌲𑌧𑌾𑌰𑌾𑌵𑌦𑌵𑌿𑌚𑍍𑌛𑌿𑌨𑍍𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌰𑍂𑌪𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌶𑍇𑌷 𑌏𑌵 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑍀𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌏𑌵𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑍋𑌪𑌾𑌸𑌨𑌭𑌕𑍍𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌾𑌰𑍍𑌥𑌤𑌯𑌾 𑌵𑍇𑌦𑌨𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑍇 𑌸𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌂 𑌨𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑌭𑌿𑌜𑍍𑌞𑌤𑌾𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌮𑍍 । 𑌤𑌦𑍁𑌕𑍍𑌤𑌮𑍍—[1] '𑌪𑌶𑍋𑌶𑍍𑌛𑌾𑌗𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌣𑍀𑌤𑌤𑍍𑌵𑍇 𑌨𑌿𑌰𑍍𑌵𑌰𑍍𑌣𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌰𑍍𑌤𑍍𑌮𑌭𑌿𑌃 । 𑌗𑌰𑍍𑌦𑌭𑌾𑌦𑌿𑌷𑍁 𑌤𑌦𑍍𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌂 𑌗𑌰𑍍𑌦𑌭𑌪𑍍𑌰𑌾𑌯𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 ॥' 𑌇𑌤𑌿 ।

தபஸ்ஸினுலும் அறியத் தக்கவனல்ல' (பக்தியொன்றினுலேயே அறியத்தக்கவன்) என்றிவை முதலிய ஶ்ருதி ஸ்ம்ருதிகள் வேதன பக்தி என்னும் பதங்களால் மோக்ஷோபாயத்தைச் சொல்லி அதைத் தவிர வேறு உபாயம் இல்லை என்று சொல்லுகின்றன வாகையினுல் அவைகளுள் ஒன்ருென்று தங்கள் அர்த்தங்களை நிராகரித்துக் கொள்ளுவது பொருந்தாதாகையினுலே வேதன என்னும் பதத்தினுலும் எண்ணெயின் தாரையைப் போல் இடைவிடாத பக்தியாகிய ஜ்ஞான விஶேஷமே சொல்லப் படுகிறதென்று ஒப்புக் கொள்ள வேண்டும். இப்படி த்யானம் உபாஸனம், பக்தி, என்னும் பதங்கள் ஒரே அர்த்தத்தை உடையனவைகளாகையினுல் வேதனம் முதலிய ஶப்தங்கள் ஜ்ஞான விஶேஷத்தைச் சொல்லுகின்றன என்பது நிஶ்சயிக்கப்பட்டிருக்கும் பொழுது பொதுவான ஜ்ஞானம் மாத்திரத்தை அர்த்தமாக அங்கீகரிப்பது ந்யாயம் தெரியாமையினுல் உண்டானது. அப்படியே 'பொதுவாகச் சொல்லப்பட்ட பசு, ஆடாகிய ஒருவித பசு விஶேஷம் என்று ந்யாயங்களைக் கொண்டு நிரூபித்திருக்கக் கழுதை முதலியவைகளும் பசுத்தான், அந்தப்பதம் எல்லாவற்றிற்கும் பொது என்று சொல்லுவது கழுதைக்கு ஸமமானவர்களினுல் கல்பிக்கப்பட்டது' என்று சொல்லப்பட்டது.

1.

यत्तु नैवंरूपस्य तद्विषयस्यैव ज्ञानस्य विधेयत्वं न सम्भवतीति, तदिष्टमेव, ततोऽन्यस्यैव विधानोपपादनात् ।

प्रत्यक्षविरुद्धश्चायमविधेयज्ञानान्मोक्षवादः, वाक्यार्थज्ञानमात्रेणाविद्यानिवृत्त्यदर्शनात् । आहुश्च—[1] 'तत्त्वमस्यादिवाक्यस्य शतधा श्रवणेऽपि हि । दृश्यते भेदमाश्रित्य विवादो ब्रह्मवादिनाम् ॥' इति । ननु येषां वाक्यार्थज्ञानं जातं तेषां तन्निवृत्तिरस्त्येव, येषां तु सा नास्ति तेषां तदपि न जातमित्यविरोध इति चेत्,

---

வாக்யத்தினாலேயே ஏற்பட்ட ஜ்ஞானத்திற்கு விதிக்கத் தகுந்ததாயிருக்கும் தன்மை ஸம்பவிக்காது என்று எது சொல்லப்பட்டதோ அது எங்களுக்கும் இஷ்டம்தான், அந்த ஜ்ஞானத்தைக்காட்டிலும் வேறுபட்டதாகிய உபாஸனமாகிய ஜ்ஞானம் விதிக்கப்படுகிறது என்று நிரூபிக்கப்பட்டிருப்பதினால்.

மேலும் இந்த விதிக்கத்தகாத வாக்யார்த்த ஜ்ஞானத்தினால் மோக்ஷம் உண்டாகிறது என்கிற வார்த்தை ப்ரத்யக்ஷத்திற்கு விருத்தமாக இருக்கிறது, வாக்யத்தின் அர்த்தத்தைத் தெரிந்துகொண்ட மாத்திரத்தினால் அவித்யை நிவ்ருத்தியடையக் காணாமையினால். 'அந்த ப்ரும்மம் நீயாகிறாய் முதலிய வாக்யங்களை அனேகம் தடவை கேட்டபோதிலும் ப்ரும்மத்தைப் பற்றி வாதம் பண்ணுகிறவர்களுக்கு நீ, நான், என்கிற பேத ஜ்ஞானத்தை முன்னிட்டுக்கொண்ட விவாதம் காணப்படுகிறது' என்று சொல்லுகிறார்கள். எவர்களுக்கு வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாயிற்றோ அவர்களுக்கு பேத ஜ்ஞானத்தின் நிவ்ருத்தி இருக்கவே இருக்கிறது, எவர்களுக்கு அந்தப்பேத ஜ்ஞானத்தின் நிவ்ருத்தி உண்டாகவில்லையோ அவர்களுக்கு அந்த வாக்யார்த்த ஜ்ஞானம் உண்டாகவில்லை, ஆதலால் விரோதமில்லை என்னில், அதுவும் உசிதமல்ல, அந்த அபேத ஜ்ஞானம் இல்லாமல்போனால்

1.

𑌤𑌸𑍍𑌯, 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌦𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑌸𑌂𑌭𑌵𑍇 𑌚 𑌶𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑍇𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 । 𑌅𑌥 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌤𑌾𑌂 𑌶𑍍𑌰𑌾𑌵𑌕𑌾 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑍇𑌷𑌾𑌂 𑌶𑍍𑌰𑌾𑌵𑌕𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌶𑌰𑍀𑌰𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑍇𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌨𑌸𑍍𑌯 𑌚 𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌲𑌾𑌭𑌪𑍂𑌜𑌾𑌪𑌰𑌾𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌦𑍇𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌸𑌸𑍍𑌯 𑌚𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌵𑌪𑌿 𑌬𑌾𑌧𑌿𑌤𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑍇𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌾𑌸𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌯𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌦𑍍𑌯𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌨𑍍𑌨, 𑌤𑌵 𑌤𑍍𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑍇 𑌬𑌾𑌧𑌿𑌤𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌸𑌂𑌭𑌵𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣

அதை ப்ரவசனம் செய்வது முதலியது ஸம்பவிக்காதாகையினால். அப்படி ப்ரவசனம் ஸம்பவிக்காதபக்ஷத்தில் ஶிஷ்யர்களுக்கு அபேத ஜ்ஞானத்தைக் கேட்பது முதலியதும் ஸித்திக்காமல் போகவேண்டி வரும். (அப்படியே ஆசார்யனுக்கும்) ப்ரவசனம் முதலியது ஸித்திக்காது. ஆகிலும் வாக்யார்த்த ஜ்ஞானத்தினால் அவித்யையின் நிவ்ருத்தியை அடைந்தவர்களே அவித்யையுடையவர்களுக்கு வேதாந்தத்தை உபதேசம் செய்பவர்கள் என்னில், அது உசிதமல்ல, அவர்களுக்கும் ஶிஷ்யனுக்கு உபதேசம் செய்வதாகிய வ்யாபாரமும், அதற்குக் காரணமாகிய ஶரீரம் இந்த்ரியம் முதலியவைகளும் அப்படி உபதேசிப்பதற்கு ப்ரயோஜனமாகிய யஶஸ்ஸு த்ரவ்ய லாபம் பூஜை அயலாரை அனுக்ரஹிப்பது முதலியதும் அந்த ஶிஷ்யர்கள் முதலியவர்கள் தனக்குத் தோன்றுவதும் அவித்யை இல்லாவிடில் ஸம்பவிக்காதாகையினால். அவித்யை நிவ்ருத்தியடைந்த போதிலும் பாதிதானுவ்ருத்தியினால் (அதாவது அத்வைத ஜ்ஞானத்தினால் மறுக்கப்பட்டிருந்த போதிலும் அநாதிவாஸனையினால் பேத ஜ்ஞானம் தொடர்ந்து வருவதினால்) பேதம் தோன்றுகிறபடியினாலே ப்ரத்யக்ஷம் முதலியவைகளுக்கு விரோதம் இல்லை, ப்ரவசனம் முதலியவைகளும் யுக்தமாகின்றன என்னில், அதுவும் உசிதமல்ல, உன்னுடைய பக்ஷத்தில் பாதிதானுவ்ருத்தி ஸம்பவிக்காது என்

𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑌥𑌾𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌵𑌿𑌶𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌤𑍍𑌤𑌿𑌶𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌵𑌚𑌨𑌾𑌦𑍍𑌯𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, 𑌵𑌿𑌶𑌦𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿 𑌪𑌰𑌾𑌮𑌰𑍍𑌶𑌸𑍍𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌯𑍋𑌰𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌶𑌦𑌾𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌿𑌤𑌸𑌮𑌸𑍍𑌤 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌾𑌵𑌾𑌸𑍁𑌦𑍇𑌵𑌾𑌦𑌯𑍋𑌽𑌰𑍍𑌜𑍁𑌨𑌾𑌦𑌿𑌭𑍍𑌯 𑌉𑌪𑌦𑌿𑌶𑌨𑍍𑌤𑍀𑌤𑌿 𑌹𑌿 𑌸𑍍𑌵𑍀𑌕𑍃𑌤𑌂 𑌯𑍁𑌷𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 । 𑌨 𑌚𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌤𑌾𑌰𑌃 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌨𑌾𑌂 𑌤𑌦𑌨𑌭𑌿𑌜𑍍𑌞𑌤𑌾𑌮𑌨𑍁𑌮𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 । 𑌤𑌥𑌾𑌸𑌤𑍍𑌯𑌵𑌿𑌵𑌾𑌦𑌃𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ।

𑌕𑌿𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑌿𑌵𑌾𑌦𑌿𑌨𑌃 𑌪𑍍𑌰𑌬𑌲𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌃 𑌕𑌥𑌂 𑌭𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌕𑍍𑌷𑌿𑌪𑌨𑍍𑌤𑌿? 𑌨 𑌤𑌾𑌵𑌦𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑍈𑌵, 𑌨𑌿𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌵𑌾𑌦𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌦𑌿𑌤𑍍𑌵𑌾 𑌚𑍇𑌤𑍍 𑌕𑌥𑌂 𑌤𑍈𑌰𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿

பதை மேலே நிரூபிக்கப்போகிறபடியினால். * அப்படி இருந்தபோதிலும் விசதமில்லாத ஜ்ஞானம் மாத்திரத்தினாலாவது ஒருவித அவித்யா விஶேஷத்தினாலாவது ப்ரவசனம் முதலியவைகளுக்கு ஒருவித அனுபபத்தியுமில்லையே என்பதும் உசிதமல்ல, குருவின் உபதேசத்தினால் உபநிஷத்தின் அர்த்தத்தை விஶதமாக அறிந்தேன் என்று தானே தன்னைப்பற்றி நினைத்துக்கொள்வதற்கும் தன்னுடைய ஸித்தாந்தத்திற்கும் விரோதம் வருகிறபடியினால். விஶதமாக ப்ரத்யக்ஷத்தினாலேயே அறியப்பட்ட எல்லா தத்வார்த்தங்களையுமுடைய ஸ்ரீக்ருஷ்ணன் முதலியவர்கள் அர்ஜுனன் முதலிய ஶிஷ்யர்களுக்கு (கீதை முதலிய ஶாஸ்திரங்களை) உபதேசிக்கிறார்கள் என்று அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதல்லவா. அத்வைத ஸித்தாந்தத்தை ப்ரவசனம் செய்கிற ஆசார்யர்கள் தங்களுக்கு அத்வைத ஸித்தாந்தம் தெரியவில்லை என்பதை ஒப்புக் கொள்ளவில்லையே. அப்படி ஒப்புக் கொண்டார்களேயானால் விவாதமே இல்லை.

மேலும் உங்களைவிட அதிகமான அவித்யையுடைய ப்ரதிவாதிகள் உங்களுடைய பக்ஷத்தை எப்படி நிராகரிப்பார்கள்? தெரிந்து கொள்ளாமல் என்று சொல்ல முடியாது, ஆதாரமில்லாமல் வாதம் செய்வது பொருந்தாதாகையினால். தெரிந்து கொண்டெனில்

---

* 5-ம் வாதம்.

𑌵𑌾𑌦𑌿𑌨𑌾𑌵𑌿𑌦𑌿𑌤𑍇 𑌭𑌵𑌤𑍍𑌪𑌕𑍍𑌷𑍇 𑌭𑌵𑌤𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃? 𑌨 𑌹𑌿 𑌸𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑌰𑍇 𑌜𑌾𑌨𑌨𑍍𑌤𑌿, 𑌵𑌯𑌨𑍍𑌤𑍁 𑌨 𑌵𑌿𑌦𑍍𑌮 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑍋𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍 ।

𑌯𑌤𑍍𑌤𑌦𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌂 𑌵𑌿𑌶𑌦𑌾𑌦𑍍𑌵𑍈𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍇𑌷𑍍𑌯𑌤𑌿, 𑌯𑌚𑍍𑌚𑍇𑌦𑌾𑌨𑍀𑌂 𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌦𑌵𑌿𑌶𑌦𑌮𑍁𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌂, 𑌤𑌦𑍁𑌭𑌯𑌂 𑌭𑌿𑌨𑍍𑌨𑌵𑌿𑌷𑌯𑌂? 𑌏𑌕𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌾? 𑌭𑌿𑌨𑍍𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍𑌤𑌦𑌨𑍁𑌪𑌕𑌾𑌰𑌕𑌤𑍍𑌵𑌂 । 𑌏𑌕𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑍍𑌯𑌨𑍍𑌯𑍂𑌨𑌾𑌨𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑌾? 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌵𑌿𑌶𑍇𑌷𑌵𑌿𑌶𑍇𑌷𑌿𑌤𑌵𑌿𑌷𑌯𑌂𑌵𑌾? 𑌆𑌦𑍍𑌯𑍇 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑌨𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑌂, 𑌇𑌦𑌾𑌨𑍀𑌨𑍍𑌤𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌾 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕

அப்பொழுது ப்ரதிவாதிகளினால் அறியப்பட்ட உங்களுடைய பக்ஷத்தில் உங்களுக்கு ஜ்ஞானமுண்டாகவில்லை என்பது எப்படிப் பொருந்தும்? ஸ்திரமான புத்தியை யுடைய எவனும் எங்களால் சொல்லப்பட்ட அர்த்தத்தை அயலார் தெரிந்துகொண் டிருக்கிறார்கள், நாங்கள் அறிய வில்லை என்று சொல்லமாட்டான்.

மேலும் அந்த அவித்யையை நிவ்ருத்தி செய்யக் கூடியதான விசதமான எந்த அத்வைத ஜ்ஞானம் இனி உண்டாகப் போகிறதோ அதுவும், இப்பொழுது ஸ்ரவணத்தினால் அவிஸதமாக உண்டாகிய அத்வைத ஜ்ஞானம் எதுவோ அதுவும், ஆக இந்த இரண்டு ஜ்ஞானங்களும் வெவ்வேறு விஷயங்களைப் பற்றியதா? ஒரே விஷயத்தைப் பற்றியதா? வெவ்வேறு விஷயங்களைப் பற்றியது என்று சொல்லில் இதர ஸித்தாந்தங்களை அறிவது போலவே ஸ்ரவணத்தினால் உண்டாகிற ஜ்ஞானம் வேறு விஷயத்தைப்பற்றி உண்டாகப் போகிற விஸத ஜ்ஞானத்திற்கு உபகாரம் செய்யக் கூடியதாகாது. ஒரே விஷயத்தைப் பற்றியதா யிருந்த போதிலும் இவை இரண்டு ஜ்ஞானங்களும் மிகுதி குறைவு இல்லாமல் இருக்கிற விஷயத்தைப் பற்றியதா? தனித்தனியான சில ஸ்வபாவ விஸேஷங்களோடு கூடிய ஒரு வஸ்துவைப் பற்றியதா? முதலாவது பக்ஷத்தில் பிற்பாடு உண்டாகிற ஜ்ஞானத்திற்கு அவித்யையை நிவ்ருத்தி செய்யக் கூடிய ஸக்தி இல்லாமற்போக

𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌅𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌸𑌵𑌿𑌶𑍇𑌷𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌷𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌕𑌥𑌮𑌿𑌦𑌂 𑌤𑍍𑌵𑌯𑌾𑌵𑌗𑌤𑌮𑍍? 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑍈𑌵 𑌨𑌿𑌰𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌜𑌾𑌤𑌮𑌿𑌤𑌿 𑌕𑌃 𑌪𑌶𑍍𑌚𑌾𑌤𑌨𑌸𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃? 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌦𑌾𑌨𑍀𑌂 𑌜𑌾𑌤𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑍍𑌤𑍁 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑍍𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨, 𑌵𑍇𑌦𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍇𑌵 𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑍋𑌦𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌦𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑍇 𑌤𑍁 𑌪𑌶𑍍𑌚𑌾𑌦𑌪𑌿 𑌤𑌦𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇 𑌵𑌾 𑌤𑌦𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌸𑌨𑍍𑌦𑍇𑌹 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌵𑌿𑌶

வேண்டியதாவது, ஶ்ரவணத்தினால் இப்பொழுது உண்டாயிருக்கிற ஜ்ஞானத்திற்கே அவித்யையை நிவ்ருத்தி செய்யக் கூடிய ஶக்தி உண்டாக வேண்டியதாவதுவரும். ஏனெனில் இந்த இரண்டுவித ஜ்ஞானங்களுக்கும் ஒருவித வ்யத்யாஸமு மில்லாமையினால். இரண்டாவது பக்ஷத்தில் ப்ருஹ்மத்திற்கு விஶேஷங்களோடு கூடியிருக்கை ஒப்புக் கொள்ள வேண்டி வரும். இப்பொழுது விஶேஷத்தோடு கூடியதாக க்ரஹிக்கப்பட்டது, பிறகு ஒரு விஶேஷமும் இல்லாததாக ப்ரகாசிக்கப் போகிறது, என்று வ்யத்யாஸம் உண்டென்னில், இது எப்படி உன்னால் அறியப்பட்டது? ஶ்ருதி நிர்விஶேஷம் என்று சொல்லி யிருப்பதினால் என்னில், அப்படியாகில் ஶ்ருதியினாலேயே நிர்விஶேஷம் என்கிற ஜ்ஞானம் இப்பொழுதே உண்டாயிற்றாகையினால் பிற்பாடு உண்டாகப்போகிற ஜ்ஞானத்திற்கு என்ன விஶேஷம்? இப்பொழுது உண்டானது ஜ்ஞானம், பிறகு உண்டாகப் போகிறது நிஶ்சயம், என்று விஶேஷம் இருக்கிறது என்பதும் உசிதமல்ல, வேதம் ப்ரமாணம் என்கிற நிஶ்சயம் இருக்ததே யானால் அப்பொழுதே நிஶ்சயரூப ஜ்ஞானம் உண்டாகலாம். அந்த வேதம் ப்ரமாணம் என்கிற நிஶ்சயம் இல்லாத பக்ஷத்தில் பிற்பாடும் நிஶ்சயம் ஸித்திக்கா தாகையினால். ப்ரமாணம் என்று ஒப்புக்கொண்ட போதிலும் அதின் அர்த்தத்தில் ஸந்தேஹம் இருக்கிறது என்னில், அப்படியாகில் விஶதமாக ப்ரவசனம்

ஶ்ரவணமநநப்ரவீணேப்ய ஆசார்யேப்யோ ந்யாயபூர்வகம் த்விஸ்த்ரிஶ்ஶதஶோ வா ஶ்ரோதவ்யம் । ந சாந்த: ஶ்ரவணஸமய ஏவ ஸந்திஹாநேந பவதா பஶ்சாதநவரதத்யாநேநாபி ஜ்ஞாதும் ஶக்யம் । மநநவதாஹார்யஸந்தேஹநிராகரணாய பஶ்சாத்தநம் ஜ்ஞாநமிதி சேந்ந, மநநேநைவ ஸம்பாவிதநிஷ்கம்பத்வேந ஜ்ஞாநாந்தரஸ்யாவகாஶாபாவாத் । அந்யதாऽதிப்ரஸங்காத் । அஸ்து தர்ஹி பாரோக்ஷ்யாபாரோக்ஷ்யலக்ஷணம் வைஷம்யமிதி சேத், விஷயாதிரேகாபாவேநைவ ப்ராகுக்தேந ததுபபத்தே:,

---

செய்ய ஸாமர்த்தியமுடைய ஆசார்யர்களிடமிருந்து யுக்திகளுடன் இரண்டு மூன்று அல்லது நூறுதடவையாவது கேட்கத்தக்கது. கேட்கும் பொழுதே ஸந்தேஹப் பட்டுக் கொண்டிருக்கிற உன்னால் பிறகு இடைவிடாமல் த்யானம் செய்து கொண்டிருந்தபோதிலும் நிஸ்சயமாய் அறிய முடியாது. மனனத்தைப் போலவே ஆரோபிக்கப்பட்ட ஸந்தேஹங்களை நிராகரிப்பதற்காக (அதாவது ஸந்தேஹம் இல்லாமல் இருக்கும்பொழுதே இப்படி ஒருவனுக்கு ஸந்தேஹம் உண்டானால் அதற்கு எவ்விதம் ஸமாதானம் சொல்லலாம் என்று யுக்திகளைப் பராமர்சித்து அந்த ஸந்தேஹத்தைப் போக்கடிப்பதற்காக) பிறகு உண்டாகிற ஜ்ஞானம் உபயோகப் படுகிறது என்பதும் உசிதமல்ல, மனனத்தினாலேயே எல்லாவித ஸந்தேஹங்களும் தீர்ந்து சலிக்காத ஜ்ஞானம் ஸம்பவிக்கக் கூடியதாயிருப்பதினாலே மறுபடியும் வேறொன்றிற்கு அவ்விடத்தில் இடமில்லையாகையினால். அப்படிக்கில்லாவிடில் அதிப்ரஸங்கம் என்கிற தோஷம் * வருமாதலால். அப்படியாகில் அப்ரத்யக்ஷமாயிருக்கை ப்ரத்யக்ஷமாயிருக்கையாகிற வ்யத்யாஸம் இந்த இரண்டு ஜ்ஞானங்களுக்கும் உண்டு என்னில், விஷயத்தில் அதிகமாயிருக்கை இல்லையென்று முன்பு சொன்ன

---

* மனனத்தினால் போக்கடிக்கப்படாத ஸந்தேஹத்தைப்போக்கடிக்கப்பதற்குப் பிற்பாடு உண்டாகிய ஜ்ஞானம் அதினாலும் போக்கடிக்கப்படாத ஸந்தேஹத்தைப் போக்கடிப்பதற்கு பிறகு ஒரு ஜ்ஞானம் என்றும் முடிவில்லாமல் சொல்லவேண்டிவரும் என்றபடி.

𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑌪𑌿 𑌬𑌾𑌧𑌕𑌤𑍍𑌵𑌮𑌬𑌾𑌧𑌕𑌤𑍍𑌵𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍇𑌣𑌾𑌪𑌿 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌜𑌨𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨𑌾𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌸𑍍𑌯𑌾𑌬𑌾𑌧𑌸𑍍𑌯𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌣𑌾𑌪𑌿 𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌨𑌾 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌬𑌾𑌧𑌾𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 । 𑌉𑌤𑍍𑌪𑌨𑍍𑌨𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍇𑌵 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇, 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍀 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌭𑌵𑌤𑌿 । 𑌤𑌦𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍌 𑌤𑍁 𑌬𑌾𑌧𑌕𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑍍𑌯𑍇𑌵, 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌕𑍍𑌯𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑌿 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌵𑌷𑍍𑌟𑌮𑍍𑌭𑌾𑌦𑌿𑌨𑌾 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌤𑍍 । 𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌨𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌮𑌿𑌤𑌿 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌮𑍍 । 𑌉𑌪𑌰𑍍𑌯𑍇𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌃 ।

தினாலே அந்த ஜ்ஞானங்களுக்கு வ்யத்யாஸம் ஸித்திக்காதாகையினு லும், அப்படி வ்யத்யாஸம் ஏற்பட்ட போதிலும் அவித்யையைப் போக்கடிப்பதற்கும், போக்கடிக்காமல் இருப்பதற்கும் (ப்ரத்யக்ஷம் அப்ரத்யக்ஷம் என்கிற) இந்த வ்யத்யாஸம் ப்ரயோஜனமற்ற தாகையினாலும். எப்படி என்னில்:— ப்ரத்யக்ஷமாகிய தேஹமே ஆத்மா என்கிற ப்ரமம் முதலியவைகளால் அப்ரத்யக்ஷமாகிற ஶாஸ்திரம் தடுக்கப்படுகிறதென்று ஒருவரும் ஒப்புக்கொள்ளாமையினால். உண்டாகிய ப்ரமமோ அநித்ய மாகையினால் தானே நசித்து விடுகிறது. மேற்குறித்த ப்ரமத்தின் துடர்ச்சி இல்லாமல் போவதோவெனில் காரணம் துடர்ந்து வாராமையினால் உண்டாகிறது. காரணம் துடர்ந்து வருமேயானால் அந்த ப்ரமத்தை மறுக்கிற ஜ்ஞானம் ப்ரத்யக்ஷமாக இருந்த போதிலும் ப்ரமம் துடர்ந்து வருகிறது. சந்திரன் ஒன்று என்று ப்ரத்யக்ஷத்தினால் அறியப்பட்டிருந்தபோதிலும் விரலால் கண்ணை ஒருவிதமாகப் பிடித்துக்கொள்ளுவதினால் இரண்டாகத் தெரிவதாகிய ப்ரமம் துடர்ந்து வருகிறதே, அதைப் போல். வாக்யத்தினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானம் ப்ரத்யக்ஷம் என்பது எல்லா உலகங்களுக்கும் விருத்தமானது. இதை மேலே விஸ்தாரமாக நிரூபிக்கப்போகிறோம். *

* 7-ம் வாதம்.

𑌤𑌦𑍇𑌤𑌦𑌖𑌿𑌲𑌂 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌿𑌤𑌂 𑌭𑌾𑌷𑍍𑌯𑍇 '𑌨𑌤𑌾𑌵𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌜𑍍𑌞𑌾𑌨𑌂' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍇𑌣 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀 𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁
𑌶𑍍𑌰𑍀𑌶𑌤𑌦𑍂𑌷𑌣𑍍𑌯𑌾𑌂

॥ 𑌅𑌵𑌿𑌧𑍇𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌾𑌦𑌭𑌙𑍍𑌗𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

இவை யெல்லாம் ஸ்ரீபாஷ்யத்தில் 'வாக்யார்த்த ஜ்ஞானம் மாத்திரம் மோக்ஷோபாயமாக விதிக்கப்படவில்லை' என்றாரம்பித்து விஸ்தாரமாக மற்றொரு விதமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்

பகவத் விஷயம் பண்டித பூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்ய ஸ்வாமியின்

ஸ்ரீசததூஷணீ தமிழ் மொழிபெயர்ப்பில்

அவிதேயஜ்ஞானவாத பங்கம் என்னும்

நான்காவது வாதம் முற்றிற்று.

பிழைத் திருத்தம்.

மூன்றுவது வாதத்தில் 48 ம் பக்கத்தில், தமிழ் 8-வது வரியில் 'கண்டங்கத்திரிப்பூ' என்பதற்குப் பதிலாக 'நீர்முள்ளிப்பூ' என்று திருத்திக்கொள்ளவும்.

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: ||

|| பாதிதாநுவ்ருத்திபங்கவாத: பஞ்சம: ||

நாநுவர்த்ததே ஸம்ஸாரோ யத்ப்ரஸாதைகபாதித: |
ப்ரஸீதது ஸ மே தேவ: ப்ரணமாஞ்ஜலிகிங்கர: ||

[பூர்வபக்ஷஸங்க்ரஹ:]

யதுக்தம் — தத்வமஸ்யாதிவாக்யோத்தத்வஜ்ஞாநே ஜாதேऽபி ப்ரஹ்மவிதாம் பாதிதாநுவ்ருத்த்யா பேதவ்ருத்தி

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேசிகாய நம: ||

பாதிதானுவ்ருத்திபங்க வாதம் என்னும் ஐந்தாவது வாதம்.

எந்தப் பகவானுடைய அனுக்ரஹத்தினால் நிவ்ருத்தி செய்யப்பட்ட ஸம்ஸாரம் பிறகு பின் தொடராதோ அப்படிப்பட்டவனும் முதலில் செய்கிற அஞ்சலிக்கு வசப்பட்டவனும் இருக்கிற அந்தப் பகவான் எனக்கு அனுக்ரஹத்தைச் செய்யவேண்டும்.

[பூர்வபக்ஷ ஸங்க்ரஹம்.]

ரூபமானது என்கிற ப்ரதிஜ்ஞையிலேயே ப்ரத்யக்ஷமா யறியக் கூடிய வஸ்துவைப் பற்றியதாகையினுல் ஸுகம் முதலியவைகளின் ஜ்ஞானத்தைப்போல என்று காரணத்தையும் த்ருஷ்டாந்தத்தையும் மாற்றி ப்ரயோகித்துக் கொள்ளுக. 'அந்த ப்ரும்மம் நீயாகிருய்' என்றிவை முதலிய வாக்யம் தன்னுல் சொல்லப்படுகிற அர்த்தத்தைப் பற்றிய ப்ரத்யக்ஷத்தை உண்டாக்குகிறது, ஸ்வயம் ப்ரகாசமான அர்த்தத்தைப் பற்றி உபதேசிக்கிறதாக இருக்கிறபடியினுல். தானுகவே ப்ரத்யக்ஷமாகத் தெரியக்கூடிய வஸ்துவைப் பற்றிய தாகையினுல் என்ருகவுமாம். 'ஜ்ஞானம் ஸ்வயம் ப்ரகாசமானது', 'நீ பத்தாவது ஆகிருய்' என்றிவை முதலிய வாக்யங்களினுல் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்தைப்போல ப்ரத்யக்ஷமாயிருக்கும் தன்மை 'அந்த ப்ரும்மம் நீயாகிருய்' என்பது முதலிய வாக்யங்களினுல் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்தில் இருக்கிறது, ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானங்களில் இருக்கிற அபாவத்திற்கு ப்ரதியோகியல்லாமையினுல் (அதாவது ப்ரத்யக்ஷ ஜ்ஞானங்களில் இதன் இல்லாமை இல்லையாகையினுல்). எதைப்போல வென்னில்:—ஜ்ஞானமா யிருக்கும் தன்மையைப் போல. இவ்விடத்தில் அப்ரத்யக்ஷமா யிருக்கும் தன்மை 'அந்த ப்ரும்மம் நீயாகிருய்' முதலிய வாக்யங்களினுல் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்தில் இருக்கிறது. அப்ரத்யக்ஷமான ஜ்ஞானங்களில் இருக்கிற அபாவத்திற்கு ப்ரதியோகி யல்லாமையால் (அதாவது ப்ரத்யக்ஷமல்லாத ஜ்ஞானங்களில் இந்தத் தன்மை

𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌾 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌦𑍍𑌧𑌚𑍇𑌤𑌸𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇 𑌅𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌨𑌕𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 । 𑌪𑍂𑌰𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌤𑌯𑌾 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚 । 𑌨 𑌚 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂, 𑌅𑌗𑍍𑌨𑌿𑌹𑍋𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌨𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌷𑍍𑌵𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌯𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑌕𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌾𑌯𑌾 𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑌤𑍇𑌤𑌿,

இல்லாமல் இருப்பதில்லை ஆகையால் என்றபடி). ஜ்ஞானமாயிருக்கும் தன்மையைப் போல என்று * ஸத்ப்ரதிபக்ஷம் என்கிற தோஷத்தை உடைய ஹேதுவாகுமே என்பதும் உசிதமல்ல. ஏனெனில் அப்படி ஸாதிக்கும் பொழுது ஸித்தஸாதனம் † என்னும் தோஷம் வருகிறபடியினால். (எப்படி என்னில்:—) அதே வாக்யங்கள் அஸம்பாவனை விபரீத ஸம்பாவனை இவைகளால் தடுக்கப்பட்ட மனதை உடைய புருஷனிடத்தில் அப்ரத்யக்ஷமான ஜ்ஞானத்தை உண்டாக்குகின்றன என்பது ஒப்புக்கொள்ளப்பட் டிருக்கிறதல்லவா. மேலும் முன்பு உதாஹரிக்கப்பட்ட ஶ்ருதிவாக்யங்களுக்கு விருத்தமாயிருப்பதினால் பாதம் ‡ என்கிற தோஷம் உண்டாகிறதாகையினால். அக்னிஹோத்ரம் முதலியவைகளைச் சொல்லுகிற வாக்யங்களினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானங்களிலும் இப்படி ஸத்ப்ரதிபக்ஷ அனுமானம் ப்ரயோகிக்க முடியும். அதாவது அவைகளால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானமும் ப்ரத்யக்ஷம்

---

* ஒரு காரணத்தைக் கொண்டு ஒரு ஸாத்யத்தை அனுமானம் செய்யும்பொழுது அதற்கு விரோதமான ஹேதுவைக்கொண்டு அதே இடத்தில் ஸாத்யம் இல்லை என்று ஸாதிக்கும்படி நேரிட்டால் அந்த ஹேதுவுக்கு ஸத்ப்ரதிபக்ஷம் என்கிற தோஷம் வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது என்றபடி.

† ஒரு வஸ்துவை அனுமானம் செய்யும்பொழுது ஸாதிக்கப்படுகிற வஸ்து முன்னமேயே அங்கிருப்பதாக ஏற்பட்டால் ஸித்தி என்கிற தோஷம் வருகிறது. அந்த அனுமானத்திற்கு ஸித்தஸாதனம் என்கிற தோஷம் வருகிறது என்றபடி.

‡ எந்த வஸ்து ஸாதிக்கப்படுகிறதோ அதே வஸ்து அந்த இடத்தில் இல்லை என்று வேறு ப்ரமாணங்களினால் ஏற்பட்டுவிட்டால்

𑌤𑌦𑍍𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌬𑌾𑌧𑌕𑌵𑌿𑌰𑌹𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌃 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌨𑌾𑌪𑍍𑌯𑌨𑍁𑌷𑍍𑌠𑌾𑌨𑌸𑍍𑌯, 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌦𑌪𑌿 𑌤𑌦𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌨𑌾𑌪𑌿 𑌫𑌲𑌸𑍍𑌯 । 𑌤𑌤 𑌏𑌵 𑌤𑌤𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 । 𑌨𑌾𑌪𑌿 𑌚 𑌫𑌲𑌕𑌾𑌮𑌨𑌾𑌯𑌾𑌃, 𑌫𑌲𑌸𑌮𑍍𑌬𑌨𑍍𑌧𑌨𑌿𑌶𑍍𑌚𑌯𑌾𑌦𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯𑌾 𑌉𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌅𑌤 𑌏𑌵 𑌪𑍁𑌰𑍁𑌷𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌪𑌿 𑌸𑌙𑍍𑌗𑌚𑍍𑌛𑌤𑍇, 𑌇𑌹 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌾𑌗𑍁𑌕𑍍𑌤𑌾𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌵𑌿𑌪𑌕𑍍𑌷𑌬𑌾𑌧𑌿𑌕𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌅𑌤𑍋 𑌨𑌾𑌭𑌾𑌸𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑍇𑌤𑌿 । 𑌏𑌵𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑍇𑌷𑍍𑌵𑌾𑌭𑌾𑌸𑌤𑍁

அதற்கு எதிர் நடையான அப்ரத்யக்ஷம் என்கிற இரண்டு வித மான அனுமானமும் ப்ரயோகிக்க முடியும், ஆதலால் தோஷம் இருவருக்கும் துல்யம் என்று சொல்லுவது உசிதமல்ல, அந்த ஜ்ஞானங்களைப்பற்றிய அனுமானங்களில் விரோதியான அனுமா னம் பலமுள்ளதாகி அந்த வாக்யங்களால் உண்டாக்கப் படுகிற ஜ்ஞானம் அப்ரத்யக்ஷமென்று முடிந்துவிட்டால் ஒருவிதப் பாதக மும் இல்லையாதலால். அவ்விடத்தில் அந்த வாக்யங்கள் ப்ரமாணங்கள் அல்லாமற் போகவேண்டி வரும் என்று சொல்லமுடியாது, ப்ரத்யக்ஷ மல்லாத அனுமானுதிகளுக்கு ப்ராமாண்யம் இருப்பதைப் போல இதற்கும் ப்ரமாணமாயிருக்கும் தன்மை உசிதமாகும். அனுஷ்டா னத்திற்கும் ஒருவித விரோதமில்லை. அப்ரத்யக்ஷமாகிய நிஶ்சய ஜ்ஞானத்தினுல் அனுஷ்டானம் உண்டாகலாமாகையினுலும், பலத்திற் கும் விரோதமில்லை. அப்படி அனுஷ்டிப்பதினுலேயே பலம் ஸித்தித்து விடுமாதலால். அந்தப் பலத்தில் ஆசை உண்டாவது பொருந்தாது என்பதும் உசிதமல்ல, இந்தக் கார்யத்தினுல் இந்தப் பலம் உண்டா கும் என்கிற நிஶ்சயத்தினுல் ஆசை முதலானது உண்டாகலாமாகை யினுல் அப்படிப்பட்ட ஆசையினுலேயே புருஷனுக்கு ப்ரவ்ருத்தி முதலியது உண்டாகிறது. இவ்விடத்திலோவெனில் முன்பு சொல் லப்பட்ட ப்ரயோஜனம் கிடைக்காமை விரோதமான அனுமானத்தின் படி முடிவு பெறுகிற விஷயத்தில் தடங்கலாக இருக்கிறது. ஆகை

பாதம் என்கிற தோஷம் வருகிறது என்றபடி. இத்தையே காலாத்ய யாபதேசம் என்றும் சொல்லுவதுண்டு.

த்ருதோஷாபாஸோ த்ரஷ்டவ்ய: | அதோ விபக்ஷ பாதக தர்கஸ்ய ப்ரதிபந்திரூபஸ்வவ்யாகாதஸ்ய உத்தாரே ச மஹா வித்யாஜாதயஶ்ச யதாவஸரம் ப்ரயோக்தவ்யா: | ஸ்வபர பக்ஷஸாதாரண்யம் ஹி மஹாவித்யாநாம் ஸ்வபாவ: | தத்ராநுகூலதர்கஸாஹித்யாஸாஹித்யாப்யாம் ஏகத்ரார்த ஸித்திரிதரத்ராஸித்திரிதி நிர்ணய: |

நநு தர்கபராஹதா ஏதே ஹேதவ:, ஶப்தஸ்ய ப்ரத்யக்ஷாங்கத்வப்ரஸங்காதிதி சேத், ந, அப்ரஸங்காத் | யோகிமநஸோ பாஹ்யவிஷயப்ரத்யக்ஷஜ்ஞாநஜநகத்வ

யினால் ஆக்ஷேபம் இருவருக்கும் துல்யமென்பது உசிதமல்ல, இப்படியே இதற்குமுன் செய்த அனுமான ப்ரயோகங்களிலும் துல்யமான தோஷங்கள் வந்தால் அவற்றைப் பரிஹரிக்கும் ப்ரகாரங்கள் கண்டு கொள்ளத் தக்கது. ஆதலால் எதிர்நடையான பக்ஷத்தில் விரோதங்கள் ஏற்படுகிறது என்பதே வ்யாப்தியின் முக்யமான தாத்பர்யமாகையினால் கீழ்ச்சொல்லிய அர்த்தத்தில் மஹாவித்யை * ஜாதிகள் இவைகளும் ஶக்திக்குத் தக்கபடி ப்ரயோகித்துக் கொள்ளத்தக்கது. தன்னுடைய பக்ஷம் எதிரிகளின் பக்ஷம் இவைகளுக்குப் பொதுவாய் இருக்கையன்றோ மஹா வித்யையின் ஸ்வபாவம். அவ்விடத்தில் அனுகூல தர்க்கம் இருந்ததேயானால் அந்தப் பக்ஷத்தின் அர்த்தம் ஸித்தித்துவிடுகிறது. அனுகூல தர்க்கம் இல்லாமையினால் மற்றொரு பக்ஷத்தின் அர்த்தம் ஸித்திக்கவில்லை என்றல்லவோ நிஶ்சயம் செய்யப்பட்டிருக்கிறது.

கீழ்க்கூறிய காரணங்கள் யுக்திகளினால் தடுக்கப்படுகின்றன. எப்படி என்னில்:-ஶப்தம் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமாயிற்றேயானால் அந்த ஶப்தத்தையும் ப்ரத்யக்ஷத்திற்குள் சேர்த்துவிடலாமே என்பதுதான் என்னில், இது உசிதமல்ல, இப்படிக் கேட்பது

---

* மஹாவித்யை என்பது ஒருவகைப்பட்ட அனுமானம். தன் பக்ஷத்திலேயே நேரக் கூடிய ஶங்கைகளைச் செய்தல் ஜாதி எனப்படுகிறது.

ऽपि बाह्यप्रत्यक्षबहिर्भाववदुपपत्तेः। अपि चक्षुरादिपञ्चकान्यतमत्वं, योगिमनोऽन्यत्वे सति बाह्यविषयापरोक्षप्रमितिकारणत्वं वा बाह्यप्रत्यक्षान्तर्भावे प्रयोजकमिष्यते। इहापि तर्हि स्वतोऽपरोक्षार्थब्रह्मात्मविषयशब्दान्यत्वे सति अपरोक्षप्रमितिकारणत्वं प्रत्यक्षान्तर्भावप्रयोजकमिति समसमाधिः। किञ्च प्रत्यक्षान्तर्भाव इति इन्द्रियान्तर्भावो वा साक्षात्कारजनकवाक्यान्तर्भावो वा विवक्षितः स्यात्। पूर्वत्र तु मनसोऽपि बाह्यान्तर्भाव इति पूर्वग्रन्थविरोधादशक्यः। उत्तरत्र त्विष्ट-

---

உசிதமல்லாமையினுல். யோகிகளின் மனது வெளியில் இருக்கும் வஸ்துக்களைப்பற்றிய ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டு பண்ணபோதிலும் அதைப் பாஹ்ய ப்ரத்யக்ஷத்தில் (அதாவது வெளியில் இருக்கும் ப்ரத்யக்ஷ ப்ரமாணங்கள் என்னப்படுகிற கண் முதலியவைகளில்) உள்ளடக்காமல் தனித்து எண்ணியிருப்பதைப் போல இவ்விடத்திலும் எண்ணி இருக்கலாம். மேலும் கண் முதலிய ஐந்து விதங்களான வெளி இந்திரியங்களுக்குள் ஒன்ருயிருக்கையா, அல்லது யோகிகளுடைய மனதைக் காட்டிலும் வேருக இருந்து வெளியில் இருக்கும் ஶப்தம் முதலிய விஷயங்களைப் பற்றிய ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமாயிருக்கும் தன்மையா, இங்கு வெளியிலிருக்கும் ப்ரத்யக்ஷங்கள் என்று சொல்லப்படுகிற இந்திரியங்களுக்குள் உள்ளடங்கியது என்பதற்குக் காரணமாக ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படியாகில் இவ்விடத்திலும் ஸ்வயம் ப்ரகாசமான அர்த்தங்களாகிய ப்ரும்மம், ஜீவாத்மா, இவைகளைப்பற்றிச் சொல்லுகிற ஶப்தங்களைக் காட்டிலும் வேருயிருந்தும் ப்ரத்யக்ஷமான ஜ்ஞானத்திற்குக் காரணமாயிருக்கும் தன்மை ப்ரத்யக்ஷத்திற்குள்ளடங்கி இருப்பது என்பதற்குக் காரணம் என்கிற ஸமாதானமும் துல்யம். மேலும் ப்ரத்யக்ஷத்திற்குள் அடங்கியது என்பதினுல் இந்திரியங்களில் சேர்ந்தது என்பது சொல்லப்படுகிறதா? ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்குகிற வாக்யங்களில் சேர்ந்தது என்பது சொல்லப்

ப்ரஸக்தா, அநேகாகாரஸ்ய ஹி ஜே ஸத்யவாந்தரபேதா
ஶ்ரூயமாணாவிரோதாத்| ததைவ து கதமிதி சேத், ந,
‘தஶமஸ்த்வமஸி’ இத்யாதௌ தஜ்ஜநநஸ்ய ஸ்தாபிதத்வாத்|
வாக்யஸ்யைவாபரோக்ஷதீஜநகத்வே மநநநிதித்யா
ஸநவிதிவையர்த்யம், ஶ்ருதவேதாந்தாநாம் ஸம்ஸா
ராநுவ்ருத்திதர்ஶநவிரோதஶ்சேதி சேத், ந, ப்ராகுக்த
ப்ரதிபந்தநிரஸநத்வாரேண தயோ: ஶ்ரவணம் ப்ரதி
ஃபலோபதாயகாங்கதயா விதாநோபபத்தே:, ஸம்ஸாரி
த்வாநுவ்ருத்த்யாதேஶ்ச ப்ரதிபந்தகவத்புருஷவிஷயத்வாத்|

படுகிறதா? முதல் பக்ஷத்தில் மனதிற்கும் வெளி இந்திரியங்களுக்குள் அடங்கி இருக்கும் தன்மை இல்லையாதலால் உங்களுடைய ஜ்ஞானத்திற்கே விருத்தமாயிருக்கிறது. இரண்டாவது பக்ஷத்தில் அந்தக் கேள்வி எங்களுக்கு இஷ்டமேயாகும். ஒரே வகுப்பைச் சேர்ந்தது என்பது ஏற்பட்டால் உள் பிரிவான பேதங்கள் ஒப்புக்கொள்ளலாம். அதுவே எப்படி ஏற்பட்டதென்னில், இது உசிதமல்ல, ‘நீ பத்தாவதாகிறாய்’ என்றிவை முதலிய வாக்யங்களில் அந்த வாக்யம் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்குகிறது என்பது முன்னமேயே ஸ்தாபிக்கப்பட்டிருப்பதினால். வாக்யத்திற்கே ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்கும் தன்மை இருந்ததேயானால் மனனம் நிதித்யாஸனம் முதலியவைகளை விதித்திருப்பது ப்ரயோஜனமற்றதாகுமே? மேலும் உபநிஷத்தை ஶ்ரவணம்பண்ணினவர்களுக்கு ஸம்ஸாரம் அனுவர்த்தித்திருப்பதைக் கண்டிருப்பதினால் அதற்கு விரோதம் வருகிறதே? என்னில், இது உசிதமல்ல, முன்னே நிரூபிக்கப்பட்ட தடைகளை நிவ்ருத்தி செய்து அதன் வழியாக அந்த மனன நிதித்யாஸனங்கள் ஶ்ரவணத்தைக் குறித்துப் பலத்தை உண்டாக்குவதாகிய கார்யத்திற்கு ஒத்தாசைக் காரணங்களாக விதிக்கப்படுகின்றன என்பது உசிதமாகுமாதலாலும், ஸம்ஸாரியாக இருக்கை அனுவர்த்தித்திருப்பதாகக் காணப்படுகிறதே அதுவும் தடங்கலான அவித்யையை உடைய * புருஷனைப் பற்றியதாகையினாலும். ஆதலால் ‘அந்த

---

* தடங்கல்கள் இருக்கிற புருஷர்களுக்கு ஶ்ரவணம் உண்டான போதிலும் தடங்கல் நிவ்ருத்தித்த பிறகு உண்டாகக்கூடிய ஸாக்ஷாத்

அதோ பாதகாபாவேந ஸாநுக்ராஹகஶ்ருத்யாதிஸித்தம் தத்த்வமஸ்யாதிவாக்யஸ்ய ஸாக்ஷாத்காரஜநகத்வமிதி |

[ஸித்தாந்தாரம்ப:]

அத்ர ப்ரூம: — யத்தாவத் கேஷாஞ்சித் வாக்யாநாம் ப்ரத்யக்ஷதீஹேதுத்வம் ப்ரஸ்ருதமிதி, தந்நரவிஷாணாங்குரவ்யவஸாயநே கரவிஷாணாங்குரநிதர்ஶநமிதி மந்யாமஹே | ததா ஹி 'ஸம்வித் ஸ்வப்ரகாஶா' இத்யத்ர தாவச் ஸாமாந்யத: ஸ்வபரஸாதாரணத்ரைகாலிகஸர்வஸம்வித்ஸ்வப்ரகாஶத்வம் வாக்யார்த:, ததைதத்வாக்யோக்தி தஜ்ஜந்யா ஸம்விதேகா ததாநீம் ஸ்வப்ரகாஶா | தத்ர

ப்ருஹ்மம் நீயாகிறாய்' என்றிவை முதலிய வாக்யங்கள் ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானத்தை உண்டாக்குகின்றன என்பது ஒருவித விரோதமும் இல்லாமல் ஒத்தாசையான ப்ரமாணங்களோடு சேர்ந்த ஶ்ருதி முதலியவைகளில் ஸித்தமாயிருக்கிறது, என்று சொல்லுகிறார்களே.

[ஸித்தாந்தாரம்பம்.]

இதற்குப்பதில் சொல்லுகிறோம். சில வாக்யங்களுக்கு ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானத்திற்குக் காரணமா யிருக்கும் தன்மை உண்டென்று முதலில் சொல்லப்பட்டதே, அது மனிதர்களுக்குக் கொம்பு முளைக்கிறதென்று ஸாதிப்பதற்காகக் கழுதைக்குக் கொம்பு முளைத்திருப்பதை உதாஹரணமாகக் காட்டுவதைப்போ லிருக்கிறது என்று எண்ணுகிறோம். எப்படி என்னில்:—ஜ்ஞானம் ஸ்வயம்ப்ரகாசமென்று சொல்லு மிடத்தில் பொதுவாகத்தன்னிடத்திலும் பிறரிடத்திலும் இருக்கிறதாயும், இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்கிற மூன்று காலங்களிலும் உண்டாகிறதாயு மிருக்கிற எல்லா ஜ்ஞானங்களும் ஸ்வயம் ப்ரகாசம் என்பது அந்த வாக்யத்திற்கு அர்த்தமாகில் அப்பொழுது இந்த வாக்யத்தினால் உண்டாகிற ஜ்ஞானம் ஒன்றே அப்பொழுது ஸ்வயம் ப்ரகாசமாகும். அதில் எல்லா ஜ்ஞா

காரம் உண்டாகாமையினால் ஸம்ஸாரம் அனுவர்த்தித்திருக்கிறது என்றபடி.

𑌨 𑌸𑍍𑌵𑌯𑌂𑌸𑌂𑌵𑌿𑌦𑌾𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌕𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌽𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌂, 𑌯𑌥𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯 𑌤𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌹𑍇𑌤𑍁𑌤𑌾 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨 𑌚 𑌸𑍍𑌵𑌯𑌂𑌸𑌂𑌵𑌿𑌦𑍈𑌕𑍍𑌯𑌂, 𑌤𑌸𑍍𑌯 𑌦𑍂𑌷𑌯𑌿𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑍈𑌕𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑌦𑍁𑌪𑌹𑌿𑌤𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌭𑌾𑌗𑌸𑍍𑌯 𑌦𑍁𑌰𑍍𑌵𑌚𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌨𑍍𑌯𑌸𑌂𑌵𑌿𑌤𑍍𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇 𑌤𑌦𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌮𑍇𑌵 𑌕𑌾𑌰𑌣𑌂, 𑌵𑌿𑌷𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌂𑌶𑌕𑌾𑌰𑌣𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑍇𑌣 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌂𑌶𑍇 𑌕𑌾𑌰𑌣𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑍁𑌪𑌲𑌮𑍍𑌭𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌧𑍀𑌜𑌨𑌕𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌤𑍍𑌤𑌜𑍍𑌜𑌨𑍍𑌯𑌧𑌿𑌯𑌾𑌮𑌪𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌂𑌶𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌸𑌤𑍍𑌯𑌂, 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿, 𑌸𑌂

னங்களும் ஸ்வயம் ப்ரகாசம் என்பது ப்ரத்யக்ஷமாயறியப் படுகிற தில்லை. அப்படி இருந்தாலல்லவோ இந்த வாக்யத்திற்கு ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமா யிருக்கும் தன்மை ஸம்பவிக்கும். எல்லா ஜ்ஞானங்களும் ஒன்று என்பதும் உசிதமல்ல, அது மேலே தூஷிக்கப்படப் போகிறபடியினால். அப்படி அவைகள் ஒன்றாயிருந்த போதிலும் அந்தந்த விஷயங்களோடு சேர்ந்திருக்கிற ஆகாரத்தினாலே ப்ரத்யக்ஷம் அப்ரத்யக்ஷம் என்கிற பிரிவு அபலபிக்க முடியாதானபடியினால். வாக்யத்தினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்தின் ஸ்வரூபம் ப்ரத்யக்ஷமாக அறியப்படுவதில் அந்த வாக்யமே காரணம், விஷயத்தை ப்ரகாசம் செய்வதாகிய பாகத்தைவிட ஸ்வயம் ப்ரகாசம் என்று தெரிவிக்க வேண்டிய விஷயத்தில் மற்றொரு காரணம் கண்டறியப் படாமையினால் என்னில், அப்பொழுது அனுமானம் முதலியவைகளுக்கும் மற்ற வாக்யங்களுக்கும் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமா யிருக்கும் தன்மை ஸித்தித்து விடுகிறது. அந்தந்த அனுமானம், வாக்யம் முதலியவைகளினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானங்களைப் பற்றி ஸ்வயம் ப்ரகாசம் என்றறிய வேண்டிய விஷயத்திலும் அந்த அனுமானம் முதலியவைகளே காரணமாகக் கூடுமாதலால் என்னில், உண்மையே, அப்படி இருந்தபோதிலும் ஜ்ஞானம் ஸ்வயம் ப்ரகாசம் என்றிவை முதலிய வாக்யங்களில் விஷ

விஷ ஸ்வப்ரகாஶத்வாதிவாக்யேஷு விஷயப்ரகாஶாம்ஶ: ஸ்வப்ரகாஶாம்ஶஶ்சைக ஏவேதி விஶேஷ இதி சேந, ஸாமாந்யவிஶேஷவிஷயதயா தத்பேதஸ்ய தர்ஶிதத்வாத்। ஏவம் தஶமஸ்த்வமஸீத்யாதாவபி யதி தஶமத்வம் ஸ்வாத்மந: ப்ரதி ஏவேதம் வாக்யமுக்தம், ததா கடம் பஶ்யத: ஸ்வயம் கட இதிவத்ஸித்தாநுவாதபரமிதம் வாக்யம் ஸ்யாத்। ததா ச ப்ரத்யக்ஷாநுவாதித்வமாத்ரேண ப்ரத்யக்ஷதாப்ரம:, பரோக்ஷவிஷயப்ரயோக இவாபரோக்ஷவிஷயப்ரயோகேऽபி ஶப்தஸ்ய ஶக்தேஸ்தாவந்மாத்ரத்வாத்। யதா து ந விதிதஸ்வாத்மதஶமத்வம் ப்ரத்யுச்யதே, ததா து தஶமத்வாம்ஶே பரோக்ஷத்வம் ஸ்பஷ்டம், உத்தேஶ்யாம்ஶஸ்ய து

ஷயத்தை ப்ரகாசம் பண்ணுகிற பாகமும், ஸ்வயம் ப்ரகாசமாகத் தோன்றுகிற பாகமும் ஒன்றாயிருக்கிறது என்று விசேஷம் என்னில், அதுவும் உசிதமல்ல, விஷயத்தை ப்ரகாசம் செய்வது என்பது ஸாமான்யமான ஆகாரம், தன்னைத்தானே ப்ரகாசம் செய்து கொள்வது என்பது விசேஷ ஆகாரம் என்கிற வ்யத்யாஸம் இருக்கிறது என்பது அனேக இடங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இப்படியே ‘நீபத்தாவதாகிறாய்’ என்பது முதலிய வாக்யத்திலும் இது தன்னைப் பத்தாவதாகத் தெரிந்தவனைப்பற்றிச்சொல்லப்பட்டதாகில் அப்பொழுது குடத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவனைப் பற்றி இது குடம்என்று சொல்லுவதைப் போல ஏற்கனவே ஏற்பட்டிருப்பதை இந்த வாக்யம் அனுவாதம் செய்வதாக ஆகும், அப்படியாகில் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்ட விஷயத்தை அனுவாதம் செய்கிற மாத்திரத்தினால் ப்ரத்யக்ஷம் என்கிற ப்ரமம், அப்ரத்யக்ஷமான விஷயத்தில் ப்ரயோகிப்பதைப் போலவே ப்ரத்யக்ஷமான விஷயத்தைப் பற்றி ப்ரயோகம் செய்த போதிலும் சப்தங்களுக்கு சக்தி அவ்வளவு செய்யக்கூடும் தசையையுடையதாதலால். தான் பத்தாவது என்று அறியாதவனைப்பற்றி நீபத்தாவது என்கிற வாக்யம் சொல்லப் படுகிறதேயானால் பத்தாவது என்கிற பாகம் அப்ரத்யக்ஷம் தான், உத்தேச்யமான (அதாவது நீ என்கிற) பாகம் முன்னாலேயே ப்ரத்யக்ஷமாகப் பார்க்கப்பட்டிருப்பதினால் முழுமையும்

𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌦𑍃𑌷𑍍𑌟𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾𑌹𑍇𑌤𑍋𑌃, 𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌦𑌿𑌸𑌾𑌧𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌚 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑍇 𑌨𑍈𑌵 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾, '𑌅𑌯𑌂 𑌪𑌰𑍍𑌵𑌤𑍋 𑌵𑌹𑍍𑌨𑌿𑌮𑌾𑌨𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌨𑍁𑌮𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌗𑍌𑌰𑌵𑌾𑌦𑍇𑌰𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑌹𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚 । 𑌏𑌵𑌂 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑌿𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑍋𑌽𑌨𑍁𑌸𑌨𑍍𑌧𑍇𑌯𑌃 ॥

𑌯𑌤𑍍𑌤𑍁 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤 𑌇𑌤𑌿, 𑌤𑌦𑌸𑌤𑍍, 𑌆𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌦𑍇𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌐𑌕𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍍𑌯𑌕𑍍𑌤𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌵𑌿𑌷𑌯𑍈𑌕𑍍𑌯𑍇𑌽𑌪𑌿 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌯𑍋𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌷𑌯𑌸𑍍𑌯 𑌐𑌕𑍍𑌯𑍇𑌽𑌪𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑍇𑌣 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑌾𑌯𑌤𑌾𑌂, 𑌲𑌿𑌙𑍍𑌗𑌶𑌬𑍍𑌦𑌾𑌦𑌿𑌨𑌾 𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌥𑌾𑌽𑌨𑌿𑌶𑍍𑌚𑌿𑌤𑌿 𑌪𑌾𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌹𑍇𑌤𑌵 𑌇𑌵𑍈𑌵

ப்ரத்யக்ஷம் என்கிற ப்ரமம், ஜ்ஞானம் சீக்கிரம் உண்டாவதினுல் உண்டாகிறது. உத்தேஸ்யமான பாகம் ப்ரத்யக்ஷமாக இருப்பதினுலேயே முழுமையும் ப்ரத்யக்ஷம் என்பது பொருந்தாது. ஏனெனில் இந்த மலைநெருப்பை உடையது என்கிற அனுமானத்தில் உத்தேஸ்யமான இந்தமலை என்பது ப்ரத்யக்ஷமாக இருப்பதினுல் முழுமையும் ப்ரத்யக்ஷமாக வேண்டிவரும். இப்படியே குருத்வம் (பளுவாயிருக்கும் தன்மை) ஒரு இந்திரியங்களாலும் அறியப்படாதது என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதற்கு விரோதம் வரும். (ஏனெனில் குருத்வத்திற்கு ஆஸ்ரயமான வஸ்து ப்ரத்யக்ஷமாகையினுல்.) இப்படியே நீ க்ஷத்திரியனுகிருய் என்றிவை முதலிய வாக்யங்களிலும் விகல்பம் அனுஸந்திக்கத்தக்கது.

விஷயம் ப்ரத்யக்ஷமாக அறியப்படும்பொழுது அப்ரத்யக்ஷமான ப்ரகாசம் உண்டாவது விருத்தமாகும் என்று சொல்லப்பட்டதே, அதுவும் உசிதமல்ல, ப்ரத்யக்ஷமாயிருக்கை முதலியவைகள் ஜ்ஞானத்தில் இருக்கும் ஸ்வபாவமாயிருந்தால் விஷயம் ஒன்ருயிருந்த போதிலும் ஜ்ஞானங்களாகிய வ்யக்தியின் பேதத்தினுல் ப்ரத்யக்ஷமாயிருக்கை அப்ரத்யக்ஷமாயிருக்கை இவைகளுக்கு விரோதமில்லாமையினுல். விஷயங்களின் ஸ்வபாவமாயிருந்த போதிலும் இந்திரியத்தினுல் ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் உண்டா

𑌕𑍢𑌪𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑌵𑌤𑍁 𑌪𑍁𑌰𑍁𑌷𑍇𑌷𑍍𑌵𑌿𑌵 𑌕𑌰𑌣𑌭𑍇𑌦𑍇𑌨 𑌕𑌾𑌲𑌭𑍇𑌦𑍇𑌨 𑌚 𑌏𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾 । 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌵𑌾𑌸𑌨𑌾𑌭𑌿𑌭𑌵𑍇𑌽𑌪𑌿 𑌕𑌾𑌰𑌣𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑍋𑌦𑌯𑌸𑍍𑌯𑍋𑌪𑌪𑌾𑌦𑌨𑌾𑌤𑍍 । 𑌯𑌦𑌿 𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌷𑌯𑍇 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌦𑌾 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇𑌽𑌪𑌿 𑌰𑌜𑌤𑌾𑌵𑌭𑌾𑌸𑌸𑍍𑌯𑌾𑌵𑌿𑌰𑍋𑌧𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌕𑌿𑌂 𑌶𑍁𑌕𑍍𑌤𑍌 𑌚𑌕𑍍𑌷𑍁𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌰𑌾𑌨𑍍𑌵𑌯𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌨𑍁𑌵𑌿𑌧𑌾𑌯𑍀 𑌰𑌜𑌤𑌭𑍍𑌰𑌮𑌃 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌃, 𑌯𑍇𑌨𑍈𑌵𑌂 𑌬𑍍𑌰𑌵𑍀𑌷𑌿 । 𑌕𑌥𑌂 𑌵𑌾 𑌨 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌸𑌞𑍍𑌜𑌨𑍀𑌯𑌾 । 𑌤𑌦𑌾 𑌶𑍁

கட்டும். ஹேது ஶப்தம் முதலியவைகளினால் மற்றொரு விதமான ஜ்ஞானம் உண்டாகட்டும். ஆதலால் வெவ்வேறு புருஷர்களிடத்தில் போல ஒரு புருஷனிடத்திலும் இந்திரியங்களின் பேதத்தினாலும் காலங்களின் பேதத்தாலும் ஒரே வஸ்துவிற்கு ப்ரத்யக்ஷமாயிருக்கை அப்ரத்யக்ஷமாயிருக்கை முன்னமேயே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. (எப்படி என்னில்:—) விபரீதமான வாஸனை அதிகமாயிருந்த போதிலும் உபாயங்களின் ஶக்தியினால் தத்வ ஜ்ஞானம் உண்டாகலாம் என்று உபபாதித்திருப்பதினால். விஷயம் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்டிருக்கும் பொழுது அப்ரத்யக்ஷமான ப்ரகாசமும் உண்டாகுமேயானால் அப்பொழுது ஶுக்தி என்பது ப்ரகாசமாயிருந்தபோதிலும் வெள்ளி என்கிற ப்ரமத்திற்குத் தடங்கல் இல்லாமல் போகவேண்டி வருமே என்னில், முத்துச் சிப்பியில் கண்ணாகிய இந்திரியத்தினுடைய வ்யாபாரம் உண்டானால் (தான்) உண்டாக்க் கூடியதாயும், அதில்லாவிடில் (தானும்) இல்லாமல் போகவேண்டியதாயும் இருக்கிறவெள்ளி என்கிற ப்ரமம் அப்ரத்யக்ஷமா என்ன, * எதினால் இப்படிச் சொல்லுகிறாயோ. (அப்படி இருந்தாலல்லவோ இப்படிச் சொல்லலாம் என்றபடி) அப்படிக்கில்லாமல் ப்ரமம் உண்டாகட்டுமே என்று கேட்கிறோம். என்னில் அப்படியாகில் முத்துச்சிப்பியாயிருக்கும் தன்மை முதலிய விஶேஷங்களை அறிவது அதில் ப்ரமம் உண்டா

---

* ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்கும் பரோக்ஷ ஜ்ஞானத்திற்கும் விரோதம் உண்டென்று அதற்கு உதாஹரணமாக இதைக் காட்டியிருப்பது இந்த ஜ்ஞானம் பரோக்ஷமாயில்லாத பக்ஷத்தில் பொருந்தாது என்றபடி.

𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌿𑌶𑍇𑌷𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌯𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌤𑌯𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌯 𑌸𑌹𑌕𑌾𑌰𑌿𑌵𑌿𑌰𑌹𑍇𑌣 𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍀𑌵𑍈𑌕𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌵𑌾 𑌶𑍁𑌕𑍍𑌤𑍌 𑌰𑌜𑌤𑌭𑍍𑌰𑌮𑌾𑌨𑍁𑌦𑌯𑌃। 𑌇𑌹 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌵𑌿𑌧𑍁𑌰𑌾𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍀𑌸𑌮𑍍𑌭𑌵𑍇 𑌕𑌥𑌂 𑌤𑌦𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃? 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌾 𑌚 𑌤𑌤𑍍𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍀 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌾। 𑌸𑍍𑌵𑍀𑌕𑍍𑌰𑌿𑌯𑌤 𑌏𑌵 𑌭𑌵𑌤𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑌵𑌣𑌦𑌶𑌾𑌯𑌾𑌮𑍍। 𑌅𑌤 𑌏𑌵𑍈𑌵𑌂 𑌵𑌿𑌧𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑌵𑌕𑌾𑌶𑌤𑌾।

𑌕𑌿𑌂𑌚 𑌸𑍍𑌵𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌸𑌞𑍍𑌜𑌕𑌂 𑌪𑌰𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰𑌸𑌞𑍍𑌜𑌨𑍀𑌯𑌮𑌿𑌤𑌿 𑌤𑍁 𑌤𑌰𑍍𑌕𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾। 𑌉𑌕𑍍𑌤𑌂 𑌚 𑌶𑍍𑌰𑍀𑌪𑍁𑌣𑍍𑌡𑌰𑍀𑌕𑌾𑌕𑍍𑌷𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑍈𑌃- ‘𑌪𑍍𑌰𑌸𑌞𑍍𑌜𑌕𑌨𑍍𑌤𑍁 𑌸𑍍𑌵𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑌰𑌾𑌨𑌿𑌷𑍍𑌟𑌂 𑌪𑍍𑌰

வதற்கு விரோதியாதலாலாவது (தடை இல்லாமை காரணமென்று அங்கீகரிக்காத மதத்தில்) விஶேஷத்தை அறியாமையாகிற ஒத்தாசைக் காரணம் இல்லாமையினாலே ஸாமக்ரிகளின் குறைவினாலாவது முத்துச் சிப்பியில் வெள்ளி என்கிற ப்ரமம் உண்டாகிறதில்லை. இவ்விடத்திலோ ஒருவிதத் தடங்கல்களுமில்லாத அப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானத்தின் ஸாமக்ரீ ஏற்பட்டுவிட்டால் என் அப்படிப்பட்ட ஜ்ஞானம் உண்டாகாது? அப்படிப்பட்ட அந்த ஸாமக்ரீ முன்னமே நிரூபிக்கப்பட்டது. உன்னாலும் வேதாந்தத்தை ஶ்ரவணம் பண்ணும் தசையில் சில தடங்கல்களால் ஜ்ஞானம் உண்டாகவில்லை என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆகையால் இப்படிப்பட்ட ப்ரஸங்கம் அடியற்றது.

மேலும் தனக்கு இஷ்டமில்லாததைக் காரணமாகக் கொண்டு எதிரிக்கு * இஷ்டமில்லாததைக் கேட்க வேண்டியது என்பது தர்க்கத்தின் உண்மையைப் பற்றிய ஏற்பாடு. அப்படியே ஸ்ரீ புண்டரீகாக்ஷர் என்னும் ஆசார்யராலும் ‘ தனக்கு

---

* அதாவது இவ்விடத்தில் நெருப்பு இருக்கிறதென்று தான் சொன்னானேயாகில் அதற்கு எதிரி நெருப்பு இல்லை என்று எதிர்வாதம் செய்வான், அப்பொழுது தனக்கு இஷ்டமில்லாத நெருப்பில்லாமையைக் காரணமாக வைத்துக்கொண்டு எதிரிக்கிஷ்டமில்லாததான புகையில்லாமையைக் கேட்க வேண்டும். எப்படி எனில் இங்கு நெருப்பு இல்லாமல் போனால் புகையும் இல்லாமல் போகவேண்டி வரும் என்று.

ஸஜ்யதே | விபர்யயே பராநிஷ்டம் ஸ்வாநிஷ்டே பர்ய-
வஸ்யதி || ப்ரஸஞ்ஜகேந ஸ்வாநிஷ்டே ஸ்வாநிஷ்டே ப-
ர்யவஸ்யதி | ஸ்வாநிஷ்டஸ்ய க்வசித் வ்யாகாத: பரேஷ்ட-
ஸ்ய ப்ரஸஞ்ஜநே ||' இதி | உதயநஸ்ய து விபரீதம்,
ஸ்வத: ப்ரகாஶே ப்ரஹ்மணி ஶ்ரவணதஶாயாம் வாக்ய-
த: பரோக்ஷஜ்ஞாநஜநநஸ்ய ஹேத்வஸித்தத்வாத் | விஷயே

இஷ்டமில்லாதது ப்ரஸங்கம் செய்வதற்குக் காரணம். அத்தால் எதிரிக்கு அநிஷ்டமானது ப்ரஸங்கம் செய்யப்படுகிறது. அதற்கு விரோதமாக முடியும்பொழுது அயலானுடைய இஷ்டம் தன்னுடைய இஷ்டத்தில் முடிவு பெறுகிறது. தன்னுடைய இஷ்டம் ப்ரஸங்கம் செய்வதற்குக் காரணமாக இருந்ததேயானால் தனக்கு இஷ்டமில்லாத விஷயத்தில் முடிவு பெறுகிறது. அயலானுக்கு இஷ்டமான விஷயத்தையே ப்ரஸங்கம் செய்தால் தன் இஷ்டம் ஸித்திக்காமல் போய்விடும் †' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விடத்திலோவெனில் இவை இரண்டும் எதிர் நடையாக இருக்கிறது. (எப்படி என்னில்:—)ஸ்வயம் ப்ரகாசமாகிய ப்ரும்மத்தைப் பற்றியே ஶ்ரவணம் செய்யும் தசையில் வேதாந்த வாக்கியத்தினால் ப்ரத்யக்ஷமில்லாத ஜ்ஞானம் உண்டாக்கப்படுகிறது என்று உன்னு

---

† இப்படி ப்ரஸங்கம் செய்தால் புகை இருப்பதை எதிரியும் ஒப்புக்கொண்டிருப்பதினால் அவனுக்கு இஷ்டமில்லாத புகை இல்லாமையைப்பற்றி ப்ரஸங்கம் செய்தவுடன் அப்படிப் புகை இருப்பதினால் நெருப்பும் இருக்கிறதென்கிற தன்னுடைய இஷ்டமே ஸித்தித்துவிடும். ப்ரஸங்கம் செய்யும்பொழுது நெருப்பு இருந்ததேயானால் என்று தன்னுடைய இஷ்டத்தையே காரணமாகக் கொண்டு ப்ரஸங்கம்செய்தால் அதற்கு விரோதமாக முடிவு பெறும் பொழுது அதற்கு விரோதமாக நெருப்பும் இல்லை என்று முடிவு பெறும் என்றபடி. அப்படியே எதிரி புகை இல்லை என்று ஒப்புக்கொண்டிருக்கப் புகை இல்லாமல் போக வேண்டிவரும் என்று ப்ரஸங்கம் செய்தால் புகை இல்லை என்று ஒப்புக்கொண்டவன் எனக்கு இஷ்டம் தான் என்று ஒப்புக்கொள்ளுவான். அப்பொழுது புகை இல்லாமையினால் நெருப்பும் இல்லாமல் போகவேண்டி வரும் என்றபடி.

𑌤𑌰𑍍𑌹𑍀𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌜𑍍𑌞𑌾𑌨𑌜𑌨𑌨𑍇𑌽𑌪𑌿 𑌤𑌯𑍋𑌰𑍇𑌵𑍇𑌤𑌿 𑌕𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃? 𑌶𑍁𑌕𑍍𑌤𑍌 𑌰𑌜𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌚 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌮𑌿𑌹 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 ।

𑌸𑌤𑍍𑌯𑌂 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌬𑌾𑌧𑌕𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌂 𑌚 𑌰𑌜𑌤𑌂 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ॥

𑌤𑍇𑌨 𑌮𑌿𑌥𑍍𑌯𑍇𑌤𑍀𑌤𑌿 𑌵𑌚𑌨𑌂 𑌤𑌦𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌭𑌾𑌵𑌸𑌾𑌧𑌕𑌂 𑌨 𑌭𑌵𑌤𑌿 । 𑌪𑍍𑌰𑌸𑌞𑍍𑌜𑌨𑍀𑌯𑌂 𑌚 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌿𑌷𑍍𑌟𑌂, 𑌆𑌪𑍍𑌤𑍋𑌪𑌦𑍇𑌶𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍇𑌽𑌪𑌿 𑌦𑍋𑌷𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑍍𑌰𑌜𑌤𑌾𑌵𑌭𑌾𑌸𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾

லேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினால் இது பொய் என்னில், பிறகு ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானத்தை உண்டுபண்ணுகிறதும் இப்படியே, ஆதலால் என்ன விஶேஷம் இருக்கிறது? முத்துச்சிப்பியில் வெள்ளியென்று தோன்றக்கூடிய தன்மை இருப்பதைப்போல ஒன்றுக்கொன்று விரோதமில்லாததான பொய்யாயிருக்கும் தன்மையை இங்கு நீ நினைக்க வேண்டும் (அது உனக்கு ஸம்பவிக்காது).

உண்மையாகிய முத்துச்சிப்பியாயிருக்கும் தன்மை வெள்ளியாயிருப்பதற்கு விரோதியாதலால் அதை நிவ்ருத்தி செய்கிறதென்று சொல்லப்படுகிறது ; பொய்யாகிய வெள்ளியோவெனில் அந்த ஶுக்தி என்கிற ஜ்ஞானத்தினால் நிவ்ருத்திசெய்யப்படக்கூடியதாகச் சொல்லப்படுகிறது.

ஆதலால் கீழே இது பொய் என்று சொல்லும் ஸமாதானம் ப்ரத்யக்ஷமா யிருக்கை அப்ரத்யக்ஷமா யிருக்கை இவை இரண்டிற்கும் விரோதம் இல்லாமையை ஸ்தாபிக்காது. இதனால் ப்ரஸங்கம் செய்யப்படுகிறதுவும் சில இடங்களில் எங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. (எவ்விடத்தில் என்னில்) ஆப்தர்களின் உபதேசம் முதலியவைகளினால் முத்துச்சிப்பி என்பது அறியப்பட்டிருந்த போதிலும் தோஷத்தோடு கூடிய இந்திரியம் முதலியவைகளினால் சிலருக்குச் சில இடங்களில் வெள்ளி என்கிற ப்ரமமும் தொடர்ந்து வரக்கூடுமாகையினால். அப்படிக்கில்லாவிடில் உங்களுக்குப் பாதி

𑌭𑌵𑌤𑌾𑌂 𑌬𑌾𑌧𑌿𑌤𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 | 𑌤𑌥𑌾 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌽𑌪𑌿 𑌶𑍁𑌕𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌭𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌪𑌿 𑌰𑌜𑌤𑌧𑍀𑌰𑍁𑌤𑍍𑌪𑌦𑍍𑌯𑌤𑍇𑌵 | 𑌸𑌾 𑌚 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍈𑌵 | 𑌶𑍀𑌘𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌬𑌾𑌧𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑌯𑌾 𑌕𑍇𑌷𑌾𑌂𑌚𑌿𑌤𑍍 𑌤𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌭𑍍𑌰𑌮𑌃 | 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌯𑌦𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌵𑌿𑌷𑌯𑍇 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌵𑍍𑌯𑌾𑌹𑌤𑌃 𑌤𑌦𑌾 𑌪𑌰𑍍𑌵𑌤𑍋 𑌵𑌹𑍍𑌨𑌿𑌮𑌾𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑍋 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌰𑍍𑌥𑌬𑍋𑌧𑌪𑌰𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌷𑍁 𑌚 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍋 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 | 𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌾𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌰, 𑌨 𑌤𑍁 𑌤𑌦𑌾𑌨𑍀𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, 𑌯𑌸𑍍𑌯𑌕𑌸𑍍𑌯 𑌵𑌿𑌦𑌾𑌰𑌣𑍍𑌯𑌕𑌯𑍋𑌗𑍀𑌶𑍍𑌵𑌰𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 | 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌨𑌾𑌨𑍁𑌮𑌾𑌤𑍁𑌸𑍍𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌰𑍍𑌹𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌦𑌶𑌕𑌸𑍍𑌵𑌾

தானு வ்ருத்திக்கு உதாஹரணம் இல்லாமல் போகவேண்டி வரும் அப்படியே முத்துச்சிப்பியின் உண்மையான ஆகாரம் ப்ரத்யக்ஷத்தினால் ஏற்பட்டிருந்த போதிலும் ப்ரமித்தவர்களுடையவும், மோசம் செய்கிறவர்களுடையவும் வார்த்தை முதலியவைகளால் வெள்ளி என்கிற புத்தி உண்டாகவே உண்டாகிறது. அது ப்ரத்யக்ஷமல்லாத ஜ்ஞானம். அது சீக்கிரத்தில் நிவ்ருத்தி செய்யப்படுகிறபடியினால் சிலருக்கு அவ்விடத்தில் ஜ்ஞானம் உண்டாகிறதில்லை என்கிற ப்ரமம் உண்டாயிருக்கிறது. மேலும் ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கிற விஷயத்தைப்பற்றி ப்ரத்யக்ஷமல்லாத ப்ரகாசம் உண்டாவது விருத்தம் என்னில், அப்பொழுது 'இந்த மலை நெருப்பை உடையது' என்றிவை முதலிய அநுமானங்களிலும் அப்படிப்பட்ட அர்த்தங்களைச் சொல்லுகிற வாக்யங்களிலும் ப்ரத்யக்ஷமில்லாத ஜ்ஞானம் உண்டாகாமல் போகவேண்டி வரும். அவ்விடத்தில் அந்த வஸ்துக்களுக்கு ப்ரத்யக்ஷமாக அறியப்படக்கூடிய யோக்யதை மாத்திரம் உண்டு, அப்பொழுது அவைகள் ப்ரத்யக்ஷமாக அறியப்பட்டன என்பதில்லை, என்பதும் உசிதமல்ல, காட்டில் வஸிக்கிற யாராவது ஒரு யோகிக்கு அந்த வஸ்து ப்ரத்யக்ஷமாக அறியப்படுவதினால். அப்படி இருந்த போதிலும் அநுமானம் செய்பவனுக்கு ப்ரத்யக்ஷமாக அறியப்படவில்லை என்னில், அப்படியாகில் இவ்

𑌚𑍈𑌤𑌦𑍍𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍍 𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌤𑍍𑌸𑌾
𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌾𑌸𑌂𑌭𑌵𑌃 । 𑌯𑌤𑍍𑌤𑍍𑌵𑌨𑍁𑌮𑌾𑌤𑍁𑌃 𑌸𑍍𑌵𑌸𑍍𑌯𑍈𑌵 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑍁𑌂
𑌯𑍋𑌗𑍍𑌯𑌤𑌯𑌾 𑌅𑌨𑌨𑍍𑌤𑌰𑌂 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌚𑍍𑌚 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌸𑌂𑌭𑌵
𑌇𑌷𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌅𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌦𑌾𑌵𑌪𑌿 𑌤𑌦𑍁𑌭𑌯𑌸𑌂𑌭
𑌵𑌾𑌤𑍍𑌤𑌥𑌾𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌯𑌥𑌾 𑌚 𑌅𑌯𑌂 𑌘𑌟 𑌇𑌤𑌿 𑌮𑌨𑍍𑌵𑌾𑌨𑌂 𑌪𑍍𑌰
𑌤𑍍𑌯𑍇𑌵 𑌕𑌶𑍍𑌚𑌿𑌤𑍍 𑌅𑌯𑌂 𑌘𑌟 𑌇𑌤𑌿 𑌬𑍍𑌰𑍂𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌥𑌾 𑌤
𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾
𑌤𑍍𑌕𑌾𑌰𑌜𑌨𑌕𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 । 𑌇𑌷𑍍𑌯𑌤 𑌏𑌵𑍇𑌦𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍,
𑌸𑍍𑌵𑌤𑍋𑌽𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌤𑌿 𑌹𑍇𑌤𑍁𑌵𑌿𑌶𑍇𑌷
𑌣𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌞𑍍𑌜𑌾𑌨𑌸𑍍𑌯 𑌤𑌦𑌨𑌿𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌇𑌷𑍍𑌯𑌤𑌾𑌂 𑌵𑌾 । 𑌤𑌥𑌾𑌪𑌿
𑌜𑍍𑌯𑍋𑌤𑌿𑌷𑍍𑌟𑍋𑌮𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌯𑍋𑌗𑌿𑌪𑍍𑌰𑌭𑍃𑌤𑍀

விடத்திலும் பத்தாவதாக இருக்கை இந்த வாக்யத்தைக் கேட்ப
தற்கு முன்பு ப்ரத்யக்ஷமாக அறியப்படாமையினால் வாக்யத்தினால்
ப்ரத்யக்ஷம் ஸம்பவிக்காது. அனுமானம் செய்கிறதனக்கே ப்ரத்
யக்ஷமாகப் பார்க்கக்கூடியதா யிருப்பதினாலும் பிறகு ப்ரத்யக்ஷ
மாகப் பார்க்கப்படுவதினாலும் அந்த விஷயத்தில் ப்ரத்யக்ஷ ஜ்ஞானம்
ஸம்பவிக்கும் என்று ஒப்புக்கொள்ளப் படுகிறதேயாகில் அப்பொ
ழுது அனுமானம் முதலியவைகளிலும் இவ்விரண்டும் ஸம்பவிக்கலா
மாகையினால் ப்ரத்யக்ஷமாக இருக்கையும் ஸம்பவிக்கும். இது குடம்
என்று எண்ணிக்கொண்டிருப்பவனைக் குறித்தே ஒருவன் இது
குடம் என்று சொல்லுவானேயானால் அப்பொழுது அந்த வாக்ய
மும் ப்ரத்யக்ஷத்தினால் அறியப்பட்ட அர்த்தத்தையே சொல்லு
கிறது என்பது ஸமமாக இருப்பதினால் அந்த வாக்யமும் ப்ரத்யக்ஷ
ஜ்ஞானத்தை உண்டுபண்ண வேண்டிவரும். இதுவும் எங்களால்
ஒப்புக்கொள்ளப்படுகிறது என்னில், அது உசிதமல்ல, ஸ்வயமாகவே
ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கக்கூடிய அர்த்தத்தைப்பற்றிச் சொல்லுகிற
படியினால் என்று ஹேதுவில் விசேஷணத்தை ப்ரயோகித்திருக்
கிற உனக்கு இது இஷ்டமாவதற்கு ந்யாயமில்லை. அப்படி ஒப்புக்
கொண்டாலும் ஒப்புக்கொள்ளப்படட்டும். அப்படி இருந்தபோதி
லும் ஜ்யோதிஷ்டோமம் முதலிய வாக்யங்களின் அர்த்தங்களும்
யோகி முதலியவர்களுக்கு ப்ரத்யக்ஷமாக அறியப்பட்டவை என்

நாம் ப்ரத்யக்ஷத்வஸ்யோபயோரபி ஸம்மதத்வாத் தாந் ப்ரதி கேநசிதவிதிதமாஹாத்ம்யேந தத்ப்ரயோகே தத்ஸாக்ஷாத்காரஸம்பவப்ரஸங்காத் | ததா ச ஸர்வமபி வாக்யம் கஸ்யசித்ஸாக்ஷாத்காரகாரணமிதி ஸித்தே கேஷாஞ்சிதேவேதி வ்யவஸ்தாபங்கஃ | அஸ்த்வேவமபி, கிம் நஶ்சிந்நமிதி சேத், ந, அநுமாநாதிஷ்வபி தத்ப்ரஸங்கஸ்யோக்தத்வாத் | ததா ச தத்த்வமஸ்யாதி வாக்யவிஶேஷாஸித்திஃ | ததஶ்ச அபஶூத்ரந்யாயவிரோதாதிப்ரஸங்கஃ |

பதுநம் இருவராலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதினுல் அந்த யோகிகளைக் குறித்து அவர்களுடைய மஹிமையை அறியாத ஒருவனுல் அந்த வாக்யங்கள் ப்ரயோகம் செய்யப்படும்பொழுது அவர்களுக்கு அந்த வாக்யங்களினுல் ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் உண்டாக வேண்டி வரும். அப்படியாகில் எல்லா வாக்யங்களும் சிலருக்கு ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமாக ஏற்பட்டிருக்கச் சில வாக்யங்களுக்கு மாத்திரம் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டுபண்ணக்கூடிய ஶக்தி இருக்கிறதென்று ஏற்பாடு செய்வதற்கு விரோதம் வரும். இப்படியே இருக்கட்டுமே, எங்களுக்கு என்ன நஷ்டம் என்று சொல்லில், அது உசிதமல்ல, அனுமானம் முதலியவைகளிலும் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமாயிருக்கும் தன்மை உண்டாக வேண்டி வரும் என்கிற ப்ரஸங்கம் முன்னமேயே சொல்லப்பட்டிருப்பதினுல். அப்படியாகில் ‘அந்த ப்ரும்மம் நீயாகிறுய்’ என்றிவை முதலிய வாக்யங்கள்தான் ப்ரும்மத்தைப்பற்றிய ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்குகின்றன என்று தனித்துச் சொல்லியிருப்பது ஸித்திக்காது. அதினுல் அபஶூத்ராதிகரணத்தில் * சொல்லி இருக்கும் ந்யாயத்திற்கு விரோதம் வரும்.

* ஶாரீரக ஸூத்திரம், 1-ம் அத்யாயத்தில், 3-ம்பாதத்தில், 33, 34-ம்ஸூத்திரத்தில்சொல்லப்பட்டிருக்கிறது. இதில்வேதத்தில் அதிகாரமில்லாத ஶூத்திரர்களுக்கு வேதங்களில் சொல்லியிருக்கிறஅர்த்தங்களைப்பற்றியதாகிய ப்ரும்மவித்யையில் அதிகாரம் இல்லை என்று நிஶ்சயம் செய்யப்பட்டிருக்கிறது. இப்பொழுது அனுமானம் முதலியவைகளினுலும் ஆப்தோபதேஶங்களினுலும் ப்ரும்மத்தைப்பற்

𑌕𑌿𑌂 𑌚 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌤𑌤𑌯𑌾 𑌅𑌜𑍍𑌞𑌾𑌤𑌤𑌯𑌾 𑌵𑌾 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌭𑌵𑌦𑍍𑌭𑌿𑌰𑌙𑍍𑌗𑍀𑌕𑍃𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑍈𑌃 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑍈𑌸𑍍𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌭𑌵𑌸𑍍𑌸𑍁𑌲𑌭 𑌏𑌵। 𑌯𑌦𑌿 𑌚 𑌸𑍍𑌵𑌤𑍋𑌽𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌷𑌯𑌮𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑌂 𑌤𑌜𑍍𑌜𑌨𑌕𑌮𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯𑍇𑌤, 𑌤𑌦𑌾 𑌦𑌶𑌮𑌸𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑍀𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌨𑍍𑌤𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃; 𑌯𑌦𑍍𑌯𑌪𑌿 𑌤𑍍𑌵𑌂𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌤𑍋𑌽𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑌾, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌸𑌙𑍍𑌖𑍍𑌯𑌾𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌕𑌾𑌰𑍇𑌣 𑌸𑍍𑌵𑌤𑍋𑌽𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍। 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑍍𑌰𑌵𑌣𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌤𑌦𑍍𑌵𑍈𑌶𑌿𑌷𑍍𑌟𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍। 𑌅𑌤𑍋𑌽𑌨𑍁𑌮𑌾𑌨𑌸𑍍𑌯𑍇𑌵 𑌵𑌾𑌕𑍍𑌯𑌜𑌾𑌤𑍀𑌯𑌸𑍍𑌯 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌪𑌿 𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵

மேலும் எல்லா ப்ரபஞ்சமும் தன்னால் அறியப்பட்டதாகவோ அறியப்படாததாகவோ ஸாக்ஷி சைதன்யத்தினால் அறியப்படுகிறது என்று உங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினால் எல்லா ப்ரமாணங்களாலும் ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் உண்டாகலாம் என்று ஸுலபமாக உபபாதிக்க முடியும். மேலும் ஸ்வயமாகவே ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கக்கூடிய வஸ்துவைப்பற்றிய வாக்யமே ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்கும் என்று ஏற்பாடு சொல்லப்படுகிறது என்னில், அப்பொழுது 'நீ பத்தாவதாகிறாய்' என்பது முதலிய வாக்யத்தைத் த்ருஷ்டாந்தமாகச் சொல்லி இருப்பது பொருந்தாது, அந்த வாக்யத்தில் நீ என்கிற பாகம் ஸ்வயமாக ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கக் கூடியதாக இருந்த போதிலும் (பத்தாவது என்கிற) எண்ணிக்கையோடு கூடிய ஆகாரத்தினால் ஸ்வயமாகவே ப்ரத்யக்ஷமாகத் தோன்றக்கூடியதல்லவாகையினால். அப்படிக்கில்லாத பக்ஷத்தில் இந்த வாக்யத்தைக் கேட்பதற்கு முன்பே பத்தாவது என்று கணக்கோடு சேர்ந்து ப்ரகாசித்துக் கொண்டிருக்க வேண்டி வரும். ஆகையினால் அனுமானத்திற்குப் போல வாக்யம் என்கிற வகுப்பில் சேர்ந்த எந்த வாக்யத்திற்கும் ஒரு இடத்திலும் ப்ரத்

றிய ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானம் உண்டாகலாமாதலாலும் அதுவே அவித்யையை நிவ்ருத்திசெய்யக்கூடுமாதலாலும் என்னில் அதிகாரமில்லை என்பதோடு பொருந்தாது அதற்கு விரோதமாகும் என்றபடி.

उपपन्नस्यासिद्धेर्नृग्राहकत्वग्राहकाभावाच्च स्वाभि-
मतस्य कस्यचिद्वाक्यस्य तज्जनकत्वकल्पनं विरुद्ध-
मेव। अत एव स्वतोऽपरोक्षायमाणार्थविषयत्वल-
क्षणोपाधिरपि निरस्तः॥

यत्तु निवर्त्यमिथ्यात्वानुपपत्त्या पारम्पर्येणापरोक्ष्यज्ञजनकविशेषयोः परिशेष इति, तदप्यसिद्ध्यन्यथासिद्धिग्रस्तम्। सत्यस्यैव हि संसारस्योपासनप्रीणितेश्वरसङ्कल्पविशेषनिवर्त्यत्वं साधयिष्यामः। यत्तु 'तरति शोकमात्मवित्' इत्या

யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமா யிருக்கை காணப்பட்டதில்லை யாகையினுலும், அப்படிக் காரணமா யிருப்பதற்கு ஸாதகமான யுக்தி ஒன்றும் இல்லாமையினுலும், தனக்கிஷ்டமான சில வாக்யங்களுக்கு ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமாய் இருப்பது உண்டென்று கல்பிப்பது விருத்தமேயாகும். ஆகையாலேயே ஸ்வயமாகவே ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கக்கூடிய அர்த்தத்தைப்பற்றியது என்கிற காரணமும் நிராகரிக்கப்பட்டது.

இந்த ஜ்ஞானத்தினுல் நிவ்ருத்தி செய்யப்படக்கூடிய ப்ரபஞ்சம் மித்யை என்பது பொருந்தாததலால் அதற்காகப் பரம்பரையாக அதை நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானம் ப்ரத்யக்ஷ ரூபமாய் வாக்யமே அதற்குக் காரணமாகவும் முடிவு பெறுகிறது என்று சொல்லப்பட்டதே அதுவும் அஸித்தி * அந்யதாஸித்தி என்கிற தோஷங்களினுல் நிராகரிக்கப்படுகிறது. வாஸ்தவமாக இருக்கும் ஸம்ஸாரம் உபாஸனத்தினுல் ப்ரீதியடைந்த பகவானுடைய ஸங்கல்ப விசேஷத்தினுல் நிவ்ருத்தி செய்யக்கூடியதென்று மேலே நாம் ஸாதிக்கப் போகிருேம். 'ஆத்மாவை அறிந்தவன் துக்கத்தைத் தாண்டுகிருன்' என்றிவை முதலிய ஶ்ருதி வாக்யங்களினுல் ஜ்ஞானம் மாத்திரத்தினுல் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியது என்று ஏற்படு

---

* அஸித்தியாவது காரணமே இல்லாமை, அந்யதாஸித்தியாவது இப்படி இல்லாமலிருந்தபோதிலும் அது பொருந்தக் கூடியதா யிருக்கை.

𑌤𑌿 𑌹𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌧𑍍𑌯𑌤𑍀𑌤𑌿, 𑌤𑌦𑌪𑌿 𑌵𑍇𑌦𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌮𑍁𑌪𑌾𑌸𑌨𑌾𑌖𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑍇 𑌪𑌰𑍍𑌯𑌵𑌸𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌨𑍍𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌮𑍍 । 𑌯𑌥𑌾𑌹𑍁𑌃 — ‘𑌵𑍇𑌦𑌨𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌵𑌿𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌶𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌧𑍍𑌰𑍁𑌵𑌸𑍍𑌮𑍃𑌤𑍌 । 𑌸𑌾 𑌚 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌤𑍍𑌵𑌮𑌭𑍍𑌯𑍇𑌤𑌿 𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌰𑍍𑌭𑌕𑍍𑌤𑌿𑌤𑍍𑌵𑌮𑍃𑌚𑍍𑌛𑌤𑌿 ॥’ 𑌇𑌤𑌿 । 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌿𑌤𑍍𑌯𑍇𑌤𑌦𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌤𑌯𑌾 𑌭𑌵𑌦𑌭𑌿𑌮𑌤𑌸𑍍𑌯 𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌭𑌟𑌾𑌦𑍇𑌶𑍍𑌚 𑌭𑍇𑌷𑌜𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍋𑌦𑌾𑌹𑌰𑌣𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵 𑌦𑌤𑍍𑌤𑍋𑌤𑍍𑌤𑌰𑌮𑍍 । 𑌅𑌸𑍍𑌤𑍁 𑌚 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑍇 𑌧𑍀𑌨𑌾𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌚 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌃 । 𑌨 𑌤𑍍𑌵𑌤𑍍𑌰 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌮𑍍 ॥

𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌦𑍍𑌯𑌦𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।

கிறதே என்னில், இதுவும் வேதனம், ஜ்ஞானம் முதலிய ஶப்தங்களுக்கு உபாஸனம் என்று சொல்லப்படுகிற விஶேஷத்திலேயே முடிவு உண்டாகிறது என்று முன்னமேயே நிரூபிக்கப்பட்டிருப்பதினால் நிராகரிக்கப்பட்டது. அப்படியே ‘வேதனம் த்யானத்தில் முடிவு அடைகிறது, த்யானம் இடைவிடாமல் ஸ்மரணம் செய்வதில் முடிவை அடைகிறது, அந்த இடைவிடாத ஸ்ம்ருதி ப்ரத்யக்ஷமாக அறிவதைப்போல் விஶதமாக இருக்கையை அடைகிறது, அப்படிப்பட்ட விஶதமான த்யானம் பக்திபாயிருக்கையை அடைகிறது’ என்று சொல்லுகிறார்கள். பொய்யாகிய வஸ்து ஜ்ஞானம் மாத்திரத்தினால் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியதாயிருக்க வேண்டும் என்பதே உசிதம் என்கிற இதுவும் பொய்யாக உங்களால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற திமிரம் முதலிய தோஷங்களும் ஶத்ருக்களும் மருந்தினாலும் ஆயுதங்களினாலும் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியதாயிருக்கின்றன என்பதை உதாஹரணமாக நிரூபித்து முன்னமேயே பதில் சொல்லப்பட்டது. ப்ரபஞ்சம் பொய்யாக இருப்பதினும் அது ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியது என்பதற்கும் யுக்தி இருந்தாலும் இருக்கட்டும். இவ்விடத்தில் ப்ரபஞ்சத்திற்கு அப்படிப்பட்ட மித்யாத்வம் சொல்ல முடியாது.

ப்ரஹ்மணோऽபி ச மித்யாத்வம் தத ஏவாபிதாஸ்யதே ||
ப்ரஹ்மணோ யதி த்ருஶ்யத்வம் வ்யாவஹாரிகமிஷ்யதே |
ப்ரபஞ்சஸ்யாபி த்ருஶ்யத்வம் தாத்த்விகம் கிம் த்வயேஷ்யதே ||

அபி ச ஸம்ஸாரமித்யாத்வேऽபி கிம் நிவ்ருத்தி ஶப்தேந ப்ரதிபாஸமாநமித்யார்த்தப்ரத்வம்ஸந [illegible]? உத தத்விஷயஜ்ஞாநப்ரத்வம்ஸநம்? ஆஹோஸ்வித் தத்காரணோச்சேத:? அதவா ததாவிதஜ்ஞாநாநுத்பாத:? உத தத்விபரீதவிஷயாவகாஹநேந விஷயாபஹார:? யத்வா தத்விஷயஸத்யத்வாவஸாயவிச்சித்தி:? அதாந்யதேவ கிஞ்சிதஸாம

கண்ணாலே பார்க்கப்பட் டிருப்பதினால் ப்ரபஞ்சம் பொய் என்று சொல்லப்படுகிறதேயானால் அந்தக் காரணத்தினாலேயே ப்ரும்மத்திற்கும் மித்யாத்வம் சொல்லப்படுகிறதாகும்.

ப்ரும்மத்திற்குப் பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை வ்யாவஹாரிகம் (வாஸ்தவமல்ல) என்று சொல்லப்படுகிறதேயானால் ப்ரபஞ்சத்திற்கும் பார்க்கப்படக்கூடியதாயிருக்கும் தன்மை வாஸ்தவமென்று உன்னால் ஒப்புக்கொள்ளப்படுகிறதா என்ன? (அதாவது ப்ரும்மத்தைத் தவிர வேறுதலால் அதுவும் பொய்யென்றே சொல்ல வேண்டும் என்றபடி.)

மேலும் ஸம்ஸாரம் பொய்யாக இருந்தபோதிலும் நிவ்ருத்தி என்னும் பதத்தினால், ப்ரமத்தினாலே தோன்றுகிற வஸ்துக்கள் நாசமடைவதா? அன்றிக்கே அந்தப் பொய்யான அர்த்தங்களைப்பற்றிய ஜ்ஞானத்தின் நாசமா? அன்றிக்கே அந்த ஜ்ஞானத்தின் காரணம் இல்லாமல் போவதா? அதுவுமன்றிக்கே அப்படி மற்றொரு ஜ்ஞானம் உண்டாகாமல் இருப்பதா? அதுவுமன்றிக்கே அதற்கு விரோதமான விஷயங்களைத் தெரிந்துகொள்ளுவதாகிய விஷயத்தை மாற்றிவிடுவதா? அதுவுமன்றிக்கே அந்த ஜ்ஞானத்தில் விஷயமாகத் தோன்றுவது வாஸ்தவம் என்கிற நிஸ்சயம் கலைந்துபோவதா? வ்யவஹாரத்தில் நிரூபிக்க முடியாத வேறு ஏதாவது சொல்லப்படுகிறதா? என்று வைத்துக்கொண்டு அதற்காக ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் எதிர்பார்க்

𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑌿𑌕𑌮𑌿𑌤𑌿। 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃, 𑌕𑍍𑌵𑌚𑌿𑌦𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌧𑍍𑌵𑌂𑌸𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 ।

𑌧𑍍𑌵𑌂𑌸𑍋 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌤𑍇।
𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑌤𑍍𑌤𑌾𑌭𑌾𑌵𑍇 𑌕𑌸𑍍𑌯 𑌧𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

𑌸𑌤𑍍𑌯𑌪𑌿 𑌤𑌸𑍍𑌮𑌿𑌂𑌸𑍍𑌤𑍇𑌨 𑌤𑌦𑌾𑌦𑍍𑌧𑍇𑌷𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌬𑌾𑌧𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌤𑍍𑌪𑍂𑌰𑍍𑌵𑌂 𑌸𑍁𑌪𑍍𑌤𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌰𑌿 𑌪𑍍𑌰𑌬𑍋𑌧𑍇 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑌜𑌤𑌾𑌦𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌸𑌂𑌵𑌿𑌦𑌧𑍀𑌨𑌸𑌤𑍍𑌤𑌾𑌕𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌨𑍍𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑍇𑌵 𑌹𑌿 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 । 𑌆𑌹𑍁𑌶𑍍𑌚—'𑌆𑌰𑍋𑌪𑌿𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌾𑌧𑌾𑌰𑌾𑌰𑍋𑌪𑌿𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌂𑌕𑍍𑌷𑌯𑌃 । 𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌶𑍂𑌨𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑌾 𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌕𑌥𑍍𑌯𑌤𑍇॥' 𑌇𑌤𑌿 । 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃, 𑌤𑌸𑍍𑌯 𑌬𑌾𑌧𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌭𑌾𑌵𑍇𑌽𑌪𑌿 𑌬𑌾𑌧𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌦𑍇𑌵

கப்படுகிறது. முதலாவது பக்ஷம் உசிதமல்ல, எந்த இடத்திலும் பொய்யான வஸ்துவிற்கு நாசமில்லையாதலால்.

நாசமாவது ஸ்வரூபம் இல்லாமல்போவது என்று சொல்லப்படுகிறது. ஸ்வரூபமே இல்லாமற் போகும்பொழுது எதற்கு நாசம் சொல்லப்படுகிறது?

அப்படி ஸ்வரூபம் உண்மையாக இருந்ததேயானாலும் ஜ்ஞானத்தினால் அது நாசமடைவது பொருந்தாதாகையினால். அப்படிக்கில்லாமல் ஜ்ஞானத்தினாலேயே அதற்கு நிவ்ருத்தி உண்டாகிறது என்னும் பக்ஷத்தில் ஒருவன் முத்துச் சிப்பியைக்கண்டு அதை வெள்ளியென்று ப்ரமித்து அது வெள்ளியல்ல என்கிற உண்மையைப்பற்றியதாய் அந்த ப்ரமத்தை நிவ்ருத்தி செய்யக்கூடியதாகிய ஜ்ஞானம் உண்டாவதற்கு முன்பே தூங்கிவிட்டானேயானால் அவன் விழித்துக்கொண்ட பிறகும் முத்துச்சிப்பியில் ப்ரமிக்கப்பட்டவெள்ளி அப்படியே இருக்கவேண்டிவரும். ஜ்ஞானத்தில் நிலையையுடைய அந்த ப்ரமிக்கப்பட்ட வெள்ளிக்கு அந்த ஜ்ஞானத்தின்நிவ்ருத்தியேதான் நிவ்ருத்தியாதலால். அப்படியே 'ஆரோபிக்கப்பட்ட வஸ்துவின் நிவ்ருத்தியாவது ப்ரமம் நசித்துவிடுவது தான். ஸ்வரூபமே இல்லாத பொய்யான வஸ்துவிற்கு வேறு எவ்விதமாகநிவ்ருத்தி சொல்லப்படுகிறது' என்று சொல்லுகிறார்கள். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, அந்த ஜ்ஞானம் நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானமாக இல்லாமல்

ஸ்வரஸவாஹி விநாஶஹேதுபஹுத்வே வாஸ்து தத³விநா-
ஶித்வாத் | அந்யதாऽநாதித்வாத் பா³த⁴கஜ்ஞாநஸ்ய ப்⁴ராந்தஸ்ய
ஸுஷுப்த்யாத்³யவஸ்தாஸம்ப⁴வாத் | ததா²ஹு: — 'ந
ப்⁴ராந்திர்பா³த⁴கஜ்ஞாநாத்³ருதே ந விநஶ்யதி | ந ஸ்வாபா⁴-
விகத்வஸ்ய ஸுஷுப்தௌ ப்⁴ராந்திஸங்க்ஷய: ||' இதி |
யத்³யபி உத்தரஜ்ஞாநஸ்யாபி ஸம்ஸ்காராதி³வத் பூர்வ-
ஜ்ஞாநநிவர்தகத்வமிஷ்யதே, ததா²பி யத்கிஞ்சித்³விருத்³த⁴-
விஷயாத் பரோக்ஷஜ்ஞாநாத³பி பூர்வஜ்ஞாநநிவ்ரு-
த்த்யுபபத்தௌ விருத்³த⁴விஷயப்ரத்யக்ஷஜ்ஞாநாபேக்ஷணம்
நிஷ்ப²லம் || ந ச த்ருதீய:, ப்⁴ராந்திஜ்ஞாநகாரணாந்தே

போனபோதிலும் அந்த நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானத்தைப் போலவே ஸ்வபாவத்திலேயே பரம்பரையாக வந்துகொண்டிருக்கிற நாசத்திற்குக் காரணங்களானவைகளுடைய பலத்தினுல் தானே அதிசீக்கிரத்தில் நாசமடைந்து விடுமாதலால். அப்படிக்கில்லாவிடில் முதலில் ப்ரமித்துப் பிறகு அதை நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானம் உண்டாகாதவனுக்கு தூக்கமே இல்லாமல் போக வேண்டி வரும். * அப்படியே 'ப்ரமம் எப்பொழுதும் தன்னை நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானத்தினுலேயே நாசமடைகிறது என்பதில்லை. அப்படியாகில் ப்ரமத்தை அடைந்த மனதை உடையவனுக்கு ஸுஷுப்தி தசையில் ப்ராந்தியின் நாசம் இல்லாமல் போகவேண்டிவரும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. பிறகு உண்டாகிற ஜ்ஞானமானது ஸம்ஸ்காரம் முதலியதைப்போலவே முன்பு உண்டாகிய ஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்கிறது என்று ஒப்புக்கொள்ளப்படுகிறதேயானுல் அப்படியிருந்தபோதிலும் விரோதமில்லாத ஏதாவது ஒரு விஷயத்தைப் பற்றிய ப்ரத்யக்ஷமில்லாத ஜ்ஞானத்தினுலும் முன்பு உண்டாகிய ஜ்ஞானம் நிவ்ருத்தியை அடையக் கூடியதாயிருக்க விரோதமுள்ள விஷயத்தைப்பற்றிய ப்ரத்யக்ஷரூபமான ஜ்ஞானத்தை எதிர்பார்க்க வேண்டியது ப்ரயோஜனமற்றதேயாகும். மூன்றுவது பக்ஷ

* ஒருவித ஜ்ஞானமும் இல்லாதிருப்பது தூக்கம், அப்பொழுது அந்த ப்ரமரூபமான ஜ்ஞானம் இருக்கிறபடியினுல் அவனுக்கு ஸுஷுப்தி (தூக்கம்) என்னும் அவஸ்தை இல்லாமல் போகவேண்டிவரும் என்றபடி.

𑌷𑍇 𑌯𑌥𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌦𑌯𑌾𑌤𑍍। 𑌨𑌹𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌵𑌷𑍍𑌟𑌮𑍍𑌭 𑌤𑌿𑌮𑌿𑌰𑌾𑌦𑌿 𑌦𑍋𑌷𑍇𑌷𑍍𑌵𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑍇𑌷𑍁 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌸𑌾𑌕𑍍𑌷𑌾𑌤𑍍𑌕𑌾𑌰𑌸𑌂𑌭𑌵𑌃। 𑌸𑌂𑌭𑌵𑍇 𑌵𑌾 𑌕𑌿𑌂 𑌤𑌦𑍍𑌦𑍋𑌷𑌨𑌾𑌶𑍇𑌨? 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌤𑌦𑍍𑌦𑍋𑌷𑌨𑌾𑌶 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨, 𑌤𑌤𑍍𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌵𑌿𑌰𑌹𑍇𑌣 𑌤𑌦𑍍𑌦𑍋𑌷𑌨𑌾𑌶𑍇𑌽𑌪𑌿 𑌤𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃। 𑌤𑌸𑍍𑌯𑌾𑌂 𑌵𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌯𑌾𑌂 𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑌿 𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍। 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌤𑌿𑌬𑌨𑍍𑌧𑌕𑌤𑌯𑌾 𑌤𑌦𑍍𑌦𑍋𑌷𑌨𑌾𑌶𑌕𑌲𑍍𑌪𑌨𑍇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌕𑌿𑌮𑌿𑌦𑌂 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌕𑌿𑌂 𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌾𑌂 𑌸𑌤𑍍𑌯𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑌸𑌵𑌾𑌹𑌿𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌉𑌤 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌆𑌦𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌾𑌗𑌪𑌿 𑌕𑌥𑌂 𑌤𑌦𑌵𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍋𑌦𑌯𑌃? 𑌅𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌾𑌤𑍍। 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇

மும் உசிதமல்ல, ப்ரமமாகிய ஜ்ஞானத்திற்குக் காரணம் நாசமடையாத பக்ஷத்தில் வாஸ்தவமான ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் உண்டாகாதாகையினால் விரலால் அழுத்திக்கொள்வது திமிரம் முதலிய தோஷங்கள் தொடர்ந்து வந்திருக்க சந்திரன் ஒன்றென்கிற ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் ஸம்பவிக்காதல்லவா. அப்படி ஸம்பவிக்கும் பக்ஷத்தில் அந்த ப்ரமத்தின் காரணம் நாசமடைவதால் என்ன ப்ரயோஜனம்? ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் தொடர்ந்திருப்பதற்காக அந்த ப்ரம காரணம் நசிக்க வேண்டுமென்பதும் உசிதமல்ல, ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தின் ஸாமக்ரிகள் தொடர்ந்திராமல் போனால் ப்ரமத்தின் காரணம் நாசம் அடைந்தபோதிலும் ப்ரத்யக்ஷத்தின் தொடர்ச்சி உண்டாகாது. அப்படி ப்ரத்யக்ஷத்தின் ஸாமக்ரீ தொடர்ந்திருந்ததேயானால் ப்ரமத்தின் காரணம் இருந்தபோதிலும் விரோதமில்லையாதலால். ஸ்வபாவத்திலேயே உண்டாகக்கூடிய ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்கு ப்ரதிபந்தகமாக இருப்பதினால் ப்ரமகாரணம் நசிக்க வேண்டுமென்று கல்பித்திருக்கிறது என்னில், இவ்விடத்தில் ஸ்வாபாவிகத்வம் என்பது எப்படிப்பட்டது? ஸாமக்ரிகள் இருக்கும்பொழுது ஸுலபமாய் உண்டாகக் கூடியதாயிருக்கையா? அன்றிக்கே நித்யமாக இருக்கையா?. முதலாவது பக்ஷத்தில் ப்ரதிபந்தகமிருக்கும்பொழுது ப்ரத்யக்ஷம் எப்படி உண்டாகும்? ப்ரத்யக்ஷமுண்டான பிறகு தான் ப்ரதிபந்தகம் நிவ்ருத்தியடைய வேண்டுமென்று அந்யோந்யாஶ்ரயதோஷம் வரு

பி நித்யஸ்வாபாவிகப்ரத்யக்ஷஸ்ய ச கிம் நாஶப்ரதி-
பந்தகம்? அயமத்ர ஸங்க்ரஹஶ்லோக:—

ப்ராந்திகாரணஸத்பாவே ப்ரத்யக்ஷஸ்ய ஹ்யஸம்பவ:।
ஸம்பவே நிஷ்பலைவ ஸ்யாத்தத்த்வம்ஸஸ்ய கல்பனா॥

நாநுவ்ருத்த்யர்த்தமந்வேஷ்யஸ்ஸாமக்ர்யைவாநுவர்த்தநாத்।
ப்ரதிபந்தநிவ்ருத்த்யர்த்தமந்வேஷ்யே ப்ரதமம் கதம்॥

ப்ரத்யக்ஷம் காரணாபேக்ஷே
  தத்த்வம்ஸஸ்தோऽபி சேத்।
ஸ்வேநாநாஶ்ரயணம் து
  ஸ்வாத்மவிபரீதஸா ந பாதநீ॥ இதி।

நாபி சதுர்த்த:, ப்ராகபாவஸ்யாஸாத்யத்வாத்। த

கிறது. இரண்டாவது பக்ஷத்தில் நித்யமாக இருப்பதினுல் ஸ்வாபா விகம் என்று சொல்லப்பட்ட ப்ரத்யக்ஷத்திற்கு எது தடையாகும்? இவ்விடத்தில் இவ்வர்த்தங்களைச் சுருக்கிச் சொல்லுகிற ஶ்லோகம்-

ப்ரமத்திற்குக் காரணம் இருந்ததேயானுல் ப்ரத்யக்ஷம் உண் டாகாது. அப்படி உண்டாகில் ப்ரமத்தின் காரணம் நசிக்க வேண் டும் என்று கல்பிப்பது ப்ரயோஜனமற்றதாகும்.

ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் தொடர்ந்திருப்பதற்காக ப்ரமகாரணத் தின் நாசத்தை அபேக்ஷிக்கிறதென்னில், உசிதமல்ல, ஸாமக்ரீ தொடர்ந்திருப்பதினுலேயே தான் தொடர்ந்திருக்குமாதலால். மேலும் தடை நிவ்ருத்திஅடைவதற்காக ப்ரமகாரணம் நசிக்கவேண் டும் என்னில், முதலில் எப்படி ப்ரத்யக்ஷம் உண்டானது ?

மேலும் ப்ரமகாரணம் நிவ்ருத்தித்த பிறகு ப்ரத்யக்ஷம் உண்டாக வேண்டும், ப்ரத்யக்ஷம் உண்டான பிறகு ப்ரம காரணம் நசி க்க வேண்டும் என்று அந்யோந்யாஶ்ரய தோஷம் வருகிறது. நித்ய மாய்த் தன்னுடைய ஸ்வரூபத்தையே காரணமாக உடைய ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்கு ஒரு தடையும் இருக்கமுடியாது—என்று.

நான்காவது பக்ஷமும் உசிதமல்ல, ப்ராகபாவம் (வஸ்து உண் டாவதற்கு முந்தி அதில்லாமை) ஒன்றினுலும் உண்டாக்கப்படக்

𑌅𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌨𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑌸𑍍𑌯 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑌿𑌕𑌾𑌰𑌣𑍋𑌚𑍍𑌛𑍇𑌦𑌕𑍋𑌟𑌿𑌨𑌿𑌕𑍍𑌷𑍇𑌪𑌾𑌤𑍍 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ‖ 𑌨 𑌪𑌞𑍍𑌚𑌮𑌷𑌷𑍍𑌠𑍌, 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌾𑌦𑌪𑌿 𑌤𑌤𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 । 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑌿 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌾𑌦𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌨𑍁𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌸𑍍𑌯 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍇𑌣 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑍈𑌕𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌾𑌦𑌿𑌨𑌾 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍇 । 𑌤𑌾𑌵𑌤𑍈𑌵 𑌦𑍍𑌵𑌿𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑍍𑌵𑌾𑌧𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌶𑍈𑌥𑌿𑌲𑍍𑌯𑌂 𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌦𑍇𑌹𑌾𑌤𑍍𑌮𑌭𑍍𑌰𑌮𑌵𑌤𑌾𑌮𑌨𑍁𑌮𑌾𑌨𑍇𑌨 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌵𑌾 𑌦𑍇𑌹𑌾𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌤𑍍𑌮𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌸𑍋 𑌨 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌬𑌾𑌧𑍇𑌽𑌪𑌿 𑌭𑍍𑌰𑌮𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨, 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑍇𑌽𑌪𑌿 𑌤𑍁𑌲𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌸𑌂𑌜𑌾𑌤𑍇𑌽𑌪𑍍𑌯𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌬𑌾𑌧𑍇 𑌕𑌾𑌰𑌣𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌅𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌵𑌷𑍍𑌟𑌮𑍍𑌭𑌾𑌦𑍇 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑍍𑌧𑌿 ‖

கூடியதில்லையாகையினால். அந்த ப்ராகபாவத்தின் தொடர்ச்சியும், அந்த ப்ராகபாவத்திற்கு எதிரியான வஸ்துவின் காரணங்களின் நாசத்திலேயே சேர்ந்துவிடுமாதலாலும், அது முன்னமேயே நிரா கரிக்கப்பட்டிருப்பதினாலும் ஐந்தாவது ஆறுவது பக்ஷங்களும் உசித மல்ல. ஏனெனில் ப்ரத்யக்ஷமல்லாத ஜ்ஞானத்தினாலும் அவைகள் ஸித்தித்து விடுமாகையினால். ப்ரத்யக்ஷமாயும் தொடர்ந்தும் வருகிற சந்திரன் இரண்டென்கிற ஜ்ஞானம் சந்திரன் ஒன்றென்கிற அனுமானம் முதலியவைகளால் நிவ்ருத்தி செய்யப்படுகிறதல்லவா. அதினாலேயே சந்திரன் இரண்டென்கிற நிஸ்சயத்திற்குக் குறைவும் உண்டாகிறது. அப்படிக்கில்லாத பக்ஷத்தில் தேஹாத்மப்ரமமுடையவர்களுக்கு அனுமானத்தினாலாவது ஸாஸ்திரத்தினாலாவது தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்கிற நம்பிக்கை உண்டாகாமல் போகவேண்டி வரும். ப்ரத்யக்ஷமல்லாத ஜ்ஞானத்தினால் ப்ரமம் தடைபட்டபோதிலும் தொடர்ந்திருக்கிறது என்னில், அது உசித மல்ல, ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி செய்யப்பட்ட போதிலும் காரணங்கள் தொடர்ந்திருக்கும் பக்ஷத்தில் ப்ரமமும் தொடர்ந்திருக்கும் என்று முன்னமேயே சொல்லப்பட்டிருப்பதினால்.

ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி உண்டான போதிலும் காரணம் இருப்பதினால் விரலால் அழுத்திக் கொள்ளுவது முதலிய காரணங்களினால் ப்ரமம் உண்டாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

नापि सप्तमः, तस्यासांव्यवहारिकस्यैव तदर्थोपायोपदेशायोगात् अन्वयव्यतिरेकाभावाच्च प्रत्यक्षपक्षपातविरहाच्च । एवं सामान्ये प्रत्यक्षज्ञानानपेक्षायां क्व तत्कारणविशेषचिन्तावसर एव शब्दजन्यप्रत्यक्षवादस्यावकाश इत्यभिप्रेत्य भाष्यकारैरिह न संरम्भः कृतः । 'सत्यां सामग्र्यां ज्ञानानुत्पत्त्यनुपपत्तेः' इत्यादिना, 'द्रष्टव्यः' इत्यादेशस्य प्रत्यक्षसमानाकारविधिपरत्वोपपादनेन च [illegible] ॥ समन्वयाधिकरणपूर्वपक्षे तु पूर्वपक्षोक्त्यैव दूषयिष्यति 'न च शब्द एव प्रत्य-

---

ஏழாவது பக்ஷமும் உசிதமல்ல, அது ஒரு வ்யவஹாரத்திற்கும் தகுந்ததல்லாமையாலே அதற்காக உபாயங்களை உபதேசிப்பது பொருந்தாதாகையினாலும், அதற்கு அந்வய வ்யதிரேகங்கள் கண்டு பிடிக்க முடியாதாகையினால் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தோடு ஒரு வித ஸம்பந்தமுமில்லாமையாலும். இப்படிப் பொதுவாக ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை எதிர்பார்க்கவேண்டியதில்லாதபோது அதின் காரணவிஶேஷங்களைப் பற்றிய விசாரத்திற்கு இடம் எங்கிருந்து வந்தது? ஆதலால் ஶப்தத்தினால் ப்ரத்யக்ஷம் உண்டாகிறது என்கிற வாதத்திற்கே இடமில்லை என்று அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யகாரரால் இவ்விஷயத்தில் ஒருவித ப்ரயத்தினமும் செய்யப்படவில்லை. (தவிரவும்) ‘ஸாமக்ரிகள் இருக்கும்பொழுது ஜ்ஞானம் உண்டாகாமல் இருப்பது பொருந்தாது’ என்பது முதலியவைகளாலும், ‘பார்க்கத் தக்கவன்’ என்பதற்கு ப்ரத்யக்ஷமாகப் பார்ப்பதைப் போல விஶதமாக இருக்கவேண்டுமென்று விதிப்பதில் தாத்பர்யம் என்று நிரூபித்திருப்பதினாலும் ஶப்தத்தினால் ப்ரத்யக்ஷம் உண்டாக்கப்படுகிறது என்கிற வாதமும் நிராகரிக்கப்பட்டதாகிறது என்று நினைத்தார். ஸமந்வயாதிகரண பூர்வபக்ஷத்தில் பூர்வபக்ஷியின் வார்த்தையைக் கொண்டே ‘ஶப்தமே ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்குகிறதென்று சொல்லுவது யுக்தமாகாது, ஏனெனில் ஶப்தம் இந்திரிய

𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑌨𑌯𑌤𑍀𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌂, '𑌤𑌸𑍍𑌯𑌾𑌨𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑍍𑌵𑌾𑌚𑍍𑌚' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 || 𑌅𑌥𑌵𑌾, 𑌕𑌥𑌂𑌚𑌿𑌦𑌾𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌃, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌜𑍍𑌞𑌾𑌨𑌶𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌗𑍍𑌰𑌹𑌣𑌵𑌿𑌰𑍋𑌧𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍇𑌰𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌵𑌤𑍍𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌤𑍁𑌲𑍍𑌯𑌨𑍍𑌯𑌾𑌯𑌤𑌯𑌾 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌪𑌰𑌿𑌤𑍍𑌯𑌾𑌗𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 । 𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, 𑌤𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 । 𑌤𑌤𑍍𑌸𑌨𑍍𑌦𑍇𑌹𑍇𑌪𑌿 𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌨𑍍𑌨, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌅𑌥 𑌸𑌤𑍍𑌯𑍇𑌵 𑌵𑌿𑌰𑍋𑌧𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑍌 𑌗𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌤𑌦𑌨𑌾𑌦𑌰𑍇𑌣 𑌵𑌾𑌕𑍍𑌯𑌸𑍍𑌯𑌾𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌧𑍀𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑍇𑌤, 𑌹𑌨𑍍𑌤 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌷𑍍𑌵𑍇𑌵 𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑌿𑌯𑌂 𑌪𑍍𑌰𑌯𑍁𑌜𑍍𑌯𑌤𑌾𑌂 । 𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌿𑌦𑍍𑌧𑍇 𑌗𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇 𑌕𑌿𑌂 𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌨? 𑌅𑌯𑌂 𑌤𑍁 𑌨𑌿𑌰𑍍𑌣𑌯𑌃—

மாகாதாதலால்' என்றாரம்பித்துத் தூஷிக்கப் போகிறார். எப்படியாவது ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் வேண்டுமென்பது ஸித்தித்ததாக இருக்கட்டும், அப்படி இருந்தபோதிலும் ப்ரத்யக் வஸ்துவாகிய ஆத்மாவை அறிய ஶக்தி இல்லாமையாகிற விரோதமிருப்பதினால் இந்திரியங்களை விட்டதைப் போலவே அதே ந்யாயத்தினால் வாக்யத்தையும் விட்டுவிட வேண்டிவரும். * உலகத்தில் கண்டிருப்பதினாலும் காணப்படாமையினாலும் இவை இரண்டிற்கும் வ்யத்யாஸம் உண்டென்பது உசிதமல்ல, அதுவே ஏற்படாமையினால். ஸந்தேஹம் இருந்தபோதிலும் அதற்கு விரோதமான வ்யாப்தி இல்லையே யென்னில், அதுவும் உசிதமல்ல, இந்திரியம் முதலியவைகளிலும் இப்படிச் சொல்லலாமாகையினால். அப்படிக்கில்லாமல் விரோதமான வ்யாப்தி (அதாவது எதுவாக்யமோ அது ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டாக்காது என்கிற வ்யாப்தி) இருந்தபோதிலும் இவ்விடத்தில் வேறு கதியில்லாமையினால் அந்த வ்யாப்தியை அநாதரித்து விட்டு வாக்யத்திற்கு ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தைக் குறித்துக் காரணமாக இருக்கும் தன்மை கல்பிக்கப்படுகிறது என்னில், அஹோ! அப்படியாகில் இந்

---

* வாக்யம் ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்தை உண்டு பண்ணக் கூடிய ஶக்தி யற்றதாகையினால் என்றும் தாத்பர்யம்.

விரோதவ்யாப்திஸத்பாவோ வாக்யஸ்யாபி ததா பவேத் |
அஸத்பாவோ யதி பவேத்ஸம உபயோரபி ||
தஶமஸ்த்வமஸீத்யாதௌ பவேத்வாக்யாத்பரோக்ஷதீ: |
ஸாமக்ர்யாஸம்பாதநாத்பஶ்சாத்ப்ரத்யக்ஷாபரோக்ஷதீ: ||

ந ச ப்ரத்யக்ஷாதேரத்வைதகோசரத்வவிரோத:, தேஷாமபி த்வதுக்ததுஷ்டயுக்திபி: தத்த்வமஸ்யாதிவாக்யவதத்வைதகோசரத்வஸ்தாபநஸ்ய ஶக்யத்வாத் |

யத்து ப்ரத்யக்ஷஸ்ய ந பரோக்ஷாத்பரிபவ இதி,

தப் பக்தியை இந்திரியம் முதலியவைகளிலேயே செய்யலாமே. * அப்படியாகில் வேறு கதி ஏற்பட்டு விட்டபடியினால் வாக்யத்தினால் என்ன ப்ரயோஜனம்? இவ்விடத்தில் இதுவன்றோ நிஶ்சயம்.

விரோதமான வ்யாப்தி இருக்கிறதென்பது வாக்யத்திற்கும் துல்யமாயிருக்கிறது. இல்லையென்னில் அதுவும் இரண்டிற்கும் துல்யம்.

நீ பத்தாவதாகிறாய் என்றிவை முதலிய இடங்களில் வாக்யத்தினால் அப்ரத்யக்ஷ ஜ்ஞானம் தான் உண்டாகலாம். (பிறகு ஶப்தம்) ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்கு ஸாமக்ரியான மனதிற்கும் விஷயத்திற்கும் ஸம்பந்தத்தை உண்டாக்கிப் பிறகு மானஸ ப்ரத்யக்ஷமாகிறது.

ப்ரத்யக்ஷம் முதலியது அத்வைதத்தை அறியாததலால் விரோதமுண்டு என்பதும் உசிதமல்ல, அந்த இந்திரியங்களுக்கும் உன்னால் சொல்லப் படுகிற வஞ்சன யுக்திகளாலே 'அந்த ப்ருமம் நீ யாகிறாய்' என்கிற வாக்யம் முதலியவைகளுக்குப் போல அத்வைதத்தை அறியக் கூடிய தன்மை உண்டென்று ஸ்தாபிக்க முடியுமாதலால்.

ப்ரத்யக்ஷமாகிய ப்ரமத்திற்கு ப்ரத்யக்ஷ மல்லாத ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி உண்டாகாது என்று சொல்லப் பட்டதே அது

---

* இந்திரியங்களுக்கே ப்ரத்யக் வஸ்துவை அறியக் கூடிய ஶக்தி உண்டென்று கல்பித்து விடலாமே என்றபடி.

𑌤𑌦𑌪𑌿 𑌜𑍍𑌵𑌾𑌲𑍈𑌕𑍍𑌯𑌵𑍍𑌯𑌵𑌸𑌾𑌯𑌸𑍍𑌯 𑌭𑍇𑌦𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑍇𑌨 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌮𑍇𑌵 ।

𑌯𑌦𑌪𑌿 𑌐𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌤𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌜𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌬𑌲𑍍𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌂, 𑌤𑌦𑌪𑍍𑌯𑌸𑌤𑍍, 𑌏𑌕𑌦𑍋𑌷𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌮𑌾𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 ।

வும் ஜ்வாலை ஒன்று என்கிற * ப்ரத்யக்ஷத்தை நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்வாலை வெவ்வேறு என்கிற அனுமானத்தைக் கண்டிருப்பதினால் (அதாவது ஜ்வாலை வெவ்வேறு என்கிற அனுமானத்தினால் ஜ்வாலை ஒன்று என்கிற ப்ரத்யக்ஷமாகிய ப்ரமம் நிவ்ருத்தி செய்யப்படுவதைக் கண்டிருப்பதினால்) நிராகரிக்கப்பட்டது.

இந்திரியங்களால் உண்டாகிற ப்ரத்யக்ஷத்தைக் காட்டிலும் ஶாஸ்திரங்களினால் உண்டாகிற ப்ரத்யக்ஷம் பலமுடையது என்று சொல்லப்பட்டதே, அதுவும் உசிதமல்ல, ஏனெனில் ஒரே தோஷத்தினால் இந்த இரண்டு ஜ்ஞானமும் உண்டானதென்பது மேலே நிரூபிக்கப்படப்போகிறபடியினால்.

---

* ஒரு விளக்கை ஏற்றி வைத்தால், அது ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் பொழுது அந்த விளக்கின் சுடர் (ஜ்வாலை) நாம் ப்ரத்யக்ஷமாகப் பார்க்கும் பொழுது ஒரே சுடர் என்று தோன்றுகிறது. யுக்திகளைக் கொண்டு அனுமித்துப் பார்க்கும் பொழுது ஜ்வாலை வத்தியின் அவயவங்கள், எண்ணெ, நெருப்பு இவைகளின் சேர்க்கையினால் உண்டாகிற படியினால் அப்படிக் காரணங்களாகிய வஸ்துக்கள் வெவ்வேறாயிருப்பதினாலே ஜ்வாலையும் வெவ்வேறாயிருக்கவேண்டும் என்று ஏற்படும். ப்ரத்யக்ஷமோவெனில் நடுவில் விளக்கை அணைத்துவிட்டு மறுபடியும் ஏற்றினாலும் நடுவில் அணைத்ததும் ஏற்றினதும் தெரியாத ஒருவன் அதே ஜ்வாலை என்று பார்ப்பதைப்போல ஒரே மாதிரியாயிருப்பதைக் காரணமாக உடையதாகையினால் ஜ்வாலை வெவ்வேறு என்கிற அனுமானமே ப்ரமாணத்தை அனுஸரித்ததென்றும், ஒன்றென்று காட்டும் ப்ரத்யக்ஷம் ஒரே மாதிரியாக இருக்கிறது என்பதினாலே ஏற்படுகிற படியினால் ப்ரமம் என்றும் நிஶ்சயிக்கப்பட்டிருக்கிறது என்றபடி.

ப்ரத்யக்ஷம் ப்ரஹ்ம க்ருஹ்ணாதி யதி ச ப்ரஹ்மத்ருஶ்யதா।
அப்ரஹ்மவிஷயஞ்சேத்து கதம் நு பலவத்தரம் ॥

யத்து ந: அபரோக்ஷஜ்ஞானஸ்ய மோக்ஷஹேதுத்வம் ஶ்ருதிஸித்தமிதி, தாவந்மாத்ராப்யுபகமேऽபி ந ந: காபி க்ஷதி: ॥

யத்து ஶாஸ்த்ராதேவ ஶப்தஸ்யாபரோக்ஷதீஹேதுத்வம் ஸித்தம், ததுபஹாஸ்யம், அந்யபரத்வஸ்யாபாலம்

ப்ரத்யக்ஷ ஜ்ஞானம் ப்ரும்மத்தை அறிகிறதே யானுல் ப்ரும்மத்திற்கு த்ருஶ்யத்வம் (ப்ரத்யக்ஷமாகப் பார்க்கப்படக் கூடியதா யிருக்கை) * வந்து விடும். ப்ரும்மத்தை விஷயீகரிக்க வில்லை என்னில் அது மற்ற ப்ரத்யக்ஷத்தை விடப் பலமுள்ளது † என்பது எப்படிப் பொருந்தும்?

ப்ரத்யக்ஷ ஜ்ஞானமே மோக்ஷத்திற்குக் காரண மென்பது ஶ்ருதிகளில் ஏற்பட்ட தென்று சொல்லப்பட்டதே, அதை மாத்திரம் ஒப்புக்கொண்ட போதிலும் எங்களுக்கு ஒருவித விரோத முமில்லை.

ஶாஸ்திரத்தினுலேயே ஶப்தத்திற்கு ப்ரத்யக்ஷ ஜ்ஞானத்திற்குக் காரணமா யிருக்கும் தன்மை உண்டென்று சொல்லப் பட்டிருக்கிறது என்று கீழே சொல்லப்பட்டதே, அதுவும் பரிஹாஸம் செய்யத் தக்கது, அந்த ப்ரமாணங்கள் வேறு தாத்பர்யத்தை உடையவைகள் என்பது சிறு பிள்ளைகள் முதல் கொண்டு

---

* த்ருஶ்யத்வம் ஏற்பட்டு விட்டால், எது த்ருஶ்யமோ அது மித்யை என்று உங்களால் சொல்லப் பட்டிருப்பதினுல் ப்ரும்மமும் மித்யையாக வேண்டிவரும் என்றபடி.

† ப்ரும்மத்தை விஷயீகரிக்காத பக்ஷத்தில் ப்ரபஞ்சத்தை விஷயீகரிக்கிற மற்ற ப்ரத்யக்ஷங்களை அனுஸரித்திருப்பதினுல் விரோதம் இல்லை. விரோதமில்லாத பக்ஷத்தில் எது பலமுடையது, எது பலமில்லாதது என்கிற விசாரத்திற்கே இடமில்லை, இரண்டு ப்ரத்யக்ஷங்களும் பொய்யான வஸ்துக்களையே அறிகிறபடியினுலும் பலாபலம் ஏற்படுத்த இடமில்லை என்றபடி.

ப்ரஸித்தே:, ஸாக்ஷாத்காரஹேதோர்மநஸஸ்ஸஹாயதயா த்ருடவ்யவஸாயஹேதுத்வமாத்ரேண வா ததுபபத்தே:, யதாஶ்ருதக்ரஹணே சக்ஷுஷ்ட்வஸ்ய ஸ்வீகர்தவ்யத்வாத்। 1 'ஶ்ருதிஸ்ம்ருதீ து விப்ராணாம் நயநே த்வே' இதி ஹி ஶ்ரூயதே। 2 'வேதாந்தவிஜ்ஞாநஸுநிஶ்சிதார்தா:' இத்யாதிஷு பரோக்ஷவ்யவஸாயமாத்ரமேவோச்யதே। யத்து விஜ்ஞாநமிதி விஶேஷணேந விஶேஷவிஷயத்வஸித்த்யா நிஶ்சயஹேதுத்வே ச ஸித்தேऽபி ஸம்யகிதி விஶேஷணாதபரோக்ஷநிஶ்சயஹேதுத்வம் ஸித்த்யதீதி, ததத்யந்தபரிஹாஸ்யம், அகல்பநீயவ்யவஸாயவிவக்ஷயா ஸம்யக்ப்ரயோகாத்। ய: ஸம்யக் தத்த்வஸாக்ஷாத்காரஜந்ய

ப்ரஸித்தமாயிருப்பதினாலும், ப்ரத்யக்ஷத்திற்குக் காரணமான மனது இவ்விடத்திலும் ஸஹாயமாயிருப்பதினாலேயாவது உறுதியான நிஶ்சய ஜ்ஞானத்திற்குக் காரணமாயிருப்பது மாத்திரத்தினாலாவது அப்படிச் சொல்லியிருப்பது பொருந்துமாதலாலும், வாக்யத்தில் சொல்லியபடி அர்த்தத்தை அங்கீகரிக்கும் பக்ஷத்தில் மனது கண்ணென்றே (அதாவது கண்ணாகவே இருக்கை) ஒப்புக்கொள்ளவேண்டி வருமாதலாலும். ஏனெனில் 'வேதம் ஸ்ம்ருதி இவைகள் ப்ராம்மணர்களுக்கு இரண்டு கண்கள்' என்றல்லவோ ஶ்ருதியில் சொல்லப்படுகிறது. 'வேதாந்தங்களில் உண்டான விவேக ஜ்ஞானத்தினால் நன்றாய் நிஶ்சயிக்கப்பட்ட அர்த்தத்தை உடையவர்கள்' என்றிவை முதலிய வாக்யங்களில் ப்ரத்யக்ஷமில்லாத நிஶ்சய ரூபமான ஜ்ஞானம் மாத்திரம் சொல்லப்பட்டிருக்கிறது. விஜ்ஞானம் என்று விஶேஷணம் இருப்பதினால் விஶேஷாகாரத்தைப் பற்றிய ஜ்ஞானமென்றேற்படுகிற படியினாலே நிஶ்சயத்திற்குக் காரணமென்று ஏற்பட்டிருந்தபோதிலும் 'ஸம்' என்கிற விஶேஷணம் சொல்லியிருப்பதினால் ப்ரத்யக்ஷமாகிய நிஶ்சயத்திற்குக் காரணம் என்பதும் ஸித்தித்து விட்டது என்று சொல்லுவது மிகவும் பரிஹாஸம் செய்யத் தக்கது, கலக்க முடியாத நிஶ்சயரூப ஜ்ஞானத்தைத் தாத்பர்யத்தில் வைத்துக்கொண்டு 'ஸம்' என்னும் பதம் ப்ரயோகிக்கப் பட்டிருப்பதினால்

1.   2. தைத்திரீயம்.

ஜ்ஞாநத்வாதிதி ப்ரயோக:, ஸ தஜ்ஜந்யஶ்ராவணஜ்ஞாநேநாநைகாந்திக:, அதிப்ரஸங்கஶ்ச, வாக்யாந்தரேஷ்வப்யேவம் ப்ரயோக்தும் ஶக்யத்வாத், பரிஹாரஸ்ய ச ஸமத்வாத், விஷயஜந்யேஷு ச வ்யாப்தேஸ்ஸங்கோசாத் ।

'அந்த ப்ரும்மம் நீயாகிறுய்' என்பது முதலிய வாக்யங்களினுல் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானமாகையினுல் என்று ஹேது ப்ரயோகிக்கப்பட்டிருக்கிறதே, அதுவும் அந்த வாக்யத்தினுல் உண்டாக்கப்படுகிறதாயும், 'கேட்கத் தக்கவன்' என்கிற வாக்யத்தினுல் ஏற்பட்டதாயும் இருக்கிற ஶாப்தபோதமாகிய (ஶப்தத்தைக் கேட்டவுடன் உண்டாவதாகிய) ஜ்ஞானத்தில் வ்யபிசார மென்னும் தோஷத்தை உடையது *. மேலும் அதிப்ரஸங்கமும் வரும். மற்ற வாக்யங்களிலும் இப்படியே அனுமானம் ப்ரயோகிக்க முடியுமாதலாலும் ஆக்ஷேபத்திற்கு பரிஹாரம் இரண்டிடத்திலும் துல்யமாதலாலும். † ஜ்ஞானம் ப்ரத்யக்ஷமாவதற்கு ஹேது அந்தந்த விஷயங்களால் உண்டாக்கப்பட்டதா யிருக்கை. அப்படிப்பட்ட ப்ரத்யக்ஷங்களில் இந்த வாக்யத்தினுல் உண்டாக்கப்பட்டதாகிற ஹேதுவில்லாமையினுல் வ்யாப்திக்கு ஸங்கோசம் என்கிற தோஷம் வருகிறது.

---

* அதாவது ஸாத்யம் இல்லாத இடத்தில் ஹேது இருந்தால் அப்பொழுது வ்யபிசாரம் என்னும் தோஷம் ஏற்படும். இவ்விடத்தில் ப்ரத்யக்ஷமா யிருக்கும் தன்மை இல்லாத ஶாப்த போதத்தில் 'அந்த ப்ரும்மம் நீ யாகிறுய்' என்கிற வாக்யத்தினுல் உண்டாக்கப்பட்ட ஜ்ஞானமா யிருக்கை என்கிற ஹேது இருக்கிறபடியினுல் தோஷமுடைய ஹேதுவைக் கொண்டு ஸாத்யத்தை ஸ்தாபிக்க முடியாது என்றபடி.

† அதாவது ஜ்யோதிஷ்டோமம் முதலியவைகளைச் சொல்லுகிற வாக்யங்களில் அந்த ஜ்ஞானம் ப்ரத்யக்ஷமாக இருக்க வேண்டும் என்கிற நிர்ப்பந்தமில்லை. ஏனெனில், அந்த வாக்யங்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டு அதன்படி அனுஷ்டித்துப் பலத்தை அடையலா மாதலால். இவ்விடத்திலோ ப்ரபஞ்ச ப்ரமத்தை நிவ்ருத்தி செய்வதாகிய ப்ரயோஜனத்திற்காக ப்ரத்யக்ஷ ஜ்ஞானமாகவே இருக்க வேண்டும் என்று ஆக்ஷேபம்.

**ந வாக்யஜந்யதா ஹேது: ப்ரத்யக்ஷத்வே து கிம் புன:|
விஷயஜந்யதைவ ஸ்யாத் ததஸ்ஸோபாதிகஸ்த்வயம் ||**

வாக்யவிஷயப்ரத்யக்ஷேऽபி வாக்யஸ்யைவ விஷயத்வாத் விஷயஜந்யத்வஸ்ய ஸாத்யவ்யாபகத்வாவிரோத:| யத்து ஸ்வப்ரகாஶார்த்தோபதேஶரூபத்வாத் ஸ்வத: ப்ரத்யக்ஷார்த்தவிஷயத்வாச்சேதி, ஹேதுத்வயமபி பூர்வவதேவானைகாந்திக:| உதாஹ்ருதேஷு ச ஸாத்யவிகலத்வம் உபபாதிதமேவேதி |

காமல் அப்படிப்பட்ட உண்மையாயிருக்கும் தன்மை ஸித்திக்காதாதலால். ஐந்தாவது பக்ஷமும் உசிதமல்ல, அது எல்லா வஸ்துக்களிலும் ப்ரமாணங்களினால் மறுக்கப்பட்டிருப்பதினால் முயல் கொம்புபோல் ஸித்திக்காமல் போகவேண்டி வருமாதலால். அது இந்திரியங்களினால் அறியக் கூடியதென்னில், அது அப்படி ஒருவராலும் அறியப்படாமையினால் பாதம் வருகிறது—என்று (சொல்லுகிறார்கள்).

[ஸித்தாந்தாரம்பம்.]

இது ஸாரம் இல்லாத வார்த்தை. ப்ரமாணத்தினால் ஏற்பட்டிருக்கையே எல்லாவஸ்துக்களிலும் ஸத்தாயிருக்கை (உண்மையாயிருக்கை) என்று ஒப்புக்கொள்ளுகிறோம். அதுவும் ஸ்ரீபாஷ்யத்தில் 'வ்யவஹாரம் செய்வதற்கு (அதாவது ஒரு காரியம் செய்வதற்கு) தகுந்ததாயிருக்கை ஸத்தாயிருக்கை' என்று அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஸ்வபாவம் அதை மறுக்கக் கூடிய அனுமானம் உயிரோடிருக்கும் பொழுது ஸித்திக்காது என்று சொல்வது உசிதமல்ல, பாதம் என்கிற ஒரு தோஷமே காரணம் இல்லாததாகப் போகவேண்டிவருமாதலால். எப்படி நெருப்பு சுடாது என்கிற அனுமானம் அதற்கு எதிர்நடையான சுடுகையை அறிகிற ப்ரத்யக்ஷத்தினால் மறுக்கப்படுகிறதோ, அப்படியே இவ்விடத்திலும் உண்மையல்ல (பொய்) என்கிற

𑌯𑍋𑌰𑍍𑌮𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌣𑌾 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍇। 𑌨 𑌚 𑌤𑌨𑍍 𑌨 𑌗𑍃𑌹𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑍍𑌯𑌂, 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌤𑌦𑍍𑌗𑍍𑌰𑌹𑌾𑌤𑍍 𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 — 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌪𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑍋𑌕𑍍𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑌿𑌃 𑌖𑌣𑍍𑌡𑌨𑌾𑌤𑍍 । 𑌤𑌤𑍍𑌰 𑌖𑌣𑍍𑌡𑌿𑌤𑌤𑍍𑌵𑍇 𑌤𑌦𑍇𑌵 𑌵𑌿𑌶𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌪𑌶𑍍𑌯 । 𑌸𑍍𑌵𑌤𑌃 𑌸𑌦𑍇𑌵 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌕𑌿𑌮𑌹𑍇𑌤𑍁𑌕𑌤𑍍𑌵𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 ? 𑌉𑌤 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌂? 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌸𑌤𑍍𑌤𑌾𑌹𑌾𑌨𑍇𑌽𑌪𑌿 𑌸𑌤𑍍? 𑌇𑌤𑌿 । 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌤𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑍇𑌕𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯 𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌸𑌾𑌧𑌿𑌤𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑌂𑌶𑌤𑌃 𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑌾𑌧𑍍𑌯𑌤𑌾 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌨𑌾𑌤𑍍 𑌸

அனுமானம் அதற்கு எதிர்நடையான உண்மை என்பதை அறிகிற ப்ரமாணத்தினால் மறுக்கப் படுகிறது. அந்த உண்மையாக இருக்கை அறியப் படுகிறதில்லை என்று சொல்லுவது உசிதமல்ல, (அப்படி உண்மையென்பது ஒன்றினாலும் அறியப் படாமல் போனால்) அதின் இல்லாமையாகிற பொய்யாயிருக்கையும் ஸித்திக்காமல் போக வேண்டி வரும் (ஏனெனில் உண்மை என்கிற ஸ்வபாவம் இப்படிப் பட்டது என்று அறிந்து அது இவ்விடத்தில் இல்லை என்றே அறிய வேண்டுமாதலால்). ப்ரும்மத்தின் இடத்தில் உண்மையாயிருக்கை அறியப்படுகிறபடியினால் அதின் இல்லாமை என்பது ஸித்திக்கிறது என்பதும் உசிதமல்ல, ப்ரும்மத்தின் இடத்திலும் உண்மையாயிருக்கும் தன்மை உன்னால் சொல்லப்பட்ட யுக்திகளினால் கண்டிக்கப்பட்டிருப்பதினால். ப்ரும்மத்தின் இடத்தில் கண்டிக்கப்படவில்லை என்னில், அப்படிப்பட்ட உண்மையாயிருக்கும் தன்மையே ப்ரபஞ்சத்தின் இடத்திலும் இருக்கிறதென்று யோசித்துப் பார். ப்ரும்மம் தன்னாலேயே ஸத்தாக இருக்கிறது என்னில், (இத்னால் என்ன சொல்லப்பட்டது?) காரணம் இல்லாதது என்பதா? ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கிறது என்பதா? உண்மையாக இல்லாவிட்டாலும் ஸத் என்பதா? முதலாவது பக்ஷத்தில் ப்ரும்மத்தைவிட ப்ரபஞ்சம் வேறுபட்டது என்பதினால் ப்ரபஞ்சம் ஒன்றினால் உண்டாக்கப்பட்டது என்று சொல்லப்பட்டதாகும். ஆகையினால் ஒரு பாகத்தினால் ஸித்தஸாதனம் என்னும் தோஷம் வருகிறது. இரண்டாவது பக்ஷத்திலும் வேறென்றால் ப்ரகாசம்

ஏவ தோஷ꞉ | த்ருதீயே து ப்ரபஞ்சஸ்யாபி தத்வத் ஸத்த்வே கோ விரோத⁴꞉? அநேந ஸத்த்வஸ்ய ஸத்த்வாந்தராபா⁴வாத் அஸத்த்வப்ரஸங்கோ³பி ப்ரத்யுக்த꞉ | அத꞉ ஸத்த்வஸ்ய ஸர்வத்ர ப்ரதிக்ஷேபே ஶூந்யவாதா³வதார꞉ | க்வசித் தத³ப்⁴யுபக³மே ப்ராமாணிகேஷு ஸர்வேஷ்வபி தத்ஸித்³தி⁴ர்நிவார்யேதி | ந சைவம் மித்²யாத்வாஸத்த்வாதௌ³, தஸ்ய ஸாமாந்யேந க்வசித³ப்யப்ரதிக்ஷேபாத் | ஸத்யஸ்யைவ ஹி ரஜதத்வாதே³꞉ ஸ்வாத்யந்தாபா⁴வாஶ்ரயநிஷ்ட²தயா ப்ரதீயமாநத்வவேஷேண மித்²யாத்வம், தத³நிஷ்டா²த்யந்தாபா⁴வ

செய்யப்படக்கூடியது என்று ஸாதித்ததாகு மாதலால் அந்தத் தோஷமே வரும். மூன்றுவது பக்ஷத்திலும் ப்ரபஞ்சத்திற்கும் அந்த தர்மத்தைப்போல் உண்மையாயிருக்கும் தன்மை இருப்பதில் என்ன விரோதம்? இத்தால் உண்மையாயிருக்கும் தன்மைக்கு மற்றொரு உண்மையாயிருக்கும் தன்மை இல்லை யாதலால் அது உண்மை இல்லாமல் போக வேண்டிவரும் என்கிற கேள்வியும் பதில் சொல்லப் பட்டதாகிறது. ஆகலால் உண்மையா யிருக்கையை நிராகரித்ததினால் எல்லாம் ஶூந்யம் என்கிற பக்ஷமே வந்துவிடும். ஏதாவது ஓர் இடத்தில் உண்மையாய் இருக்கும் தன்மையை ஒப்புக்கொண்டால் ப்ரமாணத்தினால் ஏற்பட்ட மற்றெல்லா வஸ்துக்களிலும் அது ஸித்தித்துவிடும் என்பது தடுக்கமுடியாது. (இப்படியே பொய்யாயிருக்கை அஸத்தாக இருக்கை முதலியவைகளைப் பற்றிக் கேட்கமுடியுமே (அதாவது இந்த மித்யையாயிருக்கை எங்கேயாவது ஓரிடத்தில் ஒப்புக்கொள்ளப் பட்டால் எல்லா இடத்திலும் அதைப்போல ஸித்திக்கலாமே? ஓரிடத்திலும் இல்லாவிடில் ப்ரஸித்தமில்லாத அந்தத் தன்மை ஓரிடத்திலும் மறுக்கமுடியாதே? என்கிற கேள்விகேட்கலாமே) என்பது உசிதமல்ல, ஏனெனில் அந்தப் பொய்யா யிருக்கும் தன்மை முதலியதைப் பொதுவாக ஓர் இடத்திலும் இல்லை என்று நிராகரிக்கவில்லை யாதலால். பின்னை எப்படி என்னில்:—வேறு ஓர் இடத்தில் உண்மையாகிய வெள்ளியாயிருக்கும் தன்மையே தான் இல்லாத இடத்தில் இருப்பதாகத் தோன்றுகிறபடியினால் பொய்

ப்ரதீயதே தத்ரைவ தஸ்யாஸத்த்வமிதி யதாலோகஸம்ப்ரதிபந்நத்வாத் |

கிஞ்ச ய ஏஷ விஶ்வம் விசாராஸஹம் மித்யாऽநிர்வசநீயம் சேத்யாதிபரஸ்பரவ்யாஹதப்ரதிஜ்ஞாநாதிஶயதே, ஸ கிம் ஸ்வபக்ஷம் கிஞ்சித் ஸ்தாபயதி? ந வா? ஸ்தாபநேऽபி ப்ரமாணத:? அப்ரமாணதோऽபி வா? நேதி பக்ஷே பரபக்ஷம் தூஷயதோऽயமேவ விகல்ப: | தத்ர ப்ரமாணத இதி பக்ஷே தத்ப்ரமாணம் ததாத்வேந விசாரஸஹம்? ந வா? ப்ரதமே து கதம் விஶ்வமித்யாத்வம்? தஸ்யாபி தத³ந்த:பாதாத் | உத்தரத்ர கதம் தத் ப்ரமாணம்? ப்ரமாணதாப்ரமேணேதி சேத், ததாऽபி கிம் தேந? அந்யதா ஹேத்வாபாஸாநா

என்று சொல்லப்படுகிறது, எந்த இடத்தில் இருப்பதாகத் தோன்றுகிறதோ அந்த இடத்தில் இல்லாமைதான் அஸத்தாயிருக்கை என்று லோகத்தை அனுஸரித்து அங்கீகரிக்கப்பட்டிருப்பதினால்.

மேலும் எவன் இந்த உலகம் விசாரத்தைப் பொறுக்காது, பொய், அநிர்வசனீயம், என்று ஒன்றுக்கொன்று விருத்தமாக ப்ரதிஜ்ஞை செய்கிறானோ அவன் தன்னுடைய பக்ஷம் ஏதாவது ஒன்றை ஸ்தாபிக்கிறானா? இல்லையா? ஸ்தாபிக்கும் பக்ஷத்தில் ப்ரமாணத்தைக் கொண்டா? ப்ரமாணமாகாததினாலா? ஸ்தாபிக்கவில்லை என்னும் பக்ஷத்திலும் எதிரியின் பக்ஷத்தை நிராகரிக்கிறவனுக்கும் இதுவே விகல்பம். அதில் ப்ரமாணத்தைக் கொண்டு ஸ்தாபிக்கிறோம் என்றும், எதிரியின் பக்ஷத்தை நிராகரிக்கிறோம் என்றும் சொல்லுகிற பக்ஷத்தில் அந்த ப்ரமாணம் அப்படிப்பட்டதாக (ப்ரமாணமாக) விசாரத்தைப் பொறுக்கக்கூடியதா? இல்லையா? முதலாவது பக்ஷத்தில் எப்படி எல்லாம் பொய் என்பது ஸித்திக்கும்? அந்த ப்ரமாணமும் எல்லாம் என்பதற்குள் அடங்கியதாதலால். இரண்டாவது பக்ஷத்திலும் அது எப்படி ப்ரமாணமாகும்? ப்ரமாணமென்று ப்ரமிப்பதினால் என்னில், அதினால் என்ன ப்ரயோஜனம்? அப்படிக்கில்லாவிடில்

ப்ரதிக்ஷேபே ஸர்வஸம்ஶயஸாம்ராஜ்யப்ரஸங்காத் | லோகவ்யவஹாரஸித்திரிதி சேத், ந — தஸ்ய ஸ்வபரிகரஸ்ய பரிக்ரஹே லோகஸ்வீகாரணாத் | ப்ரமாணாந்தராவிரோதாதேஶ்ச தத்பரிகரத்வாத் | அந்யதா லோகதோऽப்யஸித்தே: | த்ரிசதுரகக்ஷ்யாவிசாரஸ்தாபிதமிதி சேத், ந — ததைவ விஶ்வாஸ்தித்வக்ராஹகப்ரமாணாநாமப்யவஸ்தாபநாத் | தத்விசாரபாதகஸ்ய விஶ்வத்வேஷிண்யபி நிவாரகாபாவாத் | தஸ்ய து ப்ரதமகக்ஷ்யாயாமேவ ஸ்பஷ்டப்ரதீதிவ்யாகாதாதிபிர்விலூய இதி விஶேஷ இதி | ந சாபச்சேதநிமித்தநைமித்திகஶாஸ்த்ர

தோஷமுள்ள ஹேதுக்களை நிராகரிக்காதபக்ஷத்தில் எல்லாமதங்களும் இவ்வுலகத்தில் ராஜ்யம் செலுத்தக் கூடுமாதலால் (அதாவது நடையாடக் கூடுமாதலால் என்றபடி). உலகத்தில் வழங்கி வருவதால் அது ஸித்திக்கிறது என்பதும் உசிதமல்ல, அங்கங்களோடு கூடிய அந்த வ்யவஹாரத்தை அங்கீகரித்தால் உலகம் உண்டென்று ஒப்புக் கொண்டதாகுமாதலால். மற்றொரு ப்ரமாணத்திற்கு விரோதம் இல்லாமை முதலியதும் அந்த உலக வ்யவஹாரத்திற்கு அங்கமாதலால். அப்படிக்கில்லாவிடில் உலக நடவடிக்கையாலும் ப்ரமாணம் என்பது ஸித்திக்காது. மூன்று நாலு கக்ஷிகள் வரையிலும் விசாரிப்பதினுல் ப்ரமாணம் என்பது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது என்பதும் உசிதமல்ல, அப்படியே ப்ரபஞ்சம் உண்டென்று ஸாதிக்கக் கூடிய ப்ரமாணங்களையும் ஸ்தாபிக்கக் கூடுமாதலால். அதைப்பற்றிய விசாரங்களுக்குப் பாதகமான ப்ரமாணம் உண்டென்பதை ப்ரபஞ்சம் இல்லை என்கிற ப்ரமாணத்திலும் தடுக்க முடியாததலால். அந்த ப்ரபஞ்சம் பொய் என்று ஸாதிக்கும் ப்ரமாணத்திற்கோவெனில் முதலாவது கக்ஷியிலேயே ப்ரகாசமாகத் தோன்றுகிற ப்ரத்யக்ஷம் முதலிய ஜ்ஞானங்களுக்கு விரோதமாக இருப்பது முதலிய காரணங்களினுல் நாசம் உண்டாகிறது என்பது விஶேஷமானது. அபச்சேதத்தை* காரணமாகஉடைய ப்ராயஶ்சித்த

* ஜ்யோதிஷ்டோமயாகத்தில் ரித்விக்குக்கள் ஒருவரை ஒருவர் பிடித்துக்கொண்டு சுற்றி வரவேண்டும். அதில் உத்காதா ஹோதா

யோ: ப்ராமாண்யாவிஶேஷ இவ அப்ராமாண்யாவிஶே
ஷே'பி பரத்வாத் ப்ராபல்யம் — ந ஹி த்ருஷ்டா
ந்தே ததோ'பி பரத்வாத் | அபி ச உக்தநீத்யா சேத்,
ந — ஸ்வதோஷஸ்ய பரத்ராரோபாத் | பரத்வமாத்ரே
ண ப்ராபல்யம் ப்ருவதஸ்தவைவாயம் தோஷ: | கிம்
ச யதி ப்ராமாணம் பரம் ஸ்வவிஷயம் நாவஸ்தாபயேத்,
கதம் ப்ரபலம்? ஸ்தாபயதி வா கதமப்ராமாண்யம்?

ஶாஸ்திரங்கள் இரண்டும் ப்ரமாணமாக இருக்கின்றன என்பதில் துல்யமாயிருந்த போதிலும் பிற்பாடு உண்டான காரணத்தைப் பற்றி வரும் ப்ராயஶ்சித்த ஶாஸ்திரம் பலமுள்ளது என்று நிஶ்சயிக்கப் பட்டிருப்பதைப் போல இரண்டு ப்ரமாணங்களும் ப்ரமாணம் இல்லை என்கிற விஷயத்தில் துல்யமாயிருந்த போதிலும் உண்மையல்ல என்கிற எங்களுடைய மறுப்பு உண்மை என்கிற ஶ்ருதிக்குப் பிறகு வரக்கூடியதாதலால் பலமுள்ளது என்பதும் உசிதமல்ல. * ஏனெனில் உலகம் பொய்யல்ல என்கிற எங்களுடைய வார்த்தை அதை விடப் பிற்பட்டதாதலால். அப்படியாகில் ஓரிடத்திலும் முடிவு இல்லாமல் போகவேண்டி வரும் என்பதும் உசிதமல்ல, உன்னுடைய தோஷத்தை என்னிடத்தில் ஆரோபிக்கிறுயாகையினுல். பிற்பட்டது என்கிற காரணத்தினுல் மாத்திரம் பலமுடையது என்று சொல்லுகிற உனக்கேயல்லவோ இந்ததோஷம் வரும். மேலும்ப்ரமாணமில்லாத பிற்பாடுண்டான ப்ரமாணம் தன் விஷயத்தை ஸ்தாபிக்காமல் போனுல் அது எப்படிப் பலமுள்ளதாகும்? ஸ்தாபித்ததேயானுல் அது அப்ரமாணம் என்பது எப்படி பொருந்தும்? ப்ரமாணமாக இருந்

அத்வர்யுக்கள் இவர்களில் ஒவ்வொருவர் விட்டால் அததற்குத் தனித்தனியாகப் ப்ராயஶ்சித்தம் விதிக்கப்பட் டிருக்கிறது. இரண்டு பேர்கள் விட்டால் பிற்பாடு விட்டதற்குத் தகுந்த ப்ராயஶ்சித்தம் பண்ண வேண்டும், பிற்பாடு உண்டான ஶாஸ்திரம் பலமுள்ளதாகையினுல், என்று பூர்வமீமாம்ஸையில் நிர்த்தாரணம் செய்யப்பட்டிருக்கிறது இது தான் அபச்சேத ந்யாயம் என்றபடி.

𑌨𑌨𑍁 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑍍𑌯𑍈𑌵 𑌕𑌥𑌂 𑌬𑌾𑌧𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌤𑌦𑍍𑌬𑌾𑌧𑍇 𑌵𑌾 𑌕𑌥𑌂 𑌤𑌤𑍍? 𑌇𑌤𑍍𑌯𑌪𑌚𑍍𑌛𑍇𑌦𑍇𑌽𑌪𑌿 𑌪𑍍𑌰𑌸𑌜𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 – 𑌸𑌮𑌨𑌿𑌯𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑌪𑍂𑌰𑍍𑌵𑌾𑌪𑌰𑌤𑌯𑌾 𑌅𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌸𑌂𑌭𑌾𑌵𑌨𑌯𑌾 𑌚 𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌾𑌨𑍍𑌤𑌰𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑍇𑌃 । 𑌕𑌿𑌂 𑌚 𑌤𑍍𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌦𑍋𑌷𑌕𑌾𑌰𑌣𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌤𑍍𑌵𑌂 𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌅𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌦𑍋𑌷𑌾𑌪𑍍𑌰𑌸𑍂𑌤𑌤𑌯𑌾𑌪𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌵𑌿𑌭𑌾𑌗𑌃 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌮𑌾𑌧𑍍𑌯𑌮𑌿𑌕𑌯𑍁𑌕𑍍𑌤𑍀𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌜𑍀𑌵𑌿𑌤𑌾𑌪𑌹𑌾𑌰𑌿𑌣𑍀𑌨𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑌃 𑌪𑍍𑌰𑌬𑌲𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑍇𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌨 𑌕𑌥𑌞𑍍𑌚𑌿𑌦𑌪𑌿 𑌵𑌿𑌶𑍍𑌵𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌶𑌕𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 ।

தால் மறுக்கப்பட்டதாயிருக்கும் தன்மை எப்படி பொருந்தும்? மறுக்கப்பட்டிருந்தால் எப்படி ப்ரமாணமாகும்? என்று அபச்சேதத்திலும் இந்த ப்ரஸங்கம் வருகிறதே என்னில், அது உசிதமல்ல, ஒன்றுக்கொன்று விரோதமான முன் பின் என்பது ஒன்றைப் போலவே மற்றொன்றிலும் வர வேண்டும் என்கிற நியமம் இல்லாமையினாலும் ஒவ்வொரு ஶாஸ்திரம் மாத்திரமுண்டாகலாமாகையினாலும் மற்ற ப்ரயோகங்களில் அவைகளுக்கு ப்ரமாணமாயிருக்கும் தன்மை பொருந்துமாதலால். மேலும் உன்னால் சொல்லப்படுகிற ப்ரமாணமும் தோஷத்தோடு கூடிய காரணத்தினால் உண்டானதென்பது உன்னாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதாதலால் தோஷத்தினால் உண்டாக்கப் பட்டதில்லை என்பதினாலும் பலமுள்ளது பலமில்லாதது என்கிற பிரிவு சொல்ல முடியாது. அப்படிக்கில்லாவிடில் எல்லா ஸித்தாந்தங்களினுடைய ஸாராம்ஶங்களையெல்லாம் நாசம் செய்கிற மாத்யமிகனுடைய யுக்திகளே எல்லாவற்றையும் விட பிறபட்டதாதலால் அதுவே பலமுள்ளது என்று சொல்ல வேண்டி வருமாதலால். ஆகையினால் எவ்விதத்திலும் ப்ரபஞ்சம் பொய் என்கிற ப்ரதிஜ்ஞை செய்ய முடியாது என்று ஏற்பட்டு விட்டது.

𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌚 𑌕𑌿𑌂 𑌵𑌿𑌵𑌕𑍍𑌷𑌿𑌤𑌮𑍍? 𑌕𑌿𑌂 𑌚𑌾𑌕𑍍𑌷𑍁𑌷𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌉𑌤 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌯𑌦𑍍𑌵𑌾 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌰𑌮𑍍? 𑌉𑌤 𑌦𑍃𑌗𑍍𑌭𑌿𑌨𑍍𑌨𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌅𑌨𑍍𑌯𑌦𑍍𑌵𑌾 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌿𑌤𑌿। 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃—𑌭𑌾𑌗𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌅𑌤 𑌏𑌵 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃—𑌵𑍍𑌯𑌰𑍍𑌥𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍। 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌂 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌂 𑌸𑌾𑌰𑍍𑌥𑌕𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍। 𑌅𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇 𑌵𑌾 𑌯𑍋𑌗𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑌤𑌯𑌾 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌬𑌾𑌧𑌨𑌾𑌦𑍍 𑌹𑍇𑌤𑍋𑌸𑍍𑌤𑌤𑍍𑌰 𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌃। 𑌨 𑌚 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃—𑌅𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵। 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌮𑌾𑌤𑍍𑌰

காணக்கூடியதா யிருக்கும் தன்மை என்பதினால் அபிப்ராயத்தில் கொள்ளப்பட்டது எது? கண்களால் பார்க்கப்படக்கூடியதாயிருக்கையா? ப்ரத்யக்ஷமாகிய ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருக்கையா? அப்படிக்கில்லாமல் ஏதாவது ஒரு ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருக்கை மாத்திரமா? அன்றிக்கே ஜ்ஞானத்தைவிட வேறுபட்டதா? அதுவுமல்லாமல் வேறு ஏதாவதொன்றா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, பாகாஸித்தி * என்னும் தோஷம் வருகிறபடியினால். அந்த தோஷத்தினாலே இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, ப்ரத்யக்ஷம் என்கிற விசேஷணமும் ப்ரயோஜனமற்றதாதலால். ப்ரும்மத்தைவிட வேறுபட்டது என்று தெரிவிப்பதற்காகச் சொல்லப்பட்டிருக்கிறபடியினால் அந்த விசேஷணம் ப்ரயோஜனத்தை உடையது என்பதும் உசிதமல்ல, அந்த ப்ரும்மம்ஜ்ஞானத்திற்கு விஷயம் என்று உன்னால் ஒப்புக்கொள்ளப்படாமையினால். அப்படி ஒப்புக் கொண்டால் யோகிகளின் ப்ரத்யக்ஷம் முதலியவைகளுக்கு அந்த ப்ரும்மம் விஷயமாயிருப்பதினாலும் ப்ரத்யக்ஷமெல்லாம் ஸத்தென்பதை மாத்திரம் அறிகிறது என்று உங்களால் நிரூபிக்கப்பட்டிருப்பதினாலும் (பொய் என்று ஒப்புக் கொள்ளப்படாத ப்ரும்மத்தின் இடத்தில் ஹேது இருக்கிறபடியினால்) வ்யபிசார தோஷம் வருகிறது. மூன்றாவது பக்ஷமும் உசிதமல்ல, அந்த வ்யபிசாரம் என்னும் தோஷமே வருகிற படியினால். ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருக்கை மாத்

* ஸாதிக்கப்படுகிற இடங்களில் சிலவற்றில் ஹேதுவில்லாமலிருப்பது.

𑌅𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 — 1 '𑌆𑌤𑍍𑌮𑌾 𑌵𑌾 𑌅𑌰𑍇 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍋𑌤𑌵𑍍𑌯𑍋 𑌮𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑍋 𑌨𑌿𑌦𑌿𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌵𑍍𑌯𑌃', 2 '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌵𑍇𑌦 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵 𑌭𑌵𑌤𑌿', 3 '𑌅𑌥𑌾𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌜𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑌾' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍂𑌭𑌯𑌵𑌾𑌦𑍍𑌯𑌭𑌿𑌮𑌤𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍, 𑌸𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌗𑍍𑌰𑌾𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌮𑌿𑌤𑌿 𑌵𑌾𑌦𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌬𑌾𑌧𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚 । 𑌵𑍍𑌯𑌾𑌵𑌹𑌾𑌰𑌿𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂, 𑌨 𑌤𑍁 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌹𑍋! 𑌕𑌿𑌂 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌮𑍍? 𑌯𑍇𑌨 𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌧𑍍𑌯𑍇𑌤𑍍 । 𑌤𑌥𑌾 𑌚 𑌸𑌤𑌿 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂, 𑌤𑌤 𑌏𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌮𑌿𑌤𑌿 𑌉𑌨𑍍𑌮𑌤𑍍𑌤𑌜𑌲𑍍𑌪𑌿𑌤𑌾𑌯𑍇𑌤 । 𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯𑌾𑌪𑌿

திரம் ப்ரும்மத்திற்கு இல்லை என்பது உசிதமல்ல, 'ஆத்மா பார்க்கப்படத் தக்கவன், கேட்கப்படத்தக்கவன் சிந்தனை செய்யப் படத்தக்கவன், த்யானம் செய்யப்படத்தக்கவன்', 'ப்ரும்மத்தை அறிந்தவன் ப்ரும்மமாகவே ஆகிறான்', 'கர்மவிசாரம் செய்த பிறகு அது விசாரிக்கப்பட்டதினாலேயே ப்ரும்மத்தைப் பற்றிய விசாரம் செய்யவேண்டும்' என்றிவை முதலிய தன்னாலும் எதிரியினாலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஶ்ருதி ஸூத்திரம் முதலியவைகளுக்கு விரோதம் வருகிறபடியினாலும், ப்ரத்யக்ஷமெல்லாம் ஸத் என்பதை அறிகிறது என்று சொல்லி இருப்பதையும் விடவேண்டி வருமாதலாலும். ப்ரும்மத்திற்குப் பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை வ்யவஹாரத்தினால் ஏற்பட்டதே ஒழிய உண்மையானதல்ல என்னில், அஹோ! ப்ரபஞ்சத்திற்குப் பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை உண்மையானதா? அப்படி இருந்தாலல்லவோ அந்த ப்ரபஞ்சத்தில் பொய்யாயிருக்கும் தன்மை ஸித்திக்கும். அப்படியாகில் பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை உண்மையானது, ஆகையினாலே எது பார்க்கப்படக்கூடியதோ அது பொய் என்பது ப்ரமம் பிடித்தவன் பிதற்றுவதைப் போலாகும். ஆகையினால் ப்ரபஞ்சத்திற்கும் வ்யவஹாரத்தினால் ஏற்பட்டதாகிய பார்க்கப்படக் கூடியதாயி

1: ப்ருஹதாரண்யகம்-6-5-9. 2. முண்டகம்-3-2-9.
3. ஶாரீரகஸூத்திரம்-1-1-1.

𑌵𑍍𑌯𑌾𑌵𑌹𑌾𑌰𑌿𑌕𑌂 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌹𑍇𑌤𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 | 𑌤𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌪𑍍𑌯𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌮𑌿𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑍇𑌷𑍇𑌽𑌪𑌿 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃 | 𑌯𑌦𑌿 𑌚 𑌵𑍍𑌯𑌾𑌵𑌹𑌾𑌰𑌿𑌕𑌮𑌪𑌿 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑍁𑌚𑍍𑌯𑍇𑌤, 𑌤𑌦𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑍋𑌕𑍍𑌷 𑌇𑌤𑌿 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 | 𑌕𑌿𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌃 𑌕𑌿𑌂 𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌬𑍋𑌧𑌕𑌃? 𑌉𑌤 𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍋𑌧𑌕𑌃? 𑌅𑌥𑌵𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌬𑍋𑌧𑌕𑌃? 𑌇𑌤𑌿 | 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌯𑍋𑌗𑌵𑍈𑌯𑌰𑍍𑌥𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 | 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃—𑌅𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌸𑍍𑌯𑌾𑌭𑌿𑌧𑌾𑌨𑍇 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌨𑌿𑌷𑍇𑌧𑌾𑌤𑍍, 𑌤𑌤𑌃 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍇 𑌹𑍇𑌤𑍋𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 | 𑌨 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌦𑍃-

---

ருக்கும் தன்மையையே அங்கீகரிக்க வேண்டும். அது ப்ரும்மத்திற்கும் துல்யம் என்று அந்த ப்ரும்மமும் பொய்யாக வேண்டி வரும் என்கிற கேள்வி துல்யமாயிருந்த போதிலும் ப்ரும்மம் ஸத்யமென்று ஒப்புக் கொண்டால் ப்ரபஞ்சமும் ஸத்ய மென்று ஒப்புக் கொள்ள வேண்டிவரும். ப்ரும்மத்திற்கு வ்யவஹாரத்தினுல் ஏற்பட்ட பார்க்கப் படக் கூடியதாயிருக்கும் தன்மையும் இல்லை யென்று சொல்லப் படுகிறதேயானுல், அப்பொழுது ப்ரும்ம ஜ்ஞானத்தினுல் மோக்ஷம் உண்டாகிற தென்கிற வேதாந்த ஸித்தாந்தத்திற்கு விரோதம் வருகிறது. மேலும் ப்ரும்மத்திற்குப் பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை இல்லை யென்று சொல்லும் பொழுது ப்ரும்ம என்னும் பதம் ஒன்றையும் தெரிவிக்கிறதில்லையா? ப்ரும்மத்தைத் தவிர வேறு வஸ்துவைத் தெரிவிக்கிறதா? அன்றிக்கே ப்ரும்மத்தைத் தெரிவிக்கிறதா? முதலாவது பக்ஷம் உசிமல்ல, ப்ரும்மம் என்னும் பதத்தை ப்ரயோகிப்பது ப்ரயோஜன மற்றதாகப் போக வேண்டி வருமாதலால். இரண்டாவது பட்சமும் உசிதமல்ல, அந்தப்பதத்தினுல் ப்ரும்மத்தை விட வேறு வஸ்து சொல்லப்படுகிறதேயானுல் அப்படிப் பட்ட வஸ்துவிற்கே பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை இல்லை யென்று சொல்லப்படுகிறபடியினுலே (ப்ரபஞ்சம் ப்ரும்மத்தை விட வேறு பட்டதாதலால்) அந்தப் ப்ரபஞ்சத்தில் இந்தக் காரணம் ஸித்

𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌯𑌥𑌾𑌕𑌥𑌂𑌚𑌿𑌤𑍍 𑌲𑌕𑍍𑌷𑌣𑌯𑌾 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌲𑌕𑍍𑌷𑌣𑌯𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌶𑌬𑍍𑌦𑌜𑌨𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑍀𑌤𑌿𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂, 𑌤𑌾𑌵𑌤𑍈𑌵 𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌽𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌂 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌶𑌬𑍍𑌦𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌲𑌕𑍍𑌷𑌣𑌾 𑌚 𑌅𑌨𑍁𑌪𑌪𑌨𑍍𑌨𑍇𑌤𑌿 𑌪𑍍𑌰𑌾𑌗𑍇𑌵𑍋𑌕𑍍𑌤𑌂 । 𑌅𑌤 𑌏𑌵 𑌸𑌰𑍍𑌵𑌶𑌬𑍍𑌦𑌾𑌗𑍋𑌚𑌰𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑌦𑌨𑍍 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌃—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨 𑌶𑌬𑍍𑌦𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑍍𑌯𑌮𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌅𑌪𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌦𑍂𑌷𑌣𑌯𑍋𑌰𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । [1] '𑌯𑌤𑍋 𑌵𑌾𑌚𑍋 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌨𑍍𑌤𑍇' 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌯𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑍇𑌨 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑍁𑌵𑌾𑌦𑍋𑌽𑌵𑌰𑍍𑌜𑌨𑍀𑌯𑌃 । 𑌉𑌪𑌹𑌿𑌤𑌮𑌨𑍂𑌦𑍍𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 । 𑌉𑌪𑌹𑌿𑌤𑌾

திக்காதாதலால். மூன்றாவது பக்ஷமும் உசிதமல்ல. ஏனெனில் ப்ரும்மத்திற்கு பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மை பரிஹரிக்க முடியாதாதலால். ஸ்வயம்ப்ரகாசமாகிய ப்ரும்மம் ஏதாவது ஒரு விதமாக லக்ஷணையினால் ப்ரும்மம் என்னும் பதத்தினால் சொல்லப்படுகிறதென்னில், அப்படி இருந்தபோதிலும் லக்ஷணை என்கிற ஸம்பந்தத்தினால் ஶப்தத்தினால் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்திற்கு விஷயமென்பது ஸித்தித்து விட்டது. அதினாலேயே பார்க்கப்படக் கூடியதாயிருக்கும் தன்மையும் விட முடியாது. ப்ரும்ம என்னும் பதத்தினால் ப்ரும்மம் லக்ஷணையாகச் சொல்லப்படுகிறது என்பது பொருந்தாது என்று முதலிலேயே சொல்லப்பட்டது. இத்தால் ப்ரும்மம் ஒரு ஶப்தத்தினாலும் சொல்லப்படுகிறதில்லை என்று சொல்லுகிறவன் நிராகரிக்கப் பட்டான், ப்ரும்மம் ஶப்தத்தினால் சொல்லப் படக் கூடியதல்ல என்று சொல்லும் பொழுது முன் போல விகல்பங்களும் அவைகளின் தூஷணங்களும் பரிஹரிக்க முடியாதாதலால். 'எதின் இடத்திலிருந்து வாக்குகள் திரும்பி விடுகின்றனவோ' என்றர்த்தமுள்ள ஶ்ருதி வாக்யத்திலும் 'யத்'(எது) என்னும் பதத்தினால் ப்ரும்மமே அநுவதிக்கப்படுகிறதென்பது தள்ளமுடியாது. அவித்யையோடு சேர்ந்த ப்ரும்மம் அநுவதிக்கப் படுகிறதென்னில், அப்பொழுதும் ஜ்ஞானத்திற்கு விஷயமென்பது ஸித்தித்து விட்டது.

1. தைத்திரீயம்-ஆநந்தவல்லி-9.

𑌨𑍁𑌵𑌾𑌦𑍇𑌨 𑌨𑌾𑌨𑍁𑌪𑌹𑌿𑌤𑍇 𑌤𑌦𑍍𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌸𑌮𑍍𑌭𑌵𑌃 | 𑌏𑌵𑌂
𑌚𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿
𑌪𑌾𑌦𑌨𑌮𑌪𑌿 𑌤𑌨𑍍𑌨𑌿𑌰𑌾𑌸𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑍇 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌂 𑌦𑍍𑌰𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌂 | 𑌨
𑌚𑌤𑍁𑌰𑍍𑌥𑌃—𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌭𑍇𑌦𑌸𑍍𑌯 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌰𑌜
𑌤𑌾𑌦𑍌 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑍇𑌽𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨 𑌸𑌾𑌧𑌨𑌵𑍈𑌕
𑌲𑍍𑌯𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌦𑌿𑌦𑍋𑌷𑌾𑌤𑍍 | 𑌅𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑌿𑌕𑌭𑍇𑌦𑌸𑍍𑌯
𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌪𑌿 𑌵𑌿𑌦𑍍𑌯𑌮𑌾𑌨𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌚𑍍𑌚 | 𑌅𑌤

மேலும் அவித்யையோடு சேர்ந்த ப்ரும்மம் அனுவாதம் செய்யப் பட்டதேயானால் அவித்யையோடு ஸம்பந்தப்படாத ப்ரும்மத்தின் இடத்தில் ஶப்தத்தினால் சொல்லப்படக் கூடியதா யிருக்கும் தன்மை இல்லையென்று மறுப்பது முடியாது (ஏனெனில் அவித்யையோடு சேர்ந்த ப்ரும்மத்தை விட்டு வாக்குக்கள் திரும்பிவிட்டன என்னில் அந்த அவித்யையோடு சேர்ந்த ப்ரும்மத்திற்கே சொல்லப்படக் கூடியதாயிருக்கும் தன்மை இல்லை என்று ஏற்படுமாதலால் ஶுத்த ப்ரும்மத்திற்கு அப்படிப்பட்ட தன்மை ஏற்படவில்லை யாகையினால்). இப்படியே ஜ்ஞானம் ஸ்வயம் ப்ரகாசம் என்றிவை முதலிய அனுமானங்களினால் ப்ரும்மம் ஒன்றினாலும் அறியத் தக்கதல்ல என்று நிரூபித்திருப்பதும் அந்த அனுமானத்தை நிராகரித்திருக்கும் இடத்தில் நிராகரிக்கப்பட்டதென்றறியத்தக்கது. நான்காவது பக்ஷமும் உசிதமல்ல, உண்மையான பேதம் முத்துச் சிப்பியில் ப்ரமிக்கப் படும் வெள்ளியிலும் ப்ரபஞ்சத்திலும் உங்களால் அங்கீகரிக்கப் படாமையினாலே உதாஹரணத்தில் ஹேது வில்லை பக்ஷத்திலும் ஹேது வில்லை, ஆதலால் ஸாதன விகலம் அஸித்தி முதலிய தோஷங்கள் வரும். உண்மையல்லாத பேதம் ப்ரும்மத்தின் இடத்திலும் இருக்கிறபடியினால் (அதில் பொய்யாயிருக்கை யாகிய ஸாத்யமில்லாமையினால்) வ்யபிசார தோஷம் வருகிறது. ஆகையினாலேயே தத் காலத்தில் தோன்றுகிற பேதம் என்று சொல்

ஸந்ந ப்ராதிபாஸிகவ்யதிரேகபக்ஷோऽபி நிரஸ்த꞉ ।
கிஞ்ச கடோऽஸ்தி படோऽஸ்தீத்யாதிஷு ஸத்த்வஜ்ஞாநேஷு ஸத்
திவிஷயதயைவ ப்ரதிபாஸதே ॥

இதி ஶ்ரீகவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
ஶ்ரீ ஶ த தூ ஷ ண்யா ம்

॥ த்ருஶ்யத்வாநுமாநநிராஸவாத꞉ பஞ்சதஶ꞉ ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம꞉ ॥

லும் பக்ஷமும் நிராகரிக்கப்பட்டது. மேலும் குடம் இருக்கிறது துணி இருக்கிறது என்பது முதலிய ஜ்ஞானங்களில் ஸத் என்பது அந்த ஜ்ஞானத்திற்கு விஷயமாகவே தோன்றுகிறது.

இப்படித் திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டிதபூஷணம்
ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
ஸ்ரீசததூஷணீ தமிழ்மொழி பெயர்ப்பில்
த்ருஶ்யத்வானுமான நிராஸவாதம் என்னும்
பதினைந்தாவது வாதம் முற்றிற்று.

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ॥

॥ வ்யாவர்தமாநத்வாநுமாநபங்கவாத: ஷோடஶ: ॥

விஶ்வம் வ்யாவர்தமாநத்வாத் நிவர்த்யமிதி தூஷித: ।
நிவர்த்யதாஶ: கல்பிதீநு கதாஸங்க்ரஹஸூசித: ॥

[பூர்வபக்ஷஸங்க்ரஹ:]

யதா கடாதயோ வ்யாவர்தமாநா: — வ்யாவர்தமாநத்வாத், யத்யத்ஸாதநவத் தத்தத்ஸாத்யவத், யதா ரஜ்ஜ்வதிஷ்டாநஸர்பபூச்சித்ரஜலப்ரவாஹாதி । யத் ஸத் ந

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜ மஹாதேஶிகாய நம: ॥

வ்யாவர்த்தமானத்வானுமான பங்கவாதம் என்னும் பதினாறுவது வாதம்.

மாறிவிடுகிற படியினால் ப்ரபஞ்சத்தை (பொய்யென்று) நிவ்ருத்தி செய்கிற குத்ருஷ்டிகளை ப்ரஸங்கமாகிற யுத்தம் செய்யும் இடத்தில் இருந்து திரும்பிப்போகும்படி செய்கிறோம்.

[பூர்வபக்ஷ ஸங்க்ரஹம்.]

எப்படி என்னில்:—குடம் முதலிய வஸ்துக்கள் உண்மையல்ல, மாறி மாறி வருகிறபடியினால், எது கீழ்க் கூறிய ஸாதனத்தை உடையதோ அது கீழ்க்கூறிய ஸாத்யத்தை உடையது. எப்படி என்னில்:—கயிற்றை ஆதாரமாக உடைய (அதாவது அதில் ப்ரமிக்கப்படுகிற) பாம்பு, பூமியின் வெடிப்பு, ஜலப் பெருக்கு

தத்வ்யாவர்ததே, யதா ஸர்பாத்யதிஷ்டாநபூதா ரஜ்ஜு:। யதா ஸர்வாதிஷ்டாநம் ப்ரஹ்ம । யதி வ்யாவர்தமாந ஸ்யாபி ஸத்யத்வம், ததா ஸத்யமித்யாவிபாகாபாவ ப்ரஸங்க இதி தர்காநுக்ரஹ:—இதி ।

[ஸித்தாந்தாரம்ப:]

தத்ர கிமிதம் வ்யாவர்தமாநத்வம்? கிம் யத்கிஞ்சித் ப்ரதியோகிகத்வம்? அத யத்கிஞ்சித்தேசே அபாவவத்த்வம்? யத்வா த்வம்ஸவத்த்வம்? உத ப்ரதிபந்நோபாதௌ நிஷேத ப்ரதியோகித்வம்? கிம் வா கதாசித் க்வசிதேவ ப்ரகாசமாநத்வம்? அந்யத்வா கிஞ்சித்?

முதலியவைகளைப் போல. எது உண்மையானதோ அது மாறுகிற தில்லை. எப்படி என்னில்:—கீழ்க்கூறிய பாம்பு முதலியவைகளைப் பற்றிய ப்ரமத்திற்கு ஆதாரமான கயிற்றைப்போல. அன்றிக்கே எல்லா ப்ரமங்களுக்கும் ஆதாரமாகிய ப்ரும்மத்தைப்போல என்று கவுமாம். அடிக்கடி மாறி மாறி வருகிற வஸ்துவிற்கும் உண்மையா யிருக்கும் தன்மை உண்டாகில் உண்மையான வஸ்துவிற்கும் பொய் யான வஸ்துவிற்கும் வ்யத்யாஸம் இல்லாமல் போகவேண்டி வரும் என்கிற யுக்தி இந்த அனுமானத்திற்கு ஒத்தாசை செய்கிறது-என்று (சொல்லுகிறார்கள்).

[ஸித்தாந்தாரம்பம்.]

இவ்விடத்தில் மாறிமாறி வருகையாவது எப்படிப்பட்டது? ஏதாவது ஒரு வஸ்துவைக் காட்டிலும் வேறாக இருக்கையா? அன் றிக்கே ஏதாவது ஓர் இடத்தில் இல்லாமல் இருக்கையா? அல்லது நாசமுடையதா யிருக்கையா? அதுவு மன்றிக்கே எந்த இடத்தில் இல்லையோ அதே இடத்தில் இல்லையென்று மறுக்கப்பட்டிருக்கையா? இல்லாவிடில் ஒரு ஸமயத்தில் ஒரு இடத்திலேயே ப்ரகாசித்துக் கொண்டிருக்கையா? வேறு ஏதாவதொன்றா?

நாத்ய:— யுஷ்மதஸ்மதாதிபேதேந ப்ரஹ்மணோவாநைகாந்த்யாத் | யுஷ்மதஸ்மத்ப்ரத்யயகோசரயோர்விஷயவிஷயிணோ: தம:ப்ரகாஶவத்விருத்தஸ்வபாவயோ: இதரேதரபாவாநுபபத்தி: பவதாம் பாஷ்யாரம்பே பாஷிதா | யதி ப்ரஹ்மண: ததந்யத்வம் மித்யா, தர்ஹி பாரமார்த்யதஸ்தயோரைக்யப்ரஸக்தி: | யதா கடஸ்ய ஸ்வரூபாத்பேதஸ்யைவ மித்யாத்வே ததைக்யம் | ததஶ்ச மித்யாபூதப்ரபஞ்சைக்யாத் ப்ரஹ்மணோऽபி மித்யாத்வம், ஸத்யப்ரஹ்மதாதாத்ம்யாத் தஸ்யாபி ஸத்யத்வம் வா ஸ்யாத் | கிஞ்ச ப்ரஹ்மநிஷ்டாந்யத்வம் மித்யாத்வமிதி வததா கிம்

முதலாவது பக்ஷம் உசிதமல்ல, வெளியில் காணப்படும் வஸ்துக்களைக் காட்டிலும் வேறாகிய ப்ரும்மத்தினிடத்தில் வ்யபிசார தோஷம் வருகிறபடியினால் (அதாவது உண்மையல்லாமை இல்லாத ப்ரும்மத்தின் இடத்தில் ஒன்றைவிட வேறாக இருக்கையாகிற ஹேது இருக்கிறபடியினால்). நீ என்றும் நான் என்றும் அறியப்படுற ஜ்ஞானங்களுக்கு விஷயங்களாயிருக்கிற வெளி விஷயங்கள், அந்த விஷயங்களை அறியும் ஜ்ஞானம், இவைகள் இருட்டையும் ப்ரகாசத்தையும் போல ஒன்றோடொன்று விருத்தமான ஸ்வபாவத்தை உடையவைகளாதலால் ஒன்று மற்றொன்றாக இருக்கை பொருந்தாது என்பது உங்களுடைய பாஷ்யத்தின் ஆரம்பத்திலேயே சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரும்மத்திற்கு வெளி வஸ்துக்களைக் காட்டிலும் வேறாக இருக்கை பொய் என்னில், அப்பொழுது வாஸ்தவத்தில் அவைகளுக்கு ஒன்றாக இருக்கும் தன்மை இருக்கவேண்டி வரும். எப்படி என்னில்:—குடத்திற்குத் தன்னுடைய ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறாயிருக்கை பொய்யானால் அவை ஒன்று என்பதே ஏற்பட்டதாதலால். ஆதலால் பொய் என்ற ப்ரபஞ்சத்தோடு ஒன்று என்பதினால் ப்ரும்மமும் பொய்யாகவேண்டிவரும் என்றாவது, ஸத்யமாகிய ப்ரும்மத்தோடு ப்ரபஞ்சம் ஒன்றாதலால் அந்த ப்ரபஞ்சமும் ஸத்யமாகவேண்டி வரும்என்றாவது கேட்கவேண்டிவரும். மேலும் ப்ரும்மத்தின்இடத்தில் இருக்கும் ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் வேறாயிருக்கை பொய்யென்று

𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑌤𑍍𑌯𑌮𑌭𑌿𑌮𑌤𑌂? 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌤𑍇𑌨𑍈𑌵𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌪𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌥𑍍𑌯𑌤𑍋 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌨𑍍𑌯𑍇𑌨 𑌅𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌤𑍍𑌵𑌸𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌤𑍍𑌵𑌾𑌪𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 । 𑌯𑌦𑌿 𑌤𑌨𑍍𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍍𑌯𑌪𑌿 𑌤𑍍𑌵𑌯𑍈𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 𑌦𑍁𑌰𑍍𑌵𑌾𑌰𑌮𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑍍𑌯𑌂 ।

𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃—𑌤𑌸𑍍𑌯 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌪𑍍𑌰𑌯𑍋𑌜𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑌜𑌤𑌾𑌦𑍇𑌃 𑌦𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 । 𑌅𑌪𑌿 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌨𑍍𑌨𑌦𑍇𑌶𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌯𑍇𑌨𑌾𑌪𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑍇𑌣𑌾𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮

சொல்லுகிற உன்னால் ப்ரபஞ்சத்தில் இருக்கிற வேறாயிருக்கும் தன்மை ஸத்யமானதென்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறதா ? அப்படியாகில் அந்த வேறாக இருக்கும் தன்மை வாஸ்தவத்தில் ப்ரும்மத்தைக் காட்டிலும் வேறுபட்டதாதலால் கீழ்க் குறித்த ஹேது இருக்கிறது; உண்மையல்ல என்கிற ஸாத்யமில்லை; ஆதலால் வ்யபிசார தோஷம் வருகிறது, உண்மையான வஸ்து இரண்டு என்று ஏற்படுகிறது; ஆகையால் உன்னுடைய ஸித்தாந்தத்திற்கே விரோதம் வருகிறது. அந்த வேறுபட்டதாயிருக்கை பொய்யாகில் அப்படிப்பட்ட பொய்யான வேறுபட்டதா யிருக்கை ப்ரும்மத்தின் இடத்திலும் உண்டென்று உன்னாலும் ஒப்புக்கொள்ளப் பட்டிருப்பதினால் கீழ்ச் சொல்லப்பட்ட வ்யபிசார தோஷம் பரிஹரிக்க முடியாது.

இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல, அது பொய்யாயிருப்பதற்குக் காரணமாகாதாதலால். முத்துச் சிப்பியில் ப்ரமிக்கப்படுகிற வெள்ளி மற்றோர் இடத்தில் இல்லாமையினால் பொய் என்று சொல்லப்படுகிறதில்லை. பின்னை எத்தால் என்னில்:—எந்த இடத்தில் ப்ரமிக்கப் பட்டதோ அந்த இடத்தில் இல்லாமையினால். அப்படி ஒப்புக்கொள்ளாவிடில் ஒரு ஆகாரத்தினாலும் ஒரு இடத்திலும் இல்லாமையினால் ப்ரும்மமும் பொய்யாகவேண்டி வரும். ப்ரும்மம் ஸத் என்கிற ஆகாரத்தினாலாவது ஸத் அஸத் இவைகளைக் காட்டிலும் வேறுபட்டது என்கிற ஆகாரத்தினாலாவது ஓரிடத்தில் இருக்கிறதென்று நீங்கள் ஒப்புக்கொள்ளவில்லை யல்லவா. அப்படிக் கில்லா

அஸத்யத்வேந வா ஸத³ஸத்³விலக்ஷணத்வேந வா ஸித்³தி⁴ ப⁴வந்மதே(அ)ப்யப்ரஸித்³தே⁴: | யதி³ யத்ர தே³ஶே காலே வா தத³பா⁴வ: தத்ரைவ மித்²யாத்வம் ஸாத்⁴யம், ததா³ ஸித்³த⁴ஸாத⁴நம் | ந ஹி வயம் க்வாசித்கஸ்ய காதா³சித்கஸ்ய ச ஸர்வத்ர ஸர்வதா³ ஸத்த்வம் ப்³ரூம: | ததா² ஸத்யாபணஸ்த²ரஜதஸ்ய ஸர்வதே³ஶவ்ருத்தித்வாவிரோதே⁴ந ஶுக்திரஜதஸ்யாபி ஸத்யத்வாபாதாத் | கார்ய-காரணபா⁴வவிலோபப்ரஸங்கா³த் |

ந த்ருதீய:—த்³ருஷ்டாந்தஸ்ய ஸாத⁴நவிகலத்வாத் | ந ஹி அத்⁴யஸ்தம் ஸர்பாதி³கம் பா³த⁴ஜ்ஞாநாதி³நாபி த்⁴வஸ்

மல் எந்த இடத்தில் எந்தக்காலத்தில் எந்த வஸ்து இல்லையோ அந்த இடத்தில் அந்தக் காலத்தில் அந்த வஸ்து பொய் என்பது எங்களால் ஸாதிக்கப்படுகிறது என்னில், அப்பொழுது ஸித்த ஸாதனம் (எங்களால் ஒப்புக் கொள்ளப்பட்டதையே ஸாதிப்பது என்னும்) தோஷம் வருகிறது. நாங்கள் சில இடத்திலும் சில காலத்திலும் இருக்கிற வஸ்துக்களை எல்லாக் காலத்திலும் எல்லா இடங்களிலும் இருக்கிறதென்று சொல்லவில்லை. அப்படி இருந்ததாகில் கடையில் இருக்கும் வெள்ளி எல்லா இடத்திலும் இருக்கிறதென்பதில் விரோதம் இல்லாமையினால் முத்துச் சிப்பியில் ப்ரமிக்கப்படும் வெள்ளியும் உண்மையாக வேண்டிவரும். எப்பொழுதாவது ஒருகாலத்தில் இருக்கிற வஸ்து எல்லாக் காலத்திலும் இருக்கிறது என்று ஒப்புக் கொண்டால் கார்யம் காரணம் என்பது இல்லாமல் போக வேண்டிவரும்.

மூன்றாவது பக்ஷமும் உசிதமல்ல, உதாஹரணத்தில் கீழ்க் குறிப்பிட்ட ஹேதுவில்லையாதலால் (அதாவது கயிற்றைக் கண்டு ப்ரமிக்கப்படுகிற பாம்பு இது பாம்பல்ல என்கிற ஜ்ஞானத்தினாலாவது மற்ற வேறு எந்தக் காரணத்தினாலாவது நாசத்தை அடைகிறதில்லை என்றபடி, அப்படி நாசத்தை அடைகிறதென்னில்) கயிற்றில் ப்ரமிக்கப்பட்ட பாம்பு முதலியதைப் பற்றி இது பாம்பல்ல என்று தெரிந்து கொள்ளும்பொழுது அது நாச

ஸத்த்வாதிதி கஶ்சித் — பாதவிநாஶயோர்விலக்ஷணதயைவ வ்யவஹ்ருதே: | ப்ரதிபந்நஸ்ய நேதி நிஷேதோ பாத:| விநாஶஸ்து ஸ்வரூபஸத்தாகஸ்ய ஸ்வரூபப்ரச்யுதி:| தண்டாதிநா நிஹதேஷு ஸர்ப்பேஷு ஹி ஸர்வைரபிஷு ப்ரத்வஸ்தபுத்தி: | அத ஏவ சேதம் ப்ரத்வம்ஸப்ரதியோகித்வம் தேஶகாலஸத்த்வேந ப்ராப்தஸ்யாப்யுபேதமிதி விபரீத ஸாதகத்வம் |

நாபி சதுர்த்த:— அஸித்தே: | ந ஹி ஸ்வதேஶாதௌ கடாதயோ ந ஸந்தீதி பாத்யந்தே | நேதம் ரஜதம் இதிவத், நாயம் கட: இத்யாதிஸ்வரஸிகபாதாதர்ஶநாத் | ந ச ஸர்வாநுவ்ருத்தஸ்ய ஸத ஏவ ஸர்வ வஸ்துதேஶத்வேந ப்ரதிபாஸநாத் தத்ரைவ பாதோ கட

மடைந்து விட்டது என்று ஒருவனும் சொல்லுகிறதில்லை. பாதம் (மறுப்பு) என்பதும் விநாசம் என்பதும் வெவ்வேறென்றே அறியப் பட்டிருக்கிறன. ஓரிடத்தில் அறியப்பட்ட வஸ்துவிற்கு அது இல்லை என்று அறிந்து கொள்ளுதல் பாதம் (மறுப்பு). நாசமாவது உண்மையாக இருந்த வஸ்துவிற்கு அதன் ஸ்வரூபமே அழிந்து விடுதல். தடி முதலியவைகளினல் அடிக்கப்பட் டிருக்கிற உண்மையான ஸர்ப்பங்களைப் பற்றி இது நாசமடைந்தது என்கிற புத்தி உண்டாகிறது. ஆகையினலேயே நாசத்திற்கு ப்ரதியோகியாக இருக்கை சில தேசத்தில் சில காலத்தில் உண்மையாக இருந்ததென்பதோடு சேர்ந்ததாகவே காணப்பட்டிருக்கிற தாதலால் இப்பொழுது ஸாதிக்கப் படுகிறதற்கு விரோதமான ஸாத்யத்தை ஸாதிப்பதற்குக் காரணமாகும்.

நான்காவது பக்ஷமும் உசிதமல்ல, ஸித்திக்கவில்லை யாதலால். எந்த இடத்தில் அறியப்பட்டதோ அந்த இடத்திலேயே குடம் முதலியவைகள் இல்லை என்று மறுக்கப் படவில்லை. இது வெள்ளியல்ல என்பதைப் போல இது குடமல்ல என்று ஸ்வாரஸ்யமான மறுப்புக் காணப்படாமையினல். எல்லா இடங்களிலும் தொடர்ந்திருக்கிற ஸத் என்பதே எல்லா வஸ்துக்களுக்கும் இடமாகத் தோன்றுகிற

𑌇𑌤𑌿 𑌪𑌟𑌵𑌿𑌧𑌿𑌵𑌿𑌷𑌯𑍇 𑌤𑌦𑍍𑌵𑌿𑌰𑍋𑌧𑌿𑌘𑌟𑌾𑌦𑌿𑌨𑌿𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨𑍈𑌵𑌂 — 𑌸𑌤𑍋𑌽𑌤𑍍𑌰 𑌪𑌟𑌾𑌦𑌿𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌆𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍, 𑌅𑌨𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌶𑍍𑌚 । 𑌘𑌟𑍋𑌸𑍍𑌤𑌿 𑌪𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌬𑍁𑌦𑍍𑌧𑌿𑌷𑍁 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌂 𑌘𑌟𑌾𑌦𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑍇𑌨𑍈𑌵 𑌭𑌾𑌸𑌤𑍇, 𑌨 𑌤𑍁 𑌘𑌟𑌾𑌦𑍀𑌨𑌾𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 । 𑌘𑌟𑌶𑍍𑌚𑌲𑌤𑌿, 𑌪𑌟𑌶𑍍𑌚𑌲𑌤𑌿, 𑌘𑌟𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 𑌪𑌟𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍, 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌷𑍁 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌗𑍁𑌣𑌾𑌦𑌿𑌵𑌤𑍍 । 𑌅𑌤𑍋𑌽𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑌤 𑌆𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌸𑌦𑌪𑌿 𑌨 𑌘𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑌿 𑌪𑌟𑍋𑌽𑌸𑍍𑌤𑍀𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌧𑍀𑌵𑌿𑌷𑌯𑌃 ।

படியினால் அந்த இடத்திலேயே துணி இருக்கிறது என்று துணியை விதிக்கும் இடத்தில் அதற்கு எதிர் நடையான குடம் முதலியவைகளின் நிவ்ருத்தியும் (மாறிவிடுவதும்) காணப்பட்டிருப்பதினால் அதற்குப் பொய்யாயிருக்கும் தன்மை ஸித்தித்து விடும் என்பதும் உசிதமல்ல, இவ்விடத்தில் துணி முதலியவைகளாகிற ஸத்திற்கு ப்ரமத்திற்கு ஆதாரமாயிருக்கும் தன்மை பொருந்தா தாதலாலும் அது தொடர்ந்திருக்க வில்லையாதலாலும். (அப்படியே அஸ்தி என்று சொல்லப்படுகிற ஸத் ஆதாரமாக இருக்கிறது என்பதும் உசிதமாகாது, ஏனெனில்) குடம் இருக்கிறது துணி இருக்கிறது என்றிவை முதலிய ஜ்ஞானங்களில் அஸ்தி என்கிற பதத்தினுல் சொல்லப்படுகிற இருக்கை குடம் முதலியவைகளுக்கு ஸ்வபாவமாகத் தோன்றுகிறதேயன்றிக் குடம் முதலியவைகளுக்கு ஆதாரமாகத் தோன்றவில்லை. எப்படி என்னில்:—குடம் அசைகிறது துணி அசைகிறது, குடம் பெரியதாயிருக்கிறது, துணி பெரியதாயிருக்கிறது, என்றிவை முதலிய ஜ்ஞானங்களில் அசைவது முதலிய க்ரியைகளைப் போலவும் பெரியதாயிருக்கை முதலிய குணங்களைப் போலவும் அஸ்தி என்று சொல்லப் படுகிற இருக்கையும் தோன்றுகிறதாதலால். ஆதலால் தொடர்ந்திருக்கிற படியினுலே ஸத் என்பதே ஆதாரம் என்பதும் நிராகரிக்கப் பட்டது. ப்ரும்மம் எல்லா இடத்திலும் எல்லா ஜ்ஞானங்களிலும் எல்லா வஸ்துக்களிலும் தொடர்ந்திருந்த போதிலும் குடம் இருக்கிறது, துணி இருக்கிறது என்றிவை முதலிய ஜ்ஞானங்களுக்கு விஷயமல்ல.

ந பஞ்சம: — அப்ரயோஜகத்வாத் | யத்ர க்வசித் ப்ரதீதத்வமாத்ரேணைவ ஸத்யத்வஸித்தே:, காலாந்தரீண ப்ரகாஶாநுத்பத்தே: தத்ஸாமக்ர்யபாவப்ரயுக்தத்வாத் | ந ச அப்ரகாஶமாநத்வேந விருத்தத்வாத் ப்ரதீதத்வமேவாத்ர நாஸ்தீதி வக்தும் யுக்தம் — தேஶகாலாதிபேதேந விரோதபரிஹாராத் | அந்யதா விவாதபதஸ்யாபி துஷ்பரிஹரத்வாத் | யதி ச யதாகதஞ்சித்ப்ரகாஶமாநஸ்ய மித்யாத்வம் ததா ப்ரஹ்மணோऽபி தத்த்வப்ரஸங்க: | தஸ்யாப்யாமோக்ஷாத் அவித்யாவஶேந அப்ரகாஶமாநத்வஸ்ய பவத்பிரேவ ஸ்வீகாராத் | அந்யதா கதம் அப்ரகாஶிதாயா:

ஐந்தாவது பக்ஷமும் உசிதமல்ல, அதுவும் இந்த ஸாத்யத்திற்குக் காரணமாகாததால். ஏதாவது ஓர் இடத்தில் அறியப்பட்டிருப்பது மாத்திரத்திலேயே அது உண்மையென்பது ஸித்தித்து விடுமாதலாலும், மற்றொரு காலத்தில் ப்ரகாசமாகாதொழிவது அது ப்ரகாசமாவதற்குத் தகுந்த காரணம் இல்லாமையினால் உண்டானதாதலாலும். ப்ரகாசமாகாமல் இருப்பதோடு விருத்தமாக இருப்பதினால் அது அறியப்பட்டது என்பதே இல்லை என்பது யுக்தமாகாது, இடம் காலம் முதலியது வேறுபட்டிருப்பதினால் விரோதத்தைப் பரிஹரித்து விடலாமாதலால். அப்படிக்கில்லாவிடில் அறியப்பட்டிருப்பதினால் ப்ரகாசிக்கிறதென்பதில்லை என்பது ஸித்திக்காது என்று சொல்லுவதைத் தடுக்க முடியாததாலும். எப்படியாவது ஒரு இடத்தில் ப்ரகாசமாகாதொழிவதினால் பொய்யாயிருக்கும் தன்மை உண்டு என்னில், அப்பொழுது ப்ரும்மத்திற்கும் பொய்யாயிருக்கும் தன்மை உண்டாக வேண்டிவரும், அந்த ப்ரும்மமும் மோக்ஷத்தை யடையும் வரையில் அவித்யையினால் ப்ரகாசமாகிறதில்லை என்பது உங்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினால். அப்படிக்கில்லாமல் ப்ரும்மத்தினிடத்தில் அவித்யை உண்டு என்று அனுமானம் செய்யும்பொழுது காரணமாக உங்களாலே சொல்லப்பட்

ப்ரகாஶகத்வாத் இத்யஸ்ய ஸ்வவிஷயாவரணநிவர்த்யா-
ஜ்ஞாநாநங்கீ₃காரே ஹேதோரப்ரஸித்₃தி₄:? கத₂ம் ச ப்₃ரஹ்மா-
ஜ்ஞாநாஶ்ரயத்வம் திரோதா₄நஞ்சோபபத்₃யேத?
திரோஹிதஸ்வரூபஸ்யாபி தஸ்ய ஸர்வதா₂ கத₂ம்-
சித் ப்ரகாஶமாநத்வமஸ்தீதி சேத், தாத்₃ருஶம் க₄டாதே₃ர-
ப்யஸ்தீதி ந கஶ்சித் விஶேஷ: — ஸ்வகாலாவச்சி₂ந்நஸ்ய
தத்₃காலஸ்ய காலாந்தரேऽப்யவபா₄ஸாத் | க₄டாதி₃
ப்ரகாஶஸ்ய காதா₃சித்கத்வாத் வ்யவஸ்தி₂திஹேதுரிதி
சேத், ந — 'நித்யோ நித்யாநாம்' இத்யாதி₃ஶாஸ்த்ர

டதாகிய இதற்கு முன் ப்ரகாசமாகாத வஸ்துவை ப்ரகாசம் செய்கிறபடியினல் என்கிற ஹேது எப்படி ஸித்திக்கும்?* ப்ரும்மத்திற்கு அஜ்ஞானம் உண்டென்று சொல்லுவதும் அதினல் அது மறைக்கப்பட்டிருக்கிறதென்பதும் எப்படிப் பொருந்தும்? அப்படி மறைக்கப்பட்ட ஸ்வரூபத்தை உடையதாயிருந்தபோதிலும் அந்த ப்ரும்மம் எவ்விதமாகவாவது எப்பொழுதும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிறது என்னில், அப்படி எதாவது ஒருவிதமாக ப்ரகாசித்துக்கொண்டிருக்கை குடம் முதலியவைகளிலும் இருக்கிறது, ஆதலால் ஒருவித வ்யத்யாஸமுமில்லை, அது இருக்கும் காலங்களிலேயே இருப்பதாக அது இல்லாத காலத்திலும் ப்ரகாசிக்கலாமாதலால். குடம் முதலியவைகளின் ப்ரகாசம் சில ஸமயங்களிலேயே உண்டாகிறபடியினல் வ்யத்யாஸம் உண்டு என்று சொல்லுவது உசிதமல்ல, 'நித்யனும் எல்லாவற்றையும் அறிந்தவனும் ஒருவனும் இருக்கிற

---

* 'நீ அந்த ப்ரும்மமாகிருய்' என்கிற வாக்யத்தினல் உண்டாக்கப் படுகிற ஜ்ஞானம் தனக்கு விஷயமான ப்ரும்மத்தை மறைக்கக் கூடியதாயும் தன்னல் நிவ்ருத்தி செய்யக் கூடியதுமான அஜ்ஞானத்தை முன்னே உடையது, இதற்குமுன் ப்ரகாசமாகாத வஸ்துவை ப்ரகாசம் செய்கிறபடியினல் என்று அனுமானம் சொல்லுகிருர்கள்; அப்பொழுது ப்ரும்மம் இதற்குமுன் அவித்யையினல் மறைக்கப்பட்டு ப்ரகாசமாகாமல் இருக்கிறது என்று ஒப்புக்கொள்ளாத பக்ஷத்தில் எப்படி அந்த ஹேது ஸித்திக்கும் என்றபடி.

ஸ்ய நித்யஸர்வஸாக்ஷிவிஷயத்வேந கடாதேரபி நித்யம் ப்ரகாஶமாநத்வாத், ப்ராந்தஸாக்ஷிவிஷயதயா ஶுக்திரஜதாதேஶ்ச | வயம் து தயா ந ஜாநீம இதி சேத், ந—அஸ்மாபிரபி ததாங்கீகாராத் | அஸ்மாகம் நித்யம் கடாதிப்ரகாஶோ நாஸ்தீதி விவக்ஷிதமிதி சேத், துல்யம் | ந ஹ்யஸ்மதர்தநிஷ்டோ ப்ரஹ்மப்ரகாஶோ நித்ய இதி த்வயாபி ஸ்வீக்ருதம் | நித்யஸ்ய ப்ரஹ்மப்ரகாஶோ நாஸ்மதர்தஸம்பந்திக: | கிஞ்ச கிம் ப்ரகாஶஸ்ய நித்யத்வம் வஸ்துஸத்த்வவ்யவஸ்தாப

எந்த ஈஶ்வரன் நித்யர்களாயும், அறியுந்தன்மை உடையவர்களாயும், அனேகர்களாயும் இருக்கிற ஜீவாத்மாக்களுக்கு இஷ்டங்களைக் கொடுக்கிறனோ' என்றிவை முதலிய ப்ரமாணங்களில் ஏற்பட்டவனுகிய நித்யனன ஈஶ்வரனுடைய ஜ்ஞானத்திற்கு விஷயங்களாக இருக்கிறபடியினல் குடம் முதலிய வஸ்துக்களும் எப்பொழுதும் ப்ரகாஶித்துக் கொண்டிருப்பதினுலும், முத்துச் சிப்பியில் ப்ரமிக்கப்படுகிற வெள்ளி முதலியதும் அப்படி ப்ரமிக்கிறவர்களின் ஜ்ஞானங்களுக்கு விஷயமாவதினுலும். நாங்கள் ஈஶ்வரனை நித்யமாக ஒப்புக் கொள்ளவில்லையே என்னில், நாங்களும் நீங்கள் ஈஶ்வரனை நித்யமாக அங்கீகரிக்கவில்லை என்பதை ஒப்புக்கொள்ளுகிறோம்*. [எங்களால் ஈஶ்வரன் நித்யமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினல் என்று ஸ்ரீசண்டமாருதம்.] குடம் முதலிய வஸ்துக்களைப் பற்றிய ப்ரகாஶம் நமக்கு நித்யமாக உண்டாகவில்லை என்று சொல்லப்படுகிறது என்னில், அது ப்ரும்மத்திற்கும் துல்யம். நான் என்று சொல்லப்படுகிற வஸ்துவிற்குஉண்டாகிற ப்ரும்மத்தைப்பற்றிய ப்ரகாஶம்நித்யமென்று உன்னுலும் ஒப்புக் கொள்ளப்படவில்லை யல்லவா. ப்ரும்மத்தின் ப்ரகாஶம் நித்யமாக இருந்தபோதிலும் அது நான் என்கிற வஸ்துவை ஆதாரமாக உடையதல்ல. மேலும் ப்ரகாஶம் நித்யமாக இருக்கிறது என்பது வஸ்து உண்மை என்பதை ஸ்தாபிக்கக் கூடியதா? அல்லது

*'ஶாஸ்த்ரேண தயா ஜ்ஞாயமாநத்வாத்' என்று பாடாந்தரம். அப்பொழுது நீ ஒப்புக் கொள்ளாவிட்டாலும் ஶாஸ்திரத்தினல் ஈஶ்வரன் நித்யனென்று அறியப் படுகிறபடியினல் என்றர்த்தம்.

𑌕𑌂? 𑌉𑌤 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌤𑍍𑌵𑌮𑍍? 𑌆𑌦𑍍𑌯𑍇𑌽𑌸𑍍𑌯 𑌨𑌿𑌰𑍍𑌦𑍋𑌷𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌕𑌾𑌰𑌣𑍈𑌰𑍇𑌵 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌸𑌿𑌦𑍍𑌧𑍌 𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌤𑌾 । 𑌦𑍋𑌷𑍇 𑌸𑌤𑌿 𑌚 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑍇𑌰𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑌤𑍍𑌵𑌮𑍍। 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇 𑌤𑍁 𑌕𑌾𑌦𑌾𑌚𑌿𑌤𑍍𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌘𑌟𑌾𑌦𑌿𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌯 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍 𑌘𑌟𑌾𑌦𑌿𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑌾𑌧𑌕𑌤𑍍𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌸𑍍𑌵𑍀𑌕𑌾𑌰𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌤𑌤𑌶𑍍𑌚—

𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑌨𑍁𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌨 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌸𑌾𑌧𑌿𑌕𑌾। [௧௬॥
𑌨 𑌬𑌾𑌧𑍋 𑌜𑌗𑌤𑍋𑌽𑌧𑍍𑌯𑌕𑍍𑌷𑌾𑌦𑍍𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌽𑌪𑍍𑌯𑌸𑍍𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑌃

𑌅𑌤𑍍𑌰𑌾𑌯𑌂 𑌵𑌿𑌭𑌾𑌗𑌃—

𑌬𑌾𑌧𑌶𑍍𑌶𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌷𑌯𑍋 𑌵𑍍𑌯𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌭𑍍𑌰𑌮𑌸𑌂𑌶𑌯𑌃 ।
𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌂 𑌰𑌜𑌤𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌭𑌾𑌵 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇 ॥

அது மறுக்கப்பட்டதல்ல என்பதை ஸ்தாபிக்கக்கூடியதா? முதலாவது பக்ஷத்தில் அந்த ப்ரகாசம் ஒருவிதத் தோஷமும் இல்லாதது என்றிவை முதலிய காரணங்களினாலேயே அது ப்ரமாணமானதென்பது ஏற்படலாமாதலால் அது நித்யமாக இருக்கை ப்ரமாணமாகும் தன்மைக்குக் காரணமாகாது. தோஷம் இருந்ததேயானால் ப்ரகாசம் தொடர்ந்திருப்பது ஒரு ப்ரயோஜனத்தையும் கொடுக்காது. இரண்டாவது பக்ஷத்திலும் சில ஸமயங்களில் உண்டானதா யிருந்தபோதிலும் குடம் முதலியவைகளின் ப்ரகாசத்திற்கும் ப்ரமாணமா யிருக்கும் தன்மை கூடுமாதலால் குடம் முதலியவைகள் ஸத்யமானவைகள் என்பது அவஶ்யமாய் ஒப்புக்கொள்ளத் தக்கதாகும். ஆதலால்—

மாறிவருகிறதும் தொடர்ந்திருப்பதும் பொய்யாயிருக்கை முதலியவைகளுக்குக் காரணமாகாது. ப்ரபஞ்சத்திற்கு ப்ரத்யக்ஷத்தினால் அப்படி மறுப்பும் ஏற்படவில்லை. யுக்தியினால் பாதம் ப்ரும்மத்தின் இடத்திலும் இருக்கிறது.

இந்த விஷயத்தில் வ்யத்யாஸமாவது—

பாதமாவது (மறுப்பதாவது) முத்துச் சிப்பி முதலியவைகளைப் பற்றிய ஜ்ஞானம். அதில் வ்யாவ்ருத்தியாவது ப்ரமத்தைப் பற்றிய ஸந்தேஹம். பொய்யாயிருக்கையாவது வெள்ளி முதலிய வஸ்துக்களின் ஸ்வரூபமே இல்லாமை என்பது சொல்லப்படுகிறது.

நாபி ஷஷ்ட²: — தஸ்ய பா³த⁴பத³வாச்யஸ்ய தத்ப²லஸ்ய ப்ரமித விஷய நிவ்ருத்தி லக்ஷணஸ்ய வா அநுபலப்³தி⁴நிரஸ்தத்வாத் இதரஸ்ய சாப்ரயோஜகத்வாத்। வ்யதிரேகாஸித்³தி⁴ஶ்ச ப³ஹுதா⁴ த்³ரஷ்டவ்யா । யத் ந மித்²யா தத் ந வ்யாவர்ததே இதி ஹி வ்யதிரேக:। ப்³ரஹ்ம து ந மித்²யா, ஸர்வதோ வ்யாவர்ததே — ஸர்வாந்யத்வாத், ஸர்வத்ர ஸ்வயமவர்த்தமாநத்வாச்ச । ஏவமநுவ்ருத்த்யநுமாநேऽபி த்³ரஷ்டவ்யம் ॥

ஏதேந வ்யாவர்த்தமாநத்வவிகல்பதூ³ஷணந்யாயேந பி⁴ந்நத்வாத் க்வாசித்கத்வாத் பா³த்⁴யத்வாத் ஜட³த்வாத் இத்யாதி³ப்ரபஞ்சமித்²யாத்வஹேதுஜாலம் ஸமூலோந்மூ

ஆறாவது பக்ஷமும் உசிதமல்ல, பாதம் என்று பெயருடையதாகவாவது, அதின் ப்ரயோஜனமான ப்ரமிக்கப்பட்ட வஸ்துவின் நிவ்ருத்தியாகவாவது இருக்கிற அந்தப் பக்ஷம் உலகத்தில் ஒருவராலும் அறியப் படாமையினாலே நிராகரிக்கப் பட்டதாகையினால் மற்றது பொய் யென்பதற்குக் காரணமாகா தாதலால். வ்யதிரேக வ்யாப்தி ஸித்திக்காது என்பது அநேக இடங்களில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது அறியத் தக்கது. ஏனெனில் எது பொய்யல்லவோ அது மாறுதலை யடையாது என்றல்லவோ வ்யதிரேக வ்யாப்தி சொல்லப் பட்டது. ப்ரும்மம் பொய்யல்ல, எல்லா வஸ்துக்களையும்விட மாறுதலை அடைந்திருக்கிறது, ஏனெனில் மற்ற வஸ்துக்களைவிட வேறுபட்ட தாதலாலும், எல்லா இடத்திலும் தான் இல்லாமையினாலும். இப்படியே துடர்ந்திருப்பதினால் ப்ரும்மம் ஸத்யம் என்கிற அனுமானத்திலும் தோஷம் அறியத் தக்கது:

இத்தால் இந்த மாறுதலை அடைகிறது என்பதை விகல்பித்து நிராகரித்திருக்கிற ந்யாயத்தினாலேயே வேறுபட் டிருப்பதினால், சிலஇடங்களிலே மாத்திரம் இருப்பதினால்,மறுக்கப்பட்டிருப்பதினால், ஜடமாக இருப்பதினால், என்றிவை முதலிய ப்ரபஞ்சம் பொய் என்று ஸாதிப்பதற்குக் காரணங்களும் அடியோடு நிராகரிக்கப்பட்டதாகின்

ஞிதமிதி தேஷூபேக்ஷாபி பாஷ்யகாரை: | தர்கஶ்ச ஸதோஷ: — பாதாபாதாதிபிரேவ ஸத்யாஸத்யவிபாக ஸித்தேரிதி ||

இதி ஶ்ரீகவிதார்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஶ்ரீமத்வேங்கடநாதஸ்ய ஶ்ரீமத்வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஶ்ரீ ஶ த தூ ஷ ண் யா ம்

| வ்யாவர்த்தமானத்வானுமானபங்கவாத: ஷோடஶ: ||

|| ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ||

றன என்று நினைத்து ஸ்ரீ பாஷ்யகாரர் அவைகள் விஷயத்தில் உதாஸீனராய் இருந்துவிட்டார். கீழ் சொல்லப்பட்ட யுக்தியும் தோஷத்தை உடையது, பாதிக்கப்பட்டிருக்கை பாதிக்கப்படாமலிருக்கை இவைகளினுலேயே பொய்யாயும் உண்மையாயும் இருக்கும் வஸ்துக்களின் பிரிவு ஸித்திக்குமாதலால்.

இப்படித் திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்

ஸ்ரீ சததூஷணீ தமிழ்மொழி பெயர்ப்பில்

வ்யாவர்த்தமானத்வானுமானபங்கவாதம் என்னும்

பதினுருவது வாதம் முற்றிற்று.

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம: ॥

॥ த்₃ருஷ்ட்ருத்₃ருஶ்யஸம்ப₃ந்தா₄நுபபத்திபரிஹாரவாத₃: ஸப்தத₃ஶ: ॥

பி₃ப்₄ராண ஆத்மநி ஸதா₃ மஹதீம் விபூ₄திம்
தே₃ஹேந தந்மயநிஶ்ருதபூ₄ஷணாஸ்த்ரம் ।
ஆஶ்லிஷ்டம் கமலயா மம சித்தவ்ருத்தே:
ஆலம்ப₃நம் ப₄வது தை₃வதமத்₃விதீயம் ॥

யத்₃வா ஆத்மக்₂யாதிவாதி₃பி₄ராஜிதம் க்₃ராஹ்யக்₃ராஹகலக்ஷணாயோகா₃க்₂யம் தர்கம் பி₄க்ஷித்வா த்₃ருஷ்ட்ருத்₃ருஶ்யயோஸ்ஸம்ப₃ந்தா₄நுபபத்திரிதி நாமாந்தரேண வத₃ந்தி, தத₃பி

॥ ஶ்ரீ: ॥

॥ ஶ்ரீமதே ஶ்ரீநிவாஸராமாநுஜமஹாதே₃ஶிகாய நம: ॥

த்ருக்த்ருஶ்ய ஸம்பந்தானுபபத்திபரிஹாரவாதம் என்னும் பதினேழாவது வாதம்.

தன் ஸ்வரூபத்தில் எப்பொழுதும் மிகவும் பெரியதான விபூதிகளைத் தரித்துக்கொண்டவராயும், அந்த விபூதிகளின் ரூபங்கள் என்று ஶாஸ்திரங்களினால் அறிவிக்கப்பட்ட ஆபரணங்களையும் ஆயுதங்களையும் தம்முடைய திருமேனியால் தரித்துக்கொண்டவராயும், லக்ஷ்மியினால் ஆலிங்கனம் செய்யப்பட்டவராயும் இருக்கிற தனக்கு ஒப்பில்லாத தேவதை என் மனதின் த்யானத்திற்கு விஷயமாய் இருக்கவேண்டும்.

ஆத்மக்யாதியைச் சொல்லுகிற (யோகாசாரனால்) ஸம்பாதிக்கப்பட்ட, அறியப்படுகிற வஸ்துக்களுக்கு அறியப்பட்டிருப்பதற்கு தகுந்த அடையாளங்கள் இல்லையென்கிற, யுக்தியைப்பிச்சைவாங்கி ஜ்ஞானத்திற்கும் அறியப்படுகிற வஸ்துக்களுக்கும் ஸம்பந்தம் பொருந்

ஸம்பந்தஸ்யாபாதிதப்ரத்யக்ஷஸித்தத்வாச்சைவ நிரஸ்தம்। ஆஹுஸ்ச—'உக்தம் து ஸௌகதைர்ஜ்ஞேயலக்ஷணாபாவலக்ஷணம்। தஸ்ய ஜ்ஞானார்த்தஸம்பந்தாபாவவாதேன நிராக்ருதம்॥'—இதி।

[பூர்வபக்ஷஸங்க்ரஹ:]

நநு கோऽயம் ஸம்பந்த:? ந தாவத் ஸம்யோக:—த்ரவ்யத்வாபாவாத்। த்ரவ்யத்வாங்கீகாரேऽபி குணாதிபிஸ்ஸஹ தத்ஸம்பந்தஸ்ய ஸம்யோகத்வாயோகாத்। நாபி ஸமவாய:—ஆத்மஸ்வ

தவில்லை என்று வேறொரு பெயர் வைத்து எதைச் சொல்லுகிறார் களோ அதுவும், அந்த ஸம்பந்தம் ஒருவித மறுப்புமில்லாத ப்ர த்யக்ஷத்தினால் ஏற்பட்டிருப்பதினால் நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அப்படியே பெரியோர்கள் 'பௌத்தர்களினால் செய்யப்பட்ட வஸ் துக்களுக்கு அறியக்கூடியவைகளாய் இருக்கும் தன்மை இல்லை என்பதை மற்றவர்கள், அறிவுக்கும் அறியப்படுகிற வஸ்துவிற்கும் ஸம்பந்தமில்லை என்று சொல்லுகிறார்கள், அது (அந்தப் பௌத் தர்களை நிராகரித்திருப்பதினால்) நிராகரிக்கப்பட்டதாகிறது' என்று சொல்லுகிறார்கள்.

[பூர்வபக்ஷஸங்க்ரஹம்.]

(அவர்கள் சொல்லுவதாவது—) ஸம்பந்தம் என்பது என்ன? ஸம்யோகம் என்று சொல்ல முடியாது, ஜ்ஞானம் த்ரவ்யம் அல்லவாதலால். (அதாவது ரூபத்தோடு கூடிய இரண்டு வஸ்துக்கள் சேர்ந்திருப்பது ஸம்யோகம் என்று சொல்லப்படுகிறபடியினாலே இங்கு அது உசிதமாகாது என்றபடி.) த்ரவ்யமென்று ஒப்புக் கொண்டபோதிலும் குணம் முதலியவைகளோடு உண்டாகிய அந்த ஜ்ஞானத்தின் ஸம்பந்தம் ஸம்யோகம் என்பது பொருந்தாததாத லால். ஸமவாயஸம்பந்தமுமல்ல, ஆத்மாவிற்கு ஸ்வபாவமான ஜ்ஞா னத்திற்கு வெளியில் இருக்கும் வஸ்துக்களோடு அந்த ஸம்பந் தம் பொருந்தாததாதலால். (அதாவது எந்த வஸ்துவிற்கு எது ஸ்வபாவமோ, அதற்கும் அந்த வஸ்துவிற்கும் உண்டான ஸம்பந் தம் ஸமவாயம் என்னப்படுகிறது). வஸ்துக்களுக்கு ஜ்ஞானத்தோடு

ஸ்ய ஜ்ஞாநஸ்யாபி தத்யோகாத் | ந ச ஸ்வாத்மநா
நைவ ஜ்ஞாநேந ஸமவாய:—தேஷாம் பாஹ்யத்வாத்,
ஸ்வதந்த்ரதயைவ ப்ரதீயமாநத்வாத் | ந ச ரூபரஸ
யோரிவைகார்த்தஸமவாய:— உபயாச்ரயஸ்யைகஸ்யாந
வபோதாதிநிரஸ்தத்வாத் | நாப்யந்த:கரணஸங்க்ரம:—
நிர்விகாராயாஸ்ஸம்விதஸ்ஸங்க்ரமாத்மபரிணாமாயோகாத் |
விவர்த்தபக்ஷே து த்ருக்த்ருச்யஸம்பந்தஸ்ய மித்யாத்வா
வச்யம்பாவாத் | ந சார்த்தஸ்யாந்த:கரணே ஸங்க்ரம:—
பஹிரேவாவபுத்யமாநத்வாத் | அந்த:கரணஸ்ய
விஷயஸாரூப்யவ்ருத்திரேவ விஷயஸங்க்ராந்திரிதி
வ்யவஸ்தித இதி சேத், ந—விஷயவிலக்ஷணாயா
வ்ருத்தே: விஷயஸாரூப்யஸ்யாநவபோதநிரஸ்தத்வாத் |

ஸமவாயஸம்பந்தம் உண்டென்று சொல்லுவது உசிதமாகாது, அந்த வஸ்துக்கள் வெளியில் இருக்கும் வஸ்துக்களாதலாலும், அந்த ஜ்ஞானத்தை ஸ்வபாவமாக உடையவைகள் அல்ல என்று தோன்றுகிறபடியினாலும். ரூபம் ரஸம் இவைகளுக்குப் போல ஒரு வஸ்துவில் சேர்ந்திருக்கையாகிற ஸம்பந்தம் உண்டென்பதும் உசிதமல்ல, ஜ்ஞானத்திற்கும் வஸ்துவிற்கும் ஆதாரமாகிய ஒரு வஸ்து அறியப்படாமையினாலே நிராகரிக்கப்படுகிறபடியினால். ஒரு மனதில் ஜ்ஞானமும் வஸ்துவும் சேர்ந்திருக்கிறது என்பதும் உசிதமல்ல, ஒரு விகாரமுமில்லாத ஜ்ஞானத்திற்கு ஒரு வஸ்துவில் சேருவதாகிய விகாரம் பொருந்தாதாகையினால். ப்ரும்மமே இப்படி மனதாக மாறிவிடுகிறது என்னும் பக்ஷத்திலும் ஜ்ஞானத்திற்கும் வஸ்துவிற்கும் ஸம்பந்தம் பொய்யாகவேண்டிவருமாதலாலும். வஸ்துவும் மனதோடு சேர்ந்திருக்கிறது என்பது பொருந்தாது, ஏனெனில் வஸ்துக்கள் வெளியிலேயே இருப்பதாக அறியப்பட்டிருப்பதினால். மனது ஜ்ஞானத்திற்கு விஷயமான வஸ்துக்களோடு ஸமமான ஆகாரத்தை அடைவது தான் வஸ்துக்களோடு சேர்க்கை என்று சொல்லுவதும் உசிதமல்ல, வஸ்துக்களை விட வேறு விதஸ்வபாவத்தை உடைய வ்ருத்திக்கு வஸ்துக்களோடு ஸமானமாக

𑌗𑍌𑌰𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌗𑍌𑌰𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥 𑌇𑌤𑍍𑌯𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌤𑌯𑍋𑌃 𑌸𑌾𑌦𑍃𑌶𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍। 𑌗𑍋𑌤𑍍𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌯𑌤𑍍 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌗𑍌𑌰𑌿𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌵𑍍𑌯𑌵𑌹𑍍𑌰𑌿𑌯𑌤𑍇। 𑌗𑍋𑌤𑍍𑌵𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌰𑍍𑌥𑌸𑍍𑌤𑍁 𑌗𑍌𑌰𑌿𑌤𑍍𑌯𑌰𑍍𑌥 𑌇𑌤𑌿। 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌗𑍌𑌰𑌿𑌤𑌿 𑌶𑌬𑍍𑌦 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍। 𑌤𑌥𑌾 𑌚 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌸𑌾𑌰𑍂𑌪𑍍𑌯𑌵𑌾𑌦𑌿𑌨𑍋 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌸𑍍𑌯 𑌵𑍈𑌰𑍂𑌪𑍍𑌯𑌮𑍇𑌵 𑌜𑌾𑌯𑌤𑍇 । 𑌵𑌿𑌷𑌯𑍋𑌪𑌰𑌾𑌗𑌾𑌪𑌰𑌨𑌾𑌮𑌕𑌵𑌿𑌷𑌯𑌸𑌂𑌶𑍍𑌲𑌿𑌷𑍍𑌟𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌕𑌮𑌨𑌃𑌕𑌰𑌣𑌭𑍇𑌦𑌾𑌗𑍍𑌰𑌹𑌜𑌨𑌿𑌤𑌤𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌰𑍍𑌥𑌯𑍋𑌗𑌾𑌭𑌿𑌮𑌾𑌨 𑌏𑌵 𑌉𑌪𑌲𑌬𑍍𑌧𑌿𑌨𑌾𑌮𑌾 𑌵𑌿𑌤𑍍𑌤𑍇𑌰𑍍𑌵𑌿𑌷𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌸𑌾𑌵𑍃𑌤𑍍𑌤𑌿

இருக்கை உண்டென்பது ஒருவராலும் கண்டறியப்படாமையி ஞலே நிராகரிக்கப்பட்டபடியினல். மாடு என்கிற ஜ்ஞானம் என்றும், மாடு என்கிற வஸ்து என்றும் வ்யவஹரிக்கப்படுகிறபடியி ஞல் ஜ்ஞானம், வஸ்து என்கிற இரண்டும் ஒன்ருகவே ப்ரத்ய க்ஷத்திஞல் ஏற்படுகிறதே என்னில் அது உசிதமல்ல, அந்த வ்யவஹாரங்கள் வெவ்வேறு அர்த்தத்தைச் சொல்லுகிறபடியினல். மாடாக இருக்கும் தன்மையை உடைய வஸ்துவை ப்ரகாசம் செய்கிற ஜ்ஞானம் மாடென்கிற ஜ்ஞானம் என்று சொல்லப்படு கிறது. மாடாயிருக்கும் தன்மையை யுடைய வஸ்து மாடென்கிற வஸ்து என்று சொல்லப்படுகிறது. அப்படிக் கீழ்க்கூறிய வ்யவஹா ரம் மாத்திரத்திஞல் ஒன்றுக்கொன்று ஸமமாக இருக்கிறது என் னில், மாடு என்கிற ஶப்தம் என்று வ்யவஹரிக்கும்பொழுது அந்த ஶப்தத்திற்கும் மாட்டிற்கும் ஸமமாக இருக்கும் தன்மை உண்டா கவேண்டிவரும். அப்படியாகில் வெளியில் இருக்கும் வஸ்துக்க ளோடு ஜ்ஞானம் ஸமானமாகிறது என்று சொல்லுகிறவனுக்கே (தன் வார்த்தைக்கு விரோதமாகப் பேசும் தன்மை அதாவது) குரூபியாயிருக்கும் தன்மை உண்டாகும். விஷயங்களோடு சேர்ந் திருக்கை என்று பெயருடைய ஒருவகைப்பட்ட வ்ருத்தியையுடைய மனதோடு வ்யத்யாஸத்தை அறிந்துகொள்ளாமையினல் உண்டாக்கப் பட்ட பொய்யான ஸ்வபாவம் இருப்பதாக அபிமானம் உண்டாவதே உபலப்தி (அறிந்து கொள்ளுதல்) என்கிற பெயருடைய ஜ்ஞா

𑌕𑌾𑌣𑌾𑌂 𑌵𑍇𑌦𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌣𑌾𑌂 𑌅𑌨𑌨𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑌂𑌯𑍋𑌗𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍇𑌨 𑌆𑌤𑍍𑌮𑌬𑌹𑍁𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌕𑌭𑍋𑌗𑌪𑍍𑌰𑌤𑌿𑌨𑌿𑌯𑌮𑌾𑌦𑌿𑌭𑌙𑍍𑌗𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 | 𑌨 𑌚 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌾𑌤𑍍𑌮𑌨𑌿𑌯𑌤𑌾𑌦𑍃𑌷𑍍𑌟𑌾𑌦𑌿𑌕𑌂 𑌨𑌿𑌯𑌾𑌮𑌕𑌂 𑌕𑌿𑌮𑌪𑌿 𑌤𑍈𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 | 𑌅𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍍𑌯𑌂 𑌦𑍁𑌷𑍍𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌂| 𑌅𑌨𑌾𑌦𑌿𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍀𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌦𑍇𑌵 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌤𑍍 𑌭𑍋𑌗𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌃 𑌕𑌂𑌚𑌿𑌤𑍍 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌭𑌵𑌤𑍀𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑌾𑌮𑌗𑍍𑌰𑍍𑌯𑌾 𑌅𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌤𑍍𑌵𑍇𑌨 𑌸𑌾𑌧𑌾𑌰𑌣𑍍𑌯𑍇 𑌤𑌜𑍍𑌜𑌨𑍍𑌯𑍇𑌷𑍍𑌵𑌨𑌾𑌗𑌤𑌨𑌿𑌯𑌮𑌾𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 | 𑌨 𑌚 𑌤𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌂 𑌜𑍍𑌞𑍇𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌯𑍋𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌃 — 𑌜𑌡𑌤𑍍𑌵𑌾𑌜𑌡𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌤𑌿

னத்திற்கு வஸ்துக்களோடு உண்டாகிய ஸம்பந்தம் என்னில், அது உசிதமல்ல, எல்லா இடத்திலும் நிறைந்த தனித்தனியான ஒவ்வொரு ஜ்ஞான ஸ்வரூபங்களுக்கும் கணக்கில்லாத அந்தக்கரணங்களோடு (மனதுகளோடு) சேர்ந்திருக்கை ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினாலே ஜீவாத்மாக்கள் அனேகம் என்று ஸ்தாபிப்பதற்குக்காரணமான தனித்தனியே ஏற்பட்ட ஸுக துக்கங்களின் அனுபவங்களின் வ்யவஸ்தை இல்லாமல் போகவேண்டிவருமாதலால். ஒவ்வொரு ஆத்மாக்களிலும் தனித்தனியே சேர்ந்திருக்கிற அத்ருஷ்டம் முதலியது ஸுகதுக்கங்கள் தனித்தனியே ஏற்படுவதற்குக் காரணமாக அவர்களால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. மனதோ எல்லாவற்றிற்கும் பொது என்பது பரிஹரிக்கமுடியாது. அநாதியான காரணங்களின் ஸ்வபாவத்தினால் ஒரு விதமான ஸுக துக்கங்களினுடைய பரம்பரை ஒரு ஆத்மாவிற்கு உண்டாகிறதென்பதும் உசிதமல்ல, இதற்கு முன்பு முன்புள்ள ஸாமக்ரிகளும், எல்லா ஆத்மாக்களோடு ஸம்பந்தப்பட்டிருப்பதினால் எல்லா ஆத்மாக்களுக்கும் பொதுவாயிருக்க அதினால் உண்டாக்கப்படுகிற வரப்போகிற ஸுக துக்கங்களில் ஒன்று ஒருவனுக்கு என்கிற வ்யவஸ்தை ஏற்படாது. ஜ்ஞானத்திற்கு அறியப்படுகிற வஸ்துவோடு தாதாத்ம்யம் (ஒன்ருயிருக்கை) ஸம்பந்தம் என்னவும் ஒண்ணாது, ஜடமாக இருக்கை ஜடமில்லாததாக இருக்கையாகிற ஒன்றுக்கொன்று விருத்தங்களான ஸ்வபாவங்களினால் அது தடுக்கப்பட்டிருப்பதினால். மேலும் ஒரு

ஹதத்வாத் | ஜ்ஞாநஸ்ய ச ஸம்விதோऽநேகவிஷயத்வ த³ர்ஶநேந பரஸ்பரவிருத்³தா⁴நேகதாதா³த்ம்யாத் தேஷாமபி மித²ஸ்தாதா³த்ம்யப்ரஸங்கா³த் | ததஶ்ச விரோத⁴ ஏவ ஜக³தி ந ஸ்யாத் | இத³ம் ஸர்வம் இதி ஸர்வபதா³ர்த²பு³த்³தி⁴தாதா³த்ம்யேந க⁴டாதே³ஸ்ஸர்வைக்யப்ரஸங்கே³ந விசித்ரவ்யவஹாரவிலயப்ரஸங்கா³த் | யதா² ச வஸ்துந ஏகஸ்யாப்யேகஸ்ய நர்தகீப்⁴ரூலதாத³ர்ஶநாதி³ஷ்வ அநேகவிஷயஸர்வஸம்வித³ஶ்சைக்யப்ரஸங்கே³நாஸ்மதி³ஷ்டாவாதாச்ச | ந ச சித்ராதே³ரேகத்வம்—ஸ்வவசநவிரோதா⁴த் | நாநாத்வம் சித்ரத்வம், தத்ப்ரதிஷேத⁴ஸ்த்வைகத்வமிதி | சித்ரரூபம் து நாநாரூபாரப்³த⁴மேகமிதி ந விரோத⁴ இதி நிர்வஹந்தி |

ஜ்ஞானம் அனேக விஷயங்களை அறிந்துகொள்ளுவதைக் கண்டிருப்பதினாலே ஒன்றோடொன்று விருத்தங்களான அனேக வஸ்துக்களோடு ஜ்ஞானத்திற்கு ஒன்றாக இருக்கை சொல்ல வேண்டுமாதலால் அந்த வஸ்துக்களுக்கும் ஒன்றோடொன்று ஐக்யம் உண்டாக வேண்டிவரும். ஆதலால் இவ்வுலகத்தில் விரோதம் என்பதே இல்லாமல் போகவேண்டி வரும். இது எல்லாம் என்று எல்லா வஸ்துக்களையும் அறிகிற ஜ்ஞானங்களோடு ஐக்யம் வருகிறபடியினால் ஸர்வ வஸ்துக்களும் ஒன்றாயிருக்கவேண்டிவருமாதலால் அனேகவிதங்களான வ்யவஹாரங்கள் உண்டாகாமல் போகவேண்டி வரும். அப்படியாகில் வஸ்து ஒன்றாயிருந்தபோதிலும் கூத்தாடுகிற ஸ்திரீயினுடைய புருவங்களின் அசைதலைப் பார்ப்பதைப்போல எல்லா விஷயங்களையும் பற்றிய ஜ்ஞானமும் ஒரு விஷயத்தைப் பற்றியதாகையினால் ஒரே ஜ்ஞானமாகவேண்டிவருமாதலால் எங்கள் இஷ்டமே ஸித்தித்துவிடுகிறது. சித்திரமாக இருக்கிற வஸ்து ஒன்று என்று சொல்லுவதும் உசிதமல்ல, தங்களுடைய வார்த்தைக்கே விரோதம் வருகிறபடியினால். சித்திரமாக இருக்கையாவது அனேகங்களாய் இருக்கை, ஒன்றாக இருக்கை அதற்கு விரோதி. சித்திரரூபம் என்பதோவெனில் அனேக ரூபங்களினால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு ரூபம் என்று சொல்லுகிறீர்கள். இப்படியே சித்திரஸம்

𑌭𑌵𑌂 𑌚𑌿𑌤𑍍𑌰𑌰𑍂𑌪𑌸𑌾𑌧𑌿𑌷𑍍𑌵𑌪𑌿 | 𑌨𑌾𑌨𑌾𑌰𑍂𑌪𑌵𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯 𑌭𑌵𑌵𑌾 | 𑌨 𑌵𑌾 𑌚𑌿𑌤𑍍𑌰𑌾𑌵𑌯𑌵𑌾𑌰𑌬𑍍𑌧𑌾𑌯𑍋 𑌵𑌾 — 𑌅𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 | 𑌨 𑌚 𑌚𑌿𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌂 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾 — 𑌸𑍍𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 | 𑌨𑌿𑌰𑌾𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌵𑌾𑌸𑌨𑌾𑌵𑍈𑌚𑌿𑌤𑍍𑌰𑍍𑌯𑌾𑌦𑍇𑌕𑌾𑌕𑌾𑌰𑌮𑌨𑍇𑌕𑌾𑌕𑌾𑌰𑌮𑌿𑌵 𑌭𑌾𑌤𑍀𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌮𑌿𑌥𑍍𑌯𑌾𑌭𑍂𑌤𑌸𑍍𑌯𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌤𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑍍𑌯𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯 𑌬𑌾𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌮𑍇𑌷𑍍𑌟𑌵𑍍𑌯𑌮𑍍 | 𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨 𑌏𑌵 𑌵𑌾𑌸𑌨𑌾𑌕𑌾𑌰𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌷𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 — 𑌏𑌵𑌤𑌾𑌦𑍃𑌶𑌾𑌤𑍍𑌮𑌖𑍍𑌯𑌾𑌤𑍇𑌰𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌰𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 | 𑌨 𑌚 𑌸𑍍𑌵𑌜𑌨𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑍇 𑌸𑍍𑌵𑌾𑌕𑌾𑌰𑌸𑌮𑌰𑍍𑌪𑌕𑌤𑍍𑌵𑌮𑍇𑌵 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌤𑍍𑌵𑌂—

ஶ்ரீமத்³வேங்கடநாத²ஸ்ய ஶ்ரீமத்³வேதா³ந்தாசார்யஸ்ய க்ருதிஷு

ஶ்ரீ ஶ த தூ³ ஷ ண் யா ம்

॥ த்³ருக்³த்³ருஶ்யஸம்ப³ந்தா⁴நுபபத்திபரிஹாரவாத³:
ஸப்தத³ஶ: ॥

॥ ஶ்ரீமதே நிக³மாந்தமஹாதே³ஶிகாய நம: ॥

பாஷ்யகாரர் இந்த விஷயத்தில் உதாஸீனரா யிருந்துவிட்டார். இவ்விடத்திலும் ‘ஜ்ஞானத்திற்கும், ஸத்விஷயங்களாகிய குடம் முதலிய வஸ்துக்கள் இவைகளுக்கும் விஷயங்களா யிருக்கை விஷயியாயிருக்கை என்கிற ஸ்வபாவத்தினால் பேதம் ப்ரத்யக்ஷத்திலேயே ஏற்பட்டிருக்கிறது’ என்றாரம்பிக்கும் ஸ்ரீ பாஷ்ய வாக்யத்தினால் ஸத்திற்கும் ஜ்ஞானத்திற்கும் பேதம் உண்டென்று ஸூசிப்பித்தும் இருக்கிறார்.

இப்படித் திருவஹீந்திரபுரம் சேட்லூர்வித்வான்
பகவத் விஷயம் பண்டிதபூஷணம்
ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
ஸ்ரீ சததூஷணீ தமிழ்மொழி பெயர்ப்பில்
த்ருக்த்ருஶ்ய ஸம்பந்தானுபபத்திபரிஹாரவாதம்
என்னும் பதினேழாவது வாதம் முற்றிற்று.

॥ श्रीः ॥

॥ श्रीमते निगमान्तमहादेशिकाय नमः ॥

॥ बाह्यप्रकाशानुपपत्तिवादोऽष्टादशः ॥

अज्ञानसञ्चमसमाश्रयणोन्मुखानाम्
संवित्प्रदीपमहसा सहसा निरस्यन् ।
विद्याः स्वयंवरपतिर्वश्यवहन्त्वविद्याम्
सर्वानुभविस्स भगवान् पुरुषोत्तमो नः ॥

यत्सहावस्थावाज्ञानविशेषणसमये 'नित्यमुक्तस्वप्रकाशचैतन्यैकस्वरूपस्य ब्रह्मणो

॥ ஸ்ரீ: ॥

॥ ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜமஹாதேஶிகாய நம: ॥

பாஹ்யப்ரகாசாநுபபத்திவாதம் என்னும் பதினெட்டாவது வாதம்.

தன்னை ஆஸ்ரயிப்பதற்கு ப்ரயத்னம் செய்கிறவர்களுடைய கர்மங்களால் உண்டான அஜ்ஞானத்தை † ஜ்ஞானமாகிய விளக்கின் ப்ரகாசத்தினால் அதிசீக்கிரத்தில் போக்கடிப்பவராயும், ப்ரும்ம வித்யைகள் தாங்களே வரிக்கக்கூடிய பதியாயும் (அதாவது எல்லா ப்ரும்ம வித்யைகளுக்கும் தானே விஷயமாய் அத்தால் பதியாயும்), எல்லா வஸ்துக்களையும் தானே அநுபவித்துக்கொண்டிருப்பவனாயும் இருக்கிற அந்தப் பகவானாகிய புருஷோத்தமன் நம்முடைய அஜ்ஞானத்தைப் போக்கடிக்கவேண்டும்.

அஜ்ஞானம் என்பது ஒரு வஸ்து என்று தூஷிக்கிற இடத்தில் 'நித்யமாய் அவித்யை முதலிய தோஷங்களினால் விடப்பட்டதாயும்,

† இங்கு அஜ்ஞானத்தை என்றது பகவானைத்தவிர மற்ற விஷயங்களைப்பற்றியதாயிருப்பதை என்றபடி.

த்யாஜ்ஞாநாநுபவஸ்ய ந ஸம்பவதி’ இத்யாதி பாஷ்யம், தத்ர பாஹ்யார்த்தப்ரகாச ஏவ ஸ்வத: பரபக்ஷே ந ஸம்பவதீத்யபிப்ரேதம்| தத்வ்யாகர்த்தார: —

யதுச்யதே — நித்யமுக்தம் ப்ரஹ்மைவ ஸ்வகதாநாத்யவித்யாமநுபவதீதி, கதமிதமுபபத்யதே? பந்தஸ்யாநாத்யவித்யாதத்கார்யாநுபவாத்மகத்வாத் மோக்ஷஸ்ய ச தந்நிவ்ருத்திரூபத்வாத் |

நித்யமுக்தஸ்ய பந்தஶ்சேந் நித்யமுக்திர் ந ஸம்பவேத் |
பந்தஸ்யாபி ச நித்யத்வாத் பந்தாபாவே க்வ முக்ததா ||

ஸ்வயம்ப்ரகாசமான ஜ்ஞானம் ஒன்றையே ஸ்வரூபமாக உடையதாயும் இருக்கிற ப்ரும்மத்திற்கு அவித்யையைப்பற்றிய அனுபவம் பொருந்தாது’ என்றிவை முதலாக ஸ்ரீபாஷ்யத்தில் அருளிச்செய்யப் பட்டிருக்கிறது. அவ்விடத்தில் எதிரியின் பக்ஷத்தில் வெளியில் இருக்கும் வஸ்துக்களின் ப்ரகாசம் ஒன்றுமே ஸம்பவிக்காது என்பது அபிப்பிராயத்தில் கொள்ளப்பட்டது. அதை விவரிக்கிறோம்.

எப்பொழுதும் எல்லாத் தோஷங்களாலும் விடப்பட்டதாகிய ப்ரும்மமே தன்னிடத்தில் இருக்கிற அநாதியான அவித்யையை அனுபவிக்கிறது என்று சொல்லப்படுகிறதே, அது எப்படிப் பொருந்தும்? பந்தம் என்பது அநாதியான அவித்யை, அதின் கார்யங்கள் (ஸுகதுக்கங்கள்) இவைகளை அனுபவிப்பதாகையினுலும், மோக்ஷம் என்பது அவைகள் நிவ்ருத்தித்துவிடுவதாகையினுலும்.

எப்பொழுதும் முக்தனுகிய ப்ரும்மத்திற்கே பந்தம் உண்டாயிற் றேயானுல் அது எப்பொழுதும் எல்லாத் தோஷங்களாலும் விடப்பட் டிருக்கிறது என்பது ஸம்பவிக்காது—பந்தமும் நித்யமாகையினுல், பந்தமும் இல்லையென்னில் முக்தியுமில்லை (அதாவது கொஞ்சகாலம் பந்தம் இருந்து அதிலிருந்து விடப்பட்டவனை முக்தன் என்கிறது. அப்படிப் பந்தம் என்பதே இல்லாவிடில் முக்தன் என்பதும் இல்லை என்றபடி).

𑌨𑌨𑍁 𑌭𑌵𑌨𑍍𑌮𑌤𑍇𑌽𑌪𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌸𑍍𑌤𑍍𑌯𑍇𑌵, 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍇𑌨𑌾𑌨𑍁𑌭𑍂𑌯𑌤𑍇, 𑌸 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌶𑍁𑌦𑍍𑌧 𑌇𑌤𑌿 𑌕𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌪𑌰𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑌿𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑌤𑍍𑌵𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑍈𑌵 𑌪𑌰𑌗𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾𑌽𑌨𑍁𑌭𑍂𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌤𑌥𑌾𑌽𑌪𑌿 𑌪𑌰𑌗𑌤𑌤𑍍𑌵𑌾𑌦𑍇𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌬𑌨𑍍𑌧𑌤𑍍𑌵𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 । 𑌤𑌰𑍍𑌹𑍍𑌯𑌸𑍍𑌮𑌾𑌕𑌮𑌪𑍍𑌯𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌪𑌰𑌪𑌰𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌃𑌕𑌰𑌣𑌗𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌭𑌵𑌤𑍁, 𑌤𑌚𑍍𑌚 𑌸𑌂𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌕𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌾𑌽𑌨𑍁𑌭𑍂𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌕𑍋 𑌦𑍋𑌷 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌿𑌮𑌰𑌣𑌮𑍂𑌰𑍍𑌛𑌾𑌦𑍍𑌯𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌰𑌹𑌦𑌶𑌾𑌯𑌾𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌤𑌦𑌾𑌨𑍀𑌮𑍍

உங்கள்பக்ஷத்திலும் அஜ்ஞானம் என்று ஒன்று இருக்கிறது, அதுவும் எல்லாவற்றையும் அறிந்த பகவானால் அநுபவிக்கப்படுகிறது, அந்தப் பகவான் எப்பொழுதும் எல்லாத் தோஷங்களினாலும் விடப்பட்டவன் என்று சொல்லப்படுகிறது, இப்படி இருக்க நம் இருவருக்கும் என்ன வ்யத்யாஸம் என்பது உசிதமல்ல—அயலானுக்கு உண்டான அவித்யை முதலியவைகளைப் பார்ப்பது பந்தம் என்று ஒப்புக்கொள்ளப்படாமையினால். அயலானுக்கு இருக்கிற ப்ரும்மத்தைப்பற்றிய அஜ்ஞானம் பரமாத்மாவினால் அநுபவிக்கப்படுகிறதேஎன்பதும் உசிதமல்ல-அப்படி இருந்தபோதிலும் அது அயலானிடத்தில் இருக்கிறபடியினாலேயே அது பந்தமாகும் என்கிற ப்ரஸ்தாபமே இல்லையாகையினால். அப்படியாகில் எங்கள் மதத்திலும் அஹங்காரமென்று பெயருடைய அந்தக்கரணத்தில் அஜ்ஞானம் இருக்கிறது, அது ஜ்ஞானத்தினால் அறியப்படவேண்டியதாகையினால் அந்தக்கரணரூபியான ப்ரும்மத்தினால் அநுபவிக்கப்படுகிறது என்று சொல்லுவதில் என்ன தோஷம் இருக்கிறது என்பது உசிதமல்ல—அஹங்காரம் இல்லாத தூக்கம் மரணம் மூர்ச்சை முதலிய காலங்களில் அஜ்ஞானத்தைப்பற்றிய அநுபவம் இல்லாமல் போக வேண்டிவருமாதலால். அந்த ஸமயங்களில் ஆதாரம் இல்லாமல் அஜ்ஞானம் இருப்பது ஸம்பவிக்காதல்லவா. (ஏனெனில் அதிஷ்டானம் இல்லாமல் ப்ரமத்தை ஒப்புக்கொண்டதாகுமாத

நிராஶ்ரயாஜ்ஞாநஸ்தி2திஸம்ப4வ: — நிர்விஷயாநுப4வாநநு
ஜ்ஞாநப்ரஸங்கா3த் | ப்3ரஹ்மாஶ்ரயத்வே து ஸ்வவ்யதிரிக்தாஜ்ஞாநா
நுப4வாவஶ்யம்பா4வ: | ப4வத்வஜ்ஞாநாநுப4வ:, ஸ
து மித்2யாபூ4த இதி ந நித்யமுக்தத்வவிரோத4
இதி சேத், ந — மித்2யாபூ4தஸ்யைவ தஸ்ய ப3ந்த4
தயோபபாதி3தத்வாத் | அந்யதா2 தந்நிவ்ருத்த்யர்த2ம் ஶாஸ்த்ரா
ரம்பா4நுபபத்திப்ரஸங்கா3த் | ததஶ்ச ததா2வித4நிவ்ருத்தி
ரூபே மோக்ஷே நித்யே கத2ம் தத்ப்ரதியோகி3நஸ்தஸ்ய
ஸம்ப4வ: ? ததஶ்ச நித்யம் ப்3ரஹ்மண்யவித்3யாவிநைவ
ஸ்வயமேவ விலீயமாநா ஸா கத2மஹங்காராதீ3ந் ப்ரஸவதாமி
வ்ருஸஞ்சதாம்? கத2ம் வா தேஷு ப்3ரஹ்மணோ த்3ருஷ்டிர்ப4வேத்
இதி ந பா3ஹ்யாநுப4வஸம்ப4வ: ?

லால்.) ப்ரும்மத்தை ஆதாரமாக உடையது என்று சொல்லில் தன்னிடத்தில் இருக்கிற அஜ்ஞானத்தை அனுபவிக்கிறது என்பது அவஶ்யம் ஒப்புக்கொள்ள வேண்டியதாகும். அஜ்ஞானத்தைப் பற்றிய அனுபவம் இருந்தாலும் இருக்கட்டும், அது பொய்யான அனுபவமாதலால் எப்பொழுதும் முக்தன் என்பதற்கு விரோதம் இல்லை என்பதும் உசிதமல்ல—பொய்யாகிய அந்த அஜ்ஞானத்தின் அனுபவமே பந்தம் என்று உங்களாலேயே நிரூபிக்கப்பட்டிருப்பதினால். அப்படிக்கில்லாவிடில் அந்தப் பொய்யாகிய பந்தம் நிவ்ருத்திப்பதற்காக ஶாஸ்திரங்களை ஆரம்பிக்கவேண்டும் என்பது பொருந்தாமல்போகவேண்டிவரும். ஆதலால் அந்தப் பொய்யாகிய அஜ்ஞானத்தை அனுபவிப்பதாகிய பந்தத்தின் நிவ்ருத்தியாகிற மோக்ஷம் நித்யமாக இருந்தால் அதற்கு எதிர்நடையான அப்படிப்பட்ட பந்தம் எப்படி ஸம்பவிக்கும்? ஆதலால் எப்பொழுதும் அவித்யையை அனுபவிக்காததாகிய ப்ரும்மத்தின் இடத்தில் தானே நாசத்தை அடைந்திருக்கிற அந்த அவித்யை அஹங்காரம் முதலிய பிள்ளைகளை எப்படிப்பெறும் (அதாவது தன் கார்யங்களை எப்படி உண்டாக்கும்)? எப்படி அவைகளிடத்தில் ப்ரும்மத்திற்குக் கண்ணோட்டமுண்டாகும்? ஆதலால் வெளிவஸ்துக்களைப் பற்றிய அனுபவமே ஸம்பவிக்காது.

𑌸 𑌏𑌷 𑌪𑍍𑌰𑌥𑌮𑍋 𑌹𑍇𑌤𑍁𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌕𑌥𑌨𑍇𑌨 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌤𑌪𑍍𑌰𑌾𑌯𑌃, 𑌤𑍃𑌤𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌸𑌾𑌕𑍍𑌷𑌿𑌤𑍍𑌵𑌶𑍋𑌧𑌨𑍇 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌿𑌤 𑌇𑌤𑌿 𑌮𑌤𑍍𑌵𑌾 𑌮𑌧𑍍𑌯𑌮𑌂 𑌹𑍇𑌤𑍁𑌂 𑌵𑌿𑌵𑍃𑌣𑍁𑌤𑍇—'𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌾𑌤𑍍'—𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾 |

𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍈𑌕𑌤𑌾𑌨𑌮𑌿𑌤𑌿 𑌹𑍍𑌯𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑍍𑌯𑌤𑍇 | 𑌤𑌸𑍍𑌯𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌨𑍁𑌭𑌵𑌃 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌵𑌤𑌃? 𑌉𑌤𑌾𑌨𑍍𑌯𑌤𑌃? 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃—𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍈𑌕𑌤𑌾𑌨𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤𑌾𑌤𑍍, 𑌅𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚 | 𑌮𑍋𑌕𑍍𑌷𑍇 𑌵𑌾 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌤𑍍| 𑌕𑌿𑌂 𑌚 𑌯𑌥𑌾 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌰𑌜𑌤𑌾𑌦𑍌 𑌵𑌿𑌷𑌯𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌤𑍍𑌵𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌷𑌯𑌿𑌣𑍋𑌽𑌪𑌿 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌤𑍍𑌵𑌸𑌂𑌭𑌵𑌾𑌤𑍍 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨

இந்த முதலாவது காரணம் ப்ரும்மத்தை ஆதாரமாக உடையது அஜ்ஞானம் என்பது பொருந்தாது என்று சொல்லுவதிலேயே பெரும்பாலும் விவரிக்கப்பட்டது. மூன்ருவது காரணம் ஸாக்ஷியாக இருக்கையைப்பற்றி விசாரிக்கும் இடத்தில் நிரூபிக்கப்பட்டது என்று நினைத்து நடுக்காரணத்தை 'தன்னைத் தான் அனுபவித்துக் கொள்ளுவதையே ஸ்வரூபமாக உடையதாகையினுல்' என்ருரம்பித்து விவரித்திருக்கிருர்.

ப்ரும்மம் ஜ்ஞான ஸ்வரூபமாக இருந்தபோதிலும் தன்னைத் தான் அனுபவிப்பது ஒன்றையே ஸ்வபாவமாக உடையது என்றல்லவோ ஒப்புக்கொள்ளப்படுகிறது. அப்படிப்பட்ட ப்ரும்மத்திற்குத் தன்னுடைய ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறு பட்டதாகிய அஜ்ஞானத்தின் அனுபவம் ஸ்வபாவத்திலேயே வந்ததா? வேறொரு காரணத்தினுல் வந்ததா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல, தன்னை அனுபவிப்பது ஒன்றையே ஸ்வபாவமாக உடையது என்பதற்கு விருத்தமாதலாலும், மோக்ஷம் உண்டாகாமல் போகவேண்டிவருமாதலாலும், மோக்ஷத்தில் ஸ்வபாவத்தில் ஏற்பட்ட ரூபம் ப்ரகாசிக்கிறது என்பதற்கு விரோதமாவது வரவேண்டிவருமாதலாலும். மேலும் முத்துச் சிப்பியைக் கண்டு

ந ஸவிஷயவ்ருத்திஸ்வரூபபாத இதி ஹி ஸ்வஸித்தாந்தம் | ததஶ்ச யதி மித்யாபூதாவித்யாநுபவஸ்வபாவதோ ப்ரஹ்மண:, ததா தஸ்யாபி மித்யாத்வேந பாதகஜ்ஞாநேந நிவ்ருத்திரேவ ஸ்யாத் | நாபி த்விதீய:—அவித்யாப்ரஹ்மாதிரிக்தஸ்யாநப்யுபகமாத் | அப்யுபகமே வா தத்ஸத்யத்வமித்யாத்வவிகல்பே ஸத்விதீயத்வாநவஸ்தயோரந்யதரப்ரஸங்காத் | அலமவித்யாப்ரஹ்மஸ்வரூபாதிரிக்தேநாந்யேந, அவித்யைவ து ப்ரஹ்மஸ்வரூபம் திரோதத்தே, தத்திரோதாநாயத்தோऽவித்யாநுபவ இதி சேத்—ப்ரகாஶமாத்ரஸ்ய ப்ரஹ்மணஸ்திரோதாநே தத்ஸ்வ

வெள்ளி என்று ப்ரமிப்பது முதலிய எந்த ஜ்ஞானத்தில் விஷயம் பொய்யாயிருக்கிறதோ அந்த இடத்தில் அந்த விஷயத்தைப்பற்றிய தான ஜ்ஞானமும் பொய் என்பது அவஶ்யம் ஒப்புக்கொள்ளப்பட வேண்டுமாதலால் அவித்யையை நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானத்தினால் விஷயங்களோடு சேர்ந்த வ்ருத்தி ஜ்ஞானங்களுடைய ஸ்வரூபமும் மறுக்கப்படுகிறது என்றல்லவோ உங்களுடைய மதம். ஆதலால் ப்ரும்மத்திற்கு ஸ்வபாவத்தினாலேயே பொய்யாகிற அவித்யையைப் பற்றிய அனுபவம் இருந்ததேயானால் அந்தப் பொய்யாகிய வஸ்துவைப்பற்றிய அனுபவ ரூபமான ப்ரும்மமும் பொய்யாகையினால் அவித்யையை நிவ்ருத்தி செய்யக்கூடிய ஜ்ஞானத்தினால் ப்ரும்மத்திற்கும் நிவ்ருத்தி உண்டாகவேண்டிவரும். இரண்டாவது கல்பமும் உசிதமல்ல—அவித்யை ப்ரும்மம் இவைகளைத் தவிர வேறொரு வஸ்து ஒப்புக்கொள்ளப்படாமையினால். அப்படி ஒப்புக்கொண்டால் அது உண்மையா பொய்யா என்று விகல்பம் செய்யும்பக்ஷத்தில் உண்மையாகில் உண்மையான இரண்டு வஸ்துக்கள் ஒப்பவேண்டிவரும், பொய்யாகில் அதற்குக்காரணமாகிய வேறொரு அவித்யை ஒப்புக்கொள்ளவேண்டும் என்று அநவஸ்தைவரும். அவித்யை ப்ரும்மத்தின் ஸ்வரூபம் இவற்றைத் தவிர வேறொரு வஸ்து வேண்டாம், அவித்யையே ப்ரும்மத்தின் ஸ்வரூபத்தை மறைக்கிறது, அப்படி மறைப்பதினால் இந்த அவித்யையைப்பற்றிய அனுபவம் உண்டாகிறது என்பதும் உசிதமல்ல—ப்ரகாசம் மாத்திரமாகிய ப்ரும்மத்தை மறைக்கிறதென்றால்

ரூபநாஶப்ரஸங்காதயோऽந்யத்ர ப்ரபஞ்சிதா:| கிஞ்ச திரோஹிதே ப்ரஹ்மணி தத்ஸ்வாவித்யாநுபவ:, அநநுபூதாயாஞ்சாவித்யாயாம் ஸ்வரூபஸ்யைவ தயா திரோதாநமித்யந்யோந்யாஶ்ரயணம்| அநுபவநிரபேக்ஷம் திரோதாநமிதி சேத், ததா ஸதி தஜ்ஜ்ஞாநம் காசாதிவத் ஸ்வஸத்தயா ப்ரஹ்ம திரஸ்கரோதீதி ஸம்விஷயீநஸத்தாகஸ்வாபாவேந ஸ்வதஸ்ஸித்தயா ஸம்விதைவ ஜ்ஞாநபாத்யத்வம் ந ஸ்யாத்| தேந ச தத்கார்யத்வாத் ப்ரபஞ்சஸ்யாபி ததாவிதத்வேதி ஸத்யத்வம் ஸ்யாத்| ஆஹுஶ்ச — 'காசாதிவத் திரஸ்காரே தோஷோ வாசாமகோசர:| ஜ்ஞாநபாத்யத்வஹாநிஸ்ஸ்யாத் ஸ்யாச்ச ப்ரபஞ்சஸ்ய ஸத்யதா||' — இதி|

அதின் ஸ்வரூபத்திற்கு நாசமே வரவேண்டிவரும் என்பது முதலிய ஆக்ஷேபங்கள் வேறொரு இடத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறபடியினால். மேலும் ப்ருமமம் மறைக்கப்பட்டதேயானால் அதற்கு அவித்யையைப்பற்றிய அனுபவம் வரும், அவித்யை அனுபவிக்கப்பட்டதேயானல் ஸ்வரூபம் நிலைத்து அத்தால் மறைக்கப்படுவது ஸம்பவிக்கும் என்று அந்யோந்யாஸ்ரய தோஷம் வருகிறது. தன்னைப்பற்றிய அனுபவத்தை எதிர்பாராமல் அவித்யை மறைக்கிறதென்னில், அப்பொழுது அந்த அஜ்ஞானம் காசம் முதலிய தோஷங்களைப் போலத்தான் இருப்பது மாத்திரத்தினாலேயே ப்ருமமத்தை மறைக்கிறதாதலால் ஜ்ஞானத்தினால் அதின் ஸ்வரூபம் நிலைத்திருப்பது என்பதில்லாமையாலும், தானே உண்டாயிருக்கிறபடியினாலும் ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி செய்யக்கூடியதாயிருக்கும் தன்மையும் இல்லாமல் போகவேண்டிவரும். ஆதலால் அத்தால் உண்டாக்கப்பட்ட ப்ரபஞ்சமும் அப்படியே ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியதல்லாமையாலே உண்மையாகவேண்டிவரும். அப்படியே 'காசம் முதலிய தோஷங்களைப்போல் அவித்யை மறைக்கிறதென்னில், வாயினால் சொல்லத்தகாத தோஷம் வருகிறது, எப்படியென்னில்:— அவித்யை ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியதில்லாமல் போகவேண்டிவரும், ப்ரபஞ்சம் ஸத்யமாகப் போகவேண்டிவரும்' என்று சொல்லியிருக்கிறார்கள்.

𑌅𑌸𑍍𑌤𑍁 𑌤𑌰𑍍𑌹𑌿 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑍁𑌭𑌵𑌾𑌧𑍀𑌨𑌂 𑌤𑌿𑌰𑍋𑌧𑌾𑌨𑌂, 𑌅𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌤𑍁 𑌨𑌿𑌰𑌪𑍇𑌕𑍍𑌷 𑌇𑌤𑌿 𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌣𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌅𑌨𑌿𑌰𑍍𑌮𑍋𑌕𑍍𑌷𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌦𑍇𑌰𑍁𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌕𑌿𑌂 𑌚 𑌅𑌤𑌿𑌰𑍋𑌹𑌿𑌤𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑍈𑌵 𑌭𑍋𑌕𑍍𑌤𑍃𑌤𑍍𑌵𑍇𑌨𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌨𑍍𑌤𑍁𑌮𑍁𑌚𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨𑌨𑍁 𑌭𑌵𑌤𑌾𑌮𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍈𑌕𑌤𑌾𑌨𑌂, 𑌤𑌦𑍇𑌵 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌮𑌿𑌤𑍍𑌯𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌤𑌮𑌿𑌤𑌿 𑌕𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—𑌅𑌸𑍍𑌮𑌾𑌕𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑍈𑌕𑌤𑌾𑌨𑌤𑍍𑌵𑍇𑌽𑌪𑌿 𑌗𑍁𑌣𑌭𑍂𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌸𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑍇𑌨 𑌸𑍍𑌵𑍇𑌤𑌰𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 । 𑌅𑌨𑍇𑌨 𑌮𑍁𑌕𑍍𑌤𑍋𑌽𑌪𑌿 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌃 ।

ஆனால் அஜ்ஞானத்தைப்பற்றிய அனுபவத்தினால் மறைவு உண்டாகிறது என்பது இருக்கட்டும், அந்த அனுபவமோவென்னில், ஒரு காரணத்தையும் எதிர்பார்க்கிறதில்லை, ஆதலால் அந்யோந்யாஶ்ரய தோஷம் இல்லை என்பதும் உசிதமல்ல—மோக்ஷம் உண்டாகாமல் போகவேண்டிவரும் என்பது முதலியது முன்னமேயே சொல்லப்பட்டிருப்பதினால். மேலும், இப்படி ஒப்புக்கொள்ளுவதைப்பார்க்கிலும் அதிக ஶ்ரமம் இல்லாமையினால் ஒன்றினாலும் மறைக்கப்படாத ப்ரும்ம ஸ்வரூபமே அவித்யையை அனுபவிக்கிறது என்றொப்புக் கொள்ளுவது உசிதமாகுமாதலாலும். உங்களுடைய மதத்திலும் பரமாத்மாவின் ஸ்வரூபம் தன்னை அனுபவிப்பது ஒன்றையே ஸ்வபாவமாக உடையது, அதுவே மற்ற எல்லா வஸ்துக்களையும் அறிகிறது என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதே, ஆகையினால் இருவருக்கும் என்ன வ்யத்யாஸம் என்பதும் உசிதமல்ல—எங்களுடைய மதத்தில் பரமாத்மாவின் ஸ்வரூபம் தன்னை அனுபவிப்பது ஒன்றையே ஸ்வபாவமாக உடையதாயிருந்த போதிலும் தனக்குக் குணமாயும் வெளி விஷயங்களைத் தெரிந்து கொள்ளுவதையே ஸ்வபாவமாக உடையதாயும் இருக்கிற (தர்மபூத) ஜ்ஞானத்தினால் தன்னைத் தவிர மற்ற எல்லா வஸ்துக்களையும் தெரிந்து கொள்ளுகிறபடியினால். இத்தால் முக்தனும் விவரிக்கப்பட்டான் (அதாவது முக்தனும் இப்படியே என்றபடி). பத்த

𑌬𑌦𑍍𑌧𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑍀𑌕𑌰𑌣𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑍌𑌪𑌾𑌧𑌿𑌕𑍌 𑌸𑌙𑍍𑌕𑍋𑌚𑌵𑌿𑌕𑌾𑌸𑍌 𑌭𑌜𑌤𑍀𑌤𑌿 𑌨 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 । 𑌉𑌪𑌾𑌧𑌯𑌶𑍍𑌚 𑌪𑍍𑌰𑌵𑌾𑌹𑌾𑌨𑌾𑌦𑌿𑌕𑌰𑍍𑌮𑌰𑍂𑌪𑍇𑌣𑍋𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌯 𑌇𑌤𑌿 𑌨𑌾𑌨𑌵𑌸𑍍𑌥𑌾𑌦𑌯𑍋 𑌦𑍋𑌷𑌾𑌃 ।

𑌅𑌤𑍋 𑌯𑌦𑌿 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌮𑌿𑌚𑍍𑌛𑌸𑌿, 𑌤𑌦𑌾 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌮𑌾𑌤𑍍𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌸𑍍𑌵𑌭𑌾𑌵𑌾𑌦𑌾𑌤𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌾𑌦𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌂 𑌧𑌰𑍍𑌮𑌭𑍂𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌚𑍍𑌛 𑌵𑌾, 𑌤𑍍𑌯𑌜 𑌵𑌾 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌵𑍍𑌯𑌸𑌨𑌮𑌿𑌤𑌿 ॥

𑌤𑍍𑌯𑌜𑌾𑌮𑌸𑍍𑌤𑌰𑍍𑌹𑌿 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌂, 𑌨 𑌹𑍍𑌯𑌤𑍍𑌰 𑌵𑌸𑍍𑌤𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑌂 𑌕𑌿𑌞𑍍𑌚𑌿𑌦𑌨𑍁𑌭𑍂𑌯𑌤 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨—

னுடைய ஜ்ஞானமோ வெனில் எல்லா வஸ்துக்களையும் அறிவதையே ஸ்வபாவமாக உடையதா யிருந்த போதிலும் சில காரணங்களினால் உண்டாகிய சுருக்கத்தையும், மலருவதையும் (விகஸிப்பதையும்) அடைகிறது, ஆதலால் ஒருவிரோதமுமில்லை. அந்தக்காரணங்களும் பரம்பரையாக அநாதியாய் வந்துகொண்டிருக்கிற கர்மம் முதலியவைகள், ஆதலால் அநவஸ்தை முதலிய தோஷங்கள் இல்லை.

ஆகையினால் வெளிவஸ்துக்களைப் பற்றிய அனுபவத்தை ஒப்புக்கொள்ளுகிறாயேயானால் அப்பொழுது ஸ்வரூபம் மாத்திரத்தின் ப்ரகாசத்தையே ஸ்வபாவமாக உடைய ப்ரும்ம ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறுபட்டதான தர்மபூத ஜ்ஞானத்தை ஒப்புக்கொள், இல்லாவிட்டால் வெளிவஸ்துக்களைப் பற்றிய அனுபவம் உண்டு என்கிற ப்ரயாஸத்தையாவது விட்டுவிடு.

அப்படியாகில் வெளி வஸ்துக்களைப்பற்றிய அனுபவம் உண்டென்பதை விட்டுவிடுகிறோம், இந்த அனுபவத்தில் வெளியில் இருக்கும் வஸ்து ஒன்றும் அனுபவிக்கப் படவில்லையல்லவா என்பதும்

𑌵𑌿𑌕𑌲𑍍𑌪𑌾𑌸𑌹𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌕𑌿𑌞𑍍𑌚 𑌬𑌾𑌹𑍍𑌯𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌤𑍀𑌯𑌮𑌾𑌨𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌤𑍍𑌵𑌮𑌭𑌿𑌮𑌤𑌮𑍍 ? 𑌉𑌤 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌮𑍍 ? 𑌅𑌥 𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌮𑌵𑌸𑍍𑌤𑍂𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌨𑌾𑌮𑌰𑍍𑌥𑌾𑌨𑌾𑌮𑌭𑌾𑌵𑌃 ? 𑌉𑌤 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯 𑌅𑌵𑌾𑌸𑍍𑌤𑌵𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 ? 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃—𑌆𑌤𑍍𑌮𑌖𑍍𑌯𑌾𑌤𑌿𑌵𑌾𑌦𑌸𑍍𑌯 𑌤𑍍𑌵𑌯𑍈𑌵 𑌦𑍂𑌷𑌣𑌾𑌤𑍍, 𑌤𑌤𑍍𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑌸𑍍𑌯 𑌚𑌾𑌨𑍍𑌯𑌤𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃—𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌾𑌪𑌹𑍍𑌨𑌵𑌨𑌿𑌰𑌾𑌕𑌰𑌣𑌾𑌤𑍍 । 𑌅𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑍋𑌽𑌪𑌿 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑍇𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌯 𑌅𑌨𑌪𑌹𑍍𑌨𑌵𑌤𑌯𑌾 𑌬𑌾𑌹𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌵𑌶𑍍𑌯𑌂𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌤𑍃𑌤𑍀𑌯𑌃—𑌸𑌰𑍍𑌵-

---

உசிதமல்ல—விகல்பத்தைப் பொறுக்காதாகையினால். இவ்விடத்தில் வெளியில் இருப்பதாகத் தோன்றுகிற வஸ்துக்கள் ஜ்ஞான ஸ்வரூபங்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டதா? ஜ்ஞான ஸ்வரூபத்தைத் தவிர மற்றவைகள் வஸ்துக்கள் அல்ல என்பது தாத்பர்யமா? வஸ்துக்களாகவோ வஸ்துக்கள் இல்லாதவைகளாகவோ இருக்கிற வெளியில் இருக்கும் விஷயங்கள் ஜ்ஞானத்தில் தோன்றுகிறதில்லை யென்பதா? வெளியில் உண்டானவஸ்துக்களைப் பற்றிய அனுபவமே பொய் என்பதா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல—ஆத்மக்யாதி என்று சொல்லுவது உன்னாலேயே தூஷிக்கப்பட்டிருப்பதினால். அப்படி ஒப்புக்கொண்டால் அதற்கு மற்றோர் இடத்தில் நம்மால் பதில் சொல்லப்பட்டிருப்பதினால். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல—ப்ரபஞ்சம் இல்லையென்று மறுப்பது முன்னமேயே நிராகரிக்கப்பட்டிருப்பதினால். வெளியில் இருக்கும் விஷயங்கள் உண்மை இல்லாமல் போனபோதிலும் அதை ஜ்ஞானம் அறிகிறது என்பது மறைக்க முடியாதாகையினால் வெளியில் இருக்கும் விஷயங்கள் ப்ரகாசிக்கிறது என்பது அவஶ்யம் ஒப்புக் கொள்ளப்பட வேண்டுமாதலாலும். மூன்றாவது பக்ஷமும் உசிதமல்ல—உலகத்தில் இருக்கும் நிரூபகர்கள் எல்

𑌲𑍌𑌕𑌿𑌕𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑌕𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯𑌵𑌿𑌸𑌂𑌵𑌾𑌦𑌾𑌤𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨
𑌵𑍈𑌫𑌲𑍍𑌯𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌾𑌚𑍍𑌚 । 𑌨 𑌚 𑌤𑍁𑌰𑍀𑌯𑌃 𑌮𑌾𑌧𑍍𑌯𑌮𑌿𑌕𑌵𑌾𑌦𑌾𑌵𑌤𑌾𑌰𑌾𑌤𑍍 ।
𑌅𑌸𑍍𑌤𑍁 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯𑍈𑌵𑌾𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍍𑌵𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍,
𑌨—𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌵𑌿𑌶𑍋𑌧𑌿𑌤𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁
𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌤𑌦𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌤𑍍𑌵𑌦𑌭𑌿𑌮𑌤𑌸𑍍𑌯 𑌕𑍁𑌤𑌶𑍍𑌚𑌿
𑌦𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃, 𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌵𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌾
𑌭𑌾𑌵𑍇 𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌪𑌿 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌾𑌨𑍁𑌭𑌵𑌵𑌿𑌷𑌯𑌾𑌣𑌾
𑌮𑌸𑌂𑌭𑌵𑍇 𑌚 𑌤𑍃𑌤𑍀𑌯𑌪𑌕𑍍𑌷𑌪𑌰𑌿𑌶𑍇𑌷𑌾𑌤𑍍 ।

லோருடையவும் அபிப்ராயத்திற்கு விரோதமாயிருப்பதினாலும், ஒரு வித ப்ரயத்தினமும் செய்யவேண்டியதில்லாமல் போகவேண்டி வருமாதலாலும். நான்காவது பக்ஷமும் உசிதமல்ல—மாத்யமிகன் சொல்லுவதையே ஒப்புக் கொண்டதாகுமாதலால். வெளியில் இருக்கும் வஸ்துக்களைப் பற்றிய அனுபவம் மாத்திரம் உண்மையில்லை (அதாவது அதைத்தவிர ப்ரகாசம் என்கிற ப்ரும்மம்ஸத்யம், ஆதலால் எனக்கும் மாத்யமிகனுக்கும் வ்யத்யாஸம் உண்டு) என்பதும் உசிதமல்ல—அந்த அனுபவமே நன்றாக நிரூபிக்கப்பட்டு விஷயங்களோடு ஸம்பந்தமாகிற அசுத்தி நீக்கப்பட்டால் ப்ரும்மம் என்று சொல்லப் படுகிறது என்று உன்னாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினால். அதைத்தவிர வேறானதாய் உன்னால் அங்கீகரிக்கப்பட்ட ப்ரகாசம்வேறொருப்ரமாணத்தினாலும்ஸித்திக்கவில்லையாகையினாலும், அப்படிஸித்தித்தாலும்அந்தப்ரகாசத்திற்கு முன்புசொல்லியயுக்தியினால்வெளியில் இருக்கிறவஸ்துக்களைப்பற்றிய அனுபவம்இல்லாமல்போனால் அதைத் தவிரமற்றவஸ்துக்களுக்கும் அப்படியே வெளியில் இருக்கும்வஸ்துக்களைப்பற்றிய அனுபவம்இல்லையென்றுசொல்லவேண்டிவருமாதலாலும் முன்பு சொல்லிய விகல்பங்களில் மூன்றாவது விகல்பமே மிகுதியாய் நிற்கிறது.

𑌅𑌤𑍋 𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌵𑌤𑍍𑌤𑍍𑌵𑍇 𑌸𑌾𑌧𑌕𑌂 𑌬𑌾𑌧𑌕𑌂 𑌵𑌾 𑌨 𑌶𑌕𑍍𑌨𑍋𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑍁𑌮𑌿𑌤𑌿 ॥

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁

𑌶𑍍𑌰𑍀𑌶𑌤𑌦𑍂𑌷𑌣𑍍𑌯𑌾𑌂

॥ 𑌬𑌾𑌹𑍍𑌯𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌵𑌾𑌦𑍋𑌽𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ஆதலால் உனக்கு வெளி வஸ்துக்களை அறிகிறது என்பது உண்டென்று ஒப்புக்கொள்ளுவதற்கும் இல்லையென்றுவிடுவதற்கும் முடியாததலால் முடிவில்லாத வ்யஸனம் உண்டாகிறது.

இப்படித் திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத் விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
ஸ்ரீ சததூஷணீ தமிழ்மொழி பெயர்ப்பில்
பாஹ்யப்ரகாசானுபபத்திவாதம் என்னும்
பதினெட்டாவது வாதம் முற்றிற்று.

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

॥ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌰𑌾𑌸𑌵𑌾𑌦𑌃 𑌏𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌃 ॥

𑌅𑌨𑌨𑍍𑌯𑌚𑍇𑌤𑌸𑌾𑌂 𑌪𑍁𑌂𑌸𑌾𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑌨𑍁𑌨𑍍𑌦𑌤𑍇 |
𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌗𑌨𑍍𑌧𑌾𑌯 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍇 𑌨𑌮𑌃 ॥

𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌾𑌦𑌿𑌦𑍃𑌶𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌦𑍂𑌷𑌯𑌦𑍍𑌭𑌿𑌃 𑌭𑌾𑌷𑍍𑌯𑌕𑌾𑌰𑍈𑌃 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌮𑌪𑌿 𑌸𑌂𑌵𑌿𑌦𑍋 𑌨𑌿𑌰𑌸𑍍𑌤𑌂 — '𑌨 𑌚 𑌸𑌂𑌵𑌿𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯'—𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌨𑌾। 𑌅𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌯𑌵𑌿𑌕

॥ 𑌶𑍍𑌰𑍀𑌃 ॥

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌰𑌾𑌮𑌾𑌨𑍁𑌜𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ॥

ப்ரும்மாஶ்ரயாஜ்ஞான நிராஸவாதம் என்னும் பத்தொன்பதாவது வாதம்.

வேறொரு இடத்திலும் மனதைச் செலுத்தாமல் தன்னிடத்திலேயே செலுத்திக்கொண்டிருக்கும் ஆத்மாக்களுக்கு அஜ்ஞானத்தைப் போக்கடிப்பவனும், அஜ்ஞானமென்கிற ஸம்பந்தமே இல்லாதவனும், எப்பொழுதும் எல்லாவற்றையும் அறிந்தவனும் இருக்கிற பகவான்பொருட்டு நமஸ்காரம் செய்கிறேன்.

ஜ்ஞானம் அஹங்காரத்தினால் ப்ரகாசம் செய்யப்படுகிறது என்பதைத் தூஷிக்கிற ஸ்ரீ பாஷ்யகாரரால் ஜ்ஞானத்திற்கு அஜ்ஞானத்திற்கு ஆதாரமாய் இருக்கும் தன்மையும் பொருந்தாது என்பதும் 'அஜ்ஞானத்திற்கு ப்ரும்மத்தை ஆதாரமாக உடையதாயிருக்கும் தன்மை பொருந்தாது' என்றிவை முதலாக நிராகரிக்கப்பட்டிருக்கிறது. அவித்யைக்கு ஆதாரம் ஏது என்று விகல்பிக்கும் இடத்திலும் 'ப்ரும்மத்தை

ர்வே வோக்தம் — ‘நாபி ப்ரஹ்மாஶ்ரிதா தஸ்ய ஸ்வப்ரகாஶஜ்ஞாநரூபத்வேநாவித்யாவிரோதித்வாத்’—இத்யாதிநா| அஶேஷஶாஸ்த்ரேஷு ச ஸர்வஜ்ஞத்வநிர்தோஷத்வாதிஶ்ருதிஶதை: விரோதோ தர்ஶித: | தத்ஸர்வம் ஸங்க்ஷிப்ய ப்ரதர்ஶ்யதே:—

யத்யபி ஸ பரமாத்மா த்வதுக்தப்ரகாரேண ஸம்விந்மாத்ரஸ்வரூப:, யதி வா யதாஶ்ருதி ஸர்வஜ்ஞ:, நோபயதாபி தஸ்யாஜ்ஞாநாஶ்ரயத்வம் ஸம்பவதி | ததா ஹி — ந தாவத் கடாதிவத் ஜ்ஞாத்ருத்வாத் ஜ்ஞாநாபாவலக்ஷணமஜ்ஞாநமிஹ விவக்ஷிதம் — தஸ்ய ஸ்வதஸ்ஸித்தே ப்ரஹ்மண்யபி கடாதாவிவ யாவத்ஸ்வரூபபாவிதயா ஸ்வரூபே ஸதி நிவர்தயிதுமஶக்யத்வாத் | நாபி

ஆதாரமாக வைத்துக்கொண்டு ப்ரமத்தை உண்டாக்குகிறது என்பதும் பொருந்தாது, ஏனெனில் அந்த ப்ரும்மம் ஸ்வயம்ப்ரகாசமாகிய ஜ்ஞான த்தையே ஸ்வரூபமாக உடையதாகையினுலே அவித்யைக்குவிரோதியா தலால்’ என்றிவை முதலிய வாக்யங்களினுல் சொல்லப்பட்டிருக்கி றது. மற்றும் சில இடங்களிலும் ப்ரும்மம் எவ்லாவற்றையும் அறிந் தது என்றும், தோஷம் ஒன்றும் இல்லாதது என்றும் சொல்லுகிற அனேக வேதவாக்யங்களோடு விரோதமும் நிரூபிக்கப்பட்டிருக் கிறது. அவை எல்லாவற்றையும் சேர்த்து நிரூபிக்கிறோம்.

இந்தப் பரமாத்மா உன்னல் சொல்லப்பட்டிருக்கிறபடி ஜ்ஞானம் மாத்திரத்தையே ஸ்வரூபமாக உடையவனுயிருந்தபோதிலும் வேதங் களில் சொல்லியபடி எல்லாவற்றையும் அறிந்தவனுயிருந்தபோதிலும் இரண்டு விதத்திலும் அந்தப் பரமாத்மாவிற்கு அஜ்ஞானத்திற்கு ஆஶ்ரயமாயிருக்கும் தன்மை ஸம்பவிக்காது. எப்படிஎன்னில்:— இவ்விடத்தில் குடம் முதலியவைகளைப்போல மற்ற வஸ்துக்களை அறியும் தன்மை இல்லாமையாகிற அஜ்ஞானம் சொல்லப்படுகிறதென் பது உசிதமாகாது—அது உன்னல் அங்கீகரிக்கப்பட்ட ப்ரும்மத்தின் இடத்திலும் குடம் முதலிய வஸ்துக்களிலேபோல அதின் ஸ்வரூபம் உள்ளவரையில் இருக்கக்கூடியதாகையினுலே ப்ரும்மத்தின் ஸ்வரூபம்

𑌜𑍍𑌞𑌾𑌨𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑌪𑍍𑌰𑌧𑍍𑌵𑌂𑌸𑍌—𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌧𑌰𑍍𑌮𑌭𑍂𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑍍𑌯𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌯𑍋𑌨𑍍𑌯𑌾𑌭𑌾𑌵𑌃—𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌨𑍍𑌤𑌰𑌾𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍, 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌗𑌿𑌕𑌭𑍇𑌦𑌾𑌯𑍋𑌗𑌾𑌚𑍍𑌚 । 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌦𑍃𑌶𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌦𑍍𑌭𑍇𑌦𑌸𑍍𑌯 𑌸𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌤𑌯𑌾𑌭𑌿𑌮𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌯𑍋𑌗𑌾𑌤𑍍 । 𑌭𑌾𑌵𑌰𑍂𑌪𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌦𑍇𑌵 𑌚 𑌨𑌾𑌭𑌾𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑌿 ।

𑌅𑌤𑍋 𑌯𑌦𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌮𑌤𑌂, 𑌤𑌜𑍍𑌜𑍍𑌞𑌾𑌤𑌰𑍍𑌯𑍇𑌵 𑌭𑌵𑌿𑌤𑍁𑌮𑌰𑍍𑌹𑌤𑌿, 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌗𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑌵𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑍇𑌃 । 𑌨 𑌹𑌿 𑌦𑍇𑌵𑌦𑌤𑍍𑌤𑌗𑌤𑍇𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌯𑌜𑍍𑌞𑌦𑌤𑍍𑌤𑌗𑌤𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇 ।

இருக்கும்பொழுது நிவ்ருத்திசெய்ய முடியாதாகையினுல். ஜ்ஞானம் உண்டாவதற்குமுந்தி இருக்கும் அபாவம் அல்லது அதன் விநாசம் என்பதும் உசிதமாகாது—ப்ருஹ்மத்தின் இடத்தில் குணமாகிய ஜ்ஞானம் எந்த ஸமயத்திலும் உன்னுல் ஒப்புக்கொள்ளப்படவில்லையாதலால். ஜ்ஞானத்தைக்காட்டிலும் பேதம் என்றும் சொல்லமுடியாது—வேெருரு ஜ்ஞானம் ஒப்புக்கொள்ளப்படாமையினுலும், எல்லா வஸ்துக்களும் ப்ருஹ்மமேயாகையினுல் தன்னைக்காட்டிலும் பேதம் என்பது பொருந்தாததலாலும். வ்ருத்தியாகிற ஜ்ஞானம் ப்ரமிக்கப்படுகிற ஜ்ஞானம் இவைகளைக்காட்டிலும் பேதம் ப்ருஹ்மத்திற்கு வாஸ்தவமாதலால் அதுவும் அஜ்ஞானத்தினுல் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியதாக ஒப்புக்கொள்ளப்படுகிற அஜ்ஞானமென்பது பொருந்தாது. அந்த அஜ்ஞானம் வஸ்துவாகியது என்று ஒப்புக்கொள்ளப்படுகிறபடியினுல் வேெருரு அபாவம் என்பதும் பொருந்தாது.

ஆதலால் ஜ்ஞானத்தினுல் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியதாக எந்த அஜ்ஞானம் அங்கீகரிக்கப்படுகிறதோ, அது அறியும்தன்மையை உடைய வஸ்துவின் இடத்திலேயே உண்டாகக்கூடியது. ஏனெனில் ஜ்ஞானம் தனக்கு ஆதாரமாகிய வஸ்துவினிடத்தில் இருக்கும் அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்யக்கூடியது என்று நியமம் ஏற்பட்டிருப்பதினுல். தேவதத்தனுக்கு உண்டாகிய ஜ்ஞானத்தினுல் யஜ்ஞதத்தனுக்கு உண்டாகிய அஜ்ஞானம் நிவ்ருத்தி அடைகிறதில்லையல்லவா.

நநு ஈஶ்வராபி⁴மதேந ஜ்ஞாநேந கத²ம் தத³நுக்³ரஹவிஷயஜீவக³தாஜ்ஞாநநிவ்ருத்திஸ்ஸித்⁴யேதி சேத், ந— தத்ர ஶக்திவிஶேஷோபப்³ருʼம்ஹிதத்வேந தது³பபத்தே: | ந ஹி ப்ரகாஶாகாரதாமாத்ரேண தத்ர ஸ்வக³தாஜ்ஞாநநிவர்தகத்வம், ததா² ஸதி நித்யம் தந்நிவ்ருத்திப்ரஸங்கா³த் |

அதோ ஜீவக³தேநாந்த:கரணக³தேந வா தத்த்வஜ்ஞாநேந ப்³ரஹ்மாஜ்ஞாநநிவ்ருத்திரிதி ப்ரத்யுக்தம் |

ததஶ்ச யஜ்ஜ்ஞாநநிவர்த்யமஜ்ஞாநம், ந தஜ்ஜ்ஞாத்ருத்வப்ரஸக்திரஹிதே ப்³ரஹ்மணி ப⁴விதுமர்ஹதி | ததே³தத் பா⁴வரூபாஜ்ஞாநதூ³ஷணே ப்ரஸங்கா³த்ப்ராயேண

ஈஶ்வரனுக்குண்டாகிய ஜ்ஞானத்தினால் (ஸங்கல்பரூப ஜ்ஞானத்தினால்) அவனுடைய அனுக்ரஹத்திற்கு விஷயமான ஜீவாத்மாக்களிடத்தில் இருக்கும் அஜ்ஞானம் நிவ்ருத்தி அடைகிறது என்கிற உன்னுடைய மதம் எப்படிப்பொருந்தும் என்பது உசிதமல்ல—அவ்விடத்தில் அந்த ஜ்ஞானம் ஶக்தி விசேஷத்தோடு சேர்ந்திருக்கிற படியினால் அது பொருத்தமுடையதாகுமாதலால். அவ்விடத்திலும் அந்த ஜ்ஞானத்திற்கு ப்ரகாசமாக இருக்கிறது என்பதுமாத்திரத்தினால் ஜீவாத்மாவினிடத்தில் இருக்கும் அஜ்ஞானத்தை நிவ்ருத்தி செய்யும் தன்மை இல்லையல்லவா, அப்படி இருந்ததாகில் அந்த அஜ்ஞானம் எப்பொழுதும் நிவ்ருத்தி அடையவேண்டிவருமாதலால்.

ஆகையினால் ஜீவாத்மாவினிடத்தில் இருக்கிற அல்லது அந்தக்கரணத்தில் இருக்கிற தத்வ ஜ்ஞானத்தினால் ப்ரும்மத்தினுடைய அஜ்ஞானம் நிவ்ருத்தியடைகிறது என்பது பதில் சொல்லப்பட்டது.

ஆதலாலும் எது ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி செய்யப்படக்கூடிய அஜ்ஞானமோ, அது அறியும் தன்மையின் ப்ரஸ்தாவமே இல்லாத ப்ரும்மத்தின் இடத்தில் உண்டாகக்கூடியதல்ல. இதுவும் வஸ்துவாகிய அஜ்ஞானத்தைத் தூஷிக்கும் இடத்தில் பதில்வாதம் சொல்லுகிற அபிப்ராயத்தினால் ‘விவாதத்தில் இருக்கிற அஜ்ஞானம் ஜ்ஞானம்

𑌶𑍍𑌰𑌯𑌮𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 — ‘𑌵𑌿𑌵𑌾𑌦𑌾𑌧𑍍𑌯𑌾𑌸𑌿𑌤𑌮𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌾𑌤𑍍𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 — 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑍍𑌯𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍, 𑌜𑍍𑌞𑌾𑌤𑍍𑌰𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 𑌹𑌿 𑌤𑌤𑍍’ 𑌇𑌤𑌿, ‘𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌨𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌂 — 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌵𑌿𑌰𑌹𑌾𑌤𑍍, 𑌘𑌟𑌵𑌤𑍍’ 𑌇𑌤𑌿 𑌚 ।

𑌨𑌨𑍁 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋𑌪𑍍𑌯𑌸𑍍𑌤𑍀𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑍋𑌪𑌪𑌤𑍍𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 — 𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑍋𑌪𑌹𑌿𑌤𑌵𑍇𑌷𑍇𑌣𑍈𑌵 𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌕𑌲𑍍𑌪𑌨𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌤𑍍, 𑌸𑍁𑌷𑍁𑌪𑍍𑌤𑌿𑌮𑌰𑌣𑌾𑌦𑌿𑌷𑍁 𑌅𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌵𑌿𑌲𑌯𑍇𑌪𑌿 𑌸𑌂𑌵𑌿𑌦𑌾𑌤𑍍𑌮𑌨 𑌏𑌵𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌾𑌚𑍍𑌚 । 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌶𑍁𑌕𑍍𑌤𑌿𑌕𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍍𑌯𑌹𑌮𑌰𑍍𑌥𑌨𑌿𑌷𑍍𑌠𑌮𑌿𑌤𑌿 𑌵𑌾 𑌕𑌲𑍍𑌪𑌯, 𑌤𑍍𑌯𑌜 𑌵𑌾 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 । 𑌉𑌭𑌯𑌥𑌾𑌪𑌿 𑌨 𑌸𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 ।

மாத்திரமாகிய ப்ருஹ்மத்தை ஆதாரமாக உடையதல்ல—அஜ்ஞான மாகையினால், முத்துச் சிப்பி முதலியவைகளைப்பற்றிய அஜ்ஞானத்தைப்போல, அது அறியும் தன்மை உடைய ஜீவாத்மாவை ஆதாரமாக உடையதல்லவா' என்றும், 'ப்ருஹ்மம் அஜ்ஞானத்திற்கு ஆதாரமல்ல—அறியும் தன்மை இல்லாமையினால், குடம் முதலியவைகளைப் போல' என்றும் அனுமானமாக ப்ரயோகித்திருக்கிறார்.

ஆரோபிக்கப்பட்டதாகிய அறியும்தன்மை ப்ருஹ்மத்திற்கும்இருக்கிறதாகையினால் அதற்கு அஜ்ஞானத்திற்கு ஆதாரமாகஇருக்கும்தன்மையும்பொருத்தமுடையதாகிறது என்பதுமுசிதமல்ல—அஹங்காரத்தோடு சேர்ந்திருக்கிற ஆகாரத்தினால் அந்த ப்ருஹ்மத்திற்கு அறியும் தன்மை கல்பிக்கப்படுகிறது என்று ஒப்புக்கொள்ளப்பட் டிருப்பதினாலும், தூக்கம்மரணம்முதலிய தசைகளில் அஹங்காரம் நாசம்அடைந்த போதிலும் ஜ்ஞான ஸ்வரூபனாகிய ஆத்மாவிற்கே அஜ்ஞானத்திற்கு ஆதாரமாகஇருக்கும்தன்மைஒப்புக்கொள்ளப்படுகிறபடியினாலும். முத்துச்சிப்பியைப்பற்றிய அஜ்ஞானத்தைப்போல ப்ருஹ்மத்தைப்பற்றிய அஜ்ஞானமும் அஹம் என்கிற பதத்திற்கு அர்த்தமாகிய அஹங்காரத்தில் இருக்கிறது என்றாவது கல்பனை செய், எல்லா இடத்திலும்

𑌯𑌸𑍍𑌯 𑌵𑌸𑍍𑌤𑍁𑌤𑍋 𑌜𑍍𑌞𑌾𑌤𑍃𑌤𑍍𑌵𑌂 𑌪𑌰𑌿𑌗𑍃𑌹𑍍𑌯 𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌿 𑌸𑍍𑌥𑌾𑌪𑌯𑍇𑌤𑍍, 𑌸𑍋𑌽𑌪𑌿 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍍𑌯𑌾 𑌨𑌿𑌰𑌸𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।

𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌬𑌾𑌧𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌿𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮 𑌚 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌰𑍂𑌪𑌮𑍍, 𑌤𑌤𑍍𑌤𑍇𑌜𑌸𑍀𑌵 𑌤𑌿𑌮𑌿𑌰𑌂 𑌕𑌥𑌂 𑌤𑌤𑍍𑌰 𑌤𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌤𑍍? 𑌤𑌚𑍍𑌚𑍇𑌤𑍍 𑌸𑍍𑌵𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌸 𑌸𑌹𑍇𑌤, 𑌕𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌃? 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌷𑌯𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌦𑌨𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌤𑍍𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌂 𑌕𑌿𑌂 𑌨 𑌸𑍍𑌮𑌰𑌸𑌿? 𑌪𑍍𑌰𑌸𑍍𑌮𑌰 𑌵𑌾 ।

ப்ரும்மத்தைப்பற்றிய அஜ்ஞானத்தை விடவாவது விடு. இரண்டு விதத்திலும் நான் உன்னைத் தொந்திரவு செய்யவில்லை.

எவனொருவன் ப்ரும்மத்திற்கு உண்மையாகவே அறியும்தன்மை உண்டென்று ஒப்புக்கொண்டு ப்ரும்மத்தின் இடத்தில் அஜ்ஞானம் உண்டென்று ஸ்தாபிக்கிறனே, அவன் எப்பொழுதும் எல்லாவற்றையும் அறியும் தன்மையை உடையது என்கிற ஸ்வபாவம் அந்த ப்ரும்மத்திற்குப் பொருந்தாது என்கிற காரணத்தினுல் நிராகரிக்கப்படப் போகிறுன்.

அந்த ப்ரும்மம் ஸ்வயம்ப்ரகாசமாதலாலும் அஜ்ஞானத்திற்கு ஆதாரம் என்பது பொருந்தாது. அந்த அஜ்ஞானம் ப்ரும்மத்தின் ப்ரகாசத்தினுல் நிவ்ருத்தி செய்யப்படக்கூடியது என்றல்லவோ ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அந்த ப்ரும்மம் எப்பொழுதும் ஸ்வயம்ப்ரகாசத்தையே ஸ்வரூபமாக உடையது, ஆகையினுல் வெளிச்சம் இருக்கும்பொழுது இருட்டு உண்டாகாததைப் போல அந்த அஜ்ஞானம் அந்த ப்ரும்ம ஸ்வரூபத்தின் இடத்தில் எப்படி உண்டாகும்? அந்த ப்ரும்மம் தன்னிடத்தில் அஜ்ஞானத்தைப் பொறுத்துக்கொள்ளக்கூடியதாயிருந்தால் அதை நிவ்ருத்தி செய்யக் கூடியது எது? ப்ரும்மத்தைப்பற்றியதாகிய வ்ருத்தி ரூப ஜ்ஞானம் நிவ்ருத்தி செய்கிறது என்னில், அனுபவிக்கப்படும் தன்மை இருந்ததேயானுல் குடம் முதலிய வஸ்துக்களைப்போல ஜ்ஞானத்தைக் காட்டிலும் வேறுயிருக்கும்தன்மை உண்டாகவேண்டிவரும் என்று உன்னுலேயே சொல்லப்பட்டதை ஏன் நினைக்கவில்லை? மறந்துவிட்டாலும் விடு. அப்படி இருந்தபோதிலும் அந்த ஜ்ஞானத்திற்கு ஸ்வ

𑌤𑌯𑍋𑌰𑌪𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 𑌨 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌤𑍍𑌵𑌂 । 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌕𑌾𑌨𑍁𑌪𑌪𑌤𑍍𑌤𑍌 𑌚𑌾𑌸𑍍𑌯 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑍋 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌃 ।

𑌨𑌨𑍁 𑌭𑌵𑌤𑌾𑌪𑌿 𑌜𑍀𑌵𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌂 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂, 𑌤𑌦𑍇𑌵 𑌚𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑍇𑌤𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌸𑌤𑍍𑌯𑌂, 𑌤𑌥𑌾𑌪𑌿 𑌨 𑌤𑌤𑍍𑌰 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 । 𑌨 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾𑌂𑌶𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌨𑍀𑌕𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌗𑌾𑌤𑍍𑌮𑌨𑍋 𑌬𑍍𑌰𑍂𑌮𑌃 । 𑌕𑌿𑌨𑍍𑌤𑍁 𑌤𑌸𑍍𑌯𑍈𑌵 𑌦𑍇𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌦𑌿𑌵𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌵𑌾𑌨𑌨𑍍𑌦𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌯𑍁𑌕𑍍𑌤 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌰𑍂𑌪𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 । 𑌤𑌚𑍍𑌚 𑌤𑌥𑌾𑌤𑍍𑌮𑌤𑍍𑌵𑍇𑌨 𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌵𑌿𑌷𑌯𑍇𑌣 𑌜𑍍𑌞𑌾𑌨𑍇𑌨 𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌤𑍇, 𑌯𑌥𑌾 𑌚 𑌶𑌬𑌰𑌸𑌂𑌵𑌰𑍍𑌧𑌿𑌤𑌸𑍍𑌯 𑌰𑌾𑌜𑌕𑍁𑌮𑌾𑌰𑌸𑍍𑌯 𑌶𑌬𑌰𑌤𑌯𑌾𑌤𑍍𑌮𑌾𑌨𑌮𑌭𑌿𑌮𑌨𑍍𑌯𑌮𑌾𑌨𑌸𑍍𑌯

யம்ப்ரகாச ஜ்ஞானத்தைக்காட்டிலும் ஒரு விசேஷமும் இல்லாமையினால் அதற்கு நிவ்ருத்தி செய்யக்கூடிய தன்மை உண்டாகாது. இதைப்பற்றிய விஸ்தாரம் நிவர்த்தகானுபபத்தியைச் சொல்லுமிடத்தில் அறியத்தக்கது.

உன் மதத்திலும் ஜீவாத்மாவின் ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாசம் என்றும், அதுவே அஜ்ஞானத்திற்கும் ஆஶ்ரயமாயிருக்கிறதென்றும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதே என்னில், உண்மையே, அப்படியிருந்தபோதிலும் அது விஷயத்தில் ஒரு விரோதமுமில்லை. ஏனெனில் ஸ்வயம்ப்ரகாசமாகத் தோன்றுகிற ப்ரகாசத்திற்கு எதிர்நடையான அஜ்ஞானத்தை ஜீவாத்மாவிற்கு உண்டென்று நாங்கள் சொல்லவில்லையாதலால். பின்னை எப்படி என்னில்:—தேஹம் இந்திரியம் முதலியவைகளைக்காட்டிலும் வேறுபட்டவனாகிய அந்த ஜீவாத்மாவிற்கே ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கை நித்யமாயிருக்கை ஆநந்தரூபமாயிருக்கை முதலிய ஸ்வபாவங்களை உடையது என்பதைப்பற்றியது அஜ்ஞானம், அந்த அஜ்ஞானம் அந்தந்த ஆத்மாவில் இருக்கிற கீழ்க்கூறிய ஸ்வபாவங்களை உடையது என்கிற ஜ்ஞானத்தினால் நிவ்ருத்தி அடைகிறது, எப்படிஎன்னில்:—வேடனால் வளர்க்கப்பட்டவனாய் தன்னை வேடனாகவே அபிமானித்துக் கொண்டிருக்கிற ராஜகுமாரனுக்கு அவன் ஆத்மா ஸ்வயம் ப்ரகாசமாய்ப்ரகாசித்துக் கொண்டிருக்கும்பொழுதே

ஹ்ருகாஸ்தாநஸ்யைவ ஸ்வாத்மநி க்ஷத்ரியத்வாஜ்ஞாநம், தத்த்வோ
பதேஶாதிஜநிதராஜத்வஜ்ஞாநேந நிவர்த்ததே, தத்வ
த்ராபீதி ஸ்வயமேவ பரிபாவய ।

நித்யமுக்தத்வாப்யுபகமாத் । நஹ்யஜ்ஞாநாஶ்ரயத்வ
மநந்தர்பாவ்ய கஶ்சித் பந்தோ நாம, ந ச பந்தாபாவாதந்யா
முக்தி: । யே ச முக்திதஶாயாம் பாஷாணாதிவதஜ்ஞத்வ
மிச்சந்தி, ந தேஷாம் ஸம்ஸாரபீஜபூததஜ்ஞாந
மநுமந்யந்தே । அஸ்மந்மதே து யத்யபி ஸார்வஜ்ஞ்யமா
த்மநாம் ஸ்வரூபப்ராப்தம் ததாபி தத்ததுபாதிவஶாச்
திரோஹிதமிதாநீம் ந வித்யத இதி பந்தமோக்ஷயோ:
காலபேதாந்ந விரோத: ।

தான் ராஜா என்பதைப்பற்றிய அஜ்ஞானம் உண்டாகிறது, அது உபதேசம் முதலியவைகளினுல் உண்டாக்கப்படுகிற ராஜா என்கிற ஜ்ஞானத்தினுல் எப்படி நிவ்ருத்தியடைகிறதோ அப்படியே இவ்விடத்திலும் என்று நீயே யோசித்துக்கொள்.

எப்பொழுதும் பந்தத்தில் இருந்து விடுபட்டவன் (அதாவது முக்தன்) என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதினுலும் அஜ்ஞானம் ப்ருமத்தினிடத்தில் இருக்கிறதென்பது பொருந்தாது. அஜ்ஞானத்திற்கு ஆதாரமாக இருக்கையை தனக்குள் அடக்கிக் கொள்ளாத பந்தம் என்கிற ஒருவஸ்து இல்லையல்லவா. பந்தம் இல்லாமையைத் தவிர முக்தி என்பது வேறல்ல. எவர்கள் முக்திதசையில் கல் முதலியவைகளைப்போல அறிவில்லாமை உண்டாகிறதென்று ஒப்புக் கொள்ளுகிறுர்களோ அவர்களும் கூட அப்பொழுது ஸம்ஸாரத்திற்குக் காரணமாகிய அஜ்ஞானம் இருப்பதாக ஒப்புக் கொள்ளவில்லை. எங்களுடைய மதத்திலோவெனில் எல்லா ஆத்மாக்களுக்கும் எல்லாவற்றையும் அறியக் கூடிய தன்மை ஸ்வரூபத்தைப் பொறுத்ததாயிருந்தபோதிலும் அந்தந்த உபாதிகளால் தடுக்கப்பட்டதாகையினுலே இப்பொழுது அந்தத் தன்மையில்லை, ஆதலால் பந்தம் மோக்ஷம் இரண்டும் வெவ்வேறு காலங்களில் உண்டாகிறபடியினுலே விரோதமில்லை.

अस्माकमप्यविद्यातन्निवृत्त्योः पौर्वापर्यान्न विरोध इति चेत्, तर्हि नित्यमुक्तत्वविरोधः । अविद्यायाः स्वकालेऽपि वस्तुतो निवृत्तत्वात् नित्यमुक्तत्वमुपपद्यत इति चेत्, कथं तर्हि पौर्वापर्यम्? भ्रान्तिसिद्धमिति चेत्, न—भ्रान्तिसिद्धयोरपि नित्यनिवृत्तस्वरूपतया तत्रापि पौर्वापर्यासिद्धेः । एवं च तत्र भ्रान्तिसिद्धपौर्वापर्यमपेक्षणेऽपि न निस्तारः । न च सत्यस्थे भ्रान्तिसिद्धभेदः, येन निरुपाधिकं तत्र पौर्वापर्यं स्यात् । निवृत्त्यनुपपत्तिहेतवस्त्वत्र सञ्चारणीयाः ।

எங்களுடைய மதத்திலும் அஜ்ஞானமும் அதன் நிவ்ருத்தியும் முன்னும் பின்னுமாக உண்டாகிறபடியினுல் விரோதமில்லை என்னில், அப்படியாகில் எப்பொழுதும் முக்தன் என்பதற்கு விரோதம் வருகிறது. அஜ்ஞானம் தான் இருக்கும் காலத்திலும் உண்மையில் இல்லாமையினுல் நித்ய முக்தன் என்பது பொருத்த முடையது என்னில், அப்படியாகில் முன்னும் பின்னுமாக இருக்கை எப்படி ஸம்பவிக்கும்? ப்ரமத்தில் தோன்றுவதில் வ்யத்யாஸம் இருக்கிறபடியினுல் பொருத்தமுடையதாகிற தென்னில், அது உசிதமல்ல—அந்த ப்ரமங்களும் எப்பொழுதும் உண்மையில் இல்லாமையினுல் அதிலும் முன் பின் என்கிற காலங்களின் பேதம் ஸித்திக்கவில்லை. இப்படி யாகையினுல் ப்ரமங்களின் வரிசைகளை எதிர்பார்த்த போதிலும் தோஷத்திற்கு நிவ்ருத்தி உண்டாகிறதில்லை. அந்த ப்ரமங்களின் வ்யத்யாஸங்கள் உன் மதத்தில் உண்மையல்லவே. அப்படி இருந்தாலல்லவோ அதில் முன் பின் என்கிற வ்யத்யாஸம் ஒரு காரணத்தினுல் இல்லாமல் ஸ்வபாவத்திலேயே ஏற்படும். அஜ்ஞானம் நிவ்ருத்திக்கிறது என்பது பொருந்தாது என்பதற்காக நிரூபிக்கப்பட்ட காரணங்களும் இங்கே சொல்லிக் கொள்ளத் தக்கவைகள்.

𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂 𑌜𑌾𑌨𑌾𑌤𑌿, 𑌯𑌤𑍍𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍, 𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌵 𑌵𑌾 𑌨 𑌜𑌾𑌨𑌾𑌤𑍀𑌤𑌿 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 । 𑌮𑌾 𑌭𑍂𑌤𑍍 𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 𑌤𑌾𑌵𑌦𑌯𑌂 𑌶𑌾𑌪𑌃 । 𑌨𑌾𑌪𑍍𑌯𑌨𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌮𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌨𑌂—𑌅𑌕𑌿𑌂𑌚𑌿𑌤𑍍𑌕𑌰𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌨𑌾𑌪𑌿 𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌨𑍁𑌯𑌾𑌵𑌨𑌂—𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 । 𑌶𑍍𑌰𑍂𑌯𑌤𑍇 𑌹𑌿—1 '𑌯𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍' 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 । 𑌸𑍍𑌵𑌯𑌂 𑌚 𑌬𑍍𑌰𑌵𑍀𑌤𑌿—2 '𑌵𑍇𑌦𑌾𑌹𑌂 𑌸𑌮𑌤𑍀𑌤𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌤𑌮𑌾𑌨𑌾𑌨𑌿 𑌚𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 । 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌾𑌣𑌿 𑌚 𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌮𑌾𑌂 𑌤𑍁 𑌵𑍇𑌦 𑌨 𑌕𑌶𑍍𑌚𑌨 ॥'—𑌇𑌤𑌿 । 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌶𑍍𑌚—3 '𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌶𑌕𑍍𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌬𑌲𑌰𑍍𑌦𑍍𑌧𑌿𑌮𑌾𑌨𑍍'—𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 ।

அந்த ப்ரும்மம் எல்லாவற்றையும் அறியும் தன்மை உடைய தாகையினுலும் அதற்கு அஜ்ஞானம் பொருந்தாது. எல்லாவற்றையும் அறிகிருன், ஒன்றையாவது எல்லாவற்றையுமாவது அறிய வில்லை என்கிற இரண்டும் ஓரிடத்தில் ஸம்பவிக்காதல்லவா. ப்ரும்மத் திற்கு எல்லாவற்றையும் அறியும் தன்மை இல்லாமல் போனுல் போகட்டும் என்னில், இது ப்ரும்மத்திற்கு சாபமல்ல. நீ ஒப்புக் கொள்ளவில்லை என்பதை மாத்திரம் ப்ரகாசம் செய்கிறது என்பதும் ப்ரயோஜனமல்ல—அது ப்ரயோஜனமற்ற தாகையினுல். ப்ரமாணங் களை அனுஸரித்திருக்கிறது என்பதும் இல்லை—ப்ரமாணங்கள் விபரீத மாக இருக்கிறபடியினுல். ஶ்ருதியில், 'எவன் எல்லாவற்றையும் அறிந்தவனே, எல்லாவற்றையும் ப்ரத்யக்ஷமாக அறிகிருனே' என் பது முதலியது சொல்லப்பட்டிருக்கிறதல்லவா. தானும் 'நான் இதற்கு முன் போனவைகளையும், இப்பொழுது இருக்கிற வஸ்துக் களையும் இனிவரப்போகிற வஸ்துக்களையும் அறிகிறேன், இந்த ப்ராணிகளில் ஒன்றும் என்னை அறியவில்லை' என்று சொல்லி இருக் கிருர். புராணங்களிலும் 'எல்லாவற்றையும் அறிந்தவன், எல்லா வற்றையும் ப்ரத்யக்ஷமாகப்பார்ப்பவன், எல்லா வஸ்துக்களையும் பற் றிய ஶக்தி ஜ்ஞானம் பலம் இவைகளின் நிறைவை உடையவன்' என் றிவை முதலியது சொல்லப்பட்டிருக்கிறது.

---

1. முண்டகம்-2-2-7. 2. கீதை-7-26.

3.

𑌨 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌅𑌸𑍍𑌯 𑌕𑍋𑌟𑍍𑌯𑌃? 𑌕𑌿𑌂 𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑌪𑌿 𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌂 𑌨𑌾𑌸𑍍𑌤𑍀𑌤𑌿? 𑌉𑌤 𑌸𑌦𑌪𑍍𑌯𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌿𑌤𑌿? 𑌨𑌾𑌦𑍍𑌯𑌃—𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌤𑍍, 𑌗𑍁𑌣𑌨𑌿𑌷𑍇𑌧𑌶𑍍𑌰𑍁𑌤𑍀𑌨𑌾𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑌗𑍁𑌣𑌵𑍍𑌯𑌤𑌿𑌰𑌿𑌕𑍍𑌤𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌸𑍍𑌥𑌾𑌪𑌨𑌾𑌤𑍍 । 𑌨 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌃—𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌦𑍇𑌵 । 𑌨 𑌹𑌿 𑌸𑍍𑌵𑌾𑌭𑌾𑌵𑌿𑌕𑌸𑌾𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑍍𑌯𑌸𑍍𑌯 𑌵𑌿𑌨𑌾𑌶𑌃 𑌸𑌂𑌭𑌵𑌤𑌿 । 𑌨𑌾𑌪𑌿 𑌚𑍋𑌤𑍍𑌪𑌤𑍍𑌤𑌿𑌃—𑌪𑍍𑌰𑌾𑌗𑌭𑌾𑌵𑌾𑌭𑌾𑌵𑌾𑌤𑍍 । 𑌵𑌿𑌸𑍍𑌤𑌰𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌤𑍍𑌰 ।

𑌅𑌤𑍋 𑌨𑌿𑌤𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌾𑌦𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌨 𑌕𑌦𑌾𑌪𑌿

அந்த ப்ரும்மத்திற்கு எல்லாவற்றையும் அறியும் தன்மை எப்பொழுதும் இருக்கக்கூடியதல்ல என்னில், இதன்பொருள் என்ன? ஒரு ஸமயத்திலும் எல்லாவற்றையும் அறியும் தன்மை அந்த ப்ரும்மத்திற்கு இல்லை என்றா? அன்றிக்கே அந்தத்தன்மை அந்த ப்ரும்மத்திற்கு உண்டாயிருந்தபோதிலும் அது அநித்யமென்றா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல-ஶ்ருதிகளுக்கு விரோதமாயிருக்கிறபடியினால். குணம் இல்லையென்று மறுக்கிற ஶ்ருதிகள் ஶ்ருதியில் விதிக்கப்படுகிற குணங்களைத் தவிர மற்றக்குணங்களைப்பற்றியது என்று ஸ்தாபித்திருக்கிறபடியினால். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல—எல்லாவற்றையும் அறியும் தன்மை ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டது என்று சொல்லுகிற ஶ்ருதிக்கு விரோதம் வருகிறபடியினால். ஸ்வபாவத்திலேயே ஏற்பட்டதான எல்லாவற்றையும் அறியும் தன்மைக்கு நாசம் ஸம்பவிக்காதல்லவா. உத்பத்தியும் ஸம்பவிக்காது—இது உண்டாவதற்கு முந்தி இது இல்லை என்று சொல்லப்படுகிற ப்ராகபாவம் இல்லாமையினால். இத்தைப்பற்றிய விஸ்தாரம் மற்றோரிடத்தில் கண்டுகொள்வது.

ஆதலால் ப்ரும்மம் எப்பொழுதும் எல்லாவற்றையும் அறியும் தன்மையுடையதாதலால் அதற்கு எந்த ஸமயத்திலும் அஜ்ஞானத்திற்கு ஆதாரமாய் இருக்கும் தன்மை ஸம்பவிக்காது. இத்தால் ஒரு

𑌽𑌪𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍𑌵𑌸𑌮𑍍𑌭𑌵𑌃 । 𑌅𑌨𑍇𑌨 𑌸𑌰𑍍𑌵𑌜𑍍𑌞𑌤𑍍𑌵𑌦𑍋𑌷𑌨𑌿𑌷𑍇𑌧𑌕𑌵𑌾𑌕𑍍𑌯𑌶𑌤𑌵𑌿𑌰𑍋𑌧𑍋𑌽𑌪𑌿 𑌸𑍍𑌥𑌾𑌪𑌿𑌤𑌃 ।

𑌨𑌨𑍁 𑌕 𑌏𑌵𑌮𑌾𑌹 — '𑌅𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑍍𑌰𑌯𑌭𑍂𑌤𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮' 𑌇𑌤𑌿? 𑌯𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑌮𑍍𑌭𑌵𑌃 𑌇𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍? 𑌹𑌨𑍍𑌤! 𑌕𑌿𑌮𑌸𑍍𑌮𑌦𑍁𑌕𑍍𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑍋 𑌭𑌵𑌾𑌨𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌨𑌿𑌷𑍇𑌧𑌤𑌿? 𑌉𑌤 𑌸𑍍𑌵𑌧𑍀𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑌿𑌵𑌾𑌹𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑌨𑍍𑌯𑌾𑌯𑍇𑌨? 𑌪𑍍𑌰𑌥𑌮𑍇 𑌤𑍁 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑌂 𑌤𑍍𑌯𑌜𑌾𑌮𑌃 । 𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑍇𑌽𑌪𑌿 𑌨 𑌤𑌾𑌵𑌨𑍍𑌨𑌿𑌰𑍁𑌪𑌾𑌧𑌿𑌕𑌯𑍋𑌰𑍇𑌕𑌤𑍍𑌰 𑌸𑌮𑍍𑌭𑌵𑌃, 𑌉𑌪𑌾𑌧𑌿𑌭𑍇𑌦𑍋𑌪𑌾𑌧𑌿𑌕𑌯𑍋𑌰𑌪𑌿 𑌨 𑌤𑍍𑌵𑌦𑍁𑌕𑍍𑌤𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾 𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 । 𑌨 𑌹𑌿 𑌦𑍇𑌶𑌕𑌾𑌲𑌾𑌦𑌿𑌭𑍇𑌦𑍇𑌨 𑌤𑌯𑍋𑌰𑍍𑌨𑌿𑌰𑍍𑌵𑌾𑌹𑌂 𑌵𑌦𑍇𑌃

தோஷமுமில்லை என்று மறுக்கிற அநேகமாயிரம் ஶ்ருதிவாக்யங்களுக்கு விரோதமும் வருகிறதென்றும் ஸ்தாபிக்கப்பட்டது.

அஜ்ஞானத்திற்கு ப்ருஹ்மம் ஆதாரமாக இருக்கிறதென்று எவன் இவ்விதமாக சொல்லுகிறான்? எவனைக்குறித்து ப்ருஹ்மத்திற்கு அஜ்ஞானம் ஸம்பவிக்காது என்று யுக்திகள் ஸம்பவிக்கின்றன? என்னில், ஆஶ்சர்யம்! நம்மால் சொல்லப்பட்ட யுக்திகளினால் ஏவப்பட்ட நீ ப்ருஹ்மத்திற்கு அஜ்ஞானம் இல்லையென்று மறுக்கிறாயா? அன்றிக்கே உன்னுடைய புத்தியினால் ஏற்பட்ட ஶூத்திரர்களின் விவாஹ மந்திரந்யாயத்தினால்* இப்படி மறுக்கிறாயா? முதலாவது பக்ஷத்தில் இந்த ப்ரயத்னத்தை விட்டுவிடுகிறோம். இரண்டாவது பக்ஷத்திலும் ஒரு காரணமுமில்லாத ஸர்வஜ்ஞனாக இருக்கை அஜ்ஞானத்தை உடையவனாயிருக்கையாகிய ஸ்வபாவங்கள் ஓரிடத்தில் ஸம்பவிக்காது. வெவ்வேறு உபாதியினால் உண்டாக்கப்பட்ட இந்த இரண்டு ஸ்வபாவங்களும் உன்னால் சொல்லப்படுகிற யுக்தியினால் ஸித்திக்காது. இடம் காலம் முதலியவைகளின் பேதங்களினால் இரண்டு

---

* அதாவது அரசாணிக்காலைத் தொடச்சொல்லி தொடவில்லை என்று சொல்லு, பொய் சொன்னதற்காக ப்ராயஶ்சித்தம் பண்ணிக் கொள் என்று பரஸ்பர விருத்தமாகச் சொல்லப்படுகிறது. அதைப் போலப் பரஸ்பரவிருத்தங்களாக இருக்கின்றன என்றபடி.

ஸ்தி । ததா சோபயோரபி ப்ராமாண்யாப்ராமாண்யயோ: ப்ராந்திஸித்த-
த்வாத் । 'ப்ராந்திஸாக்ஷிகோ விதி: பாரமார்திகோ நிஷே-
த:' இத்யபி ந வக்தும் ஶக்யம்—நிஷேதஸ்யா-
ப்யஜ்ஞத: ஸ்வதங்கீக்ருத்ய ப்ராந்திஸாக்ஷிகத்வாத் ।

ந ச அவித்யாஸ்வரூபததாஶ்ரயத்வாதே: துர்நி-
ரூபதயா தந்நிஷேத: பாரமார்திக: இதி யுக்தம்—
தந்நிஷேதஸ்ய துர்நிரூபதயா தத்ஸ்வரூபவாதிவத் பார-
மார்திகத்வப்ரஸங்கேந விவக்ஷிதஸ்ய அஸம்பவாத் ।
பவதபிமதேऽபி துர்நிரூபத்வாத் பாரமார்திகம், கா

ஸ்வபாவங்களும் ஸம்பவிக்கின்றன என்கிற நிர்வாஹத்தை நீ யோசிக்கவே இல்லை. அப்படி யோசித்தாலும் முன்பு நம்மால் சொல்லப் பட்ட யுக்திகள் அதற்கு விரோதியாகும். 'அஜ்ஞானம் உண்டு என்று சொல்லுகிறது ப்ரமத்தைக் காரணமாக உடையது (அதாவது பொய் என்றபடி), அஜ்ஞான மில்லாதது,(முக்தன் என்பது) உண்மை யானது' என்றும் ஓடித்தப்பித்துக்கொள்ள முடியாது--அப்படி அஜ்ஞானம் இல்லை யென்று சொல்லுவதும் முடிவாக உன்னால் சொல்லப் படுகிற யுக்தியினாலேயே ப்ரமத்தினால் ஏற்பட்டதாகையினால்.

அஜ்ஞானத்தின் ஸ்வரூபம் அதற்கு ஆதாரமாயிருக்கும் தன்மை முதலியவைகள் நிரூபிக்க முடியாதாகையினால் அது இல்லை என்று சொல்லுவது உண்மையானது என்பதும் உசிதமல்ல—அது இல்லை என்று சொல்லுவதும் (அதாவது அஜ்ஞானம் இல்லாமையின் ஸ்வரூபம் அதற்கு ஆதாரமா யிருக்கை முதலியது) நிரூபிக்க முடியாதாகையினால் அந்த அவித்யையின் ஸ்வரூபம் முதலியவைகள் உண்மை யென்றும் சொல்லவேண்டு மாகையினால் விரோதமான பலம் ஸுலபமாய் அடைய முடியுமாதலால். அப்படியே இருக்கட்டும், இரண்டும்

𑌨𑌃 𑌕𑍍𑌷𑌤𑌿𑌰𑌿𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 — '𑌪𑌰𑌸𑍍𑌪𑌰𑌵𑌿𑌰𑍋𑌧𑍇 𑌹𑌿 𑌨 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌾𑌨𑍍𑌤𑌰𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌃' 𑌇𑌤𑌿 𑌨𑍍𑌯𑌾𑌯𑌸𑍍𑌯 𑌸𑍁𑌸𑍍𑌥𑌿𑌤𑌤𑍍𑌵𑌾𑌤𑍍| 𑌨 𑌚 𑌗𑌗𑌨𑌕𑍁𑌸𑍁𑌮𑌸𑍌𑌰𑌭𑌵𑌤𑍍 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍, 𑌤𑌸𑍍𑌯 𑌨 𑌸𑍌𑌰𑌭𑌿, 𑌨𑌾𑌪𑍍𑌯𑌸𑍌𑌰𑌭𑍀𑌤𑌿 𑌚𑍇𑌤𑍍, 𑌨 — 𑌤𑌤𑍍𑌰 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑍈𑌵 𑌅𑌭𑌾𑌵𑍇𑌨 𑌵𑌿𑌧𑌿𑌨𑌿𑌷𑍇𑌧𑌯𑍋𑌰𑌨𑌵𑌕𑌾𑌶𑌾𑌤𑍍, 𑌅𑌤𑍍𑌰 𑌤𑍁 𑌨𑌃 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌾𑌤𑍍| 𑌅𑌤𑍍𑌰𑌾𑌪𑌿 𑌤𑌦𑌭𑌾𑌵𑍇 𑌮𑌾𑌧𑍍𑌯𑌮𑌿𑌕𑌵𑌿𑌜𑌯𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍| 𑌤𑌤𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌤𑌰𑌾𑌵𑌶𑍇𑌷𑍇 𑌪𑍍𑌰𑌾𑌮𑌾𑌣𑌿𑌕𑍇𑌨𑌾𑌰𑍍𑌥𑍇𑌨 𑌨𑌿𑌷𑍇𑌧𑌸𑍍𑌯𑍈𑌵 𑌸𑍍𑌥𑌿𑌤𑍌 𑌵𑌿𑌧𑍇𑌰𑌸𑌮𑍍𑌭𑌵𑌃|

நிரூபிக்க முடியாதாகையினுல் இரண்டும் பொய்யாகட்டுமே, எங்களுக்கு என்ன நஷ்டம் என்பதும் உசிதமல்ல—'ஒன்றுக்கொன்று விரோதமாக இருக்கும் பக்ஷத்தில் மூன்ருவது ஆகாரம் ஒன்று நிலைக்காது' என்கிற ந்யாயம் ஸ்திரமாக இருக்கிற படியினுல் (அதாவது ப்ரும்மத்திற்கு அஜ்ஞானமும் பொய், அஜ்ஞானம் இல்லாமையும் பொய் என்னில், இந்த இரண்டு ஆகாரங்களு மிலலாமல் மூன்ருவது ஆகாரம் ஒன்று ஸித்திக்காதல்லவா என்றபடி). ஆகாசப் புஷ்பம் போல் இது இருக்கட்டும், அது வாஸனை உடையதுமல்ல, வாஸனை இல்லாததுமல்லவே, அதைப்போல என்பதும் உசிதமல்ல—அவ்விடத்தில் அந்த ஆகாசப் புஷ்பத்திற்கு ஸ்வரூபமே இல்லாமையினுல் அதற்கு வாஸனை உண்டென்பதற்கும் இல்லை என்பதற்கும் இடமில்லை. இவ்விடத்திலோ வெனில் ஸ்வரூபமிருக்கிறபடியினுல் (இடம் உண்டாகிறது.) இவ்விடத்திலும் ஸ்வரூபம் இல்லை யென்னில், மாத்யமிகனுக்கே ஜயம் உண்டாகும். ஆகையினுல் இரண்டில் ஒன்றை அங்கீகரிக்கவேண்டு மென்று ஏற்படும் பக்ஷத்தில் ப்ரமாணங்களில் ஏற்பட்டிருப்பதினுல் அஜ்ஞானம் இல்லையென்று மறுப்பதே ஸ்திரப்படுகிறபடியினுல் அஜ்ஞானம் உண்டென்று விதிப்பது ஸம்பவிக்காது. ப்ரமாணத்திற்கு விரோதமில்லாமல் அந்த அஜ்ஞானம் ஸம்

ப்ரமாணாவிருத்தஸ்ய தத்தத்வஸ்த்வாஶ்ரயஸ்ய ப்ரத்யக்ஷேணைவ ஸத்த்வாத் | யதா சாதித்யே ஸாந்த்ரதமோऽபி கஶ்சிதல்பஜீவிதः கல்பயதீதி ந ப்ராமாணிகதத்த்வஸ்திதி விரோதः |

ஏவம் ச க்ஷணபங்காதிவாதாநாமபி யதேஷ்டம் பரிக்ரஹः கார்யः | வஸ்துஸ்திதிமநாத்ருத்ய ஆகஸ்மிக பரிக்ரஹமாத்ரேண வேதாந்தார்தஸ்தாபநஸ்ய தத்ர சாத்ர ச விஶேஷாபாவாத் | யுக்தீநாம் ச யதாபிமாநம் த்ரிசதுரகக்ஷ்யாஸ்தாயித்வஸ்ய ஸமாநத்வாத் | அந்ய

புவிக்கிறது என்பது உன்னைப்போன்றவர்களுடைய ப்ரமத்தினுல் மாத்திரம் ஏற்படவேண்டும். அல்பப்ராணியாகிய அல்பாயுஸ்ஸை உடைய ஒருவன் ஸூர்யனிடத்தில் இருட்டையும் ப்ரமிக்கிறு னுத லால் அது ப்ரமாணத்தில் ஏற்பட்ட உண்மையான வஸ்து இருப்ப தற்கு விரோதியாக எப்படி ஆகாதோ அதைப்போல இங்கும்.

ஆகையினுல் க்ஷணம் தோறும் நசிக்கிறது என்பது முதலிய வார்த்தைகளும் அவரவர்கள் இஷ்டப்படி அங்கீகரிக்கப்பட வேண் டியதாகும். ஏனெனில் வஸ்துவின் உண்மையான நிலையை அநாதரி த்து ஒரு காரணமுமில்லாமல் தான் ஒப்புக்கொள்ளுவது மாத்திரத்தி னுலே வேதாந்தார்த்தத்தை ஸ்தாபிப்பது என்பது இந்த அஜ்ஞான வாதத்திலும் அதிலும் (அதாவது உன் மதத்திலும் பௌத்த மதத் திலும்) துல்யமாயிருக்கிற படியினுலும், அவரவர்கள் அபிமானப்படி யுக்திகளும் இரண்டு மூன்று கக்ஷிகள் வரையில் நிற்கக்கூடியவைகள் என்பதும் இரண்டு பக்ஷங்களிலும் துல்யமாயிருக்கிறபடியினுலும். அப்படிக்கில்லாமல் போனுல் தனித்தனியே எண்ணிறந்த ஜீவாத் மாக்களின் கூட்டத்திற்கு அந்தந்த ஸித்தாந்தங்களில் ஏற்பட்ட

𑌯𑌾 𑌕𑌲𑍍𑌪𑍇𑌤𑍈𑌕𑌕𑍋𑌟𑌿𑌨𑌿𑌷𑍍𑌣𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌵𑌮𑍃𑌷𑍍𑌯𑌸𑍍𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑍈𑌷
𑌜𑍍𑌞𑌾𑌨𑌿𑌕𑌤𑍍𑌵𑍇 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑍍𑌯 𑌮𑍋𑌹𑌵𑌂𑌶𑌵𑌶𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑌿 ‖

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌕𑌵𑌿𑌤𑌾𑌰𑍍𑌕𑌿𑌕𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌯
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌨𑌾𑌥𑌸𑍍𑌯 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌾𑌚𑌾𑌰𑍍𑌯𑌸𑍍𑌯 𑌕𑍃𑌤𑌿𑌷𑍁

𑌶𑌤𑌦𑍂𑌷𑌣𑍍𑌯𑌾𑌂

‖ 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌜𑍍𑌞𑌾𑌨𑌨𑌿𑌰𑌾𑌸𑌵𑌾𑌦𑌃 𑌏𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌃 ‖

‖ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃 ‖

யுக்திகளாகிற இந்திர ஜாலங்களினுல் உண்டாக்கப்பட்ட மயக்கத்திற்கு வசப்பட்டிருக்கும் தன்மை எப்படிப் பொருந்தும் ?

இப்படித் திருவஹீந்திரபுரம் சேட்லூர் வித்வான்
பகவத்விஷயம் பண்டிதபூஷணம்

ஸ்ரீ உப. வே. நரஸிம்மாசார்யர் ஸ்வாமியின்
ஸ்ரீ சததூஷணீ தமிழ்மொழி பெயர்ப்பில்
ப்ரும்மாஶ்ரயாஜ்ஞான நிராஸவாதம் என்னும்
பத்தொன்பதாவது வாதம் முற்றிற்று.

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ||

|| அவேத்யத்வபங்கவாதோ விம்ஶ: ||

ஶ்ருதிமணிஶிரோநிஷ்ணாதாநாம் ஸ்வஸ்வஸத்த்வம் ஸிஷாஸதாம்
ஶ்ரவணமநநத்யாநைர்ப்ரத்யக்ஷதஶ்சகாஸ்தி யத் ।
அமதமிதி யத்பூம்நாம் அவேத்யதாமவகாஹதே
பவபயதம: ப்ரத்யாதேஶ்யம் பஜேமஹி தந்மஹ: ||

|| ஸ்ரீ: ||

|| ஸ்ரீமதே ஸ்ரீநிவாஸராமாநுஜமஹாதேஶிகாய நம: ||

அவேத்யத்வபங்கவாதம் என்னும் இருபதாவது வாதம்.

எந்தத் தேஜஸ்ஸு வேதங்களின் கூட்டங்களின் தலையாகிற உபநிஷத்துக்களில் விசேஷஜ்ஞான முடையவர்களாயும் தங்களுடைய ஸ்வபாவத்தை அல்லது தாங்கள் உளராக இருக்கையை அடைய வேண்டுமென்று ஆசைப் படுகிறவர்களாயும் இருப்பவர்களுக்கு வேதாந்த ஶ்ரவணம் செய்வது, அதை அடிக்கடி நினைத்துக்கொள்வது, த்யானம்செய்வது, இவைகளினால் ப்ரத்யக்ஷமாக ப்ரகாசிக்கிறதோ, அறியப்படாதது என்கிற ஶ்ருதி எந்த ப்ரும்மத்தின் மஹிமை அறிய முடியாதது என்பதைச் சொல்லுகிறதோ, அப்படிப் பட்டதாய் ஸம்ஸாரத்தில் உண்டாகிய பயமாகிறஇருட்டிற்கு விரோதியான தேஜஸ்ஸை ஆஶ்ரயிக்கக்கடவோம்.

[𑌪𑍂𑌰𑍍𑌵𑌪𑌕𑍍𑌷𑌸𑌙𑍍𑌗𑍍𑌰𑌹𑌃]

𑌯𑌥𑌾𑌹𑍁𑌃—𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑍇𑌰𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍍𑌵𑍇 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌦𑌨𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗𑌃—𑌇𑌤𑌿 ।

[𑌸𑌿𑌦𑍍𑌧𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑌮𑍍𑌭𑌃]

𑌤𑌤𑍍𑌰 𑌤𑌾𑌵𑌦𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌸𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇 𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤𑌃, 𑌅𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑍇𑌪𑌿 𑌪𑍁𑌨𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌘𑌾𑌤𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌬𑌾𑌲𑌗𑍋𑌪𑌾𑌲𑌮𑌵𑌗𑌮𑍍𑌯𑌮𑍍 ।

𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌤𑍍𑌵𑍇𑌨 𑌕𑌿𑌂 𑌸𑍍𑌵𑌵𑍍𑌯𑌵𑌹𑌾𑌰𑍇 𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑌸𑍍𑌯 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌸𑍍𑌵𑍇𑌨𑍈𑌵𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑍇𑌣

[பூர்வபக்ஷ ஸங்க்ரஹம்]

அநுபூதி (ஜ்ஞானம்) ஸ்வயம் ப்ரகாசம் (அதாவது வேறொரு ஜ்ஞானத்தினாலன்றிக்கே தானே ப்ரகாசிக்கிறது), அநுபூதியாகையினால்; அநுபூதிக்கும் மற்றொரு ஜ்ஞானத்தினால் அறியப்படக்கூடும் தன்மை இருந்ததேயாகில் குடம் முதலிய வஸ்துக்களைப்போல அநுபூதியாக இல்லாமல் போகவேண்டிவரும் என்று சொல்லுகிறார்களே,

[ஸித்தாந்தாரம்பம்]

அதில் முதலில் அநுபூதி என்னும் பதம் அதின் அர்த்தத்தைத் தெரிவிப்பதற்குக் காரணமாகில் விரோதம் வருகிறது(அதாவது இந்த ஹேது,ஸாத்யம் இல்லைஎன்பதற்கு ஸாதகமாகிறது என்றபடி),அப்படி அர்த்தத்தை அறிவிப்பிப்பதற்குக் காரணமாகாவிடில் மறுபடியும் விரோதம் வருகிறது (இந்த வாக்யம் அநுபூதி ஸ்வயம் ப்ரகாசம் என்னும் அர்த்தத்தைச் சொல்லாதாகையினால்) என்பது சிறுவர் இடையவர்கள் வரையில் அறியத்தக்க விஷயம்.

ஸ்வயம் ப்ரகாசமானது என்பதினால் தன்னைப்பற்றி வ்யவஹாரம் செய்வதில் தனக்கு ஆதாரமாகிய ஆத்மாவிற்கு

வேத்³யத்வம் ஸாத்⁴யதே? உத ஸர்வதா³ ஸர்வஸ்ய ஸ்வகோ³சராநுபூ⁴திவிரஹ:? நாத்³ய:—ஸித்³த⁴ஸாத்⁴யநாத் | வயமபி ஸம்விதோ³ விஷயப்ரகாஶநவேலாயாம் ஸ்வாஶ்ரயம் ப்ரதி ஸம்வித³ந்தராநபேக்ஷேண ப்ரகாஶமங்கீ³குர்ம: | ததி³த³ம் ஸித்³த⁴ஸாத⁴நம் ஹ்ருதி³ நிதா⁴யாஹ—'யத்த்வநுபூ⁴தே: ஸ்வயம்ப்ரகாஶத்வமுக்தம், தத்³விஷயப்ரகாஶநவேலாயாம் ஜ்ஞாதுராத்மநஸ்ததை²வ'—இதி | அத ஏவ யே நாஸ்ய ஸ்வயம்ப்ரகாஶத்வநிவ்ருத்தௌ அநவஸ்தா²தி³ப்ரஸங்கா³:, தே ப⁴வந்து ஸந்தோ ந வேதி தத்ராஸ்மாபி⁴ருதா³ஸ்யதே | நாபி த்³விதீய:—ப்ரத்யக்ஷவிரோதா⁴த் | ததா²ஹ—'ஸர்வாந

ஏதாவது ஒரு ஸமயத்தில் தன்னை அறியக்கூடிய மற்றொரு ஜ்ஞானத்தை அபேக்ஷிக்கிறதில்லை என்பது மாத்திரம் ஸாதிக்கப்படுகிறதா? அன்றிக்கே எப்பொழுதும் எல்லாவற்றிற்கும் தன்னைப்பற்றிய ஜ்ஞானம் இல்லை என்பது ஸாதிக்கப்படுகிறதா? முதலாவது பக்ஷம் உசிதமல்ல—ஸித்தஸாதனம் என்னும் தோஷம் வருகிறபடியினால். நாங்களும் ஜ்ஞானத்திற்கு விஷயங்களை ப்ரகாசம் செய்யும் ஸமயத்தில் தனக்கு ஆதாரமான ஆத்மாவைக் குறித்து வேறொரு ஜ்ஞானத்திற்கு விஷயமாகாமலே ப்ரகாசிக்கிறதென்று ஒப்புக்கொள்ளுகிறோம். இந்த ஸித்தஸாதனம் என்னும் தோஷத்தை அபிப்ராயத்தில் வைத்துக்கொண்டு 'அனுபூதிக்கு ஸ்வயம்ப்ரகாசமாயிருக்கும் தன்மை உண்டென்று சொல்லப்பட்டதே அது, விஷயங்களை ப்ரகாசம் செய்யும்பொழுது அந்த ஜ்ஞானத்திற்கு ஆதாரமாகிய ஆத்மாவிற்கு அப்படியே' என்று (ஸ்ரீபாஷ்யத்தில்) சொல்லியிருக்கிறார். ஆகையினால் ஜ்ஞானத்திற்கு ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கும் தன்மை இல்லாமல் போனால் அநவஸ்தை முதலிய தோஷங்கள் வருமென்று சொல்லப்பட்டதே அவைகள் நல்லதாக இருந்தாலும் இருக்கட்டும், இல்லாமல்போனாலும் போகட்டும், அந்த விஷயத்தில் நாம் உதாஸீனமாய் இருக்கிறோம். இரண்டாவது பக்ஷமும் உசிதமல்ல—

𑌭𑌵𑌸𑍍𑌯 𑌹𑌾𑌨𑍋𑌪𑌾𑌦𑌾𑌨𑌾𑌦𑌿𑌲𑌿𑌙𑍍𑌗𑌕𑌾𑌨𑍁𑌮𑌾𑌨𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌭𑌵𑌸𑍍𑌯𑌾𑌤𑍀𑌤𑌸𑍍𑌯 𑌜𑍍𑌞𑌾𑌸𑌿𑌷𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌜𑍍𑌞𑌾𑌨𑌵𑌿𑌷𑌯𑌤𑍍𑌵𑌦𑌰𑍍𑌶𑌨𑌾𑌤𑍍' — 𑌇𑌤𑌿 । 𑌸𑍍𑌵𑌵𑌚𑌨𑌵𑌿𑌰𑍋𑌧𑌾𑌭𑌿𑌪𑍍𑌰𑌾𑌯𑍇𑌣𑌾𑌹 — '𑌅𑌤 𑌏𑌵𑌾𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌸𑍍𑌵𑌤𑌸𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌤𑌿 𑌵𑌕𑍍𑌤𑍁𑌂 𑌨 𑌶𑌕𑍍𑌯𑌤𑍇' — 𑌇𑌤𑌿 ।

𑌤𑌥𑌾 𑌹𑌿 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌃 𑌸𑍍𑌵𑌯𑌂𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌾 𑌇𑌤𑍍𑌯𑌤𑍍𑌰 𑌅𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌶𑌬𑍍𑌦𑌃 𑌕𑌸𑍍𑌯𑌚𑌿𑌦𑍍𑌬𑍋𑌧𑌕𑍋? 𑌨 𑌵𑌾? 𑌬𑍋𑌧𑌕𑌤𑍍𑌵𑍇𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌰𑍂𑌪𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑍈𑌵 𑌬𑍋𑌧𑌕𑌃? 𑌤𑌦𑌨𑍍𑌯𑌬𑍋𑌧𑌕𑍋 𑌵𑌾? 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌸𑍍𑌵𑌰𑍂𑌪𑌸𑍍𑌯𑍈𑌵𑌬𑍋𑌧𑌕𑌤𑍍𑌵𑍇 𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌜𑍍𑌜𑌨𑍍𑌯𑌸𑌂𑌵𑌿𑌤𑍍𑌕𑌰𑍍𑌮𑌤𑌯𑌾 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶

ப்ரத்யக்ஷத்திற்கு விரோதம் வருகிறபடியினல். அதையும் 'அயலாருடைய அனுபவம் அவன் தள்ளிவிடுதல் அங்கீகரித்தல் முதலிய காரணங்களைக் கொண்டு உண்டாகிய அனுமானம் என்கிற ஜ்ஞானத்திற்கு விஷயமாயிருக்கிறபடியினலும், தன்னுடையதாய் முன்பு உண்டானதாகிய ஜ்ஞானம் இப்படி அறிந்தேன் என்கிற வேறொரு ஜ்ஞானத்திற்கு விஷயமாக இருப்பதைக் கண்டிருப்பதினலும்' என்று (ஸ்ரீபாஷ்யத்தில்) அருளிச்செய்திருக்கிறார். தன்னுடைய வார்த்தைக்கு விரோதம் வருகிறது என்பதை அபிப்ராயத்தில் வைத்துக் கொண்டு 'ஆகையினல் ஜ்ஞானமாகில் ஸ்வயம்ப்ரகாசமாயிருக்க வேண்டும் என்று சொல்லமுடியாது' என்று சொல்லியிருக்கிறார்.

அதாவது அனுபூதி ஸ்வயம்ப்ரகாசம் என்கிற வார்த்தையில் 'அனுபூதி' என்னும் பதம் ஏதாவது ஒரு வஸ்துவைத் தெரிவிக்கிறதா? இல்லையா? தெரிவிக்கிறது என்னும் பக்ஷத்திலும் ஜ்ஞான ஸ்வரூபமாகிய ப்ருஹ்மத்தின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிறதா? அதைத் தவிர மற்றொன்றைத் தெரிவிக்கிறதா? ப்ருஹ்மத்தின் ஸ்வரூபத்தைத் தெரிவிக்கிறது என்னில், அந்த ப்ருஹ்ம ஸ்வரூபமாகிய ஜ்ஞானத்திற்கு அந்தப்பதத்தினல் உண்டாக்கப்படுகிற ஜ்ஞானத்திற்கு விஷயமாய்க் கொண்டு ப்ரகாசமாகும் தன்மை ஸித்தித்துவிட்

மாநத்வம் | ப்ரகாஶமாநம் ஸ்வரூபமேவாநேநாநூத்யத இதி சேத், ந—ததாப்யநுவாதாத்மகஸம்வித்விஷயதயா ப்ரகாஶமாநத்வஸ்ய துர்ஹ்நவத்வாத் | அந்யதா தத நுவாதகத்வஸ்ய அஸித்திப்ரஸங்காத் | ததஶ்ச ப்ரதிஜ்ஞா பதயோ: தத்ப்ரதிபாதநார்தாப்யாம் வ்யாகாத: | ததந்ய போதகத்வே து தஸ்யைவ ஸ்வயம்ப்ரகாஶத்வம் ப்ரதி ஜ்ஞாதம் ஸ்யாத் | ததஶ்ச ஸிஸாதயிஷிதாஸித்தி: அர்தா ந்தரம் நிக்ரஹஸ்தாநம் அபஸித்தாந்தஶ்ச ப்ரஸஜ்யே ரந் | கஸ்யசிதப்யபோதகத்வே இதி பக்ஷே து அவா சகப்ரயோகாத் நிரர்தகநிக்ரஹஸ்தாநப்ரஸங்க: | ஹே தோஶ்சாஶ்ரயாஸித்தி: |

டது. ஏற்கனவே ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற ஸ்வரூபம் இந்தப் பதத்தினால் அனுவாதம் செய்யப்படுகிற தென்பதும் உசிதமல்ல—அப்படி இருந்தபோதிலும் அனுவாதமாயிருக்கிற ஜ்ஞானத்திற்கு விஷயமாய்க் கொண்டு ப்ரகாசமாகும் தன்மை மறைக்க முடியாததலால். அப்படிக் கில்லாவிடில் அதை அனுவாதம் செய்கிறது என்பதும் ஸித்திக்காமல் போகுமாதலால். ஆகையினால் ப்ரதிஜ்ஞா வாக்யத்திற்கும், அதில் இருக்கும் பதங்களுக்கும், அந்தப்ரதிஜ்ஞையின் ப்ரயோஜனத்தோடும் அந்தப் பதங்களின் அர்த்தங்களோடும் விரோதம் வருகிறது. அந்த ப்ரும்ம ஸ்வரூபத்தைத் தவிர வேறொன்றைத் தெரிவிக்கிறதென்னில், அந்த வஸ்துவிற்கு ஸ்வயம் ப்ரகாசமாயிருக்கும் தன்மை உண்டென்று ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டதாகும். ஆதலால் ஸாதிக்க வேண்டுமென்று இச்சிக்கப்பட்ட அர்த்தம் ஸித்திக்கவில்லை என்கிற தோஷமும், ஒன்றை ஸாதிக்க வேண்டுமென்று நினைக்க வேறொன்று ஸித்திக்கிறது என்கிற நிக்ரஹஸ்தானமும், தன்னுடைய ஸித்தாந்தத்திற்கு விரோதமுமாகிய தோஷங்கள் வரும். ஒன்றையும் தெரிவிக்கிற தில்லை என்னும் பக்ஷத்திலும் தனக்குச் சொல்லவேண்டிய அர்த்தத்தைச் சொல்லக்கூடிய யோக்யதை இல்லாத பதத்தை ப்ரயோகித்திருப்பதினால் நிரர்த்தகம் என்கிற நிக்ரஹஸ்தானமும் வருகிறது. ஹேதுவிற்கும் ஆதாரமான வஸ்து ஸித்திக்கவில்லை.

𑌏𑌵𑌂 𑌹𑍇𑌤𑍁𑌸𑌾𑌧𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌶𑌬𑍍𑌦𑌵𑌦𑌪𑌿 𑌸𑌂𑌵𑌿𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌹𑍇𑌤𑍁𑌸𑌾𑌧𑍍𑌯 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌤𑍍𑌵𑌮𑌵𑌶𑍍𑌯𑌾𑌭𑍍𑌯𑍁𑌪𑌗𑌨𑍍𑌤𑌵𑍍𑌯𑌮𑍍 । 𑌅𑌨𑍍𑌯𑌥𑌾 𑌤𑍁 𑌅𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌂 𑌚𑍇𑌦𑍍𑌵𑌾 𑌅𑌨𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌕𑌂 𑌚𑍇𑌦𑍍𑌵𑌾 𑌨𑌿𑌰𑌰𑍍𑌥𑌕𑌾𑌪𑌾𑌰𑍍𑌥𑌕𑌨𑌿𑌗𑍍𑌰𑌹𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌵𑌤𑌾𑌰𑌃 । 𑌅𑌤𑌸𑍍𑌤𑌨𑍍𑌨𑌿𑌷𑍍𑌠𑌹𑍇𑌤𑍁𑌸𑌾𑌧𑍍𑌯𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑍇 𑌤𑌯𑍋𑌰𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌵𑌿𑌶𑍇𑌷𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌤𑌾𑌭𑍍𑌯𑌾𑌮𑌪𑌿 𑌵𑍇𑌦𑍍𑌯𑌤𑍍𑌵𑌂 𑌸𑌿𑌦𑍍𑌧𑌮𑍍 । 𑌅𑌤𑌸𑍍𑌸𑌾𑌧𑍍𑌯𑌹𑍇𑌤𑍍𑌵𑌭𑌿𑌧𑌾𑌯𑌿𑌨𑍋𑌃 𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌵𑌿𑌰𑍋𑌧𑌃 ।

𑌅𑌤𑍋𑌽𑌨𑍁𑌭𑍂𑌤𑍇𑌰𑌨𑍁𑌭𑌾𑌵𑍍𑌯𑌾 𑌚𑍇𑌦𑍍 𑌘𑌟𑌾𑌦𑌿𑌵𑌦𑌨𑌨𑍁𑌭𑍂𑌤𑌿𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌸𑌙𑍍𑌗 𑌇𑌤𑌿 𑌤𑌰𑍍𑌕𑍋𑌽𑌪𑌿 𑌸𑍍𑌵𑌵𑌧𑌾𑌯 𑌕𑍃-

---

இப்படியே ஹேது ஸாத்யம் இவைகளைச் சொல்லுகிற பதங்களும் ஜ்ஞானம் என்கிற வஸ்துவில் இருக்கிற ஹேது ஸாத்யம் இவைகளைச் சொல்லுகின்றன என்று ஒப்புக்கொள்ளவேண்டியது அவஶ்யம். அப்படிக்கில்லாமல் ஒன்றையும் சொல்லுகிறதில்லை என்றாவது ஜ்ஞானத்தோடு சேராத ஹேது ஸாத்யங்களைச் சொல்லுகின்றன என்றாவது சொல்லும் பக்ஷத்தில் நிரர்த்தகம் (அர்த்த மில்லாதவை) அபார்த்தம் (தப்பான அர்த்தத்தைச் சொல்லுவது) முதலிய தோஷங்கள்வரும். ஆகையினால் ஜ்ஞானத்தில் இருக்கிற ஹேதுவையும் ஸாத்யத்தையும் சொல்லும் பக்ஷத்தில் அவைகளும் ஜ்ஞானத்தையே ஒரு விஶேஷணத்தோடு சேர்த்துத் தெரிவிக்கிறபடியினால் அவைகளாலும் அறியப்படக்கூடியதா யிருக்கும் தன்மை ஏற்பட்டுவிட்டது. ஆகையினால் ஸாத்யம் ஹேது இவைகளைச் சொல்லுகிற பதங்களுக்கும் அவைகளின் ப்ரயோஜனங்கள் அவைகள் தங்கள் அர்த்தங்களைத் தெரிவிக்கும் தன்மை இவைகளுடன் விரோதம் வருகிறது.

